# T.N.L.A. Debates

OFFICIAL REPORT

VOL: LIX NO: 1 and 2

March 3 and 5
1984

D
V211, 31 N84
N84.59.1 & 2;1
136222

வெளியீடு 18-8-1984] [Dated 18-8-1984

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

**சனிக்கிழமை, மார்ச் 3, 1984—தொகுதி LIX எண் 1**

Saturday, 3rd March 1984—Volume LIX No. 1

**சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600009**

**Legislative Assembly Secretariat, Fort St. George**
**Madras-600009**

விலை ரூ. 3-50 காசுகள்] [Price Rs. 3-50 Paise

V2:1, 31 N84
N84.59.1 42 31
136222

உள்ளடக்கம்

3–3–1984


| | பக்கங்கள். |
|---|---|
| (i) தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | i—iii |
| (ii) Personnel of the Government of Tamil Nadu | v—vii |
| (iii) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் .. .. .. | ix |
| (iv) தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகரவரிசைப்படி) தயாரிக்கப்பட்ட பெயர்ப் பட்டியல் .. .. .. | xi—xix |
| 1. 1984-85 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் .. .. .. .. .. | 1—43 |
| 2. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. | 43—45 |

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்.

### தமிழ்நாடு ஆளுநர்.

திரு. சுந்தர்லால் குரானா.

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்)—பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர் மற்றும் அனைத்திந்தியப் பணியாளர்கள், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சியாளர் சம்பந்தப் பட்டவை, காவல், இலஞ்ச ஒழிப்பு, திட்டம், சர்க்கரைப்பாகு கழிவு, தொல்பொருள் இயல் ஆயத்துறை. மற்றும் மதுவிலக்கு (மது அருந்த அனுமதி வழங்கல் நீங்கலாக)

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (நிதி அமைச்சர்)—நிதி, சட்டமன்றம், தேர்தல்கள், உணவு, இளைஞர் அணி, விலைவாசிக் கட்டுப்பாடு, மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின் துறை-அமைச்சர்)—மின்சாரம், மற்றும் இரும்பு-எஃகுக் கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (பால் பெருக்குத் திட்ட அமைச்சர்)—பால், பால் பெருக்கு திட்டம், ஆவணப் பதிவுத்துறை மற்றும் முத்திரைச் சட்டம்.

5. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் (வருவாய்த் துறை அமைச்சர்)—வருவாய், வணிக வரிகள், மற்றும் மக்கள் தொகைக் கணக்கு.

6. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் (செய்தி-அறநிலையத் துறை அமைச்சர்)—செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம் திரைப்படச் சட்டம், அறநிலையத் துறை, வனங்கள், சின்கோனா மற்றும் மது அருந்த அனுமதி வழங்கல்.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்) — தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி, மற்றும் ஆட்சிமொழி.

8. மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து (வேளாண்மைத் துறை அமைச்சர்)— வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மை பொறியியல் பிரிவு, மற்றும் அக்ரோ பொறியியல்.

9. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சர்) — சட்டம், நீதி மன்றங்கள் சிறைகள், எடைகள்— அளவைகள் பற்றி சட்டம் இயற்றல், கம் பெனிகள் பதிவு, கடன் கொடுத்தல், சீட்டு நிதி இவைகள் பற்றி சட்டம் இயற்றல் உள்ளிட்ட கடன் நிவாரணம், பெருந் தொழில்கள், சுரங்கம் பற்றும் கனிவளம்.

10. மாண்புமிகு திரு. பு. குழந்தைவேலு (உள்ளாட்சித் துறை அமைச்சர்)— நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புற கடன் சம்பந்தப்பட்டவை, பூமி தானம், கிராமத்தானம் மற்றும் நெடுஞ்சாலைகள்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) — தொழிலாளர், புள்ளிவிவரங்கள், தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியம், நகர அமைப்பு மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர்)— மக்கள் நல்வாழ்வுத் துறை.

13. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி (போக்குவரத்துத் துறை அமைச்சர்)—போக்குவரத்து, அரசுடமையாக்கப்பட்ட போக்கு வரத்து, இயக்கூர்திகள் சட்டம், மற்றும் துறைமுகங்கள்

14. மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு (கைத்தறி மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர்) நெசவாலைகள் கைத்தறி மற்றும் கூட்டுறவு.

15. மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் (சுற்றுச் சூழல் மாசுக்கட்டுப்படுத்தல் துறை அமைச்சர்)—பயண இசைவுச் சீட்டு, சுற்றுச் சூழல் மாசுக்கட்டுப்படுத்தல்,

16. மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி (ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்)— ஆதிதிராவிடர் நலம், எழுதுபொருள் அச்சுத்துறை அரசு அச்சகம், அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடி யினர், பிணைத் தொழிலாளர், மற்றும் வேலைவாய்ப்புப் பயிற்சியும்.

17. மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராசன் (சத்துணவு அமைச்சர்)—சத்துணவு.

18. மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா (பொதுப் பணித் துறை அமைச்சர்) — வீட்டு வசதி, குடிசை மாற்று வாரியம். மற்றும் பொதுப்பணித்துறை மற்றும் பொதுபணித் துறை அலுவல்கள் சம்பந்தமாக.



19. மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் (பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்)—பிற்பட்டோர் நலம்.

20. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் (சமூக நலத்துறை அமைச்சர்)—மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால்நடை பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற் றப்பட்டவர்கள் நலம் மற்றும் சீர்திருத்த நிர்வாகம்.

21. மாண்புமிகு திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி (கதர்த் துறை அமைச்சர்)—கதர்

22. மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் (நீர்பாசனத் துறை அமைச்சர்) — வேளாண்மைப் பணி கூட்டுறவு சங்கங்கள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள் மற்றும் வக்ப்.

23. மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் (ஊரகத் தொழில் துறை அமைச்சர்) — கிராம, குடிசை சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள்.

24. மாண்புமிகு திரு. க. கலைமணி (மீன்வளத் துறை அமைச் சர்)—மீன் வளம்.

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR OF TAMIL NADU.

THIRU SUNDAR LAL KURANA.

*Members of the Council of Ministers.*

1. HON. DR. M. G. RAMACHANDRAN (Chief Minister)—Public, General Administration, Indian Administrative Service, and other All India Services, District Revenue Officers, Deputy Collectors Police, Prevention of Corruption, Planning, Molasses, Archaeology and Excise, Prohibition (excluding grant of liquor permits),

2. HON. DR. V. R. NEDUNCHEZHIYAN (Minister for Finance)—Finance, Legislature, Elections, Food, Youth Service Corps, Price Control and Ex-Servicemen.

3. HON. THIRU S. RAMACHANDRAN (Minister for Electricity)—Electricity, Iron and Steel Control.

4. HON. THIRU K. A. KRISHNASAMY (Minister for Dairy Development)—Milk, Dairy Development, Registration and Stamp Act.

5. HON. THIRU S. D. SOMASUNDARAM (Minister for Revenue)—Revenue, Commercial Taxes and Census.

6. HON. THIRU R. M. VEERAPPAN (Minister for Information and Religious Endowments)—Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forest, Cinchona and Grant of Liquor permits.

7. HON. THIRU C. ARANGANAYAGAM (Minister for Education)—Education, including Technical Education, Official Language.

8. HON. DR. K. KALIMUTHU (Minister for Agriculture)—Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering.

9. HON. THIRU C. PONNAIYAN (Minister for Law and Industries)-Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits, Large Scale Industries, Mines and Minerals.

10. HON. THIRU P. KULANDAIVELU (Minister for Local Administration)—Municipal Administration, Panchayats and Panchayat Union-Community Development, Rural Indebtedness, Bhoodan and Gramdhan and Highways.

11. HON. THIRU S. RAGHAVANANDHAM (Minister for Labour) Labour, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board Town Planning and Accommodation Control.

12. HON. DR. H. V. HANDE (Minister for Health)—Health.

13. HON. THIRU S. MUTHUSAMY (Minister for Transport)—Transport, Nationalised Transport, Motor Vehicles Act and ports.

14. HON. THIRU S. THIRUNAVUKKARASU (Minister for Handlooms and Co-operation)—Textiles, Handlooms and Co-operation.

15. HON. THIRU S. N. RAJENDRAN (Minister for Environmental Pollution Control)—Passports and Environmental Pollution Control.

16. HON. THIRU M. VIJAYASARATHI (Minister for Adi-Dravidar Welfare)—Adi-Dravidar Welfare, Stationery and Printing, Government Press, News Print Control, Hill Tribes and Bonded Labour and Employment and Training.

17. HON. THIRU R. SOUNDARARAJAN (Minister for Nutritious Meals)—Nutritious Meals.

18. HON. THIRU S. R. ERADHA (Minister for Public Works)—Housing, Slum Clearance Board, Public Works Department and Establishment matter relating to Public Works Department.

19. HON. THIRU M. R. GOVENDHAN (Minister for Backward Classes)—Backward Classes.

20. HON. THIRUMATHI, GOMATHI SRINIVASAN (Minister for Social Welfare)—Social Welfare including Women and Children Welfare Animal Husbandry, Beggers Home, Orphanages, Indian Overseas Refugees and Evacuees and Correctional Administration.



2762

21. HON. THIRUMATHI VIJAYALAKSHMI PALANISAMY (Minister for Khadi)—Khadi.

22. HON. THIRU Y. S. M. YUSUF (Minister for Irrigation and Wakf)—Agro Service Co-operative Societies, Irrigation including Minor Irrigation and Wakf.

23. HON. THIRU R. ARUNACHALAM (Minister for Rural Industries)—Rural Industries including Village, Cottage and Small Industries.

24. HON. THIRU K. KALAIMANI (Minister for Fisheries)—Fisheries

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

### பேரவைத் தலைவர்.

* மாண்புமிகு திரு. க. இராசாராம்

### பேரவைத் துணைத் தலைவர்.

* மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்

### † மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

1. திரு. வே. இரா. ஜெயராமன்.
2. டாக்டர் கே. சமரசம்.
3. டாக்டர் கே. சௌரிராஜன்.
4. திரு. சு. பாலன்.
5. திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்.

### சட்டமன்றப் பேரவைச் செயலாளர்.

திரு கி. மு. அழகர்சாமி, பி.ஏ., பி.எல்.,

### துணைச் செயலாளர்கள்

திரு. இரா. பாலகுரு, பி.ஏ.,
திரு. பி. எம். பத்மநாப நம்பியார், பி.ஏ., பி.ஜி.எல்.,
திரு. பெ. பள்ளிகொண்ட பெருமாள், பி.ஏ., பி.எல்.,

### குழு அலுவலர்.

திரு. சா. சீனிவாசன், பி. எஸ்.சி.,

### சார்புச் செயலாளர்கள்.

திரு. வி. சீதாராமன், பி. காம்., பி.ஜி.எல்.,
திரு. செ. சு. ஜானகிராமன், பி.ஏ., பி. எல்.
திரு. பெ. பாலகிருஷ்ணன், பி.காம்.,
திரு. பெ. ச. கனகசபாபதி, பி.ஏ., பி.எல்.
திரு. ஜே. ரெஜினால்ட் ஜான், பி.ஏ.,
திரு. வ. சா. ஜான், பி.ஏ.,

### எஸ்டேட் அலுவலர்.

திரு. கே. தியாகராஜன், பி.ஏ., பி. எல்.,

### பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர்

திரு. பி. கோதண்டராமன்

### விவாதப் பதிப்பாளர்.

திரு. ஜி. எஸ். அனந்தநாராயணன், பி. லிட்.,

### தலைமை நிருபர்.

திரு. வி. இராமச்சந்திரன், எம். ஏ., எல்.எல்.பி.,

---

***21—6—1980 அன்று தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள்.**
**†† 15—2—1984 அன்று நியமனம் செய்யப் பெற்றார்கள்.**

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி) தயாரிக்கப்பட்ட பெயர்ப் பட்டியல்.

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 1. அங்குசாமி, திரு. ச. .. | திருவாடணை |
| 2. அண்ணாதாசன், திரு. எம். .. | திருவரம்பூர் |
| 3. அப்துல்ரசாக், திரு. கே. எம். | ஆலந்தூர் |
| 4. அப்பாதுரை, திரு. மு. .. | ஓட்டப்பிடாரம் (செ.வ.) |
| 5. அம்பிகாபதி, திரு. மு. .. | மன்னார்குடி |
| 6. அமிர்தராஜ், திரு. இரா. .. | திருச்செந்தூர் |
| 7. அரங்கநாதன், திரு. எஸ். .. | தர்மபுரி |
| 8. அரங்கநாதன், திரு. மு. .. | குன்னூர் (செ. வ.) |
| 9. அரங்கநாயகம், திரு. செ. .. | கோவை (மேற்கு) |
| 10. அருணகிரி, திரு. இரா. .. | திருப்பத்தூர் |
| 11. அருணாசலம், திரு. இரா. .. | நாமக்கல் (செ.வ.) |
| 12. அழகர்சாமி, திரு. சோ. .. | கோவில்பட்டி |
| 13 அன்பழகன், திரு. தி. .. | நாட்டரம்பள்ளி |
| 14. அன்பில் தர்மலிங்கம், திரு. | லால்குடி |
| 15. ஆண்டி அம்பலம், திரு. மெ. | நத்தம் |
| 16. ஆண்டித் தேவர், திரு. எஸ். | உசிலம்பட்டி |
| 17. ஆறுமுகம், திரு. எம். .. | அவினாசி (செ.வ.) |
| 18. சேலம் ஆறுமுகம், திரு. மு... | சேலம்-2 |
| 19. ஆறுமுகம், திரு. த. .. | அரியலூர் |
| 20. ஆனூர் ஜெகதீசன், திரு. பு.கோ. | செங்கல்பட்டு |
| 21. இரத்தினம், திரு. எம். வி. .. | பொள்ளாச்சி |
| 22. இராசகுமார், திரு. மெ. அ. | மருங்காபுரி |
| 23. இராசமாணிக்கம், திரு. இ. ரெ. | குத்தாலம் |
| 24. இராசரத்தினம், திரு. து. .. | பூந்தமல்லி |
| 25. இராசாம்பாள், திருமதி. தா. | தலைவாசல் (செ.வ.) |
| 26. இராசாராம், திரு. க. .. | பனமரத்துப்பட்டி |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 27. இராசாராமன், திரு. என். .. | பாபநாசம் |
| 28. இராசு, திரு. ஜே. எஸ். .. | பெரம்பலூர் செ.வ. |
| 29. இராசேந்திரன், திரு. எஸ். என். | தூத்துக்குடி |
| 30. இராமச்சந்திரன், டாக்டர் எம். ஜி. | மதுரை (மேற்கு) |
| 31. இராமச்சந்திரன், திரு. கே.கே. எஸ். எஸ். ஆர். | சாத்தூர் |
| 32. இராமச்சந்திரன், திரு. ச. .. | பண்ருட்டி |
| 33. இராமச்சந்திரன், திரு. செஞ்சி ந. | செஞ்சி |
| 34. இராமசாமி, திரு. எஸ். என். | சாத்தான்குளம் |
| 35. இராமசாமி, திரு. த. .. | இராமநாதபுரம் |
| 36. இராமசுப்பிரமணியன், திரு. இ. | ஸ்ரீ வைகுண்டம் |
| 37. இராமலிங்கம், திரு. ஏ. .. | காட்டுமன்னார் கோயில் (செ.வ.) |
| 38. இராமலிங்கம், டாக்டர் கே.பி. | இராசிபுரம் |
| 39. இராமலிங்கம், திரு. செ. .. | திருவிடைமருதூர் |
| 40. இராஜசேகரன், திரு. வே. .. | டாக்டர் ராதாகிருஷ்ண நகர். |
| 41. இராஜாராம் நாயுடு, திரு. தெ. இரா. | தல்லி |
| 42. இராஜேந்திரன், திரு. எஸ். எஸ். | ஆண்டிப்பட்டி |
| 43. இளையபெருமாள், திரு. எல். | எழுப்பூர் (செ.வ.) |
| 44. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம் திரு. | அம்பாசமுத்திரம் |
| 45. உகம்சந்த், திரு. எஸ். டி. .. | மதுராந்தகம் |
| 46. உச்சி, திரு. கே. .. .. | கூடலூர் |
| 47. உத்திராபதி, திரு. பொ. .. | திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 48. உமாநாத், திரு. ரா. .. | நாகை |
| 49. கண்ணன், திரு. ம. .. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 50. கணபதி, திரு. கே. ஆர். .. | சிதம்பரம் |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 51. கணேசன், திரு. .. | இடப்பாடி |
| 52. கணேசன், திரு. சி. .. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| 53. கந்தசாமி, திரு. கா. வே. .. | கிணத்துக்கடவு |
| 54. கந்தசாமி, திரு. பி. .. | பொங்கலூர் |
| 55. கபாலி, திரு. டி. கே. .. | மைலாப்பூர் |
| 56. கருப்பசாமி பாண்டியன், திரு. வி. | பாளையங்கோட்டை |
| 57. கருப்பையா, திரு. இரா. .. | குளித்தலை |
| 58. கருப்பையா, திரு. ஏ.டி. .. | வால்பாறை (செ.வ) |
| 59. கல்லன், திரு. கே. .. | உதகமண்டலம் |
| 60. கலிதீர்த்தான், திரு. சோ. .. | சங்கராபுரம் |
| 61. கலியமூர்த்தி, திரு. பெ. .. | மங்களூர் (செ.வ.) |
| 62. கலையரசன், திரு. நன்னிலம், அ. | நன்னிலம் (செ.வ.) |
| 63. காளிமுத்து, திரு. டாக்டர். கா. | திருப்பரங்குன்றம் |
| 64. கிருஷ்ணசாமி, திரு. கா. கோ. | காங்கேயம் |
| 65. கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ... | ஆயிரம்விளக்கு |
| 66. கிருஷ்ணமூர்த்தி, திரு. சா. .. | ஆண்டிமடம் |
| 67. கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. .. | நெல்லிக்குப்பம் |
| 68. கிருஷ்ணராஜ், திரு. ஜி. .. | சேலம்-1. |
| 69. கிருஷ்ணன், திரு. ரா. .. | வாசுதேவநல்லூர் |
| 70. குப்புசாமி திரு. என். .. | மொரப்பூர் |
| 71. குப்புசாமி, திரு. கே. .. | ஒட்டன்சத்திரம் |
| 72. குப்புசாமி, திரு. செ. .. | வந்தவாசி (செ.வ.) |
| 73. குமரி அனந்தன், திரு. .. | திருவொற்றியூர் |
| 74. குருசாமி, திரு. ப. .. .. | அந்தியூர் (செ. வ.) |
| 75. குலசேகர், திரு. ஏ. டி. .. | சிங்காநல்லூர் |
| 76. குலசேகரப் பாண்டியன், திரு. ந. | வாணியம்பாடி |
| 77. குழந்தைவேலு, திரு. ப. .. | உடுமலைப்பேட்டை |
| 78. கோபால், திரு. சி. .. .. | சோளிங்கர் |
| 79. கோபாலகிருஷ்ணன், திரு. கா. | பெரியகுளம் |
| 80. கோபாலன், திரு. ஆர். டி. .. | கம்பம் |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 81. கோமதி சீனிவாசன், திருமதி | வலங்கைமான் (செ.வ.) |
| 82. கோவேந்தன், திரு. எம். ஆர். | பேராவூரணி |
| 83. கோவைத் தம்பி, திரு. .. | பேரூர் |
| 84. சக்கரபாணி, திரு. ஆர். .. | பொன்னேரி (செ.வ.) |
| 85. சங்கரய்யா, திரு. என். .. | மதுரை (கிழக்கு) |
| 86. சட்டநாத கரையாளர், திரு.கி. | தென்காசி |
| 87. சண்முகம், திரு. இரா. .. | திருத்தணி |
| 88 சண்முகம் திரு ஏ.சி. | ஆரணி |
| 89. சத்தியமூர்த்தி, திரு. வ. .. | கடலாடி |
| 90. சந்திரசேகரன், திரு. எ. .. | சோழவந்தான் |
| 91. சபாபதி, திரு. சி. .. .. | அரூர் (செ.வ.) |
| 92. சமரசம், டாக்டர் கே. .. | காவேரிப்பட்டிணம் |
| 93. சாகுல் ஹமீது, திரு. ஏ. .. | கடையநல்லூர் |
| 94. சாமிக்கண்ணு, திரு. தா. .. | செங்கம். |
| 95. சித்தன், திரு. என். எஸ். வி... | திருமங்கலம் |
| 96. சிதம்பரம், திரு. சி. த. .. | காரைக்குடி |
| 97. சிவசாமி, திரு. செ. .. .. | இளையான்குடி |
| 98. சிவஞானம், திரு. ந. .. | திருவோணம் |
| 99. சிவப்பிரகாசம், திரு. சீ. .. | சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 100. சிவபெருமாள், திரு. மு. .. | ஓமலூர் |
| 101. சிவராமன், திரு. எஸ். .. | சின்னசேலம் |
| 102. சின்னசாமி, திரு. எம். .. | கரூர் |
| 103. சின்னதுரை, திரு. ஏ. .. | மேல்மலையனூர் |
| 104. சின்னராசு, திரு. க. இரா. .. | கிருஷ்ணகிரி |
| 105. சின்னராசு, திரு. மா. .. | தொண்டாமுத்தூர் |
| 106. சுந்தரம், திரு. கே. ஆர். .. | குடியாத்தம் |
| 107. சுந்தரம், திரு. ப. .. .. | திருப்பத்தூர் |
| 108. சுந்தரம், திரு. மு. .. .. | ரிஷிவந்தியம் |
| 109. சுந்தரமூர்த்தி, திரு. ஆர். .. | முகையூர் |
| 110. சுந்தரராஜ், திரு. நா. .. | திருமயம் |
| 111. சுந்தரராஜன், திரு. மு. .. | விருதுநகர் |
| 112. சுப்பிரமணியன், திரு. உ. .. | சிவகங்கை |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 113. சுப்பிரமணியன், திரு. கே. எம். எஸ். | போடிநாயக்கனூர் |
| 114. சுப்பிரமணியன், திரு. மா. .. | திருவையாறு |
| 115. சுப்பிரமணியன், திரு. வி. .. | திருநாவலூர் |
| 116. சுப்பிரமணியன், திரு. ஜி. கே. | பவானிசாகர் |
| 117. சுவாமிநாதன், திரு. வி.வி. .. | புவனகிரி |
| 118. செங்கோட்டையன், திரு. கு.. அ. | கோபிசெட்டிப்பாளையம் |
| 119. செம்மலை, திரு. செ. .. | தாரமங்கலம் |
| 120. செல்லமுத்து, திரு. எம். .. | திருவாரூர் (செ.வ.) |
| 121. செல்வராசன், திரு. அ. .. | துறைமுகம் |
| 122. சென்னிமலை என்கிற கந்தசாமி திரு. ப. செ. | அரவக்குறிச்சி |
| 123. சேதுராமன், திரு. ஏ. எம். .. | ஆற்காடு |
| 124. சொக்கலிங்கம், திரு.கெ. .. | திருப்போரூர் (செ.வ.) |
| 125. சோமசுந்தரம், திரு. எஸ்.டி. | பட்டுக்கோட்டை |
| 126. சோமு, திரு. என்.வி.என். .. | பூங்காநகர் |
| 127. சௌந்திரராஜன் திரு.கே. .. | திருச்சி-2 |
| 128. சௌந்திரராஜன், திரு. திருச்சி, ஆர். | ஸ்ரீரங்கம் |
| 129 சௌரிராஜன், டாக்டர் கே. | தி. நகர் |
| 130. தங்கமணி கவுண்டர், திரு. கே.எம். | திண்டிவனம் |
| 131. தங்கராசு, திரு. ஏ. | குறிஞ்சிப்பாடி |
| 132. தங்கவேல்ராஜ், திரு. பி.எம். | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 133. தங்கவேலு, திரு. பி. .. | செயங்கொண்டான் |
| 134. தவசி, திரு. ஆர். .. | பரமக்குடி (செ.வ.) |
| 135. தனபால், திரு.ப. .. | சங்கரி (செ.வ.) |
| 136. தனுக்கோடித் தேவர், திரு. கே. | முதுகுளத்தூர் |
| 137. தாமரைக்கனி, திரு. இரா. | ஸ்ரீவில்லிப்புத்தூர் |
| 138. தியாகராசன், திரு. ஆர். .. | விருத்தாசலம் |
| 139. திருநாவுக்கரசு, திரு. எஸ். .. | அறந்தாங்கி |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 140. திருமாறன், திரு. பெ. | ஆலங்குடி |
| 141. திருமான், திரு. இரா. | ஏற்காடு (ஆ.வா.) |
| 142. திருவேங்கடம், திரு.பெ.சு. | கலசப்பாக்கம் |
| 143. தீர்த்தராமன், திரு.ப. | பெண்ணாகரம் |
| 144. துரைசாமி, திரு.பி.எஸ். | பர்கூர் |
| 145. துரைமுருகன், திரு. | ராணிப்பேட்டை |
| 146. துரைராமசாமி, திரு. | வெள்ளக்கோவில் |
| 147. துரைராஜ், திரு.பி. | சங்கரநாயனார் கோவில் (செ.வ.) |
| 148. தேவராஜ், திரு. வி. எம். | வேலூர் |
| 149. வெற்றிடம் | |
| 150. நரசிம்மன், திரு. பூ.மு. | பள்ளிப்பட்டு |
| 151. நல்லப்பன், திரு. தி.கா. | பெருந்துறை |
| 152. நவநீதகிருஷ்ண பாண்டியன் | ஆலங்குளம் |
| 153. நாச்சிமுத்து, திரு. கே.பி. | மேட்டூர் |
| 154. நாராயணசாமி, திரு. கே. | திருவண்ணாமலை |
| 155. நாராயணன், திரு. பி.ஜி. | பவானி |
| 156. நெடுஞ்செழியன், டாக்டர், இரா. | திருநெல்வேலி |
| 157. நெடுமாறன், திரு.ப. | மதுரை (மத்திய) |
| 158. பக்கீர் முகமது, திரு. இ.எஸ்.எம். | கும்பகோணம் |
| 159. பட்டாபிராமன், திரு. செ. | திருவள்ளூர் |
| 160. பம்மல் நல்லதம்பி, திரு. | தாம்பரம் |
| 161. பரமசிவ கவுண்டர், திரு. பி.என். | பல்லடம் |
| 162. பலராமன், திரு. இல. | போளூர் |
| 163. பழனிச்சாமி, திரு. சு. | மேட்டுப்பாளையம் |
| 164. பழனிமுத்து, திரு. சி. | ஆத்தூர் |
| 165. பழனியப்பன் திரு. கு. பா. | விழுப்புரம் |
| 166. பழனிவேல், திரு. என். | பழனி (செ.வ.) |
| 167. பாண்டியன், திரு. பி.எச். | சேரன்மாதேவி |
| 168 பாபு கோவிந்தராஜன், திரு. | கடலூர் |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர் (2) |
|---|---|
| 169. பாபு ஜனார்த்தனன், திரு. | செய்யாறு |
| 170. பாரமலை, திரு. க. | மானாமதுரை (செ.வ.) |
| 171. பாலகிருஷ்ணன், திரு. ச. | மொடக்குறிச்சி |
| 172. பாலகிருஷ்ணன், திரு. வி. | சிவகாசி |
| 173. பாலசுப்பிரமணியன், திரு. க. | சீர்காழி (செ.வ.) |
| 174. பாலசுப்பிரமணியன், வேடச்சந்தூர், திரு. வி.பி. | வேடசந்தூர் |
| 175. பாலன், திரு. சு. | பெரம்பூர் (செ.வ.) |
| 176. பானுச்சாமி, திரு. ஏ. | சமயநல்லூர் (செ.வ.) |
| 177. பிச்சை, திரு. எம். | அருப்புக்கோட்டை |
| 178. பிரபாகரன், திரு. ஜே.சி.டி. | வில்லிவாக்கம் |
| 179. புருஷோத்தமன், திரு. து. | சைதாப்பேட்டை |
| 180. பூங்காவனம், திரு. என்.ஏ. | காட்பாடி |
| 181. பெரியசாமி, திரு.ஏ. | தாராபுரம் (செ.வ.) |
| 182. பெரியசாமி, திரு. ரா. | தொட்டியம் |
| 183. பெருமாள், திரு. என். | வரகூர் (செ.வ.) |
| 184. பெருமாள், திரு. ரா.கு. | விளாத்திகுளம் |
| 185. பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். | நிலக்கோட்டை (செ.வ.) |
| 186. பொன்னுரங்கம், திரு.ப. | ராயபுரம் |
| 187. பொன்னையன், திரு.சி. | திருச்செங்கோடு |
| 188. மணி, திரு.டி. | விளவங்கோடு |
| 189. மணிமாறன், திரு. ஆர். | திருப்பூர் |
| 190. மாணிக்கம் திரு. எம்.எஸ். | வேதாரண்யம் |
| 191. மாரிமுத்து, திரு. த. | குளத்தூர் (செ.வ.) |
| 192. முகமது இஸ்மாயில், திரு.பி. | பத்மநாபபுரம் |
| 193. முசிறிபுத்தன், திரு. பி. | திருச்சி-1 |
| 194. முத்துக்கிருஷ்ணன், திரு. சு. | கன்னியாகுமரி |
| 195. முத்துசாமி, திரு. சு. | ஈரோடு |
| 196. முத்துராமலிங்கம், திரு. இ. | ராதாபுரம் |
| 197. முத்துவேல், திரு. என். | வானூர் (செ.வ.) |
| 198. முத்தையா, திரு. இரா. | சேடப்பட்டி |

| தொடர்எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர் (2) |
|---|---|
| 199. முனிரத்தினம், திரு. இரா.சா. | கும்மிடிப்பூண்டி |
| 200. முனுசாமி, திரு. மு.ப. .. | பாலக்கோடு |
| 201. மூர்த்தி, திரு.ஜி. .. .. | பேரணாம்பட்டு (செ.வ.) |
| 202. மொக்கையன், திரு. பி. .. | ராஜபாளையம் (செ.வ.) |
| 203. யசோதா, திருமதி டி. .. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 204. ரகுமான்கான், திரு அ. .. | சேப்பாக்கம் |
| 205. ரங்கசாமி, திரு. ஆர். .. | சத்தியமங்கலம் |
| 206. ரங்கசாமி திரு. க. .. | உளுந்தூர்பேட்டை (செ.வ.) |
| 207. ரமணி, திரு. கு. .. | கோயம்புத்தூர் (கிழக்கு) |
| 208. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான், திரு. | புதுக்கோட்டை |
| 209. ராஜமாணிக்கம் திரு. எம்.கே. | முசிறி |
| 210. ரெத்தினராஜ், திரு.எஸ். .. | குளச்சல் |
| 211. வரதராஜன், திரு. என். .. | திண்டுக்கல் |
| 212. விசயலட்சுமி பழனிச்சாமி, திருமதி. | வீரபாண்டி |
| 213. வின்சென்ட் திரு. மி. | நாகர்கோவில் |
| 214. விஜயசாரதி, திரு. எம். | அரக்கோணம் (செ.வ.) |
| 215. விஜயபாலன், திரு. என். .. | பூம்புகார் |
| 216. விஜயராகவன், திரு. பொ. | கிள்ளியூர் |
| 217. விசுவநாதன், திரு. கோ. | அணைக்கட் |
| 218. வீராசாமி, திரு. த. .. | ஒரத்தநாடு |
| 219. வீராணம்பலம், திரு. க.வெ. | மேலூர் |
| 220. வெங்கடசுப்பிரமணியம், திரு. ப. | காஞ்சிபுரம் |
| 221. வெங்கடரெட்டி, திரு. டி. | ஒசூர் |
| 222. வெங்கடேசன், திரு. பி.எம். | பெரணமல்லூர் |
| 223. வெள்ளைச்சாமி, திரு. அ. | ஆத்தூர் |
| 224. வேணுகோபால், திரு. த. | தண்டராம்பட்டு |
| 225. வேலப்பன், திரு. சி.வி. .. | கபிலமலை |
| 226. ஜகத்ரட்சகன், திரு. எஸ். | உத்திரமேரூர் |
| 227. ஜான் வின்சென்ட், திரு. மு. | நாங்குநேரி |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர் (2) |
|---|---|
| 228. ஜெயராமன், திரு. வே. இரா. | தேனி |
| 229. ஹாஜா செரீப், திரு. கே.எஸ்.ஜி. | திருவல்லிக்கேணி |
| 230. ஹேமச்சந்திரன், திரு. ஜே. | திருவட்டாறு. |
| 231. மார்கரெட் எலிசபெத் பிலிக்ஸ் திருமதி. | நியமன உறுப்பினர். |
| 232. | வெற்றிடம் |
| 233. | வெற்றிடம் |
| 234. | வெற்றிடம் |
| 235. | வெற்றிடம் |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமைபெற்றவர்கள்

1. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் அமைச்சர்
2. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் —அமைச்சர்.
3. மாண்புமிகு டாக்டர் எச்.வி. ஹண்டே —அமைச்சர்.
4. மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா—அமைச்சர்
5. மாண்புமிகு திரு. யா.சை.மு. யூசுப் —அமைச்சர்.
6. மாண்புமிகு திரு. க. கலைமணி —அமைச்சர்.
7. திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி - தலைமை வழக்கறிஞர்.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

*1984, மார்ச் 3, சனிக்கிழமை*

*மாசி 20, ருத்ரோத்காரி—திருவள்ளுவர் ஆண்டு 2015*

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 11—00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**

''உறுபொருளும் உல்கு பொருளும்தன் ஒன்னார்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள்.''

இறையாக வந்து சேரும் பொருளும், சுங்கமாகக் கொள்ளும் பொருளும், தன் பகைவரை வென்று திறையாகக் கொள்ளும் பொருள் அரசுடைய பொருளாகும்.

### 1. 1984–85 ஆம் ஆண்டுக்கான வரவு—செலவுத் திட்டம்

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* மாண்புமிகு நிதி அமைச்சர் 1984–85 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தைப் பேரவைக்கு அளிப்பார்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1983–84ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளையும், 1984-85ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப பீடுகளையும்** இம்மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்க விழை கிறேன்.

துன்பம் உறவரினும் செய்க துணிவுஆற்றி
இன்பம் பயக்கும் வினை.

முதலில் மிகுந்த துன்பம் வந்தாலும் அதுகண்டு தளராமல், முடிவில் இன்பம் பயக்கும் செயல்களைத் திட்பமுடையவராக இருந்து செய்தல் வேண்டும் என்று வள்ளுவப் பெருந்தகையார் வகுத்தருளிய நெறிக்கேற்ப, இந்த அரசு செயலாற்றி வருவதில், கண்ணுங்கருத்துமாக இருந்து வருகிறது.

---

நிதி அமைச்சரின் உரை ஆங்கிலத்தில் 46—77ம் பக்கங் களில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

** 78-139ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1984 மார்ச் 3

சென்ற இரண்டு ஆண்டு காலமாகத் தமிழகத்தில் இயற்கையின் விளைவால் ஏற்பட்ட இடர்ப்பாடுகளையும் செயற்கையால் ஏற்படுத்தப்பட்ட தொல்லைகளையும் பெருமளவுக்குச் சமாளித்து, மக்களின் துயர்களைத் துடைப்பதிலும், ஏழை எளிய, நலிவடைந்த மக்களுக்கு நல்வாழ்வு அளிப்பதிலும், பல்வேறு துறைகளில் உற்பத்தி வளங்களைப் பெருக்குவதிலும், வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுவதிலும், நாட்டில் சட்டம்—ஒழுங்கு—அமைதி நிலைகளைக் காப்பாற்றுவதிலும், இந்த அரசு அக்கறையோடு அரும்பணியாற்றி வந்துள்ளதை அவை உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள்.

இரண்டாண்டு காலமாகத் தொடர்ந்து நீடித்த கடும் வறட்சியின் கொடுமையான பிடியிலிருந்து தமிழகம் கடந்த ஆண்டின் இறுதியில்தான் விடுபட்டது. ஆனால், சோதனையாகக் கடும் வறட்சியைத் தொடர்ந்து, வரலாறு கண்டிராத அளவுக்கு பெரும் மழை பெய்து, வெள்ளப் பெருக்கேற்பட்டு, இம்மாநிலத்தின் சில பகுதிகள் மிகவும் சேதமடைந்தன. அடுத்தடுத்து நிகழ்ந்த இத்தகைய இயற்கைச் சீற்றங்களினால் மாநில அரசுக்குச் செலவுச் சுமை பெருமளவுக்குப் பெருகியது. நிவாரணப் பணிகளுக்காகவும், பழுது பார்ப்பு வேலைகளுக்காகவும் பெரிய அளவில் செலவிடவேண்டியிருந்தது. வறட்சி நிலையைக் கண்டறிய, மத்திய அரசு அனுப்பிய குழு, வறட்சி நிவாரணத்துக்காக ரூ. 68.36 கோடிவரை செலவிடலாம் என்று வரையறுத்திருக்க 1982—83, 1983—84 ஆம் ஆண்டுகளில், வறட்சி நிவாரணப் பணிகளுக்காக மாநில அரசுக்கு ரூ. 114.28 கோடி செலவேற்பட்டது. கூடுதலாக உதவித் தொகை அளிக்க வேண்டும் என மாநில அரசு கேட்டுக் கொண்டதற்கிணங்க, தொடர்ந்து நிலவிய வறட்சி நிலையைக் கண்டறிய, மத்திய அரசு, இன்னுமொரு குழுவை அனுப்பியது. இக்குழுவின் பரிந்துரைப்படி, ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட உச்சவரம்பிற்கும் கூடுதலாக, ரூ. 9.18 கோடி செலவிடலாம் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வறட்சிப் பணிகளின் கீழ், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால், ஏறத்தாழ ரூ. 46 கோடி செலவில், 21,726 குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டன. ரூ. 3.73 கோடி செலவில் குடிநீர்க் கிணறுகள் ஆழ்ப்படுத்தப்பட்டன. பாசன வாயில்களைப் பழுது பார்த்துச் சீரமைப்பதற்காக, ரூ. 17.31 கோடி செலவிடப்பட்டது. மேலும் ரூ. 5 கோடி செலவில், ஊருணிகளும், குளங்களும், தூர்வாரிப் பண்படுத்தப்பட்டன. வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு உடனடியாக நிவாரணம் அளிக்கும் வகையில், மாநில அரசு அவர்களுக்கு ஜனதா சேலைகளையும், வேட்டிகளையும் ரூ. 10 கோடி செலவில் வழங்கியது. இத்தகைய நடவடிக்கைகளினால், வறட்சியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணம் கிடைத்தது மட்டுமல்லாமல், குடிநீர் வாயில்கள், பாசன வசதிகள், சாலைப் போக்குவரத்து வசதிகள் போன்ற நிலையான வசதிகளும் மாநிலத்தில் உருவாக்கப்பட்டுள்ளன.



1984 மார்ச் 3] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

சென்ற டிசம்பர் மாத இறுதியில் பரவலாகவும், கடுமையாகவும் மழை பெய்தது. இதனால் குறிப்பாகத் தஞ்சாவூர், தென் ஆர்க்காடு, திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் உயிர் இழப்பு ஏற்பட்டதுடன், அறுவடையாகும் நிலையிலிருந்த பயிர்களுக்கும், சாலைகள், பாலங்கள், கட்டிடங்கள், ஏனைய சொத்துக்கள் ஆகியவற்றுக்கும் பெருமளவு பாதிப்பு ஏற்பட்டது. போர்க்கால அடிப்படையில் மீட்புப் பணிகளும் நிவாரண நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன. போக்குவரத்து வசதியைச் சீர் செய்யவும், வெள்ளத்தினால் சூழப்பட்டப் பகுதிகளில் அகப்பட்டுக் கொண்ட மக்களுக்கு உணவுப் பொட்டலங்கள் அளிப்பதற்கும், இராணுவத்தினரின் உதவி கோரப்பட்டு, இப்பணிகள் இராணுவத்தினரால் செவ்வனே செய்து முடிக்கப்பட்டன. வெள்ளத் துயர் தணிப்புப் பணிகளுக்காக ரூ. 128 கோடி நிதியுதவி வழங்குமாறு மாநில அரசு மத்திய அரசைக் கேட்டுக்கொண்டது. உடனடியாக, ரூ. 5 கோடி வழங்கியதற்கும், வெள்ள நிலையை நேரில் கண்டறிந்து, பாதிப்பை மதிப்பிட்டு, மத்திய அரசு அளிக்க வேண்டிய நிதியுதவியை முடிவு செய்ய மத்திய குழு ஒன்றை அனுப்பியதற்கும், இந்தியப் பிரதமருக்கு நாம் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளோம். மத்திய அரசு மேலும் ரூ. 10 கோடி வழங்கி, இதனைப் பின்னர் கொடுக்கப்படவுள்ள வெள்ள நிவாரண மானியத்தில் சரிகட்ட முடிவு செய்துள்ளபோதிலும், மாநில அரசு, துயர் தணிப்புப் பணிகளுக்காக, உடனடியாக ரூ. 37.54 கோடி செலவிட அனுமதி வழங்கியுள்ளது. வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு கருணை உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ள ரூபாய் 10 கோடியும் இதில் அடங்கும்.

வரலாறு கண்டிராத அளவுக்கு இயற்கைச் சீற்றங்களினால் ஏற்பட்ட பாதிப்புகள் தொடர்பாக மாநில அரசுக்கு ஏற்பட்ட பெரும் செலவுச் சுமையினால், மாநில அரசின் பொருளாதார நிலை நடப்பாண்டில் வெகுவாகப் பாதிக்கப்பட்டது. நமது கூட்டாட்சி அமைப்பு முறையில் வளர்ச்சித் திட்டங்கள், மக்கள் நலனுக்கான நடவடிக்கைகள் ஆகியவற்றை நிறைவேற்றும் பொறுப்பு மாநில அரசைச் சார்ந்ததாகும். ஆனால், இப்பணிகளை நிறைவேற்றுவதற்கான நிதி வாயில்கள், தேவையான அளவிற்கு மாநில அரசுக்குக் கிடைப்பதில்லை. பெருகக்கூடிய நிதி வாயில்கள் மத்திய அரசிடம் பெருமளவு உள்ளன. மேலும், பொதுமக்கள், வங்கிகள் ஆகியோரிடமிருந்து கடன் திரட்டும் வாய்ப்புகள், ஆயத் தீர்வைகள், சுங்கத் தீர்வைகள், கூட்டு நிறுவன வரி ஆகியவற்றை வசூலிக்கும் வாய்ப்பு, வெளிநாடுகளிலிருந்து கடன் பெறும் வாய்ப்பு போன்ற வசதிகள், மத்திய அரசுக்கு உள்ளன. ஆனால் மாநில அரசின் நிதி வாயில்களோ, மிகவும் குறைந்தவையாகும். வணிக வரிகள், ஆயத் தீர்வைகள் ஆகியவற்றிலிருந்து மட்டுமே

மாநில அரசுக்கு வருவாய் கிடைக்க வாய்ப்புள்ளது. முக்கிய
மான வளர்ச்சிப் பொறுப்புகளை நிறைவேற்றும் போக்கு
வரத்துக் கழகங்கள், மாநில மின் வாரியம் போன்ற மாநில
அரசு நிறுவனங்கள் கூட, மத்திய அரசு அடிக்கடி அறி
விக்கும் பொருள் விலையேற்றங்களினால் அவ்வப்பொழுது நிதிப்
பற்றாக் குறைக்கு உள்ளாகின்றன. கடந்த ஐந்து ஐந்
தாண்டுத் திட்டங்களின்கீழ்ச் செயலாக்கப்பட்டு வந்த திட்டங்
கள், தற்போது திட்டத்திற்குப் புறம்பாகச் செயலாக்கப்படு
வதால், திட்டத்தில் சேராத செலவு பெருகிக்கொண்டே
போகிறது. மாநிலத் திட்டங்களுக்கு மத்திய அரசு 20
சதவீதமே உதவித் தொகை அளிக்கிறது. இச்சதவீதமும்
முதல் திட்டத்திலிருந்து குறைந்து கொண்டே வருவது
கவலை அளிக்கிறது. இத்தகைய சூழ்நிலையில், இயற்கைச்
சீற்றங்களின் காரணமாகவோ, திடீரென ஏற்படும் நிதிப்
பொறுப்புகளின் காரணமாகவோ, மாநில அரசுக்கு ஏற்படும்
கூடுதல் செலவினால் மாநில அரசின் வரவு-செலவுத் திட்ட
மதிப்பீடுகளே குலைந்துவிடும் நிலை உருவாகிறது. மக்க
ளுக்கு ஆற்ற வேண்டிய கடமைகளை மாநில அரசு புறக்கணிக்க
முடியாது. அதே நேரத்தில் ஏராளமான வளர்ச்சித் திட்டங்
களையும், மக்கள் நலன் தொடர்பான திட்டங்களையும், மாநில
அரசு நிறைவேற்ற வேண்டியுள்ளது. மேற்கூறிய காரணங்
களினால் மிகைப்பற்று வாங்க வேண்டிய ஒரு கட்டாய
சூழ்நிலை தமிழ்நாட்டிற்கு உருவாயிற்று. இக் கண்ணோட்டத்
துடன் இம் மாநிலத்தின் நிலையை, பரிவுடனும், உண்மை
யான நிலையை உணர்ந்து கொள்ளும் எண்ணத்துடனும்
மத்திய அரசு கவனித்து, இம் மாநில அரசு தாற்காலிகமாக
எதிர் நோக்கி இருக்கும் நிதிப் பற்றாக்குறையைச் சமாளிக்க
உதவியளிக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

ஆட்சிப் பணிகள் செம்மையாக நடைபெற, "வலிவான
இந்தியாவும் வளமான மாநிலங்களும்" அமைய வேண்டும்.
இந்தக் கொள்கையைத்தான், இந்த அரசு தொடர்ந்து
வலியுறுத்தி வருகிறது. இந்தியாவை எல்லாவகைகளிலும்
பாதுகாக்கின்ற பொறுப்பு மைய அரசையும், மக்களை எல்லா
நிலைகளிலும் வாழவைக்கின்ற பொறுப்பு, மாநில அரசு
களையும் சார்ந்தனவாக ஆகின்றன.

கூட்டாட்சித் தன்மைகொண்ட வலிவான இந்தியாவில்,
தேவையான, நியாயமான, மிகவான அதிகாரங்கள் கொண்ட
தன்னாட்சி மாநிலங்கள் நிலவ வேண்டும். இந்த அடிப்படை
யில், இந்தியக் கூட்டாட்சியில், மிகவான அதிகாரங்கள்
கொண்ட தன்னாட்சி மாநிலமாகத் தமிழ்நாடு திகழ வேண்
டும் என்பதைத்தான், பேரறிஞர் அண்ணா அவர்கள் காட்டிய
நெறிமுறையில் நின்று, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அடிக்
கடி வற்புறுத்தி வருகிறார்கள்.





மைய—மாநில அரசுகளின் உறவு நிலையும், உரிமை நிலையும் வரையறுக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி வந்த அறிஞர் அண்ணா அவர்கள், "மைய அரசிடமிருக்கும் அதிகாரங்கள் பலவும் மாநில அரசுகளுக்கு நியாயத்தின் அடிப் படையில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். அப்படி அதிகாரங் கள் பகிர்ந்தளிக்கப்பட, அரசமைப்புச் சட்டம் தேவையான அளவுக்குத் திருத்தப்பட வேண்டும். அரசமைப்புச் சட்டத் தைத் திருத்துவதற்கு எற்ற நேரமும், நிலையும், நினைப்பும் இப்பொழுது ஏற்பட்டிருக்கின்றன. அரசமைப்புச் சட்டத்தை அலசி, ஆராய்ந்து, திருத்துவதற்குச் சட்டத்தின் மூலம் வாய்ப்பளிக்க வேண்டும், திருத்தப்படவேண்டும் என்று வற்புறுத்துவதற்குக் காரணமே, அதிகாரங்கள் முறையாகவும், செம்மையாகவும், சிறப்பாகவும் மாநிலங்களுக்குப் பகிர்ந் தளிக்கப்படவேண்டும்" என்பதற்காகத்தான் என்று தெளி வாகக் குறிப்பிட்டுள்ளார்கள்.

மைய-மாநில அரசுகளின் உறவுகளையும், உரிமைகளையும் ஆராய்ந்தறிந்து பரிந்துரை செய்வதற்காக மைய அரசு நீதிபதி சர்க்காரியா குழுவை அமைத்திருப்பதை, இந்த அரசு வரவேற்பதோடு, அந்தக் குழு உண்மையான மையக் கூட்டாட்சியும், மாநிலத் தன்னாட்சியும் அமைய, வழி வகுத்துத் தரவேண்டும் என்று வற்புறுத்துகிறது. இன்றைய சூழ்நிலையில் மைய—மாநில அரசின் உறவு நிலைகளும், உரிமை நிலைகளும் எப்படி அமைய வேண்டும் என்பதைத் தமிழக அரசின் சார்பாக எடுத்துக் காட்டுவதற்கான கொள்கையை வகுக்க, நீதி பதி இராமபிரசாத் ராவ் குழு, தமிழக அரசால் அமைக்கப் பட்டுள்ளது.

அரசியல் அறிஞரான திரு. கே. சி. வியர் என்பார் 'கூட்டாட்சிமுறை அரசு' என்னும் நூலில்,

"மைய அரசும், மாநில அரசுகளும் தங்கள் ஆதிக்கத் திற்கு உட்பட்டவைகளில், கூட்டாகவும்— ஆனால் சுதந்திர மாகவும் இயங்கும் வகையில் அதிகாரங்களைப் பிரித்துக் கொள்ளும் முறைதான், கூட்டாட்சிமுறைத் தத்துவமாகும் என்பது நான் கருதுவதாகும். மைய அரசும், மாநில அரசு களும் தங்கள் தங்களது வரையறுக்கப்பட்ட ஆட்சி எல்லைக் குள் அமைந்திருப்பவை; தங்கள் தங்கள் அதிகாரங்களைப் பொறுத்துச் சுதந்தரமானவை; ஒன்றுக்கு ஒன்று கீழ்ப் படிந்து நடக்க வேண்டியவை அல்ல' என்று குறிப்பிட்டி ருப்பது கூர்ந்து கவனிக்கத்தக்கதாகும்.

திட்டங்களை நிறைவேற்றுவதைப் பொறுத்த வரையில், தமிழ்நாடு பல சிறந்த சாதனைகளைப் புரிந்து முன்னணியில் நிற்கின்றது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் செலவு ரூ. 3,150 கோடியாக இருக்க வேண்டுமென்று முதலில் திட்டமிட்டிருக்க முதல் மூன்றாண்டுகளிலேயே இம்மாநில அரசு திட்டப்பணிகளுக்காக, ரூ. 1,821 கோடி செலவிட்டுள்ளது. நடப்பாண்டுக்கான திருத்தச் செலவு மதிப்பீடு ரூ. 861,87 கோடியாகும். 1984-85 ஆம் ஆண்டுக்கான செலவுமதிப்பீடு ரூ. 979.22 கோடியாகும். இக்கணக்கின் படிப் பார்த்தால், திட்டத்திற்காக அனுமதிக்கபட்ட செலவைவிட ரூ. 511.61 கோடி அதிகமாக நாம் செல விடுவது தெரியவரும். முதலமைச்சர் குழந்தைகள் சத்து ணவுத் திட்டம் போன்ற, திட்டம் சாரா வளர்ச்சித் திட்டங்கள், மக்கள் நல நடவடிக்கைகள் ஆகியவற்றிற்காக மாநில அரசு ஏராளமான அளவில் செலவிட வேண்டியிருந்தது. திட்டப் பணிகளுடன் இவற்றையும் சேர்த்து நிறைவேற்றி வருவது பாராட்டுக்குரிய சாதனையாகும். ஆறாவது ஐந் தாண்டுத் திட்டக்கால அளவில் ரூ. 1,100 கோடி திரட்டு வதாக வாக்களித்திருந்தபோதிலும், ரூ. 1,450 கோடி அள விற்குக் கூடுதல் நிதி ஆதாரங்களைத் திரட்டியதன் பலனாக மாநில அரசு இச்சாதனையைச் செய்த முடிந்தது. 1983-84 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 184.55 கோடி பற்றாக்குறை எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், இயற்கைச் சீற்றங்களின் காரணமாகக் கடும் செலவுச் சுமை ஏற்பட்டுப் புதிய பணிகளை மேற்கொண்ட போதிலும், திருத்த மதிப்பீட்டில் இப்பற்றாக்குறையை ரூ. 129.31 கோடியாக நாம் குறைத்துள்ளோம். தொடர்ந்து செலவுத் தன்மை வாய்ந்த சிறப்புப் பணிகளின் காரணமாக ஏற்பட்ட இப் பற்றாக்குறை, ஆறாவது திட்டத்தின் கடைசி ஆண்டாகிய இந்த ஆண்டில், மாநில அரசுக்குப் பெரும் நிதிச் சுமையாக அமையக்கூடாது என்றும், மத்திய அரசு இந்நிலையை பரிவுடன் கவனித்து இந்நிதிப் பற்றாக்குறையை ஈடுகட்ட நமக்குச் சிறப்பு உதவி அளிக்க வேண்டுமென்றும், நாம் மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளோம். நிதி நிர்வாகத்தில் ஆரிவார்ந்த முறையில் செயல்படுவதில், தமிழ்நாடு தொடர்ந்து முன்னணியில் நிற்கின்றது. 1982 மார்ச் திங்களில், ஏராளமான மாநிலங்கள் ரூ. 1,751 கோடி அளவுக்கு மிகைப்பற்று வாங்கியிருக்க அவற்றை நடுத்தரக்காலக் கடன்களாக மாற்றிக் கொடுக்க மத்திய அரசு முன் வந்த நிலையிலும், இத்தகைய உதவியைக் கேட்க வேண்டிய அவசியமான நிலையோ அல்லது பயன்படுத்திக் கொள்ள வேண்டிய நிலையோ இம்மாநில அரசுக்கு ஏற்பட வில்லை.





இப்படிப்பட்ட பின்னணியில்தான் பொது மக்கள் நல
னுக்காகவும், பொருளாதார வளர்ச்சி தொடர்பாகவும், பல்
வேறு துறைகளில் இம்மாநில அரசு எடுத்துக் கொண்டுள்ள
முயற்சிகளை விளக்க விழைகிறேன்.

## வேளாண்மை

மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியில் வேளாண்
மைத் துறையின் பங்குபற்றி மிகவாக வலியுறுத்திக்கூற வேண்டிய
தில்லை. கடந்த இரண்டு ஆண்டுகளில். வேளாண்மைக்கு ஏற்
பட்ட இடர்ப்பாடுகள், உணவுத் தானியங்கள் உற்பத்தி, அவை
கிடைக்கும் அளவு ஆகியவற்றை மட்டுமின்றி, ஆதாரத் துறை
யான இந்தத் துறையில் வேலை வாய்ப்புகளையும் மோச
மாகப் பாதித்துள்ளன. இந்த ஆண்டு இறுதியில் சுமார் 50
இலட்சம் மெட்ரிக் டன் நெல்லும், 19 இலட்சம் மெட்ரிக்
டன் சிறு தானியங்களும் உற்பத்தி செய்யப்படும் என
எதிர்பார்க்கப்படுகிறது. அடுத்த ஆண்டில் 65 இலட்சம் மெட்
ரிக் டன் நெல்லும், 30 இலட்சம் மெட்ரிக் டன் சிறு தானியங்
களும் உற்பத்தி செய்ய வேண்டுமென இலக்கு நிர்ணயிக்கப்
பட்டுள்ளது.

அடுத்த நிதியாண்டில் மாநிலத்தில் தற்போதுள்ள
விதை பதப்படுத்தும் பிரிவை ரூ. 8 இலட்சம் செல
வில் வலுப்படுத்தவும், விதைப் பண்ணைகளில்
ரூ. 18 இலட்சம் செலவில் பாசன வசதிகளைப் பெருக்கவும்
திட்டமிடப்பட்டுள்ளது. இராமநாதபுரம் மாவட்டம், பரமக்
குடியில், உழவர் பயிற்சி நிலையத்தை ஏற்படுத்தவும் கருதப்
பட்டுள்ளது. இரண்டு பரம்புப் பொறிகளை ரூ. 20.56
இலட்சம் செலவில் வாங்கவும், ரூ. 19.87 இலட்சம் செலவில்
ஆழ்கிணறு துளையிடும் கருவிகள் 5 வாங்கவும் வேளாண்மைப்
பொறியியல் துறை திட்டமிட்டுள்ளது. பல்லடம், காங்கேயம்
மற்றும் பெருந்துறை ஆகிய இடங்களில் உள்ள மாநில
வேளாண்மை விளைபொருள் தர ஆய்வுக் கூடங்களுக்கும் கட்
டிடம் கட்டவும் எண்ணப்பட்டுள்ளது.

எண்ணெய் வித்துகளின் உற்பத்தியைப் பெருக்க, மாநில
அரசு உரிய முக்கியத்துவம் கொடுத்துள்ளது. 1984-85-ல்,
எண்ணெய் வித்துக்கள் துறையின் மூலம் வேர்க்கடலை வித்துக்
களை வழங்கி அதன் மூலம் எண்ணெய் வித்துக்கள் பயிரிடப்
படும் பரப்பளவை 4 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாகப்
பெருக்கிட எண்ணெய் வித்துக்கள் துறை திட்டமிட்டுள்ளது.
நவ்லோக்கில் உள்ள துறைப் பண்ணையில் உற்பத்தி செய்யப்
பட்ட புதிய கலப்பின வகை "தென்னை மற்றும் குட்டை"
நாற்றுக்கள் 1984-85 முதல் உழவர்களுக்குக் கிடைக்கும்.

நடப்பாண்டில் இத் துறை 36.69 இலட்சம் நாற்றுக்களை வழங்கியுள்ளது. தற்போது 4.55 இலட்சம் கலப்பின நாற்றுக்கள் வழங்கப்பட்டிருக்க, அதன் அளவை 5.75 இலட்சம் நாற்றுக்களாக பெருக்கிடத் திட்டமிடப்பட்டுள்ளது. எண்ணெய் வித்துக்கள் துறையின்கீழ் நடப்பாண்டில் 14.54 இலட்சம் எக்டேரில் பயிரிடவும், 1984–85-ல் 14.67 இலட்சம் எக்டேரில் பயிரிடவும் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியை அடுத்தாண்டில், நடப்பாண்டு இலக்கான 14.25 இலட்சம் மெட்ரிக் டன்னிலிருந்து, 14.60 இலட்சம் மெட்ரிக் டன்னாக பெருக்கிடத் திட்டமிடப்பட்டுள்ளது. நடப்பாண்டில் 10,728 மெட்ரிக் டன் எண்ணெய் வித்துக்களை இத்துறை வழங்கியுள்ளது. 1984–85-ல் 12,550 மெட்ரிக் டன் எண்ணெய் வித்துக்களை வழங்கக் கருதியுள்ளது.

### கால்நடை வளர்ப்பு.

கால்நடை வளர்ப்பு மும்முரத் திட்டம், கேந்திர கிராமத் திட்டம், கால்நடை உற்பத்திச் சிறப்புத் திட்டம் போன்ற பல்வேறு கால்நடை வளர்ப்புத் திட்டங்கள், கணிசமான அளவுக்குக் கால்நடை உற்பத்தியை முன்னேற்றமடையச் செய்வதற்கு மட்டுமின்றி, நவீன கால்நடை நிர்வாக முறைகளைப் பரவலாகப் பயன்படுத்துவதற்கும் கால்நடை வளத்தைப் பெருக்குவதற்கும் பயன்பட்டுள்ளன.

கால்நடைகளுக்குச் சிறந்த முறையில் மருத்துவ வசதி அளிக்கப்பட வேண்டுமென்ற நோக்கத்துடன், புதிதாக 26 கால்நடை மருந்தகங்கள் தொடங்கப்பட்டுள்ளன, 3 கால்நடை மருந்தகங்கள், கால்நடை மருத்துவமனைகளாக நிலை உயர்த்தப்பட்டுள்ளன ; இரண்டு கால்நடை மருத்துவமனைகள் முதன்மை கால்நடை மருத்துவ நிலையங்களாக நிலை உயர்த்தப்பட்டுள்ளன. இத்துடன், செங்கற்பட்டு, தஞ்சாவூர், சேலம் மாவட்டங்களில் கால்நடை நோய்த் தகவல் சேகரிப்புப் பிரிவுகள் மூன்று புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ளன.

### பால்பண்ணை வளர்ச்சி

பால் கொள்முதலைத் தொடக்கப் பால் கூட்டுறவுச் சங்கங்களிடம் ஒப்படைக்க வேண்டுமென்ற அரசின் கொள்கையின் அடிப்படையில் கிராம அளவிலும், மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டு, இவ்வமைப்பின் மூலம், பால்கொள்முதல் மற்றும் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. 1984–85ஆம் ஆண்டில் 500 தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.



நாளொன்றுக்கு 50,000 லிட்டர் பாலைக் குளிரவைத்துப் பதப்படுத்தும் தொழிற்சாலை ஒன்றை திருநெல்வேலியில் அமைப்பது குறித்த பணியும், பட்டுக்கோட்டை, புதுக்கோட்டை ஆகிய இடங்களில் பாலைக் குளிரவைக்கும் நிலையங்கள் அமைப்பது குறித்த பணியும் நடந்தேறி வருகின்றன. 1984–85ஆம் ஆண்டில் ரூ. 28 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் திருநெல்வேலி மாவட்டம் வள்ளியூரில், பாலைக் குளிரவைக்கும் நிலையம் ஒன்றை மேற்கொண்டும் ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. வறட்சி பாங்கான பகுதித் திட்டத்தின்கீழ், ரூ. 150 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில், இராமநாதபுரம் மாவட்டத்தில் பாரக்குடியில், ஒரு பால்பண்ணை அமைக்கப்பட்டு வருகிறது.

பால்வளத் திட்டம்-II தற்போது இம் மாநிலத்தில், 9 மாவட்டங்களில் ரூ. 42.87 கோடி மதிப்பீட்டுச் செலவில் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம், ஊக்கம் அளிக்கக்கூடிய வகையில் செயல்பட்டு வருவதால், இத் திட்டத்தை, இம் மாநிலத்தில் மேலும் மூன்று மாவட்டங்களுக்கு நீட்டிக்க வேண்டுமென்று, இந்தியப் பால்பண்ணைக் கழகத்திடம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

### உணவு.

1982, 1983ஆம் ஆண்டுகளில் பெருமளவுக்குப் பருவமழை பொய்த்ததனால், இம்மாநிலத்தின் உணவு நிலையை பெரிதும் பாதிக்கப்பட்டது. 1983ஆம் ஆண்டு, காலதாமதமாக ஆகஸ்ட் திங்களில் காவிரி நீர் திறந்துவிடப்பட்டதனாலும் உணவு உற்பத்தி குறைந்தது. இருப்பினும், பாசன மற்றும் வறட்சி நிவாரண ஈட்டுத் தொகை குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 35 கொடுத்ததாலும், திருச்சி, மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களிலுள்ள சிலவட்டங்களில் அரசின் ஏகபோகக் கொள்முதல் உரிமை நீட்டிக்கப்பட்டதாலும், 1983ஆம் ஆண்டு குறுவைப்பருவத்தில் ஒரு இலட்சம் டன் அரிசி கொள்முதல் செய்ய முடிந்தது.

பொது விநியோக முறையின் மூலம் திங்களொன்றுக்கு 70,000 முதல் 80,000 டன் அரிசி வழங்க வேண்டியிருந்ததால், வெளி அங்காடியிலிருந்து மிகவான விலைக்குப் பெருமளவில் அரிசியைக் கொள்முதல் செய்ய வேண்டியிருந்தது. நடப்பாண்டில், மலிவு விலையில் உணவுப் பொருள் வழங்கிய வகையில் மாநில அரசுக்குச் சுமார் ரூ. 100 கோடி அளவிற்குக் கூடுதல் செலவு ஏற்பட்டுள்ளது என்று மதிப்பிடப்படுகிறது. இப்பெரும் செலவைக் குறைக்க, தற்போது திங்கள் ஒன்றுக்கு மத்திய அரசின் இருப்பில் இருந்து வழங்கப்படும் 35,000 மெட்ரிக் டன் அரிசியின் அளவை, 80,000 மெட்ரிக் டன்னாக அதிகரிக்க வேண்டும் என கோரப்பட்டுள்ளது.

### கூட்டுறவு.

கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களிடம் தொடர்ந்து
மிகைப்பற்று இருந்து வருவது, குறுகிய கால வேளாண்மைக்
கடன் அளவில் எதிர்பார்த்த வளர்ச்சியைப் பாதித்திருந்த போதி
லும், 1982—83 ஆம் ஆண்டில், நீண்ட கால, நடுத்தரக் காலக்
கடன் வழங்கும் அளவில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம்
ஏற்பட்டுள்ளது. வேளாண்மைத் தொழில், துணைத் தொழில்கள்
மூலம், சிறு விவசாயிகள் தங்களின் வருமானத்தைப் பெருக்கிக்
கொள்ள, அவர்களுக்கு, நடுத்தரக் காலக் கடன் தொகையின்
மொத்த அளவில், 95 சதவீதம் வழங்கப்பட்டுள்ளது என்பது
தான் கடன் வழங்கு அமைப்பு முறையின் முக்கிய அம்சமாகும்.

இம்மாநிலத்திலுள்ள வேளாண்மைப் பணித் தொடக்கக்
கூட்டுறவுச் சங்கங்கள், 1982—83 ஆம் ஆண்டில், ரூ. 67.18
கோடி அளவிற்கும், நடப்பாண்டில் 1983 டிசம்பர் வரை,
ரூ. 58.04 கோடி அளவிற்கும் குறுகிய காலப் பயிர்க் கடன்களை
வழங்கியுள்ளன. பால்பண்ணை, கோழிபண்ணை முதலியன
போன்ற துணைத்தொழில்களுக்கு, 1981—82 ஆம் ஆண்டில் ரூ. 9.79
கோடி அளவிற்கு நடுத்தரக் காலக்கடன் வழங்கப்பட்டிருக்க
1982—83 ஆம் ஆண்டில், இவற்றிற்கு ரூ. 15.97 கோடி வழங்கப்
பட்டது. நடப்பாண்டில், ரூ. 8.33 கோடி அளவிற்குக் கடன்கள்
வழங்கப்பட்டுள்ளன. 1981—82 ஆம் ஆண்டில், நீண்ட காலக்
கடன்களுக்கான நிதி ஒதுக்கம், ரூ. 5.52 கோடியாக இருந்தது.
அதனைத் தொடக்க நிலவள வங்கிகள் 1982—83 ஆம் ஆண்டில்
ரூ. 14.35 கோடியாகப் பெருக்கியுள்ளன. 1983—84 ஆம்
ஆண்டில் 1983 டிசம்பர் வரை, ரூ. 9.11 கோடி அளவிற்கு
நீண்ட காலக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

சிறு தொழில் மற்றும் குடிசைத் தொழில்களில் ஈடு
பட்டுள்ள நலிந்த பிரிவினர்களுக்குத் தொடர்ந்து 4 சதவீத
சலுகை வீதத்தில் கடன் வழங்கப்படும். பெரிய அளவிலான
பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும், மலைவாழ் பழங்
குடியினருக்கு இச்சலுகை வீதத்தில் கடன் வழங்குகின்றன.
சிறு உழவர்கள், கடன்களை முறையாகத் திருப்பிச் செலுத்து
வதற்காக, 2 சதவீத வட்டி தள்ளுபடி வழங்கும் ஊக்கத் திட்டமும்
தொடர்ந்து நடைமுறையில் இருந்து வருகிறது.

ஒரு இலட்சம் ஆதி திராவிட குடும்பங்களைக் கூட்டுறவு
அமைப்பின் கீழ் கொண்டுவர, குடும்பம் ஒன்றிற்கு அரசு மானிய
மாக, ரூ. 100 வழங்கும் திட்டத்தின்கீழ், இதுவரை, 80,000
குடும்பங்கள் பயன்பெற்றுள்ளன. அடுத்து நிதி ஆண்டில்,
இத்திட்டத்தின்கீழ், ரூ. 10 இலட்சம் செலவு செய்யக்
கருதப்பட்டுள்ளது.



விதைகள், உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகள்
முதலிய வேளாண்மை இடுபொருட்களை வழங்குவதில், கூட்டு
றவுச் சங்கங்கள் முனைப்பாகச் செயல்பட்டு வந்துள்ளன.
அண்மையில் ஏற்பட்ட வறட்சி, வெள்ளப்பெருக்குப் போன்ற
பாதகமான பருவகாலங்களில், உழவர்களுக்கு இது பேருதவி
யாக அமைந்தது. இவை தவிர, சிறு உழவர்களுக்கும், சொற்ப
நில உழவர்களுக்கும், பெருமளவில் உதவியளிக்கும் தேசியத்
திட்டத்தைச் செயல்படுத்துவதில், கடன் வழங்கு கூட்டுறவுச்
சங்கங்கள் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன. வேளாண்மைப்
பணித் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகச் சிறு
பாசனக் காரியங்களைச் சிறப்பு இனமாகக் கருதி அவற்றிற்கு
நீண்டகாலத் தவணை வேளாண்மைக் கடன்கள் வழங்க 8
மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கு அரசு அனுமதி வழங்கி
யுள்ளது.

கூட்டுறவுச் சங்கங்கள் இன்றியமையாத பொருட்களை
வழங்குவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. இம் மாநிலத்தி
லுள்ள கிராமப் பகுதிகளில், 11,159 கிராமக் கூட்டுறவுக் கடை
கள் பெரும் அளவில் செயல்பட்டு வருகின்றன. இது தவிர,
காய்கறிகளின் விலைவாசி ஏற்றத்தைத் தடுப்பதற்காக,
காய்கறி பயிரிடுவோர் விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்கள்,
47 ஏற்படுத்தப்பட்டுள்ளன. 8 மாவட்டங்களில் இச்சங்
கங்கள் காய்கறி விற்பனையை மேற்கொண்டுள்ளன. வரும்
ஆண்டில், இத்திட்டம் மேலும் 8 மாவட்டங்களுக்கு நீட்டிக்
கப்படும்.

### காட்டுவளம்.

காடுபடு பொருள்களைப் பாதுகாத்து வளர்ப்ப
தோடு மட்டுமல்லாது, அதிகப் பரப்பளவில் காடு வளர்க்க
இம்மாநில அரசு, பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.
ஸ்வீடன் அனைத்து நாட்டு வளர்ச்சி நிறுவனத்தின் உதவியுடன்
கூடிய காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ், 1983 டிசம்பர் வரையில்
285 இலட்சம் மரங்கள் நடப்பட்டுள்ளன. 28,000 எக்டேர்
பரப்பளவில் மலைத் தோட்டப் பயிர்கள் வளர்க்கப்பட்டுள்ளன.
கரையோரங்களிலும் சாலையோரங்களிலும் 803 கி.மீ. நீளத்
திற்குக் காடுகள் வளர்க்கப்பட்டுள்ளன. 1983-84 ஆம் ஆண்
டில், இத்திட்டத்திற்காக ரூ. 8.67 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம், மலைப்
பகுதி மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றின்கீழ், மதுரை, கன்னி
யாகுமரி, நீலகிரி மாவட்டங்களில் பல்வேறு காடு வளர்ப்புத்
திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத் திட்டங்கள் தவிர,
1983-84 ஆம் ஆண்டில் தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம்,
2,132 எக்டேரில் யூக்கலிப்டஸ் மரங்களையும், 742 எக்டேர்
பரப்பளவில் முந்திரி மரங்களையும் பயிரிட்டுள்ளது.

## மீனளம்.

மீனளத்தை மேம்படுத்துவதற்கும், மீனவர்களின் வாழ்க்கைத் தரத்தைச் சிறப்படையச் செய்யவும், அரசு, வெவ்வேறு திட்டங்களை வகுத்துள்ளது. மீனவர்களுக்கு உயர்தர மீன்பிடி வலை கிடைக்கச் செய்வதற்காக, 20 டன் மீன்பிடி திறன்கொண்ட வலை தயாரிக்கும் பிரிவு ஒன்றை ஏற்படுத்த, தமிழ் நாடு மீனள மேம்பாட்டுக் கழகம் நடவடிக்கை எடுத்துள்ளது. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், நீலகிரி மாவட்டத்தில் உள்ள அவலாஞ்சியில் 'டிரவுட்' வகை மீன் குஞ்சுகளை வளர்க்கும் நவீன திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அரசு அனுமதி வழங்கியுள்ள 9,931 வீடுகளில் 7,535 வீடுகளை தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகம், கடலில் மீன் பிடிக்கின்ற மீனவர்களுக்காகக் கட்டியுள்ளது. எஞ்சியுள்ள வீடுகள், ஆறாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிவடையும் முன் கட்டி முடிக்கப்படும்.

## பாசனம்.

1983-84 ஆம் ஆண்டில், 14,350 எக்டேர் நிலப்பரப்பிற்குக் கூடுதல் பாசன வசதி கிடைக்கும் வகையில், பெரிய, நடுத்தரப் பாசனத் திட்டங்கள் முடிக்கப்படும். 1984-85 ஆம் ஆண்டில், இத்தகைய திட்டங்களுக்கு மூலதனச் செலவு ரூ. 48.97 கோடி ஆகும். இந்த முதலீட்டின் மூலம் 28,170 எக்டேர் நிலப்பரப்பிற்குக் கூடுதல் பாசன வசதிகளை ஏற்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

நடப்பு ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பரம்பிக்குளம் ஆழியாறு விரிவாக்கத் திட்டம், பெரியாறு, வைகைப் பாசன ஏற்பாட்டை நவீனப்படுத்தும் திட்டம் ஆகிய இரு முக்கியத் திட்டப் பணிகளும் செவ்வனே நடைபெற்று வருகின்றன. திட்டமிட்டபடி, இப்பணிகள் செய்து முடிக்கப்படும்.

நடுத்தரப் பாசனத் திட்டங்கள் மூன்று இந்த ஆண்டு முடிக்கப்பட்டுவிடும். பெரியார் மாவட்டத்தில் பெரும்பள்ளம் நீர்த்தேக்கத் திட்டப்பணி நடப்பாண்டில் செயலுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

பெரியாறு, வைகை பாசன ஏற்பாட்டை, ரூ. 59 கோடி செலவில் நவீனப்படுத்தும் இரண்டாம் நிலை திட்டச் செயற்குறிப்புக்கு உலக வங்கி ஏற்பளித்துள்ளது. ரூ. 44.50 கோடி செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிற முதலாம் நிலைப் பணியுடன், இரண்டாம் நிலைப் பணியும் ஒருசேரச் செயல்படுத்தப்படும்.





அரசுத் துறைகளைச் சேர்ந்த வெவ்வேறு அதிகாரிகளுக்குப் பணியில் பயிற்சி அளிப்பதற்காக திருச்சிராப்பள்ளியில், அமெரிக்க நாட்டு உதவித் திட்டத்தின் கீழ்ப் பாசன நிருவாகப் பயிற்சி நிலையம் ஒன்றை அமைக்கவும் அரசு அனுமதி வழங்கியுள்ளது.

## மின்சக்தி.

சென்ற நிதி ஆண்டுத் தொடக்கத்தில், தமிழ்நாடு மின் அமைப்பின் நிறுவுத்திறன் 3,109 மெகாவாட்டாக இருந்தது. கல்பாக்கம் அனல் மின்நிலையம் தொடங்கியதிலிருந்து தற்போது இந்த மின் அமைப்பின் அளவு 3,344 மெகாவாட்டாக உயர்ந் துள்ளது. நீர்மின் தேக்கங்களை அறிவார்ந்த முறையில் பயன் படுத்தி, மின் உற்பத்தியைச் சீரமைத்ததாலும், தூத்துக்குடி அனல் மின் திட்டச் செயல்பாட்டை மேம்படுத்தியதாலும், கூடு தல் மின் உற்பத்தி கிடைத்தது. 1983 ஜனவரியிலிருந்து ஜூன் வரையில் சராசரியாக நாளொன்றுக்கு 23.83 மில்லியன் யூனிட் என்றிருந்த மின் உற்பத்தி, இந்த ஆண்டில் சராசரியாக நாளொன் றுக்கு 33.68 மில்லியன் யூனிட் மின் சக்தி கிடைக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

1—2—1983 அன்று 128 மில்லியன் யூனிட்டாக இருந்த புனல் மின் உற்பத்தித்திறன், 1—2—1984 அன்று, 1,068 மில்லி யன் யூனிட்டாயிற்று. இதனால், புனல் மின்வள வாயில்கள் கணிசமான அளவு அதிகரித்துள்ளன. தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் 1983 டிசம்பரில் 333 மில்லியன் யூனிட் மின்சாரமும், 1984 ஜனவரியில் 344 மில்லியன் யூனிட் மின்சாரமும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. இது, இந்த அனல் மின்நிலையத்தின் ஒரு சாதனையாகும். எனினும், இந்த அளவு மின் உற்பத்திக் குப் போதிய நிலக்கரி கிடைப்பது மிகவும் அரிதாக உள்ளது. மாதம் ஒன்றுக்கு 2.7 இலட்சம் டன் நிலக்கரி தேவையாகயிருக்க, வழங்கப்படுகின்ற நிலக்கரியின் அளவு 1.5 இலட்சம் டன் மட்டுமேயாகும்.

மின்சக்தி நிலைமை சீரடைந்துள்ளதால், மின்வெட்டைக் குறைக்க முடிந்தது. மின்சக்தியைப் பயன்படுத்துவது குறித்த கட்டுப்பாடுகளைத் தளர்த்தவும் இது உதவியது. இந்த ஆண்டில் மின்சக்தியின் பயன்பாடுமீதான கட்டுப்பாடுகளை மேற்கொண்டும் அதிகரிக்காமல் நிலைமையைச் சமாளிக்க முடியும் என்று மின்வாரியம் நம்பிக்கை கொண்டுள்ளது.

மின்சக்தி மேம்பாட்டுத் திட்டங்களை விரைவுபடுத்துவதன் மூலமே, மாநிலத்தில் தொடர்ந்து நிலவும் மின் பற்றாக் குறைக்கு நிலையான தீர்வு காண முடியும், ஏழாவது ஐந் தாண்டுத் திட்டக் காலத்தில், மேட்டூர் அனல் மின் நிலைய நீட்டிப்புத் திட்டம், வட சென்னை அனல் மின் திட்டம்,

தூத்துக்குடி அனல் மின் நிலைய நீட்டிப்புத் திட்டம் ஆகிய மூன்று பெரிய திட்டங்களை மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ளது. இவற்றில், மேட்டூர் அனல் மின் நிலைய நீட்டிப்புக்கு மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதன் மூலம், ஒவ்வொன்றும் 210 மெகாவாட் உற்பத்தி செய்யும் இரண்டு பிரிவுகள் சேர்க்கப்படும். பிற இரண்டு திட்டங்கள் மத்திய அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளன.

திட்டப் பணிகளின்கீழ் நிதி ஒதுக்குவதில் மின் துறைக்கு உரிய முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. அடுத்த நிதியாண்டில் மின் துறைக்கு மத்தியத் திட்டக் குழு 237 கோடி ரூபாய் ஏற்பளித்துள்ளது. எனினும், நிலக்கரி, எண்ணெய், இரயில்வே கட்டணம், பிற மாநிலங்களிலிருந்து வாங்கும் மின் சக்திக்கான கட்டணங்கள் ஆகியவை பெரும் அளவில் உயர்ந்துவிட்டதால், தமிழ்நாடு மின் வாரியத்தின் ஆதாரங்களுக்கும், பொறுப்புக்கும் இடையே உள்ள இடைவெளி மிக அதிகமாக உள்ளது. நிலக்கரி விலையைத் தற்போது 25 சதவீதமாக உயர்த்தியுள்ளது. மின்வாரியத்திற்கு ஆண்டுதோறும் சுமார் ரூ. 15 கோடி நிதிச் சுமையைச் சேர்க்கிறது. 1983 ஆம் ஆண்டு மே திங்களில் செய்யப்பட்ட மிதமான மின் கட்டணத் திருத்தம் புதிய திட்டங்களுக்கு நிதி உதவி அளிக்கப் போதுமானதாக இல்லை. தேவையான நிதி ஆதாரங்களைத் திரட்ட மாற்று முறைகள் உருவாக்கப்பட வேண்டியிருக்கின்றன.

## தொழில் வளர்ச்சி.

மாநிலத்தின் தொழில் வளர்ச்சி பாதிக்கப்பட்டுள்ளது என்றும், நிலையானப் பொருளாதார வளர்ச்சித் திட்டங்கள் ஒருசில மட்டுமே மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் ஒரு சில தரப்பினரிடையே ஆதாரமற்ற கருத்து நிலவி வருகிறது. எனினும், மத்திய நிதி நிறுவனங்களிடமிருந்து, மொத்தக் கடன் உதவி ரூ. 1,289 கோடி பெற்ற தமிழ்நாடு, இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி, இந்திய தொழில் கடன் முதலீட்டு நிறுவனம், இந்திய தொழில் நிதி நிறுவனம் போன்ற பல் வேறு நிதி உதவி நிறுவனங்களிலிருந்து கடன் பெறுவதில், மூன்றாவது இடத்தை வகிக்கிறது. மாநிலத்தில் செய்யப்பட்ட மொத்த முதலீடு மிகவும் அதிகம் என்பதையே இது காட்டுகிறது. தமிழ்நாட்டின் தொழில் வளத்தில் மைய அரசின் முதலீடு மிகவும் குறைவு என்பதையும் நாம் இங்கே குறிப்பிட வேண்டும். தொழில்களில் மத்திய அரசின் மொத்த முதலீடான ரூ. 21,171 கோடி மற்றும் எந்த ஒரு மாநிலத்திற்கும் ஒதுக்கப்படாத ரூ. 2,422.14 கோடி ஆகியவற்றில் 1981 மார்ச் வரை தமிழ்நாட்டில் செய்யப்பட்ட முதலீடு ரூ. 922.51 கோடி மட்டுமே. ஆறாவது



ந்தாண்டுத் திட்டக் காலத்தில் மத்திய அரசு தமிழ்நாட்டில் ற்படுத்திய புதிய தொழில் திட்டம் ரூ. 1.06 கோடி சொற்ப தலீட்டுடன் தொடங்கப்பட்ட மத்திய "பிளாஸ்டிக் பொறியியல் ருவிகள் உற்பத்தி நிறுவனம்" மட்டுமேயாகும்.

தொழில் வளர்ச்சியைப் பெருக்கும் திட்டத்தை அணுகும் முன்னரும், புதிய தொழில் பிரிவுகளை ஏற்படுத்தும முன்னரும் மாநிலத்தில் உள்ள தொழில் வளர்ச்சியின் தன்மை பற்றி ஆய்வு செய்ய வேண்டும். மாநிலத் தொழில் வளர்ச்சியின் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவெனில் சிறு தொழில் பிரிவுகளின் விரைவான வளர்ச்சியே ஆகும். 31–3–1979 அன்று 22,254 சிறு தொழில் பிரிவுகள் பதிவு செய்யப்பட்டிருக்க 31–3–1983 அன்று 40,925 சிறு தொழில் பிரிவுகள் பதிவு செய்யப்பட்டிருந்தன. கடந்த நான்கு ஆண்டுகளில் சிறு தொழில்களின் எண்ணிக்கை 83 சதவீதம் அதிகரித்துள்ளது என்பதையே இது காட்டுகிறது. பெருந் தொழிற்சாலைகள் நிறுவப்படாத நிலையிலும், சிறு தொழில் வளர்ச்சிக்குப் பெருமளவில் முதலீடு செய்யப்பட்டிருப்பதையே இது உணர்த்துகிறது. நமது தொழில் வளர்ச்சியின் மற்றொரு குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால் இது மாநிலம் முழுவதும் ஏற்பட்ட பரவலான வளர்ச்சி ஆகும். தமிழ் நாட்டில் எந்த மாவட்டமும், தொழிற்சாலை இல்லாத மாவட்டமாக வகைப்படுத்தப்படவில்லை. மாநிலத்தில் தொழில் வளர்ச்சிக்கு மத்திய நிதி உதவி அளிப்பதற்கு இது இடையூறாக இருந்தபோதிலும், வட்டார ஏற்றத்தாழ்வுகளை அகற்ற இந்த நிலை உதவி வருகிறது. தொழில் வளர்ச்சியின் மற்றொரு முக்கிய அம்சம் என்னவென்றால் பட்டுப்புழு வளர்ப்பு, ஏனைய கிராமப்புற குடிசைத் தொழில்கள் போன்ற வேலைவாய்ப்பைப் பெருக்கக் காரணமாக அமைகின்ற தொழில்களின் வளர்ச்சியாக இருப்பது ஆகும். இது வேலை வாய்ப்புப் பிரச்சினையைத் திறமையாக சமாளிக்க அரசு எடுத்துள்ள பெரு முயற்சியின் விளைவால் ஏற்பட்டுள்ள ஒன்றாகும்.

திறமையை வளர்த்துத் தொழில்களைப் பெருக்கி, அதன் மூலம் இம்மாநிலத்தில் தொழில் வளர்ச்சியைப் பெருக்க, முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டுமென்பதையே மேற்சொன்ன ஆய்வு காட்டுகிறது. இந்நோக்கத்தை எய்த, தனியார் பல்தொழில் பயிற்சிப் பயிலகங்களையும் பொறியியல் கல்லூரிகளையும் தொடங்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. வாழ்க்கைத் தொழில் கல்வி, தொழில் நுட்பக் கல்வி முதலியவற்றை மேம்படுத்த அரசு எடுத்துள்ள முயற்சிக்கு இது உறுதுணையாக இருக்கும்.

அரசின் பல்வேறு நிறுவன அமைப்புகள் அவற்றைச் சார்ந்த தொழில் வளத்தை மேம்படுத்த முக்கியப் பங்காற்றி வருகின்றன. 1983–84 ஆம் ஆண்டில் டிசம்பர் வரை மாவட்டத் தொழில் மையங்கள், 6,621 சிறு தொழில் நிறுவனங்களைப் பதிவு செய்துள்ளன. இவை 47,767 பேர்களுக்கு வேலைவாய்ப்பை நல்கியுள்ளன. சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ், ரூ. 16.47 கோடி அளவிற்கு நிதியுதவி அளிக்கப்படுவதற்காக 10,988 விண்ணப்பங்கள் பரிந்துரை செய்யப்பட்டு வங்கிகளுக்கு அனுப்பப் பட்டுள்ளன. இவற்றில் 2,079 இனங்களுக்கு இதுகாறும் ரூ. 318.98 இலட்சம் தொகைக்கு வங்கிகள் அனுமதி வழங்கி யுள்ளன.

சிறு தொழில் மேம்பாட்டு நிறுவனம் (சிட்கோ) நிருவகித்துவரும் தொழில் பேட்டைகள் மற்றும் மேம்படுத்துப்பட்ட மனைகள் திட்டத்தின்கீழ், 33 அரசு தொழில் பேட்டைகளில் உள்ள 783 பட்டறைகள், 983 மேம்படுத்தப்பட்ட மனைகள் சிறு தொழில் பிரிவுகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. தவணைக் கொள் முதல் திட்டத்தின் கீழ் 101 சிறு தொழில் பிரிவுகள் அவற்றின் பட்ட றைகளுக்கான தொகை முழுவதையும் செலுத்தி உள்ளன. பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்த சிறு தொழில் மேம் பாட்டு நிறுவனம் (சிட்கோ) ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 55.50 கோடி முதலீடு செய்யத் திட்டமிட்டுள்ளது.

1983–84 ஆம் ஆண்டில், கதர் கிராமத் தொழில் வாரியம் ரூ. 83.79 கோடி மதிப்பிற்குப் பொருட்களை விற்கத் திட்டமிட் டுள்ளது. அடுத்த ஆண்டில், இது ரூ. 101.51 கோடியாக உயர்த்தப்பட உள்ளது. 1984–85 ஆம் ஆண்டில் கூடுதலாக 32,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படும். 41,476 கைவினைஞர்களுக்கு நிதியுதவி அளிக்க வாரியம் வகை செய்துள்ளது.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) பொதுத் துறை கூட்டுத் துறையின் கீழ், 26 திட்டங்களை வெற்றிகரமாகத் தொடங்கியுள்ளது. பொதுத் துறையிலான அரக்கோணம் தமிழ்நாடு ஸ்டீல்ஸ் நிறுவனத்தின் மீள் உருள் ஆலைத்திட்டம் சோதனை முறையில் உற்பத்தியைத் தொடங்கியுள்ளது. பொதுத் துறையின் கீழ் 3 திட்டங்களும் கூட்டுறவுத் துறையின் கீழ் 7திட்டங் களும் செயல் படுத்துப்பட்டு வருகின்றன. பொதுத் துறையின் கீழ் 7 திட்டங்களையும், கூட்டுறவுத் துறையின் கீழ் 17 திட்டங் களையும் உருவாக்கத் தமிழ் நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) திட்டமிட்டுள்ளது. தமிழ் நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்திற்கு (டிட்கோ) முழுவதும் சொந்தமானதும் அதன் துணை நிறுவனமுமான தமிழ்நாடு சிமென்ட்ஸ் நிறுவனம் ரூ. 10 கோடி செலவில் திருச்சி மாவட்டத்தில் மாயனூரில் ஆண்டொன் றுக்கு 30,000 மெட்ரிக் டன் திறனுடன் ஆஸ்பெஸ்டாஸ் குழாய்





தயாரிக்கும் திட்டப் பணியை மேற் கொண்டுள்ளது. இது, 1984 செப்டம்பரில் முடிக்கப்பட்டுவிடுமென்று எதிர்பார்க்கப் படுகிறது. திருச்சி மாவட்டத்தில் தொழில் வளர்ச்சி நிலையில் பின்தங்கியுள்ள பகுதியான புகளூரில் பத்திரிக்கைக் காகிதம் பிற காகிதம் தயாரிக்கும் தொழிற் சாலையை, தமிழ்நாடு பத்திரிக்கைக்காகிதம் பிற காகித நிறுவனம் அமைத்து வருகிறது. ரூ. 195 கோடி மதிப்புள்ள இத்திட்டம் ஆண்டொன்றுக்கு 50,000 டன் பத்திரிக்கைக் காகிதத்தையும் 40,000 டன் பிற காகிதத்தையும் உற்பத்தி செய்யும். இதனால் ஆண்டொன்றுக்கு ரூ. 40 கோடி அந்நியச் செலவாணி மிச்சமாகும்.

நடுத்தர மற்றும் பெரிய தொழில்களின் வளர்ச்சியிலும் மேம்பாட்டிலும், தமிழ்நாடு சிறு தொழில் மேம்பாட்டு நிறுவனம் (சிப்காட்) முக்கிய பங்கு வகிக்கிறது. நடப்பாண்டில் 31–1–1984 வரை தமிழ்நாடு சிறுதொழில் மேம்பாட்டு நிறுவனம் ரூ. 23.26 கோடி அளவிற்குக் குறித்தகாலக் கடன் உதவிக்கு அனுமதி வழங்கி யுள்ளது உத்திரவாதத்தின் பேரிலும், நேரடியாகத் தொகை அளித்தல் பேரிலும் ரூ. 20.99 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. ரூ. 83.40 இலட்சம் அளவிற்கு அடிப்படை மூலதன நிதியுதவி அளிக்க அனுமதி வழங்கியுள்ளது.

இம்மாநிலத்தில் கனிம வளர்ச்சிப் பணி நிர்வாகத்தை மேம்படுத்துவதற்காக, அரசு, மண்ணியல் சுரங்கம் வெட்டுதல் எனும் தனித் துறை ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. தமிழ்நாடு மாக்னசைட் நிறுவனம் படிப்படியாக நிறைவேற்றப்படும் திட்டத் தின் கீழ் ரூ. 80 கோடி செலவில் ''வெப்பந்தாங்கிக் கற்கள் தயாரிக்கும் திட்டம்'' ஒன்றை மேற்கொண்டுள்ளது. 1985 மார்ச்/ஏப்ரலில் சுழல் ஊது உலை தொடங்கப்படும்போது இத்திட்டத்தின் முதற்கட்டப் பணி முடிவடையும்.

இம்மாநிலத்தில் உள்ள கனிமவளத்தைப் பயன்படுத்தும் நோக்கத்துடன் நிறுவப்பட்ட பொதுத் துறை நிறுவன்மாகிய தமிழ்நாடு கனிம வள நிறுவனம் நல்ல முன்னேற்றத்தை எய்தி யுள்ளது. இந் நிறுவனத்தின் மொத்த விற்பனை 1983–84 ஆம் ஆண்டில் ரூ. 256 இலட்சம் இருக்குமென்று எதிர் பார்க்கப்படு கின்றது. அடுத்த ஆண்டில் இந்த விற்பனை ரூ. 350 இலட்ச மாக இருக்க வேண்டுமென்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 1982–83 ஆம் ஆண்டு விற்பனைத் தொகையான ரூ. 168 இலட் சத்தைப் போல் இது இரண்டு மடங்குக்கு மேலாகும். இந்நிறு வனம் ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்டுள்ள நிறுவனமாதலால் இதன் விற்பனையில் 90 சதவீதம் அந்நியச் செலவாணியாகக் கிடைக்கும். சென்னை அருகே மணலியில் ரூ. 385 இலட்சம் செலவில், 100 சதவீதம் ஏற்றுமதிக்காகக் கருங்கற்களை வெட்டி பளபளப்பாக்கும் தொழிற்சாலை ஒன்றை நிறுவும் பணியை 'டாமின்' மேற்கொண்டுள்ளது. இத்திட்டத்திற்காக அரசு பங்கு

மூலதனமாக ரூ. 30 இலட்சம் ஏற்கனவே வழங்கியுள்ளது. இத் தொழிற்சாலை 1984 ஆம் ஆண்டு இறுதியில் உற்பத்தித் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சிவகங்கையில் கிடைக்கும் சிறப்பு மிக்க மைக்கல்லை (கிராஃபைட்) பயன்படுத்தித் தொழிற்சாலை ஒன்றை நிறுவவும் இந்நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இத்தொழிற்சாலைக்காக ரூ. 30 இலட்சம் முதலீடு செய்ய அரசு திட்டமிட்டுள்ளது. இந்நிறுவனம் அடைந்துள்ள முன்னேற்றம் அரசுக்கு மனநிறைவு அளிக்கிறது. இந்நிறுவனம் 1983–84 ஆம் ஆண்டில் ரூ. 100 இலட்சம் ஆதாயத்தை எதிர் பார்க்கிறது.

பட்டுப்புழு வளர்ப்புத் திட்டத்தின் கீழ், 1984–85 ஆம் ஆண்டில், ரூ. 91.65 இலட்சம் மூலதனச் செலவில் திட்டங்கள் தொடங்கக் கருதப்பட்டுள்ளது. இக்கால அளவில் மேலும் 10,000 ஏக்கரில் கூடுதலாக முசுக்கட்டைச் செடி பயிரிடப்படும். 1984–85 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படவிருக்கும முக்கியத் திட்டங்களில் அரசு பட்டுப்புழு வளர்ப்புப் பண்ணைகளில் முசுக்கட்டை செடிகள் வளர்த்தலும் கோயம்புத்தூரில் ஆண்டிற்கு இரு முறை முட்டையிடும் பட்டுப்புழு வளர்ப்புப் பண்ணை ஏற்படுத்தலும் அடங்கும்.

### கைத்தறி-துணிகள்.

நம் மாநிலத்தில் கைத்தறித் தொழில் சுமார் 13.34 இலட்சம் நெசவாளர்களுக்கு நேரடியாக வேலை வாய்ப்பினை அளித்து வருகின்றது. மொத்தம் 5.56 இலட்சம் கைத்தறிகளில், இது வரையில் 3.47 இலட்சம் தறிகள், 1,529 தொடக்க நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் அமைக்கப்பட்டுள்ளன. கைத்தறி இல்லாத நெசவாளர்களுக்குக் கூட்டுறவு அமைப்புத் திட்டத்தின் மூலம் பொதுவான பணிக்கொட்டகைகளுக்கு வகை செய்யப்பட்டுள்ளது. இத் திட்டத்தின்கீழ், நடப்பு நிதியாண்டில் 12 தொழில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கக் கருதப்பட்டுள்ளது. 1984–85 ஆம் ஆண்டில் அத்தகைய நெசவாளர் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் 15-ஐ அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இது தவிர, சிறப்புக்கூறு திட்டத்தின் கீழ், ஆதி திராவிடர்களுக்கென்றே நெசவாளர் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் 8-ஐ ஏற்படுத்துவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

இவ்வாண்டில், கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களும், கோ-ஆப்டெக்ஸ் நிறுவனமும், நிலமற்ற வேளாண்மைத் தொழிலாளர்களுக்குக் கைத்தறித் துணிகளை வழங்கும் திட்டத்தின் கீழ் கைத்தறித் துணிகளை வழங்குவதில் முக்கியப் பங்கேற்றுப் பணியாற்றியுள்ளன. அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின் போது, கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்குக் குறுகிய கால அளவில், ரூ. 2 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகளை வழங்க ஏற்பாடு செய்தது.



### வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி.

உலக வங்கியின் நிதி உதவி பெறும் சென்னை நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம், குடிசைப் பகுதி மேம்பாட்டு விரைவுத் திட்டங்கள் ஆகியவற்றின்கீழ், குடிசைப் பகுதி மாற்று வாரியம் மேற்கொண்டுள்ள விரிவான திட்டம், தொடர்ந்து முழு வேகத்துடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சென்னை நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 1-ன் கீழ், சென்னை நகரில் ரூ. 443.65 இலட்சம் செலவில் அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. இதனால், 24,862 குடும்பங்கள் பயனடைந்தன. 1981 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட சென்னை நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2-ன் கீழ் ரூ. 354.31 இலட்சம் செலவில் 22,000 குடும்பங்கள் பயனடைந்துள்ளன. இந்தத் திட்ட இலக்கான 50,000 குடும்பங்களும் பயனடையும் வகையில் 1984–85 ஆம் ஆண்டிற்கு ரூ. 6.00 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் கீழ், 1984–85 ஆம் ஆண்டில், வீட்டு மேம்பாட்டிற்காக, ரூ. 273 இலட்சம் அளவிற்குக் கடன்கள் வழங்கப்படும்.

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம், மதுரை, கோயம்புத்தூர், ஈரோடு ஆகிய இடங்களில் குடியிருப்புக்கள் கட்டும் பணியை, மேற்கொள்ளும். இது மதுரை, கோயம்புத்நூர் ஏனைய நகராட்சிகளிலும், குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தை மேற்கொள்ளும்.

சென்னை அருகே மூகப்பேர், நெற்குன்றம் கிராமங்களில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், சென்னை நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2-ன் கீழ் '' மனைகள்-பணிகள் '' திட்டத்தைச் செயல்படுத்துகிறது.

சென்னை மாநகருக்காக, ரூ.135 கோடி செலவில் விரிவான நகர வளர்ச்சி திட்டம் ஒன்று (M.U.D.P. III) தயாரிக்கப்பட்டு, உலக வங்கியின் ஆய்வுக்காக இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இதே போன்று கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம் ஆகிய நகரங்களை மேம்படுத்துவதற்கான விரிவான திட்டமொன்றும் தயாரிக்கப்பட்டு உலக வங்கியின் ஆய்வுக்காக இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

1984–85 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் அரசுப் பணியாளர்கள் வீடுகட்டும் முன்பணத்திற்காக ரூ. 10 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில், நகராட்சிப் பணியாளர்களுக்கு மட்டும் ரூ. 50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

நடப்புத் திட்டக் கால அளவில் கிராமப் பகுதி வீட்டு வசதித் திட்டத்தின்கீழ், 1978-79-லிருந்து மொத்தம் 1,57,766 வீடுகள் கட்டப்பட்டுள்ளன ; தமிழ்நாடு வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கம், வீடு கட்டுபவர்களுக்குக் கடனாகவும், உதவித் தொகையாகவும் ரூ. 58.23 கோடி வழங்க, கிராம வீட்டு வசதிக் கூட்டுறவு சங்கங்களுக்கு நிதி உதவி அளித்துள்ளது. இவற்றில், ஆதிதிராவிடர்களால் மட்டும் 1,26,409 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. 1984–85 ஆம் ஆண்டில், இத் திட்டத்தின்கீழ் மேலும் 40,000 வீடுகள் கட்டக் கருதப்பட்டுள்ளது.

### சாலைகள், போக்குவரத்து, துறைமுகங்கள்.

போக்குவரத்துக் கழகங்கள் தொடர்ந்து நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன. 1982–83-ல் மூன்று போக்குவரத்துக் கழகங்களைத் தவிர மற்றவை ஆதாயத்தில் செயல்பட்டன. நமது போக்குவரத்துக் கழகங்களில் இரு கழகங்கள் தேசிய உற்பத்தித்திறன் குழுவின் அனைத்திந்திய விருதுகளைப் பெற்றுள்ளன.

ஜீவா போக்குவரத்துக் கழகம், நேசமணி போக்குவரத்துக் கழகம், மருது பாண்டியர் போக்கு வரத்துக் கழகம் ஆகிய மூன்று புதிய போக்குவரத்துக் கழகங்கள் 1983 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாளிலிருந்து தனித்துச் செயல்படத் தொடங்கியுள்ளன. பல்லவன் போக்குவரத்துக் கழக ஆலோசனைப் பணிப் பிரிவு ஒரு தனி நிறுவனமாக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

1983 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 1 ஆம் நாளிலிருந்து போக்குவரத்துத் தொழிலாளர்களின் ஊதியம் உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் ஆண்டொன்றுக்கு ரூ. 9 கோடி கூடுதல் செலவு ஏற்பட்டுள்ளது. டீசலின் விலை அதிகரிப்பு, நிருவாகச் செலவை மிகவும் உயர்த்தியுள்ளது என்பதை ஈண்டு குறிப்பிடுவது அவசியமாகும்.

சாலைகளைப் பராமரிப்பதற்குரிய அடிப்படைத் தேவைப் பொருளான நிலக்கீலின் விலையை மூன்றாண்டுக் கால அளவில் 75 சதவீதத்திற்கு மேல் மத்திய அரசு உயர்த்தியுள்ளது. இந்த விலை ஏற்றம் காரணமாக சாலைப் பணிகளின் முன்னேற்றம் தடைப்பட்டது.

ஹால்டியாவிலிருந்து தூத்துக்குடி அனல் மின் நிலையத்திற்கு நிலக்கரியைக் கொண்டு வருவதற்காக கப்பல் ஒன்றை வாங்கப் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்திற்கு மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது.





1982–83 ஆம் ஆண்டில், இம் மாநிலத்திலுள்ள சிறு துறைமுகங்கள், 3.40 இலட்சம் டன் சரக்கை ஏற்றி இறக்கின. கடலூர் துறைமுகத்திலும், குளச்சல் துறைமுகத்திலும் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. வாலிநோக்கத்தில் சிறு துறைமுகத்தை அமைப்பது அனுமதியளிக்கப்பட்டு, பணிகள் நடந்தேறி வருகின்றன.

### சுற்றுலா.

சுற்றுலா மேம்பாட்டிற்கான வழிவகைகள் தமிழ்நாட்டில் ஏராளமுள்ளன. இந்த வழிவகைகளை மேம்படுத்த மாநில அரசு தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. மாமல்லபுரத்தில் திறந்த வெளி அருங்காட்சியகம் ஒன்றை அமைக்கவும் முட்டுக்காட்டில் நிலையான படகுத் துறை ஒன்றைக் கட்டுவது குறித்தும் பரிசீலிக்கப்பட்டு வருகின்றது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், கன்னியாகுமரி, முதுமலை, பிச்சாவரம் ஆகிய இடங்களில் இளைஞர் உணவகங்களை ஏற்படுத்தும் பணியை மேற்கொண்டுள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திலும் இரண்டு சுற்றுலா மையங்களை மேம்படுத்துவதற்கான திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் முதல் கட்டமாக ஐந்து சுற்றுலா மையங்களை ரூ. 10 இலட்சம் செலவில் மேம்படுத்துவதற்கான பணிகள் நடந்தேறி வருகின்றன. 1984-85 ஆம் ஆண்டு, மேலும் சில மாவட்ட சுற்றுலா மையங்களை மேம்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

சுற்றுலா மையங்கள் பற்றி அதிக அளவில் விளம்பரம் கொடுக்கும் பொருட்டு, ரூ. 2 இலட்சம் செலவில் செய்திப் படம் ஒன்றைத் தயாரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. பூம்புகார் தொகுப்பில் மேம்பாட்டு பணிகளை மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது.

### தமிழ்க் கலையும், பண்பாடும்.

தமிழர்களின் புகழ்வாய்ந்த பாரம்பரியத்தையும், அவர்களது பண்பாட்டையும் ஒளிபெறச் செய்வதை, அரசு அறிவார்ந்த கொள்கையாகக் கொண்டிருக்கிறது. புது டில்லியில் முக்கியமானதோர் இடத்தில் மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் 10 அடி உயர வெண்கலச் சிலை ஒன்றை நிறுவக் கருதப்பட்டுள்ளது. மகாகவியின் முழுப்படைப்புகளையும், கவிதைகள், கட்டுரைகள், கதைகள் என மூன்று தொகுதிகளாக வெளியிடவும் எண்ணியுள்ளது. இதற்காக அரசு ரூ. 3 இலட்சம் அனுமதியளித்து, இப்பணியைத் தஞ்சையிலுள்ள தமிழ்ப் பல்கலைக் கழகத்திடம் ஒப்படைத்துள்ளது.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1984 மார்ச் 3

தந்தை பெரியாரின் வாழ்க்கை வரலாற்றை வல்லுநர்
குழு ஒன்று தயாரித்து வருகிறது. தீண்டாமைக் கொடுமையை
எதிர்த்து அவர் நடத்திய போராட்டத்தை நினைவு கூறும் வகை
யில் கேரளாவிலுள்ள வைக்கத்தில் பெரியார் நினைவுக் கட்டிடத்
தொகுப்பு ஒன்றை அமைக்கக் கருதப்பட்டுள்ளது. கேரளத்தில்,
வைக்கத்தில் தந்தை பெரியார் திருவுருவச் சிலையை வைக்க
கேரள அரசு இடம் ஒதுக்கித் தந்துள்ளது. அங்குப் பெரியார்
சிலை அடுத்த ஆண்டுக்குள் தமிழக அரசுச் செலவில் நிறுவப்
படும்.

தமிழகத்திலுள்ள கோயில்களுக்கு திருப்பணி செய்
வதற்கும், பழுது பார்ப்பதற்கும் அரசு ரூ. 15 இலட்சம் மானிய
மாக அளிக்க முடிவெடுத்துள்ளது.

தமிழக அறிஞர்களின் பேருரைகளை அவர்களின் வாயு
ரையாகவே பெற்றுப் பாதுகாக்க அடுத்த நிதியாண்டில் ரூபாய்
ஒரு இலட்சம் செலவில் புதிய திட்டம் ஒன்றைக் கொண்டுவரவும்
கருதப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் கிராமியக் கலைகளைப்
பேணிப்பாதுகாத்துப் பிரபலப்படுத்தக் கிராமியக் கலை நிலையம்
ஒன்றை ஏற்படுத்தவும் கருதப்பட்டுள்ளது.

**கல்வி.**

வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கத்தில் கல்விக்குத்
தொடர்ந்து அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது.
கல்வி என்பதன்கீழ் செலவு தொடர்ந்து பெருகிக்கொண்டே
வந்துள்ளது. 1984-85 ஆம் ஆண்டு மொத்த மூலதனச் செலவு
ரூ. 404.76 கோடியாகும். முதலமைச்சர் சத்துணவுத் திட்
டம் காரணமாக 6—11, 11—14 வயதுத் தொகுதியில் கூடுத
லாக மாணவர்களைச் சேர்த்துக் கொள்வது உயர்ந்துள்ளது.
இது 20 அம்சத் திட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட இலக்கினை
விட அதிகமானதாகும். 2 இலட்சம் சிறுவர்கள் என்ற இலக்
குக்கு மாறாக, 1983-84-ல், 3,82 இலட்சம் சிறுவர்கள் கூடுத
லாகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

1983-84-ல் 6—14 வயதுத் தொகுதியில் உள்ள மாண
வர்களுக்காக, 390 முறைசாரார்க் கல்வி நிலையங்கள் இருந்தன.
இவை ஒவ்வொன்றிலும் 30 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்
பட்டனர். 1984-85-ல் குடியாத்தம் பகுதியில் மேலும் 10
முறை சாராக் கல்வி நிலையங்களைத் தொடங்கக் கருதப்பட்
டுள்ளது. 1983-84-ல் மொத்தம் 17,047 முதியோர் கல்வி
நிலையங்கள் செயல்பட்டன. இந்த நிலையங்களில் 5.50 இலட்
சம் முதியோர் பயின்றனர். அவர்களில் 3.55 இலட்சம் பேர்கள்
பெண்கள். 1984—85-ல் 1,000 எட்டறிவு நிலைக் கல்வி நிலை
யங்களைத் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.



1984 மார்ச் 3] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

அண்மையில் கொடைக்கானலில் ஏற்படுத்தப்பட்ட
அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகம், மகளிர் நலன்
குறித்த ஆராய்ச்சியை மேற்கொள்வதுடன் மகளிர் நலத்திட்டங்
களுக்காக ஆலோசனை கண்காணிப்புப் பணிகளையும் நல்கும்.
ஏற்கனவே அறிவித்தவாறு காரைக்குடியில் ஒரு பல்கலைக்கழகம்
தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 1984-85-ல்
புதிய பட்டப் படிப்பையும் பட்ட மேற்படிப்பையும் தொடங்க
ரூ. 7 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 5 ஆண்டு சட்டப்
படிப்பு 1983-84 முதல் கொண்டு வரப்பட்டுள்ளது.

தொழில் நுட்பக் கல்வித் துறையில் புதிய பாடமுறை
களைக் கொண்டு வரவும், தக்க கல்வி வசதிகள் அளிக்கும் பொ
ருட்டும், கட்டிடங்கள், கருவிகள் வகையில் வசதிகளை மேம்
படுத்தவும் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் நிதி ஒதுக்கப்பட்
டுள்ளது. 1983-84-ல் அரசுப் பல்தொழில் பயிற்சிப் பயில
கங்கள் ஒவ்வொன்றிலும், ஸ்ரீலங்காவிலிருந்து திரும்பியுள்ள தமிழ்
அகதிகளின் நலன் கருதி 5 இடங்களைக் கூடுதலாக அரசு ஏற்
படுத்தியுள்ளது.

ஐக்கிய நாடுகள் வளர்ச்சி நிறுவனம் மற்றும் பன்
னாட்டுத் தொழிலாளர் நல அமைப்பின் நிதியுதவியுடன், அம்பத்
தூர் தொழிற் பயிற்சி நிலையத்தில் கொண்டுவரப்பட்டுள்ள
வாழ்க்கைத் தொழில் நவீன பயிற்சி முறை தற்போது மதுரை
தொழிற் பயிற்சி நிலையத்திற்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது; இது,
விரைவில் செயல்படத் தொடங்கும். 1983-84 ஆம் ஆண்டில்
அரசு, மூன்றாம் ஷிப்டு முறையை, மூன்று தொழில் பயிற்சி
நிலையங்களில் கொண்டு வந்துள்ளது. 1984-85 ஆம் ஆண்டில்,
சேலம் தொழிற்பயிற்சி நிலையத்திற்கும் இந்த ஏற்பாடு நீட்டிக்
கப்படும்.

ஏற்படுத்தக் கருதியுள்ள அறிவியல்-தொழில் நுட்பவி
யல் நிலையங்களை அமைத்து, அவற்றைப் பராமரிப்பதற்காக
நிறுவனம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**சுகாதாரப் பணிகள்— குடும்பநலன்.**

1983-84-ல் ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ள 17 தொடக்க
சுகாதார நிலையங்கள் மூலம், கிராமப் பகுதிகளில் உள்ள மக்க
ளுக்குச் சுகாதாரப் பாதுகாப்பு வசதிகள் கிடைக்கச் செய்வதில்
அரசு முக்கியத்துவம் கொடுத்துள்ளது. இவற்றோடு மாநிலத்தில்
மொத்தம் 424 தொடக்கச் சுகாதார நிலையங்கள் இருக்கும்.
சுகாதாரப் பாதுகாப்பு வசதிகளை மேம்படுத்த 1984-85-ல் மேற்
கொள்ளவிருக்கும் குறிப்பிடத்தக்க திட்டங்களில், கன்னியா

குமரி மாவட்டத்தில் யானைக் கால் நோய்க் கட்டுப்பாட்டுப் பிரிவு ஒன்றை ஏற்படுத்தல், இராமேஸ்வரம் தீவில் மலேரியா நோய்க் கட்டுப்பாட்டிற்கான பணியாளர்களை நியமித்தல், நகராட்சிப் பகுதிகளில் உள்ள ஒரு இலட்சம் பள்ளிக் குழந்தைகளுக்குச் சுகாதார தகவல் அட்டைகள் வழங்குதல் ஆகியவை அடங்கும்.

சேலம், தென் ஆற்காடு மாவட்டங்களில் கிராமப்புறப் பகுதிகளுக்குச் சுகாதார வசதிகள் அளிப்பதற்கான டேனிடா நிதியுதவிபெறும் திட்டத்தின் கீழ், 449 சுகாதாரத் துணை நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தொடக்க சுகாதார நிலையங்களில் 13 மருந்தகக் கட்டிடங்கள் கட்டும் பணியும், 4 அறுவை சிகிச்சை அரங்குகள் கட்டும் பணியும் நடந்தேறி வருகின்றன. நடப்பாண்டு இறுதியில் மொத்தத் திட்டச் செலவான ரூ. 14.40 கோடியில் 50 சதவீதத் தொகையை நாம் செலவிட்டிருப்போம்.

கல்லூரி இணைந்த மருத்துவ மனைகளிலும் மருத்துவக் கல்லூரிகளிலும் வசதிகளைப் பெருக்குவதற்காக ரூ. 50 இலட்சத் திற்கு மேற்பட்ட செலவில் மருத்துவக் கருவிகள் வாங்கக் கருதப் பட்டுள்ளது. மருத்துவர்கள், ஏனைய மருத்துவப் பணியாளர்கள் ஆகியோரை நியமிப்பதன் மூலமும் மருத்துவக் கருவிகளை வாங்குவதன் மூலமும் மாவட்ட, வட்ட மருத்துவமனைகளில் கூடுதல் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கத் திட்டமிடப்பட்டுள் ளது.

நம் நாட்டு சித்த மருத்துவ முறைக்கு ஊக்கம் அளிக்க வேண்டுமென்ற அரசின் கொள்கைக்கேற்ப, சித்த மருத்துவ முறை மேம்பாடு தொடர்பாக அரசுக்கு ஆலோசனை நல்க, தமிழ்நாடு சித்த மருத்துவக்குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது. ''தமிழ்நாடு மருந்துச் செடிப் பண்ணை மூலிகை மருந்து நிறு வனம்'' கம்பெனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. மூலிகைப் பண்ணைகளை ஏற்படுத்துவதையும், மருந்து தயா ரித்து வழங்குவதையும் இந்நிறுவனம் மேற்கொள்ளும். சென்னை அறிஞர் அண்ணா இந்திய முறை மருத்துவமனையில் உள்ள மருந்தாக்கியல் பிரிவை ரூ. 5.00 இலட்சம் செலவில் மேம்படுத் தக் கருதப்பட்டுள்ளது.

அடுத்த நிதியாண்டில் மக்கள் நல்வாழ்வு-குடும்ப நலப் பணிகள் துறைக்கான நிதி ஒதுக்கம் ரூ. 131.47 கோடியாகும்,





### குடிநீர் வழங்கல்.

மக்களுக்குக் குடிநீர் வழங்கும் திட்டத்திற்கு அரசு மிக வும் முக்கியத்துவம் அளித்துள்ளது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் மூன்று ஆண்டுகளில், குடிநீர் பற்றாக்குறை நிலவிய 10,244 சிற்றூர்களுக்குக் குடிநீர் வழங்க ரூ. 77.73 கோடி செலவிடப்பட்டது. நடப்பு ஆண்டில் மேற்கொண்டும் 2,465 கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கப்பட்டது. 1982-83, 1983-84 ஆம் ஆண்டுகளில், வறட்சி நிவாரணப் பணிகளின்கீழ், 22,000 குழாய்க் கிணறுகள் ரூ. 46 கோடி செலவில் அமைக்கப் பட்டன.

சென்னை மாநகர குடிநீர் வழங்கல்-கழிவு நீர் அகற்று வாரியம், 1984-85 ஆம் ஆண்டில் சென்னை மாநகரில் ரூ. 15.25 கோடி செலவில் நீர் வழங்கு திட்டங்களையும், கழிவுநீர் அகற்றுத் திட்டங்களையும் மேற்கொள்ளவிருக்கிறது. கிருஷ்ணா நதி நீர் வழங்கு திட்டப்பணி முன்னேறி வருகிறது. 1984-85 ஆம் ஆண்டுக்குரிய வரவு-செலவுத் திட்டத்தில், இப்பணிக்காக, ரூ. 60 கோடி செலவிட வகை செய்யப்பட்டுள்ளது.

கோயம்புத்தூர், சேலம், மதுரை ஆகிய மூன்று பெரிய நகரங்களுக்கும், ஏனைய 75 நகரங்களுக்கும் 740 சிற்றூர்களுக் கும் ரூ. 149.42 கோடி செலவில் குடிநீர் வழங்க வகை செய்யும் திட்டம் ஒன்றுக்கு , உலக வங்கியின் உதவியைப் பெறப் பேச்சு வார்த்தைகள் முடிந்து விட்டன. 14 நகராட்சிகளில் முன்னோடித் திட்டமாகக் குறைந்த செலவில் துப்புரவு வசதிகள் செய்து கொடுக்கவும் இத்திட்டம் வகை செய்கிறது. 1984-85 ஆம் ஆண்டிற்காக இத் திட்டத்தின் கீழ் ரூ. 8 கோடி ஒதுக்கப்பட் டுள்ளது.

நீர் வள மண்ணியல், செயற்கை முறை மறுச்செறிவு தொடர்பான ஆய்வைத் திட்டப் பணியாகக் கருதி நடத்துவது குறித்த திட்டத்தை இவ்வரசு, ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத் தின் நிதியுதவியுடன் செயல்படுத்தி வருகிறது. 1981 ஆம் ஆண் டில் தொடங்கப்பட்ட இத்திட்டத்தின் முதல் கட்டப்பணி முடிக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வு, நிலத்தடி நீர் வளத்திற்கு கூடுதல் வாயில்கள் இருப்பதைக் கண்டறிந்து முக்கியமான கருத்துக்களை அளித்துள்ளது. செயற்கை முறை மறுச்செறிவு, நீர் பயன்பாட்டைச் சிக்கனமாகச் சீரமைத்தல் தொடர்பாக, தொழில் நுட்ப வாய்ப்பு இருப்பதையும் அது புலப்படுத்தியுள் ளது. ஆறுகளுக்குக் குறுக்கே, தக்க இடங்களில் , தடுப்பு அணை கள் கட்டுவதன் மூலம் ஆறுகளின் உபரிநீர் கடலில் கலந்துவிடு வதைக் குறைக்க முடியும். இத் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணி 1984-85 முதல் தொடங்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஆய்விற்கு ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்ட அமைப்பு ரூ. 1 கோடிக்கும் மேல் உதவி வழங்கியுள்ளது. தமிழ்நாடு

அரசும் அதற்கிணையாக தன் பங்கிற்கு நிதி ஒதுக்கி வருகிறது'
இம் மாநிலத்தில் நிலவும் கடும் தண்ணீர்ப் பற்றாக்குறையைக்
கருத்தில் கொண்டு இயன்ற இடங்களிலெல்லாம் பெருமளவிற்கு
மழை நீரைத் தேக்கி வைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு
வருகின்றன.

## சமூக நலன்.

ஆதி திராவிடர்கள், ஏனைய பிற்பட்ட வகுப்பினர்
நலன்களைப் பாதுகாக்க, சிறப்பான நடவடிக்கைகளை மேற்
கொள்ளும் கொள்கையை அரசு இடையறாது பின்பற்றி வரு
கிறது. நடப்பாண்டில், 1983 டிசம்பர் வரை, ஆதி திராவிடர்
களுக்கு, 16,216 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆதி திரா
விட மாணவர்களுக்கும், துப்புரவுப் பணியாளர்ரின் சிறார்
களுக்கும், 10 புதிய மாணவர் இல்லங்களையும் அரசு தொடங்கி
யுள்ளது. 1984-85 ஆம் ஆண்டில் பள்ளி மாணவியர்களுக்காக
12 இல்லங்களையும் பள்ளி மாணவர்களுக்காக 6 இல்லங்களை
யும், கல்லூரி மாணவியர்களுக்காக 8 இல்லங்களையும் தொடங்கத்
திட்டமிடப்பட்டுள்ளது. ஆதி திராவிட மாணவிகளுக்கான
இல்லங்களைக் கட்டுவது தொடர்பான மத்திய அரசு பொறுப்
பேற்கும் திட்டத்தின் கீழும் அரசு கட்டிடங்களைக் கட்டி வரு
கிறது. 101 மாணவரில்லங்கள் கட்ட அனுமதியளிக்கப்பட்டு
29 இல்லங்கள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன. மாணவரில்லங்
களைக் கட்டுவதற்கான மாநிலத் திட்டத்தின் கீழ், 66 இல்லங்கள்
கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு, 27 இல்லங்கள் கட்டி
முடிக்கப்பட்டுவிட்டன.

ஐம்பது சதவீத ஆதி திராவிட குடும்பங்கள் வறுமைக் கோட்டைத் தாண்ட உதவும் சீரிய நோக்கத்துடன் சிறப்புத் திட்டம் ஒன்று நிறைவேற்றப்பட்டு வருகிறது. 1984-85-ல் 1.80 இலட்சம் ஆதி திராவிட குடும்பங்களை மேம்படுத்தும் வகையில் , பல்வேறு துறைகளின் முயற்சிகளை ஒருங்கிணைத்து, ரூ. 122.81 கோடி செலவிடப்படும். இத் திட்டங்களுக்காக ரூ. 12 கோடி சிறப்பு மத்திய உதவியாகக் கிடைக்கும். என எதிர் பார்க்கப்படுகிறது. ஆதி திராவிடர்களுக்கான வீடுகள் கட்டும் திட்டம் தொடர்ந்து தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி நிறுவனத்தால் செயலாக்கப்பட்டு வருகிறது. ஒரு வீட்டின் கட்டுமான மதிப்பீட்டுச் செலவு நடப்பு நிதி ஆண்டுத் தொடக்கத்திலிருந்து ரூ. 4.000-லிருந்து ரூ. 6,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இத் தொகை முழுவதும் உதவித் தொகையாக வழங்கப்படும்.



பழங்குடியினர் குடும்பங்களின் வருவாயை
15,000
வறுமைக் கோட்டிற்கும் மேலே உயர்த்தும் நோக்கத்துடன்,
ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மொத்தம் ரூ. 21.67 கோடி
செலவில் பழங்குடியினர் துணைத் திட்டம் ஒன்று நிறைவேற்றப்
பட்டு வருகிறது. நடப்பு ஆண்டுக்கான இத்திட்டச் செலவு ரூ.
6 கோடி யாகும். 3,000 குடும்பங்களுக்கு இத்திட்டத்தின் கீழ்
பயன் கிட்டவேண்டுமென்று இலக்கு நிச்சயிக்கப்ட்டிருக்க, இது
வரையில், 2,953 குடும்பங்கள் பயனடைந்துள்ளன.

பிற்பட்ட வகுப்பினர் நலனுக்கு முதன்மை அளிக்கப்பட்
டுள்ளது. பிற்பட்ட வகுப்பினரின் நிலைமைகள் பற்றிய சமூக-
பொருளாதார ஆய்வு ஒன்றைத் தமிழ்நாடு பிற்பட்ட வகுப்பினர்
ஆணைக்குழு நடத்தி வருகிறது. 1984-85 ஆம் ஆண்டில்
ரூ. 30.79 இலட்சம் செலவில், பிற்பட்ட வகுப்பினரைச் சேர்ந்த
மாணவர்களுக்காக மேற்கொண்டும் 42 இல்லங்களைக் கட்டத்
திட்டமிடப்பட்டுள்ளது.

முதியோர் உதவித் தொகைத் திட்டத்தின் கீழ், இம்
மாநிலத்தில் 1,99,639 பேர் பயனடைகின்றனர். இவர்கள்
மாதம் ஒன்றுக்கு ரூ. 35 ரொக்கமாகப் பெறுவதைத் தவிர,
முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின் கீழ், ஒவ்
வொரு நாளும் இலவசமாக மதிய உணவும், வாரம் ஒன்றுக்கு
அரை கிலோ அரிசியும் பெறுகின்றனர். உடல் ஊனமுற்றோர்
பள்ளிகள் சிலவற்றில் உயர் வகுப்புகளைத் தொடங்க முயற்சிகள்
எடுக்கப்பட்டு வருகின்றன, காது கேளாதோருக்கு வேலை வாய்ப்பு
அளிக்கும் நோக்கத்துடன், 1984-85-ல், கிண்டியில் உள்ள
தொழிற் பயிற்சி நிலையத்தில் 16 பேர்களுக்கு ஃபிட்டர் தொழி
லில் பயிற்சி அளிப்பதற்காகத் தனிப்பட்ட பிரிவு ஒன்று தொடங்
கப்பட்டுள்ளது. கடும் உடல் ஊனமுற்ற சிறார்களுக்காக மதுரை
யில் அரசு நடத்தும் சிறப்புப் பள்ளிக்குச் செயற்கை உறுப்பு
களையும், சாதனங்களையும் வழங்க, மதுரையில் செயற்கை
உறுப்புக்கள் தயாரிப்பு நிலையம் ஒன்று தொடங்கப்படும்.
விதவைகள், கணவரால் கைவிடப்பட்ட மகளிருக்காக, 1984-85
இல் மேற்கொண்டும் ஒரு பணி இல்லம் தொடங்கப்படும்.

வறுமையில் உழலும் உடல் ஊனமுற்றோர்க்குத்
தேவைப்படும் இன்றியமையாத உதவிகளை ஆராய்ந்து
செய்திட தனிப் பரிந்துறைக் குழுக்கள் நாடு தழுவிய அளவில்
அமைக்கப்படும். வறுமையில் வாடும் ஆதரவற்றவர்களாக
விளங்கும் முதியோர்களின் சரியான கணக்கு எடுக்கப்பட்டு,
அவர்களுக்கு உதவித் தொகை வழங்க முயற்சி மேற்கொள்ளப்
படும்.

மகளிர் முன்னேற்றத்திற்காகத் தமிழ்நாடு மகளிர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றக் கருதியுள்ளது. ஆறு தொழில்களில் மகளிருக்கான தனிப்பட்ட பிரிவுகள் மூன்று தொழிற் பயிற்சிப் பள்ளிகளும் ஒரு பல்தொழிற் பயிற்சிப் பயிலகத்திலும் ஏற்படுத்தக் கருதப் பட்டுள்ளது.

### வருவாய் நிர்வாகம் மற்றும் நிலச் சீர்திருத்தம்

நடப்பு நிதி ஆண்டில், 1983 டிசம்பர் வரையில், 9,029.42 ஏக்கர் பரப்பளவுள்ள சாகுபடி நிலங்கள் ; நிலமற்ற ஏழைகளுக்குக் கொடுக்கப்பட்டன ; இதே கால அளவில் 149,413 வீட்டு மனைகள் வழங்கப்பட்டன ; இவற்றில் 73,224 மனைகள் ஆதி திராவிடர்களுக்கும் 3,767 மனைகள் பழங்குடியினருக்கும் 72,422 மனைகள் ஏனையோருக்கும் வழங்கப்பட்டன.

வருவாய் ஆய்வாளருக்கு அலுவலகங்கள்-குடியிருப்புகள் அளிக்கும் திட்டத்தின்கீழ், 958 குடியிருப்புகள் கட்ட அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதுவரை 609 குடியிருப்புகளுக்கான கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டு விட்டன. ஏனைய கட்டிடங்கள் பல்வேறு நிலைகளில் உள்ளன. வட்டாட்சியர் அலுவலகங்கள், கோட்டாட்சி அலுவலகங்கள் சிலவற்றுக்காக, 1984–85-ல் புதிய கட்டிடங்கள் கட்டப்படும்.

தமிழ்நாடு 1969ஆம் ஆண்டு வேளாண்மை நிலக் குத்தகை உரிமைப் பதிவேடுகள் சட்டத்தின்கீழ், 1983 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 30ஆம் நாளன்று உள்ளவாறு 439,464 குத்தகைக்காரர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். இந் நிலங்களின் மொத்தப் பரப்பளவு 636,513 ஏக்கர் ஆகும். பதிவேட்டு அலுவலருக்கு உதவுவதற்காக வட்ட அளவில் அலுவல் சார்பற்ற ஆலோசனைக் குழுக்களை அரசு அமைத்துள்ளது.

உபரி நில ஒப்படைதாரர்களுக்கு நிதி உதவி அளிக்கும் மத்திய அரசுத் திட்டத்தின்கீழ், 1983–84-ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட ரூ. 10 லட்சத்தில் 1983-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31ஆம் நாளன்று வரை ரூ. 7,00,873 செலவிடப்பட்டுள்ளது.

### காவல் துறையும் நீதி மன்றங்களும்

நடப்பு நிதி ஆண்டில், சட்டம்-ஒழுங்கு நிலைமை, நல்ல முறையில், மன நிறைவளிப்பதாக உள்ளது. காவல் துறையின் செயல் திறனுக்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும். காவல் துறையை நவீனமயமாக்கவும், வலுப்படுத்தவும், காவலர்களின் நலனைப் பேணிக்காக்கவும், மாநில அரசு, பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. காவலர்களின் நலத்





திட்டத்தின்கீழ் ரூ. 1 கோடி ஒதுக்கப்பட்டு அவர்களுக்கு மலிவு விலையில் அளிக்கப்பட்டு வரும் இன்றியமையாப் பொருட்களான அரிசி, எண்ணெய், கோதுமை, சர்க்கரை முதலியவற்றின் மான்ய அளவைப் பெருக்கக் கருதப்பட்டுள்ளது. அவர்களுக்குச் சீருடை துணிகள் வழங்குவதற்காக ரூ. 62.50 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

மீ உயர்அலைக் கோபுரங்கள் அமைப்பது, மீ உயர் அலைச் சாதனங்கள் வாங்குவது ஆகியவற்றின் மூலம் காவல் துறையின் தகவல் போக்குவரத்து வசதி மேம்படுத்தப்படும். இத்துடன், வழக்கமான பணிகளும், குடியிருப்புக் கட்டிடங்கள், அலுவலகங்கள் கட்டுதல் தொடர்பான பணிகளும் மேற்கொள்ளப்படும்.

நீதிமன்றங்களில் உள்ள வழக்குகளைத் துரிதமாக விசாரித்துத் தீர்ப்பு வழங்க, அரசு புதிய நீதிமன்றங்கள் ஏற்படுத்தவும் கருதியுள்ளது.

### இருபது அம்சத் திட்டம்.

நம் மாநிலம் அனைத்து நிலைகளிலும் மேம்பாடு அடைய வேண்டுமென்பதற்காக, மாநில அரசு, பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதற்காகப் பாரதப் பிரதமர் அறிவித்துள்ள புதிய இருபது அம்சத் திட்டத்திற்கு அதிகக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இத் திட்டத்தை முறையாகச் செயல்படுத்துவதிலும், இத் திட்டத்தில் உள்ள இலக்கை எய்துவதிலும் குறிப்பாக பொருளாதார நடவடிக்கைகளில் இலக்கை எய்துவதிலும் தொடக்கத்திலிருந்து தமிழ்நாடு பிறமாநிலங்களை விட முன்னணியில் இருந்து வந்துள்ளது. 1982–83ஆம் ஆண்டில் இருபது அம்சத் திட்டத்தின்கீழ் சாதனை புரிந்ததில், தமிழ் நாடு, பிற மாநிலங்களைவிட முதன்மையாக விளங்கியது. இவ் வகையில், மாநிலங்களின் சாதனையைத் தீர்மானிக்க திட்டக் குழு தெரிந்தெடுத்துக் கொண்ட 16 அம்சங்களில் 14 அம்சங்களின்கீழ் சாதனை புரிந்தமையில் தமிழ்நாடு முதன்மையாகத் திகழ்ந்தது. ஒருங்கிணைந்த கிராமப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ்த் தமிழ்நாடு ஆற்றியுள்ள பணி, சாதனை இலக்கில், 120.2 சதவீதமாக இருந்தது. கிராமப்புற வேலை வாய்ப்பு தேசியத் திட்டத்தைச் செயல்படுத்தியதில், இம்மாநிலத்தின் சாதனை, மிக உயர்ந்து 242.2 சதவீதமாக இருந்தது. 1984 சனவரி திங்கள் இறுதி வரை தமிழ்நாடு, பின்வரும் துறைகளில் 80 சதவீதத்திற்கும் அதிகமாக இலக்கை எய்தியுள்ளது. அவை யாவன : கிராம வேலை வாய்ப்பு தேசிய திட்டம் (83.5 சதவீதம்) ; வழங்கப்பட்ட உபரி நிலம் (92.7 சதவீதம்) ; மறுவாழ்வு அளிக்கப்பட்ட கொத்தடிமைத் தொழிலாளர்கள் (158 சதவீதம்) ; பயனடைந்த ஆதி திராவிடர் குடும்பங்கள்

(96.6 சதவீதம்); வழங்கப்பட்ட வீட்டு மனைகள் (112 சத
வீதம்); உதவி அளிக்கப்பட்ட குடிசைப் பகுதி மக்கள் தொகை
(88.4 சதவீதம்) ; நடப்பட்ட மரங்கள் (86 சதவீதம்); நிறுவ
பட்ட கரிம வாயுத் தொழிற்சாலைகள் (110.6 சதவீதம்);
கருத்தடை அறுவை சிகிச்சை (94.7 சதவீதம்) ; கொத்தடிமைத்
தொழிலாளர்களை விடுவிப்பதிலும் கருத்தடை அறுவை
சிகிச்சை எண்ணிக்கையிலும் தமிழ்நாடு இந்தியாவிலேயே முத
லிடம் பெற்றுள்ளது. வீட்டு மனைகள் வழங்குவதிலும் கரிம
வாயு தொழிற்சாலைகள் அமைப்பதிலும் தமிழ்நாடு
நிர்ணயிக்கப்பட்ட இலக்கை விஞ்சி விட்டது. மத்தியத் திட்ட
குழு, 1984 சனவரியில் செய்த ஆய்வில் தமிழ்நாட்டின் சாத
னையை 80 சதவீதத்திற்கு மேற்பட்ட சாதனை புரிந்த தொகுதி
யில் சேர்த்துள்ளது. இடைவிடாது இத்தகைய நடவடிக்கை
களைத் தொடர்ந்து மேற்கொள்வதனால் நடப்பு ஆண்டிலும்
இம் மாநிலம் முன்னணியிலேயே இருந்து வரும் என்று எதிர்
பார்க்கப்படுகிறது.

### முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம்.

ஓர் ஆண்டில், நாள் தோறும் மாநிலம் முழுவது
மாக சுமார் 65 இலட்சம் குழந்தைகளுக்கு உணவளிக்கும்
இத் திட்டம் தொடர்ந்து சிறப்பான திட்டமாகச் செயல்பட்டு
வருகிறது. இத் திட்டம், முதியோர் உதவித் தொகை பெறு
பவர்களுக்கும் 1983 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 15 ஆம்
நாள் முதல் நீட்டிக்கப்பட்டுள்ளது. முதியோர் உதவித் தொகை
பெறும் சுமார் 1,99,639 பேர் இத்திட்டத்தின்கீழ் பயன்
பெறுகின்றனர். இவர்களில், 43,888 பேர் ஆதரவற்ற விதவை
கள், 14,471 பேர் உடலூனமுற்றோர், மற்றும் 30,000 பேர்
வேளாண்மைத் தொழிலாளர்கள். தமிழ்நாடு முன்னாள் படை
வீரர்கள் நல நிதியிலிருந்து முதியோர் உதவித் தொகை பெறு
கின்ற முன்னாள் படைவீரர்களுக்கும் இத் திட்டம் நீட்டிக்கப்
பட்டுள்ளது.

இத் திட்டம் கொண்டுவரப்பட்டதன் பயனாக,
பள்ளிகளில் மாணவர்களின் எண்ணிக்கைப் பொதுவாகப்
பெருகியுள்ளது. 1982–83 ஆம் ஆண்டில் 2.63 இலட்சம்
சிறார்களும் 1983–84 ஆம் ஆண்டில் 3.82 இலட்சம், சிறார்
களும் பள்ளிகளில் அதிகமாகச் சேர்ந்துள்ளனர். இத்திட்டத்
தைச் செயலுக்குக் கொண்டு வருமுன், பள்ளிகளில், ஆண்டொன்
றுக்கு கூடுதலாகச் சேர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை
சராசரியாக 1.75 லட்சம் தான் இருந்தது. கூடுதலாகச் சேர்க்
கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை கணிசமாக கூடியதிலிருந்து
இத்திட்டத்தின் நன்மைகள் தெளிவாகத் தெரிகின்றன. மேலும்
முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின்கீழ்,
குழந்தைகள் நலனைப் பேணும் வகையில் விரிவான திட்டம்
ஒன்றும் வகுக்கப்பட்டுள்ளது. மருத்துவப் பணியாளர்கள்





சிறார்களின் நலன்தொடர்பான அட்டைகளைப் பராமரிப்பதுடன்
சிறார் நல மையங்களையும் முறையாகப் பார்வையிடுகின்றனர்.
அம்மைப்பால் குத்தும் திட்டமும், நோய்த் தடுப்பு ஊசி போடும்
திட்டங்களும் மேற்கொள்ளப்படுகின்றன. தெரிந்தெடுக்கப்பட்ட
சிறார் நல மையங்களில் மாதிரி ஆய்வு ஒன்று நடத்தப்பட்டதில்,
முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தில் பயன்பெறும்
சிறார்களின் உயரம், எடை, பொதுவான உடல்நலன் கூடி
இருப்பது தெரியவந்துள்ளது.

இவ்வாறாக, முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத்
திட்டத்தின் முக்கிய நோக்கங்களான சிறார்களின்
கல்வி, சுகாதாரம், பிற நலன் ஆகியவை நிறைவடைந்து
வருகின்றன. வரும் ஆண்டுகளில் இத்திட்டம் தொடர்ந்து
முனைப்பாகச் செயல்படுத்தப்படும்.

### வேலை வாய்ப்பு.

வேலையில்லாப் பிரச்சினையைப் போக்குவதில் அரசு
உரிய கவனம் செலுத்தி வருகிறது. இப் பிரச்சினைக்குத் தீர்வு
காண வேலை வாய்ப்புப் பணிகள் துறை ஏற்படுத்தப்பட்டு,
தற்காலிகமான மற்றும் நிலையான தீர்வுகாண நடவடிக்கைகள்
எடுக்கப்பட்டுள்ளன. மோசமான பருவ நிலைகளால் பாதிக்கப்
பட்ட நிலமற்ற உழவர்கள் மற்றும் வேளாண்மைத் தொழி
லாளர்கள் ஆகியோரிடையே நிலவிய வேலை வாய்ப்பில்லா
பிரச்சினைக்குத் தீர்வு காண, வறட்சித் துயர் தணிப்பு நட
வடிக்கைகளும், கிராமப்புற வேலை வாய்ப்புத் தேசிய திட்டப்
பணிகளும், படித்தவர்களுக்கிடையே நிலவியவேலை வாய்ப்பில்லா
பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண பல்வேறு திட்டங்களும் மேற்
கொள்ளப்பட்டன.

மத்திய அரசு உதவியுடன் செயலாக்கப்படும் திட்ட
மாகிய கிராம வேலை வாய்ப்புத் தேசியத் திட்டத்தின் கீழ்,
1979–80 முதல் 1984 சனவரி முடிய உள்ள கால அளவில்,
171,010 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. நடப்பாண்டில் இத்
திட்டத்திற்கான மொத்தச் செலவு ரூ. 36.85 கோடியாகும்.
1984–85 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தில் இதற்காக
ரூ. 42.60 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் சிறப்புத்
தன்மை என்னவென்றால் வேலையற்ற ஏராளமான தொழி
லாளர்களுக்கு வேலை வாய்ப்பை அளிப்பதுடன் கிராம மக்களுக்கு
இன்றியமையாதத் தேவைகளான சாலைகள், சமுதாயக் கூடங்
கள், பள்ளிக் கட்டிடங்கள் போன்ற வசதிகளும் இதனால் உரு
வாகியுள்ளன.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1984 மார்ச் 3

வேலை தேடுவோருக்கு மேலும் சிறந்த பணி வசதிகளைச் செய்து கொடுக்கும் நோக்குடன், வேலை வாய்ப்பு அலுவலகங்களில் கம்பியூட்டர் முறையைக் கொண்டு வர அரசு கருதியுள்ளது. இத் திட்டம், படிப்படியாகச் செயல் படுத்தப்படும். சென்னையிலுள்ள ஐந்து வேலை வாய்ப்பு அலுவலகங்களில், 1984–85 ஆம் ஆண்டு ரூ. 6 இலட்சம் செலவில் கம்பியூட்டர் முறை செயல்படுத்தப்படும்.

ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 1984 சனவரி திங்கள் முடிய 173,431 பேர்களுக்கு நன்மை பயக்கும் வகையில் ரூ. 54.51 கோடி மான்ய உதவித் தொகையாகவும், கடன் வழங்கும் நிறுவனங்கள் அளிக்கும் கடன் தொகையாகவும் திரட்டப்பட்டுள்ளன. இத் திட்டத்தின் கீழ் 61,933 ஆதி திராவிடர்களும், பழங்குடி மக்களும் பயனடைந்துள்ளனர். இதுவரை அடைந்துள்ள முன்னேற்றம் 1984–85 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து நிலை நாட்டப்படும் என்று எதிர்பார்க்கலாம்.

சமுதாயத்தில் நலிந்த பிரிவினர் வறுமைக்கோட்டைக் கடக்க இயலும் வகையில் ஏழை எளிய மக்களுக்குக் கடன் உதவி வழங்க, அரசு 1983 ஆம் ஆண்டில் நிறுவன நிதித் துறை என்ற தனிப்பட்டத் துறையை ஏற்படுத்தியுள்ளது. இது ஏற்படுத்தப்பட்ட இரண்டு திங்களுக்குள் 170,564 பேர்களுக்கு ரூ. 30.16 கோடி அளவிற்குக் கடன்களும், மானியமும் வழங்கியுள்ளது. இவர்களில் 56,966 பேர் ஆதி திராவிடர்களாவர். மார்ச் 1984 இல் இத் துறை இந்த மாநிலத்திலுள்ள 175,000 ஏழை எளிய மக்களுக்கு சுமார் ரூ. 40 கோடி வங்கிக் கடன் உதவி வழங்கத் திட்டமிட்டுள்ளது.

### திட்டச் செலவு.

மத்தியத் திட்டக் குழு முடிவு செய்த நிதி ஒதுக்கத்திற்கும் மேல் தன் திட்டப் பணிகளைச் செயல்படுத்துவதில், தமிழ்நாடு அரசு தனது பெருமைக்குரிய நிலையைக் காத்து வந்துள்ளது. 1983–84 ஆம் ஆண்டு, மத்தியத் திட்டக் குழு ரூ. 845 கோடிக்கு அனுமதியளித்தது. திருத்த மதிப்பிட்டில் ரூ. 861.87 கோடி செலவாகும் என நாம் எதிர்பார்க்கிறோம். அடுத்த ஆண்டிற்கு ஏற்பளிக்கப்பட்டுள்ள ரூ. 927 கோடி நிதி ஒதுக்கத்திற்கு மாறாக, ரூ. 979.22 கோடி வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டை உருவாக்கியுள்ளோம்.



1984 மார்ச் 3] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வேளாண்மை, அது தொடர்பான பணிகள், பாசனம், தொழில் போக்குவரத்து, சாலைகள் போன்ற முக்கியத் துறைகளின் கீழ் ஏற்பளிக்கப்பட்ட திட்டச் செலவிற்கு அதிகமாகவே மாநில அரசு செலவிட்டுள்ளது. வளர்ச்சித் துறைகளுக்கு மாநில அரசு அதிக முக்கியத்துவம் கொடுத்து வந்துள்ளது என்பது இதிலிருந்து தெரியவரும். தொடர்ந்து இரு முறை வறட்சியும், வெள்ளப் பெருக்கும் ஏற்படாது இருந்திருப்பின், நமது சாதனை மேலும் நல்ல முறையில் அமைந்திருக்கும். குறைந்த அளவு தேவைகள் திட்டத்திலும் மாநில அரசு தொடர்ந்து திட்ட இலக்கை எய்தியுள்ளது. சில நேரங்களில் அத் திட்ட இலக்கையும் தாண்டியுள்ளது. ஐந்தாண்டுத் திட்டக் கால அளவில் ரூ. 241 கோடி நிதி ஒதுக்கத்திற்கு அனுமதியளிக்கப்பட்டிருக்க, இத் திட்டத்திற்கு 1983–84 வரை, மாநில அரசு ரூ. 256 கோடி செலவிட்டது. மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்ய மாநில அரசு எவ்வளவு அக்கறை கொண்டுள்ளது என்பதை இது காட்டுகிறது. குறைந்த அளவுத் தேவைகள் திட்டத்தின் கீழ்ச் செய்யப்பட்ட செலவுடன் மாநில அரசு, இத் திட்டத்திற்கு அதிச முக்கியத்துவம் அளிப்பதைக் கருத்திற் கொண்டு தன்னிறைவுத் திட்டங்களுக்கு ரூ. 207 கோடி செலவிட்டுள்ளது.

### தொழிற் கல்வி.

வேலை வாய்ப்பைப் பெறுவதற்கு முக்கியமான மனித ஆற்றலைப் பெறச் செய்யும் பொருட்டு கல்வி முறையைச் சீரமைப்பது குறித்து அரசு தீவிரமாக ஆலோசித்து வருகிறது. ஆடவருக்கும், மகளிருக்கும் தேவையான ஆற்றலைக் கல்வி கொடுக்க வேண்டும். அப்போதுதான், அவர்கள் தங்களுக்குப் பொருத்தமான வாழ்க்கைத் தொழிலை அல்லது சுய வேலை வாய்ப்பைத் தேடிக் கொள்ள முடியும். இந்த குறிக்கோளை அடைய பள்ளியின் எல்லா நிலைகளிலும் கல்வியை வாழ்க்கைத் தொழிலுக்குகந்ததாக ஆக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. பெரும் நிதித் தேவையைக் கருத்திற் கொண்டு, கல்வியின் வெவ்வேறு நிலைகளில் மாணவர்களுக்குச் சிறந்த ஆற்றலை அளிக்க வகை செய்வதுடன், கல்வி முறையை மாற்றியமைக்கும் பணியை மேற்கொள்ள எட்டாவது நிதிக் குழுவிடம் நிதி உதவியை நாம் கேட்டுள்ளோம். அப்போதுதான், வட்டாரங்களுக்கும், பகுதிகளுக்குமான வேலை வாய்ப்பு வசதிகள் முழுவதுமாகப் பயன்படுத்திக் கொள்ளப்படலாம். பாடத் திட்டத்தில் தக்க மாறுதல்களைச் செய்து, சீரமைப்பது உட்பட இதற்கான விரிவான அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. 1985–86 லிருந்து படிப்படியாகச் செயலுக்குக் கொண்டு வருவதற்காக, வரும் ஆண்டில் இந்திய அரசுக்கு அந்த அறிக்கை அனுப்பி வைக்கப்படும்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1984 மார்ச் 3

**அரசுப் பணியாளர் நலன்.**

அரசு மேற்கொண்ட பல்வேறு பணியாளர் நல நடவடிக்கைகள் பற்றி ஏற்கெனவே ஆளுநர் உரையில் கூறப்பட்டுள்ளது. ஓய்வு காலப் பயனை உயர்த்துவது பணியாளர்களின் நீண்ட காலக் கோரிக்கைகளில் ஒன்றாகும். அரசுப் பணியாளர் ஒவ்வொருவரும் திங்கள் ஒன்றுக்கு ரூ. 20 என்ற வீதத்தில், அத் தொகை கூட்டு வட்டியுடன் ரூ. 5,000 ஆகச் சேருகிற வரையில் செலுத்த வேண்டுமெனறும், பணியாளர் ஒய்வுபெறும் பொழுது அவர்கள் செலுத்தியுள்ள தொகையுடன் அரசு ரூ. 5,000 கொடுக்கும் என்றும் இதற்காக வகை செய்யும் திட்டம் ஒன்று, 1984 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாள் முதற் கொண்டு செயலுக்கு வரும் எனறும் அரசு அறிவித்துள்ளது. இத் திட்டத்தின் கீழ், அரசுப் பணியாளர்கள் திங்கள் ஒன்றுக்கு செலுத்தும் ரூ. 20. அதற்கான வட்டித் தொகையுடன் ரூ. 5,000 சேரும் வரையில் தொடர்ந்து செலுத்தப்பட வேண்டும். இத் தொகை சேர்ந்தவுடன் பணியாளர்கள் தொகை செலுத்த வேண்டியதில்லை. இக் கணக்கின்படி பார்த்தால் சுமார் ரூ. 3,000-க்குத்தான் எந்த அரசு ஊழியரும் இத் திட்டத்தில் முதலீடு செய்ய நேரிடும். வருங்கால வைப்பு நிதிக்குக் கொடுக்கப்படும் அதே கூட்டு வட்டிக்குச் சமமாக இத் தொகைக்கும் வட்டி கொடுக்கப்படும். அரசுப் பணியாளர் இயல்பாக ஓய்வு பெறுகையில் அரசு கொடுக்கும் ரூ. 5,000 இத் தொகையுடன் சேர்த்துக் கொடுக்கப்படும். இவ்வாறாக, 1984 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாளுக்குப் பின்னர், அரசுப் பணியாளர்கள் இயல்பாக ஓய்வு பெறுகையில், நிர்ணயித்த ரூ. 5,000-மும், அவர்கள் செலுத்திய தொகையையும், அதற்குரிய கூட்டு வட்டியுடன் சேர்த்துப் பெறுவர். அரசுப் பணியாளர்கள் செலுத்தும் தொகை அதற்குரிய கூட்டு வட்டியுடன ரூ. 5,000 ஆக சேரும் நாளும், அவர்கள் பணியிலிருந்து இயல்பாக ஓய்வு பெறும் நாளும் ஒன்றாக இருக்கும் நேர்வில், அவர்கள் ரூ. 10,000 பெறுவர். அந்த நாளுக்குப் பின்னர் ஓய்வு பெறுபவர்கள் அதற்கேறப அதிகமான தொகை பெறுவர். புதிதாகப் பணியில் சேரும் ஒருவர் அவர் எத்தனை ஆண்டுகள் பணியாற்றியுள்ளாரோ அதைப் பொறுத்து அத் தொகை ரூ. 30,000-க்கும் மேற்படலாம். அரசுப் பணியாளர்களன் பிரதிநிதிகளைக் கலந்தாலோசித்து வகுக்கப்பட்ட இத் திட்டம் அரசுப் பணியாளர்கள் அனைவரின் ஒருமித்த பாராட்டுதலைப் பெற்றுள்ளது.

ஆளுநர் உரையில் அறிவிக்கப்பட்டிருந்ததற்கு இணங்க நான்காவது ஊதிய ஆணைக்குழு (சம்பளக் கமிஷன்) சென்னை உயர் நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி ஒருவர் தலைமையில் ஒரு நபர் குழுவாக 1984 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 1 ஆம் நாள் அன்றிலிருந்து செயல்படத் தொடங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பொறுப்பேற்கும் நீதிபதியின் பெயர் பின்னர் அறிவிக்கப்படும்.



1984 மார்ச் 3] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

**வரவு-செலவுத் திட்ட விவரம்.**

1983–84 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் திட்டங்களுக்கும், திட்டத்தில் சேராதத் திட்டங்களுக்கும் இயன்ற அளவு நிதி ஒதுக்கம் செய்யப்பட்டது. இருந்தபோதி லும், செலவைச் சிக்கனப் படுத்த எல்லா முயற்சிகளையும் மேற் கொண்ட போதிலும் நடப்பாண்டில் வருவாய்க் கணக்கில் சுமார் ரூ. 200 கோடி கூடுதல் செலவு ஏற்படலாம் என்பது திருத்த மதிப்பீட்டிலிருந்து தெரிய வருகிறது. கிருஷ்ணா நதி நீர் திட்டத் திற்காக ரூ. 30 கோடியும், வறட்சி நிவாரணத்திற்காக ரூ. 55 முதல் ரூ. 60 கோடியும், தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்திற்கு உதவித் தொகை வழங்க ரூ. 30 கோடியும் ஒதுக் கியதே இக் கூடுதல் செலவிற்கு முக்கிய காரணமாகும். இதைத் தவிர, மைய அரசுத் திட்டங்களின் காரணமாகவும், மற்றத் திட்டச் செலவுகள் பெருகியதன் மூலமாகவும் இந்தப் பெருக்கம் ஏற்பட்டுள்ளது.

**நிதி நிலை**

சென்ற ஆண்டுக்குரிய வரவு-செலவுத் திட்டத்துடன் கொடுக்கப்பட்ட 1982–83 திருத்த மதிப்பீட்டில் இறுதிப் பற் றாக்குறை ரூ. 89.02 கோடியாக இருக்குமென்று எதிர்பார்க்கப் பட்டது. எனினும் 1982-83 ஆம் ஆண்டுக்குரிய இறுதிப் பற் றாக்குறை ரூ. 4.04 கோடியாகவே அமைந்தது. 1983-84 ஆம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீட்டில் வருவாய்க் கணக்கில் வரவு கள் ரூ. 1,892.86 கோடியாக இருக்குமென்று மதிப்பிடப்பட் டுள்ளது. வருவாய்க் கணக்கில் வரவினம். இவ்வாறிருக்க, வரு வாய்க் கணக்கில் செலவு ரூ. 1,869.33 கோடியாக இருக்கு மென்று கணக்கிடப்பட்டுள்ளது. இவ்வாறாக, வருவாய்க் கணக் கில் ரூ. 23.53 கோடி உபரி இருக்குமென்று மதிப்பிடப்படுகிறது. மூலதனக் கணக்கில் செலவு ரூ. 186.32 கோடியாகும். பொதுக் கடன் என்பதன் கீழ் ரூ. 148.03 கோடி உபரியாக இருக்கு மென்றும் கடன் செலவின்கீழ் நிகரப் பற்றாக்குறை ரூ. 233.86 கோடியாக இருக்குமென்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. மேற் குறிப்பிட்டக் கணக்கின்படி தொகுநிதியின் கீழ் ரூ. 248.62 கோடி பற்றாக்குறை இருக்கும். அதே சமயத்தில் பொதுக் கணக்கின் கீழ் ரூ. 123.35 கோடி உபரி எதிர்பார்க்கப்படுகிறது. இதனால், மொத்தப் பற்றாக்குறை ரூ. 125.27 கோடியாகக் குறையும். தொடக்கப் பற்றாக்குறையான ரூ. 4.04 கோடியையும் கணக்கில் எடுத்துக்கொண்டால்; நடப்பாண்டுக்கான இறுதிப் பற்றாக்குறை ரூ. 129.31 கோடியாக இருக்கும்.

1984-85 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத் தின்படி, வருவாய்க் கணக்கில் வரவு ரூ. 2,065.43 கோடியாகும். வருவாய்க் கணக்கில் செலவு ரூ. 1,946.38 கோடியாகும். இதன் படி வருவாய்க் கணக்கில் ரூ. 119.05 கோடி உபரி இருக்கும். மூலதனச் செலவு ரூ. 178.43 கோடியாக இருக்குமென்றும், பொதுக்கடன் என்பதன் கீழ் நிகர உபரி ரூ. 145.76 கோடியாக

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1984 மார்ச் 3

இருக்குமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது. கடன்கள்-முன்பணங்
ள் என்பதன்கீழ் நிகரமாக ரூ. 272.92 கோடி பற்றாக்குறை
இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. மொத்தத்தில் தொகு
நிதியில் ரூ. 186.54 கோடி பற்றாக்குறை இருக்கும். பொதுக்
கணக்கில் ரூ. 114.35 கோடி உபரி இருக்கலாம். 1984-85
வரவு-செலவுத் திட்டத்தின்படிக்கான ரூ. 72.19 கோடி பற்றாக்
குறையையும் தொடக்கப்பற்றாக்குறையான ரூ. 129.31 கோடி
யையும் கணக்கில் எடுத்துக்கொண்டால் அடுத்த நிதி ஆண்டுக்
கான இறுதிப் பற்றாக்குறை ரூ. 201.50 கோடியாக இருக்கும்.

மாநில அரசின் வருவாய்க்கும் செலவினங்களுக்கும்
இடையே பெரிய அளவில் பற்றாக்குறை இருப்பதைக் கருதி
கூடுதல் நிதி ஆதாரங்களைத் திரட்டுவதற்கான அவசியத்தை
மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் உணர்ந்துகொள்வர்.

கடந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில், ஒரு சில
இனங்கள் குறித்து நுழைவு வரி விதிக்கக் கருதியது பற்றி மதிப்
பிற்குரிய உறுப்பினர்கள் நினைவில் வைத்திருப்பார்கள். எனி
னும், சமுதாயத்தின் பல்வேறு பிரிவைச் சேர்ந்த பிரதிநிதிகள்
முறையிட்டுக் கொண்டதைக் கருத்தில் கொண்டு வணிகர்கள்,
பொதுமக்கள் ஆகியோரின் நலனைப் பாதிக்காமல் செயலுக்குக்
கொண்டுவரக்கூடிய மாற்றுவரி ஆதாரங்களை ஆய்ந்து அரசுக்கு
அறிவிக்க, அரசு குழு ஒன்றை நியமித்தது. கூடுதல் நிதி ஆதாரங்
களைத் திரட்டுவதற்காக நுழைவு வரிக்குப் பதிலாகக் கூடுதல்
விற்பனை வரியை உயர்த்தலாம் என்று மேற்படி குழுவின் அரசு
சார்பற்ற உறுப்பினர்கள் கருத்து தெரிவித்தனர். எனினும், இவ்
வரிச்சுமையை, வணிகர்கள், நுகர்வோர்கள்மீது சுமத்தக்கூடாது
என்றுள்ள தடையை எடுக்க வேண்டும் என்று அவர்கள் கருத்து
தெரிவித்தனர். தமிழ் நாட்டிற்கும், அண்டை மாநிலங்களுக்கும்
இடையே தற்போதுள்ள விற்பனை வரியில் கணிசமான அளவு
வேறுபாடு இருக்கும் இனங்களில் எல்லாம், கூடுதல் நிதி ஆதாரங்
களைத் திரட்டும் பொருட்டு, தமிழ் நாட்டில் அத்தகைய இனங்
கள் தொடர்பாக விற்பனை வரியை உயர்த்துவதற்கு வாய்ப்பு
உள்ளது என்றும் குழு கருத்து தெரிவித்துள்ளது. கூடுதல் நிதி
ஆதாரங்களைத் திரட்டுவதற்கான செயற்குறிப்புகளை வகுக்
கையில், இக் குழுவின் கருத்துக்களை அரசு கருத்தில் கொண்
டுள்ளது. எனினும், தற்போது விதிக்கக் கருதப்பட்டுள்ள கூடுதல்
விற்பனை வரி வீதங்கள், வரி விதிக்கத் தக்க விற்பனைத்தொகை
ரூ. 3 இலட்சத்திற்கு மேற்பட்டால்தான் விதிக்கப்படலாம் என்
பதைக் கருத்தில் கொண்டு, இத்தகைய கூடுதல் வரி வீதங்கள்,
வணிக சமுதாயத்திற்குச் சுமையாக இருக்காது என்றும் எனவே
வரிச்சுமையை, நுகர்வோரிடமிருந்து வசூலிக்க வேண்டியதில்லை
என்றும் கருதப்படுகிறது.



1984 மார்ச் 3] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

எனவே, கீழ்க்கண்ட வரிவிதிப்புகளைச் செயலுக்குக்
கொண்டுவரக் கருதப்படுகிறது :—

(1) ஆழ்ந்த ஆலோசனைக்குப் பின்னர், கூடுதல் விற்பனை
வரி வீதங்களை 1984 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாள்
முதல்கொண்டு கீழ்க் குறிப்பிட்டவாறு உயர்த்த அரசு முடிவு செய்
துள்ளது :—

(அ) ரூ. 3 இலட்சத்துக்கு மேல் ரூ. 5 இலட்சம் வரையுள்ள
வரி விதிக்கத்தக்க விற்பனைத் தொகைக்கான வரி வீதத்தை
0.4 சதவீதத்திலிருந்து 0.5 சதவீதமாக உயர்த்துதல்.

(ஆ) ரூ. 5 இலட்சத்திற்கு மேல் ரூ. 7 இலட்சம் வரை வரி
விதிக்கத்தக்க விற்பனைத் தொகைக்கான வரிவீதத்தை 0.5 சத
வீதத்திலிருந்து 0.7 சதவீதமாக உயர்த்துதல்.

(இ) ரூ. 7 இலட்சத்திற்கு மேல் ரூ. 10 இலட்சம் வரை
யுள்ள வரி விதிக்கத்தக்க விற்பனைத் தொகைக்கான வரி வீதத்தை
0.6 சதவீதத்திலிருந்து 1 சதவீதமாக உயர்த்துதல்.

(ஈ) ரூ. 10 இலட்சத்திற்கு மேற்பட்ட வரி விதிக்கத்தக்க
விற்பனைத் தொகைக்கான வரிவீதத்தை 0.7 சதவீதத்திலிருந்து
1.25 சதவீதமாக உயர்த்துதல்.

வரி விதிக்கத்தக்க விற்பனைத் தொகையுடன் ஒப்பிட்டுப்
பார்க்கையில் மேற்குறிப்பிட்ட வரிவிதிப்புகள் ஏற்ற வீதத்தில்
அமைந்துள்ளதால், வணிகர்கள் செலுத்த வேண்டிய கூடுதல் வரி
யினால் அவர்களுக்கு அதிகச் சுமை ஏற்படாது. இத்தகைய வரி
விதிப்புகளினால் கூடுதலாக வருவாய் ரூ. 20.25 கோடி அளவிற்
குக் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(2) தற்போது தமிழ்நாட்டில் ஒரு சில பொருள்களின்மீது
விதிக்கப்படும் விற்பனை வரிவீதம், அண்டைய மாநிலங்களான
கருநாடகம், ஆந்திரம், கேரளம் ஆகிய மாநிலங்களில் விதிக்கப்
படும் வரிவீதங்களைவிடக் குறைவாக உள்ளது. எனினும், இத்
தகைய பொருள்களில் ஒரு சிலவற்றின்மீது, குறிப்பாகப் பெட்ரோ
லியம் பொருள்கள் மீது மட்டுமே, விற்பனை வரி வீதத்தை
உயர்த்தக் கருதப்படுகிறது. இவ்வாறு உயர்த்தப்படும் விற்பனை
வரி வீதங்கள் அறிவிக்கை நாளிலிருந்து நடைமுறைக்கு வரும்
இதன் விவரங்கள் வருமாறு :

| | |
|---|---|
| (அ) பெட்ரோல் .. .. | 11 சதவீதத்திலிருந்து 14 சதவீதமாக உயர்த்தப்படுகிறது. |
| (ஆ) விமான டர்பைன் எண்ணெய். | 7 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாக உயர்த்தப்படுகிறது |

| | |
|---|---|
| (இ) உயர்வேக டீசல் எண்ணெய். | 11 சதவீதத்திலிருந்து 14 சதவீதமாக உயர்த்தப்படுகிறது |
| (ஈ) இலகுவான டீசல் எண்ணெய் | 11 சதவீதத்திலிருந்து 14 சதவீதமாக உயர்த்தப்படுகிறது |
| (உ) மசகு எண்ணெய் வகையறா | 8 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாக உயர்த்தப்படுகிறது |
| (ஊ) கனிம எண்ணெய் .. | 8 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாக உயர்த்தப்படுகிறது |

இவ்வரி விதிப்புகளினால், கூடுதலாக ரூ. 27 கோடி வருவாய் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(3) கோன், ஹோசைரி நூல் நீங்கலாக பருத்தி நூல் விற்பனைமீது விதிக்கப்படும் விற்பனை வரியை 3 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாக உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் ரூ. 5 கோடி கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்திய அரசிலயமைப்புச் சட்டத்தில் செய்யப்பட்டுள்ள 46-ஆவது திருத்தத்தினால், மாநில அரசுகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி தவணைக்கொள்முதல், பணி ஒப்பந்தக் குத்தகை போன்ற நடவடிக்கைகள் மீதும் விற்பனை வரி விதிக்க மாநில அரசுக்கு இயலும் வகையில் அதிகாரம் அளிக்கும் சட்டமுன்வடிவு ஒன்று இச்சட்டமன்றக் கூட்டத்தொடரில் கொண்டுவரப்படுகிறது. மேலும், சிப்பம செய்யப்படும் பொருள்களின்மீது விதிக்கப்படும் வீதங்களிலேயே சிப்பப் பொருள்களுக்கும் சிப்பக் கட்டணங்களுக்கும் வரி விதிக்கவும் வகை செய்யும் சட்ட முன்வடிவு ஒன்றும் இச்சட்ட மன்றக் கூட்டத் தொடரில் கொண்டுவரப்படுகிறது. இந் நடவடிக்கைகளினால் ரூ. 5 கோடி கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கூடுதல் நிதி ஆதாரங்களைத் திரட்டுவதற்கான இத்தகைய நடவடிக்கைகளினால் மொத்தம் ரூ. 57.25 கோடி கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதே சமயத்தில், கீழ்க்காணும் வரிச் சலுகைகளையும் அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதை அறிய மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் மகிழ்ச்சியடைவர் :—

(அ) தற்போது ரூ. 50,000 மொத்த விற்பனைத் தொகை வரையில், பலமுனை விற்பனை வரி விதிப்பினின்றும் விலக்கு அளிக்கப்படுகிறது. இத்தகைய விலக்கு அளிப்பதற்கான வரம்பை ரூ. 1,00,000 ஆக உயர்த்த தற்போது கருதப்படுகிறது. இதனால், சுமார் 20,000 வணிகர்கள் பயனடைவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனால், ரூ. 3 கோடி அளவில் வருவாய் இழப்பு ஏற்படும்.





(ஆ) ரூ. 30,000-க்குக் குறையாத மொத்த விற்பனைத்
தொகையைக் கொண்ட வணிகர்கள் தமிழ்நாடு பொது விற்
பனைச் சட்டத்தின் கீழ்ப் பதிவு செய்து கொள்ள வேண்டுமென்று
தற்போது வகை செய்யப்பட்டுள்ளது. இந்த மொத்த விற்ப
னைத் தொகையை ரூ. 50,00. ஆக உயர்த்தத் தற்போது கருதப்
பட்டுள்ளது.

(இ) கையினால் தயாரிக்கப்படும் விளையாட்டுப் பொருட்கள்,
கலைப்பொருட்கள் ஆகியவற்றின் மாநிலங்களுக்கிடையிலான
விற்பனைமீது விதிக்கப்படும் வரியைப் பொறுத்தவரையில், 4
சதவீத சலுகை வீதத்தை இத்தகைய பொருள்களுக்கும் நீட்டிக்க
முடிவு செய்யப்பட்டுள்ளது.

(ஈ) கோழித் தீவனம், கால்நடை கலவைத் தீவனம் ஆகிய
வற்றின் மீது, தற்போது 5 சதவீத பலமுனை விற்பனை வரி
விதுக்கப்படுகிறது. இதனை மாற்றி இப்பொருள்கள் மீது 5 சத
வீத ஒருமுனை விற்பனை வரியை விதிக்கத் தற்போது கருதப்
பட்டுள்ளது. இதனால் ரூ. 25 இலட்சம் வரையில் வருவாய்
இழப்பு ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(உ) கனரக மோட்டார் வண்டிகளின் அடிச் சட்டங்கள்
மீது அண்டை மாநிலங்களான புதுச்சேரி, கருநாடகம் ஆகிய
ஆகிறது. ஆகவே, இப்பொழுதுள்ள லெவி முறையைக் கைவிட்டு, மார்க்கெட்டுக்கு வருகிற சகல நெல்லையும் ரூ. 200 கொடுத்து கொள்முதல் செய்து வருஷம் பூராவும் மக்களுக்கு நியாயமான விலையிலே அரிசி முழுத்தேவையை விநியோகம் செய்ய முடியுமே, அதை அரசாங்கம் செய்யுமா ?

(முற்பகல் 9—20)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று உற்பத்தியாகின்ற நெல் அத்தனையையும் மார்க்கெட்டுக்கு விட்டுவிடாமல் நாம் கொள்முதல் செய்வது என்றால் ஏராளமான நஷ்டத்திற்கு ஆளாக வேண்டிவரும் குறைந்த விலையிலே தேவை அத்தனையையும் கொடுப்பதற்கு தற்போதுள்ள இருப்பு நிலை வழிவகுக்கவில்லை. ஆகவே தான் இருக்கிற நிலைமையை ஒட்டி, தஞ்சை, திருச்சி மாவட் டங்களிலே, நூற்றுக்கு நூறு அளவுக் கொள்முதலைத் தொடர்ந்து நாம் அவர்களுடைய அனுமதியைப் பெற்று நடத்துகிறோம். தஞ்சை, திருச்சி மாவட்ட வியாபாரிகள் என்ன சொன்னார்கள் என்றால், இப்பொழுதுள்ள முறைப்படி வியாபாரம் அடியோடு செய்யமுடியாத நிலைமைக்கு ஆளாகியிருக்கிறோம். ஆகவே, பழைய முறைப்படி செய்ய வேண்டும். வேண்டுமானால் 50 சதவீத லெவியை 75 சதவீதம் என்று வைத்து வியாபாரம் செய்ய இடம் கொடுங்கள், என்றார்கள். அதைத்தான் ஆராய்ந்து கொண்டிருக்கிறோம் என்று சொன்னேன். அப்படியே 75 சதவீதம் கொள்முதல் என்ற எண்ணத்தில், லெவி முறை யிலே கொள்முதல் செய்ய வியாபாரிகள் இடம் கொடுத்தாலும், மத்திய அரசு அனுமதியைப் பெறவேண்டியிருக்கிறது. உண்மை யிலே ரொம்ப நெருக்கடி வந்து மாநிலம் முழுவதும் இருக்கிற நெல் முழுவதையும் நாமே கொள்முதல் செய்து எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற கட்டாயம் வந்து எல்லா நெல்லையும் கொள்முதல் செய்கிறபோது, எல்லோருக்கும் அரிசி தர வேண் டிய முழு பொறுப்பையும் அரசு ஏற்றுக்கொள்ளவேண்டி இருக்கிறது. காலத்திற்கேற்றபடி, மத்திய அரசு இருப்பி லிருந்து தருகிற நெல்லுக்கு ஏற்றபடி, நாம் தரவேண்டிய நிலை மையிருக்கிறது. இந்த ஆண்டு வடமாநிலங்களில் அரிசி உற்பத்தி, கோதுமை உற்பத்தி கூடுதலாக இருக்கிறதென்று மத்திய உணவு அமைச்சர் சொல்லியிருப்பதன் காரணமாக வருகிற ஆண்டிலே நிலைமையை சமாளிக்க முடியுமென்று கருதுகிறேன். அப்போது இத்தகைய காரணங்கள் அடிப்படையாக வைத்து நிலைமைகளை சரி செய்யலாம்.

திரு. [illegible]த்தம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லெவி மூலம் கொள்முதல் செய்யப்படுகிற நெல் அரிசியாக மாற்றி நியாய விலைக்கடைகள் மூலமாக விற்கிற போது அரசு ஏதாவது லாபம் வைத்து விற்கிறதா? பற்றாக் குறை ஏற்பட்டு அண்டை மாநிலங்களிலிருந்து அரிசி வாங்குகிற போது அந்த நியாயவிலைக்கடைகளில் விற்கிறபோது லாபத் தோடு விற்கிறதா? அல்லது அரசு குறைவான விலைக்கு விற்கிறதா? அப்படி குறைவான விலைக்கு விற்கிறதென்றால் ஆண்டு ஒன்றிற்கு எத்தனை டன்கள் விற்கிறது? அதனால் தமிழக அரசிற்கு எத்தனை ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது? இதற்கு மத்திய அரசு மானியம் ஏதாவது தருகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அரசு வைத்திருக்கிற விலை [illegible] கணக்கிட்டால் அரசாங்கம் [illegible] நாம் கொள்முதல் செய்து அதை நியாய விலைக்கடைகள் மூலமாக விநியோகிக்கிற போது அரசுக்கு நஷ்டம் ஏற்படுகிறதே தவிர லாபம் ஏற்படுவ தில்லை. இப்போது இருக்கிற சூழ்நிலையில் ஒரு லட்சம் டன் அரிசி அரசாங்கம் குறிப்பிட்ட விலைக்கு கொள்முதல் செய்து நியாய விலைக்கடைகள் மூலமாக விற்கிறபோது அரசிற்கு ஏற்படுகிற நஷ்டம் ரூபாய் 9 கோடியே 60 லட்சம் ஆகிறது. வெளி மாநிலங்கள் ஆந்திரா, அரியானா போன்ற [illegible]டங்களிலிருந்து கொள்முதல் செய்து இங்கே கொண்டு வந்து இங்கே இருக்கிற தட்டுப்பாட்டை நீக்குகிற நிலைமைகள் வருகிறபோது கிட்டத்தட்ட நாம் 23 கோடியிலிருந்து 24 கோடி வரையில் நஷ்டம் அடைகிறோம். சப்சிடி தந்து ஒரு கிலோ ஒரு ரூபாய் 75 காசு அளவிற்கு தரவேண்டியதன் காரண மாக இந்த நஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே தான் சென்ற ஆண்டு 100 கோடி ரூபாய் சப்சிடி தருகிற நிலைமை ஏற் பட்டது என்று வரவு-செலவுத் திட்டத்திலே குறிப்பிட்டிருக் கிறேன். இதிலே லாப நோக்கம் இல்லை. ஏழை, எளிய மக்க ளுக்கு எப்படியும் அரிசி கிடைக்கவேண்டும். ஒரு பங்காவது கிடைக்கவேண்டுமென்று அவர்கள் வெளி மார்க்கெட்டிலே கூடுதலாக போட்டு வாங்குவதற்கும், நாம் குறைத்து தருவ தற்கும் சராசரி போட்டு பார்த்தால் ஏறக்குறைய 2½ ரூபாய் அளவிற்கு நிற்கவேண்டுமென்ற கருத்தை அடிப்படையாக வைத்து தான் இந்த முறை கையாளப்படுகிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளி மாநிலங்களிலிருந்து நெல், அரிசி கொள்முதல் செய்கிற சென்னை வணிகர்கள் அரசாங்கத்திற்கு லெவி கொடுத்ததற்கு பிறகு மீதி இருக்கிற தானியங்களை வெளி மாவட்டங்களுக்கு அனுப்பலாம் என்றும், அதைப் போலவே வெளி மாவட்டங்களிலிருந்து வெளி மாநிலங்



களுக்கு அனுப்புகிறபோது அரசாங்கத்திற்கு லெவி கொடுத்த தற்கு பிறகு மீதி இருக்கிற தானியங்களை வேறு மாவட்டங் களுக்கு அனுப்புவதற்கு தடை இருக்கிறதென்று சில காலத் திற்கு முன்னால் சொல்லப்பட்டது. அப்படி இருக்கு மானால், வெளி மாவட்டங்களிலிருந்து லெவி கொடுத்தது போக மீதி இருக்கிற தானியங்களை வேறு மாவட்டங் களுக்கு அனுப்புவதற்கு அனுமதி கொடுப்பார்களானால் அதனால் வெளிச்சந்தையில் ஓரளவிற்கு விலை குறைவதற்கு சாத்தியம் இருக்கிறதே, இதை அரசாங்கம் பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லெவி கொடுத்ததற்கு பிறகு 'ஒன் சோன்' என்று தான் இப்போதும் இருக்கிறது. தடுத்து நிறுத்துவதற்கு இல்லை. வெளி மாவட்டங்களுக்கு எடுத்துச் செல்லலாம்; ஆனால் லெவி கொடுத்துவிட்டுத் தான் எடுத்துச் செல்ல வேண்டும். அதற்கு அத்தாட்சி பத்திரம் வைத்திருக்க வேண்டும். எல்லைப் புறத்திலே தான் கடுமையான பாதுகாப்பை நாம் போட்டிருக்கிறோம். ஆகவே ஒரு மாவட்டத்திலிருந்து மற்றொரு மாவட்டத்திற்கு எடுத்துச் செல்லலாம்; ஆனால் லெவி கொடுக்க வேண்டும். பல பேர்கள் லெவி கொடுக்காமல் எடுத்து செல்ல முயல்கிறபோது அதைத் தடுத்து நிறுத்துகிற, பறிமுதல் செய்கிற இக்கட்டான நிலைமை அரசாங்கத்திற்கு ஏற்படுகிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்பமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் லெவி வாங்குவதினால் ஏழை மக்களுக்கு மலிவான விலையில் அரிசி கிடைக்கிறது என்றும், எல்லைப்புறத்தில் தான் 'கேட்' எல்லாம் போடப்பட்டிருக்கிறது என்றும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், ஆனால் ஒரு தாலுக்காவிலிருந்து இன்னொரு தாலுக்காவிற்கும், ஒரு ஒன்றியத்திலிருந்து இன்னொரு ஒன்றியத்திற்கும் போவதற்கு கூட—குறிப்பாக இன்றைய தினம் வடாற்காடு மாவட்டத்தில் இப்படிப்பட்ட கேட்டுகள் போடப் பட்டிருக்கின்றன. இதனால் சிறு விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார் கள். இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியதைப் போல அரசாங்கம் வெளி மாநிலங்களிலிருந்து வாங்குவதை விட இங்கே இருக்கிற விவசாயிகளுக்கு குறைந்தது 200 ரூபாய் கிடைக் கிற அளவிற்கு கொடுத்து வாங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறிப்பிட்ட அளவிலே வருகிற போது அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாவட்டத்தின் நிலை மையை ஒட்டி சில பல நடவடிக்கைகளை எடுக்க வேண்டியிருக் கிறது. உபரியாக இருக்கிற மாவட்டம் தஞ்சை என்று வைத்துக் கொண்டாலும், அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் கட்டுப்பாடு

செய்யா விட்டால் பற்றாக்குறையாக இருக்கிற சேலம், தர்மபுரி மாவட்டம் என்று போய் பிறகு கொஞ்சம் தாண்டினால் கேரளம் என்று வந்து விடுகிறது அப்படிப் போகிற போது அதிகமாக விளைச்சலைத் தருகிற தஞ்சை மாவட்டமே வறட்சிக்கு உள்ளாக வேண்டிய ஒரு கட்டத்தை உண்டாக்கி விடுகிறார்கள். ஆகவே, அந்தந்த மாவட்டங்கள் வாடாமல் இருக்க வேண்டும். அவர்களுக்கு கிடைக்க வேண்டிய நியாயம் கிடைத்தது போக உபரி மற்ற மாவட்டங்களுக்குப் போகலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. திருவேங்கடம் அவர்கள் மாவட்டமான வடாற்காடு மாவட்டத்தைக் கூட ஓரளவு உபரி மாவட்டமாக உள்ளதை வறட்சி மாவட்டமாக ஆக்கி விடுவார்கள் இடம் கொடுத்தால் ஆகவே கட்டுப்பாடு செய்யவேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

**அச்சிறுப்பாக்கத்திலுள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்.**

(*159*—*வினா எண். 17780*)—**திரு. சி. கணேசன் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு மாவட்டம் அச்சிறுப்பாக்கத்தில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் செயல்படாமல் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** விற்பனைக் கூடம் செயல்பட்டுக் கொண்டுதான் இருக்கிறது. விளைச்சல் பாதிக்கப் பட்டதால் வரத்துக்கள் இல்லை.

**நிலக்கோட்டைத் தொகுதியில் உள்ள புறம்போக்கு நிலம்**

(*160*—*வினா எண். 17861*)—**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் நிலக்கோட்டை தொகுதியில் தண்ணீர் வசதியோடு கூடிய புறம்போக்கு நிலம் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அம்மாதிரியான இடங்களில் விவசாயப் பண்ணை ஏற்படுத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.



**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் நாலைந்து இடங்கள், கணவாய்ப்பட்டி, ஆணைப்பட்டி போன்ற இடங்களில் புறம்போக்கு நிலங்கள் உள்ளன. அங்குள்ள மக்கள் விவசாயத்தை நம்பி இருப்பவர்கள் ஆவார்கள். அவர்கள் தண்ணீர் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். அங்கு சோளம், நெல், தென்னை, பழவகைகள் போன்றவற்றை உற்பத்தி செய்யக்கூடிய அளவிற்கு தக்க நடவடிக்கைகளை இனிமேலாவது அமைச்சர் அவர்கள் எடுத்துக்கொள்வார்களா?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** பெரியகுளத்தில் ஏற்கனவே ஒரு தோட்டக்கலைப் பண்ணை இருக்கிறது. வத்தலக் குண்டு அருகில் அது இருக்கிறது. நிலக்கோட்டையிலிருந்து அங்கே போகலாம்.

**திரு. எல். இளையபெருமாள் :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது அரசாங்கத்தின் மூலம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. பண்ணை அருகிலேயே இருக்கிறது என்று சொன்னார்கள். அந்தப் பகுதியில் வாழ்கிற ஆதிதிராவிட பின் தங்கிய வகுப்பினர் வீணாக இருந்து கொண்டு, இருக்கிற புறம் போக்கு நிலங்களை தங்களுக்குக் கொடுத்தால் உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும் என்று சொல்கிறார்கள். உணவு உற்பத்தி செய்பவர்களுக்குக் கூட பட்டா கொடுக்காமல் இருக்கக்கூடிய அவல நிலை இருக்கிறது. பண்ணை வைக்கப்போகிறோம் என்று கூறி கொடுப்பது கிடையாது. ஆகவே அப்படி அப்ஜெக்ஷன் சொல்லாமல் கொடுப்பார்களா?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தண்ணீர் வசதி உள்ள புறம்போக்கு நிலமே இல்லை என்று தான் மாவட்ட ஆட்சித் தலைவர் சொல்லியிருக்கிறார்.

**தமிழ்நாட்டில் கடுகு எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம்.**

(*161*—*வினா 20536*)—**திரு. செ. செம்மலை திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் கடுகு எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு முயற்சிகளை மேற்கொண்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எங்கு ஆரம்பிக்கப்பட உள்ளது?

**மாண்புமிகு டாக்டர் திரு. கா. காளிமுத்து :** (அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழுவதற்கு இடமேதுமில்லை.

[1984 மார்ச் 5

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, வட நாட்டில் எல்லாம் கடுகு எண்ணெயை அதிகமாக உபயோகிக் கிறார்கள். ஆதலால் கடுகு எண்ணெய் தயாரிக்கும் தொழிற் சாலையை அமைத்தால் நமது அரசுக்கு அதிக இலாபம் கிடைப் பதோடுகூட அதை ஏற்றுமதி செய்தால் அதிக இலாபம் கிடைக்கும். ஆகவே அரசு கடுகு எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றினை அமைக்க பரிசிலனை செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: வட நாட்டில் அதிகமாக கடுகு எண்ணெய் பயன்படுத்தப் படுகிறது என்பது உண்மைதான். வட நாட்டுக்கு ஒத்து வருகிற பல பொருட் கள் தென் நாட்டுக்கு ஒத்துவராது.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, கடுகு எண்ணெய் கொஞ்சம் உஷ்ணமாகத்தான் இருக்கும். வட நாடு குளிர் பிரதேசமாதலால் அங்கே அதை அதிகமாகப் பயன்படுத்து கிறார்கள். தமிழ் நாட்டில் இந்த கடுகு எண்ணெயை அறிமுகப்படுத்தினால் அதை மக்கள் உபயோகிக்கும் அளவு அதிகமாக இருக்குமா? கடுகு எண்ணெய் சாப்பிடும் போது 'வாமிட்டிங்' ஏற்படுவதை வட நாட்டில் நாங்கள் போகும் போது பார்த்தோம். ஆகவே கடுகு எண்ணெய்க்கு தமிழ் நாட்டில் வரவேற்பு இருக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: உங்களுக்கு வாந்தி வந்ததிலிருந்தே அதற்கு வரவேற்பு இல்லை என்று தெரிகிறது.

மாவட்டந்தோறும் விவசாய உற்பத்திக் குழு அமைக்கும் திட்டம்.

(162—*வினா எண். 21279)—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்டந்தோறும் விவசாய உற்பத்திக் கமிட்டி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: (அ) மற்றும் (ஆ): மாநிலத்திலுள்ள அனைத்து மாவட்டங்களின் விவசாய நிலை மையை உன்னிப்பாகக் கவனித்து, தற்போதுள்ள குறைந்த நீர்வளத்தைப் பயன்படுத்தக்கூடிய இடங்களில் நல்ல முறையில் பயன்படுத்தி அதிக விளைச்சலை அடைய வேண்டும் என்று



1984 மார்ச் 5]

அரசு கருதியது. எனவே மாவட்ட ஆட்சியாளர்கள் தலை மையில் விவசாயம் மற்றும் அதனைச் சார்ந்த துறைகளின் அலுவலர்களை உறுப்பினர்களாகக் கொண்ட 'வேளாண்மை உற்பத்திக் குழுக்கள்' அமைக்கப்பட வேண்டும் என்று மாவட்ட ஆட்சியாளர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டார்கள்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவர் அவர்களே, ஒவ் வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொள்ளப்பட்டதாகச் சொல்கிறார்கள். எல்லா மாவட்டங் களிலும் இப்படிப்பட்ட குழுக்கள் அமைக்கப்பட்டு விட்டனவா? இந்தக் குழு விவசாயிகளுக்கு எந்தெந்த வகையில் உதவி செய்கி றது என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: இது வேளாண்மை தொடர்பான அலுவலர்களைக் கொண்ட குழு. வேளாண் மைத் துறை, பாசனம், பொதுப்பணித்துறை, கூட்டுறவு, மின் சாரம் ஆகிய துறைகளைச் சார்ந்த அலுவலர்களை ஒருங் கிணைத்து இந்தக் குழுவை அமைக்க வேண்டும். வறட்சி போன்ற சமயத்தில் என மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டார்கள். இந்தக் குழுக்கள் ஆங்காங்குள்ள நீரின் அளவு, பயிரிடும் பரப்பளவு, மின்சாரம் கூட்டுறவு, கடன் வசதி போன்றவற்றை ஒட்டுமொத்தமாகத் தெரிந்து கொள் ளக்கூடிய ஒரு வாய்ப்பு கிடைக்கிறது என்ற வகையில் இந்தக் குழுக்கள் அமைக்கப்பட்டன. இந்தக் குழுக்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.

(முற்பகல் 9—30)

திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் மாவட்ட விவசாய நலக் குழு அமைக்கப்பட்டிருக்கி றது. இந்தக் குழுவினுடைய பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டு, அதைச் செயல்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, அந்தப் பரிந்துரைகள் எந்த அளவுக்குத் தேவைப்படுகிறதோ, அந்த அளவிற்கு நிதி ஆதாரங்களை ஆராய்ந்து அதன் அடிப்படை யில் செயல்படுத்தப்படும்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, குறிப்பாக நான் ஒரு விவரத்தைத் தெரிந்து கொள்வதற்காக கேட்க விரும்புகிறேன். வட ஆற்காடு மாவட் டத்தில் இப்படி இந்தக் குழு எத்தனை முறைகள் கூடியது? அந்தக் குழு அனுப்பிய பரிந்துரைகள் என்ன? அதை அரசு ஏற்று நடைமுறைப்படுத்தி உள்ளதா என்பதை அறிய விரும்பு கிறேன்.

[1984 மார்ச் 5

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இந்தக் குழு வறட்சி தாக்குகின்ற நேரத்தில் வாரத்திற்கு ஒருமுறை கூட வேண்டுமென்று ஆணையிடப்பட்டது. அதற்குப் பிறகு, ஓரளவிற்கு மழை பெய்து நிலைமை சீரடைந்ததற்குப் பிறகு, மாதந்தோறும் இக்குழு கூடலாம் என்று தெரிவிக்கப்பட்டது. எல்லா மாவட்டங்களிலும் அந்தக் குழுக்கள் கூடி பரிந்துரைகளை அனுப்பியுள்ளன. வட ஆற்காடு மாவட்டத்தைப் பற்றி தனியாக விவரம் வேண்டுமென்றால், தனிக் கேள்வி போட வேண்டும்.

## கரும்புப் பயிரைத் தாக்கும் குருத்துப் பூச்சியை அழிக்க புதிய திட்டம்.

(163—வினா எண். 21535) திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கரும்புப் பயிரைத் தாக்கும் குருத்துப்பூச்சியை அழிக்க அரசிடம் புதிய திட்டம் எதுவும் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : இல்லை.

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கரும்புப் பயிரை தாக்கும் குருத்துப் பூச்சியை ஒழிப்பதற்கு அரசிடம் புதிய திட்டமில்லை என்று சொன்னார்கள். விவசாயிகள் கரும்பைப் பயிர் செய்து, பயிர் முளைக்க ஆரம்பிக்கின்ற காலத்திலே இந்த குருத்துப் பூச்சி தாக்குவதினால், அந்தக் கரும்புப் பயிர்கள் அழிந்து விடுகின்றன. அதைப் போக்குவதற்கு புதிய முறையில் ஏதாவது திட்டங்கள் அல்லது புதிய விதைகள் கண்டுபிடித்து, அந்த அரசு அறிமுகப்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, கரும்புக் கரணைகள் நடும்போது, வயலில் சோகைகளை 10 முதல் 15 செ. மீ. உயரத்தில் பரப்பி வைத்தால் குருத்துப் பூச்சிகளின் தாக்குதல் குறைந்து காணப்படுகிறது என்று பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. அவ்வாறு சோகை பரப்பபடாத வயல்களில் நட்ட 30-வது நாளில் அசோட்ரின் நுவக்ரான், என்டோ சல்பான், லிண்டேன் அல்லது செவிடால் போன்ற மருந்துகளை பயன்படுத்தலாம் என்ற அறிவுரை தந்திருக்கிறது. ஒட்டுண்ணி மூலம் இடைக்கணுப் புழுக்களைக் கட்டுப்படுத்தலாம் என்ற வகையில் ஒட்டுண்ணி விடும் திட்டம் 21 நிலையங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.



1984 மார்ச் 5]

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கரும்புப் பயிரைத் தாக்கும் குருத்துப் பூச்சியை ஒழிக்க புதிய திட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இந்தப் புதிய திட்டத்தோடு, உற்பத்திக்கு ஏற்றாற்போல் விலை கொடுப்பதோடு, அந்தந்த மாவட்டத்திற்கு ஏற்ப எந்த மாதங்களில் இந்தப் பயிரை செய்யலாம், எப்படி செய்யலாம் என்பதையெல்லாம் அறிவிப்பதோடு, அந்தந்த மாவட்டத்திற்கு ஏற்ப நிலைமையை மாற்றுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இந்தக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டுதான் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

## கட்டிடத் தொழிலாளர்கள் அரசிடம் கொடுத்துள்ள கோரிக்கைகள்.

(164— *வினா எண் 9805) திரு. ரா. கிருஷ்ணன்; திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள கட்டிடத் தொழிலாளர்கள் பல கோரிக்கைகளை அரசிடம் கொடுத்துள்ளனரா ?

(ஆ) அதன் மீது அரசின் நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) ஒரு விவர அறிக்கை ** அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதுகூட சமீபகாலததில், இந்தக் கட்டிட தொழிலாளர்கள் பல்வேறு சங்கங்களை ஒருங்கிணைத்து, பல்வேறு வகையான போராட்டங்களை நடத்தி, அரசுக்கு ஒரு மகஜரைக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், அவர்களுடைய கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை. அவர்கள் அனுப்பியுள்ள கோரிக்கைகள் எத்தனை ? அதிலே அரசாங்கம் உடனடியாக நிறைவேற்றிய கோரிக்கைகள் எத்தனை என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

** 257-259-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட சங்கங்கள் கொடுத்த கோரிக்கைகளில் முக்கியமான வை 14. அதிலே 4 தான் இந்த இலாகாவைச் சார்ந்தது. இந்த அரசைப் பொறுத்தவரையில் 1983ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டு.ட கட்டுமான பணியாளர்கள் பணி நிலைமைகள் பல்வகை விதி முறைகளை உருவாக்கி சட்ட முன்வடிவை அறிமுகம் செய்தி ருக்கிறோம். அதை அறிமுகம் செய்யும்போது, நான் சென்ற சட்டமன்ற தொடர்க்கூட்டத்தில். இதைப்பற்றிச் சொன்னேன், இந்தக் கூட்டத் தொடரில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதாக இல்லையென்று. காரணம் இதிலே பல திருத்தங்களைச் செய்ய வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொல்லியிருக்கி றார்கள். அதாவது இன்ஷூரன்ஸ் கவரேஜ் போன்ற பல திருத்தங் கள் செய்ய வேண்டும். பல்வேறு சங்கங்கள் இருக்கின்றன. சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். சுப்ரீம் கோர்ட் ஜட்ஜ் வி. ஆர். கிருஷ்ண அய்யர் அவர்களும் இருக்கிறார்கள். அப்பேற்பட்டவர்கள் கருத்து சொல்வதாக இருக்கிறார்கள். இவை களையெல்லாம் பரிசீலனை செய்து, அரசே திருத்தங்கள் கொண்டு வருவதாக இருக்கிறது. அடுத்து வருகிற சட்ட மன்ற பட்ஜட் தொடர் கூட்டத்தில் நாம் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளலாம் என்று சொன்னேன். இப்போது அது ஆய் வுக்கு எடுத்துக் கொண்டு, நிறைவேற்றப்படும் என்று எதிர் பார்க்கிறேன். அப்போது விரிவான விவாதத்தை வைத்துக் கொள்ளலாம்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர் களே, நடப்பு சட்டமன்றக் கூட்டத்தில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதாகச் சொன்னார்கள். நன்றி. ஆனால் அவர்கள் கொடுத்த 14 கோரிக்கைகளில் 4 கோரிக்கைகள் தான் அந்த துறையைச் சேர்ந்தது என்று சொன்னார்கள். அந்தப் பத்துக் கோரிக்கைகளையும்—எந்தத் துறையைச் சார்ந்ததாக இருந்தா லும்—அரசாங்கம் பரிசீலனை செய்து நிறைவேற்றக் கடமைப் பட்டிருக்கிறது. ஆகவே அவற்றையும் சேர்த்து ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள நம்முடைய அமைச்சரவர்கள் முன்வருவார் களா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலை வர் அவர்களே, அந்தக் கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட இலாக் காக்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு அவர்கள் பரிசீலனை செய்ய வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது.



திரு. என். வரதராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, கட்டிடத் தொழிலாளர்களின் கோரிக்கையானது கடந்த முப்பத்தைந்து ஆண்டுகளாக தள்ளிப் போடப்பட்டு வந்துள் ளது. இந்தக் கூட்டத் தொடரில் அவர்களின் பாதுகாப்புக் கான சட்டம் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று நினைக்கி றேன் என்று சொன்னார்கள். அது ஆய்வுக்கு எடுத்துக்கொள் ளப்பட்டு நிறைவேற்றப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொல்வார்களா ? குறிப்பாக நீண்ட காலமாக அவர்களது முக்கியமான கோரிக்கையாக இருப்பது அனைத்து கட்டிடங் களிலும் வேலை பார்க்கும் தொழிலாளர்களுக்கும் இந்தப் பாதுகாப்பு இருக்க வேண்டும் என்பதாகும். அதற்கு இந்தச் சட்டம் பொருந்துமாறு செய்யப்பட வேண்டும். அவர் களுடைய அடுத்த முக்கியமான கோரிக்கை கூலி நிர்ணயிக்கப் பெறவேண்டும் என்பதாகும். அது நிறைவேற்றப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வரதராஜன் அவர்கள் ஒரு நல்ல கருத்தைச் சொன்னார்கள். முப்பத்தைந்து ஆண்டு காலமாக புறாகணிக்கப்பட்டு வந்த கட்டிடத் தொழி லாளர்கள் சமுதாயத்தைப் பாதுகாக்க புரட்சித் தலைவர் ஆட்சியில் முயற்சி எடுத்துக்கொண்டதற்காக மாண்புமிகு உறுப்பி னர் பாராட்டுவார்கள் என்று நினைக்கிறேன். நிரம்பப் பாராட்டுதல்கள், சட்டம் ஆய்வுக்கு வரும்பொழுது கிடைக் கும் என்பதை நான் அறிவேன். ஏற்கனவே சட்டம் அறிமுகம் செய்தாகிவிட்டது, சென்ற கூட்டத் தொடரிலேயே. இந்த கூட்டத் தொடரில் அது ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதாக இருக்கி றோம். இருப்பினும், கொஞ்சம் காஷியஸ் ஆக எடுத்துக் கொள்ளப்படலாம் என்று தெரிவித்தேன். அந்தத் தொழிலாளர் களுக்கு கூலி நிர்ணயம் சென்ற ஆண்டு (1983 ஜூலை) முதல் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**தொழிலாளர் இலாக்காவில் நியமிக்கப்பட்டுள்ள மருத்துவ அதிகாரிகள்.**

*165—(*வினா எண் 14825)—***திரு. கு. ரமணி :** *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

***(அ) தொழிற்சாலை ஆய்வாளர் கட்டுப்பாட்டின் கீழ் தொழிலாளர் இலாக்காவில் மருத்துவ அதிகாரிகள் ஏழு பேர்கள் நியமிக்கப்பட்டுள்ளது உண்மையா ?***

***(ஆ) ஆம் எனில், அவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள வேலைகள் என்ன ?***

***(இ) இந்த மருத்துவ அதிகாரிகளை மாவட்ட மருத்துவ அதிகாரிகள் மேற்பார்வையிடும் பொறுப்புண்டா ?***

[1984 மார்ச் 5

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) தொழிலாளர் துறையில், 7 மருத்துவ அலுவலர்கள் நியமிக்கப்பட்டு உள்ளது உண்மை. ஆனால், இவர்கள் தொழிற்சாலைகள் ஆய்வாளரின் கட்டுப்பாட்டில் இல்லை. தற்போது Chief Inspector of Factories (Health and Safety) என்றும் Chief Inspector of Factories (Administration) என்றும் இரு பிரிவுகள் உள்ளன. இவர்கள் Chief Inspector of Factories (Health aud Safety தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் (நலம் மற்றும் பாதுகாப்பு) அவர்களின் கீழ் பணியாற்றுகின்றனர்.

(ஆ) தொழிலாளர் நலத் துறையில், தொழிற்சாலைகள் ஆய்வுப் பிரிவில் பணியாற்றும் ஏழு மருத்துவ அலுவலர்களில் அறுவர், 1948 ஆம் ஆண்டின், தொழிற்சாலைகள் சட்டப் பிரிவு, 10, மற்றும் 1950 ஆம் ஆண்டின் தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகளின் 14-வது விதியின்படி, கீழ்க்காணும் பணிகளைப் புரி கின்றனர் :—

(i) 1948 ஆம் ஆண்டின் தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் வயதுவராத தொழிலாளர்களைப் பரிசோதித்து தகுதிச் சான் றளித்தல்.

(ii) 1950 ஆம் ஆண்டின் தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதி 95-ன் கீழ், அபாயகரமான தொழில் என்று அறிவிக்கப்பட்ட வற்றில் ஈடுபட்டுள்ள, தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களை மருத்துவப் பரிசோதனை செய்தல். இது அந்த ஆறு பேர்களின் வேலை.

(iii) ஏழாவது மருத்துவ அலுவலர், மதுரையில் தொழிற் சாலைகளின் சுகாதார நலன் பேணும் மருத்துவ பிரிவு மருத்துவ அலுவலர் ஆவர். அவருடைய பணி மாநிலத் தொழிலாளர் ஈட் டுறுதிச் சட்டம் அமுலாக்க முடியாத சிறு தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் உடல் நலப் பாதுகாப்புப் பணி யினை கவனித்தல்.

(இ) இல்லை.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, இந்த டாக்டர்கள் அந்தமை பேரும் தொழிலாளர்கள் நலத்தைப் பரிசீலிப்பதற்கும் 14 வயதுக்குட்பட்ட சிறுவர்களை தொழிற்சாலைகளில் அமர்த் தக்கூடாது என்பதை நிலைநாட்டுவதற்கும் வேண்டி ஏற்படுத்தப் பட்டவர்கள். இந்த 6 பேரும் தமிழ்நாட்டை ஆறு பிரிவாகப் பிரித்துக் கொண்டு பல நூற்றுக்கணக்கான தொழிற்சாலைகளில் பணி புரிகின்றவர்களையும் பரிசோதனை செய்து ரிப்போர்ட்டு தயார் செய்து அனுப்ப வேண்டும். அப்படியானால் எந்தெந்தப் பகுதியில் எத்தனை தொழிலாளர்கள் எந்தெந்தத் தொழிற்சாலை களில், அவர்களுடைய சுகாதாரத்தைப் பற்றி, மற்ற நடவடிக்கைகளைப் பற்றி அறிக்கை அளித்துள்ளார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?



1984 மார்ச் 5]

(முற்பகல் 9-40)

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர் களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட 'ப்ரெக் ஆஃப் பிகர்ஸ்' தற்போது என்னிடம் இல்லை. ஆனால் மருத்துவத் துறையைச் சேர்ந்த மருத்துவர்களே இதற்கு முன்னால் சான்றிதழ் அளிக்கும் முறை இருந்தது. அவர்கள் முழு நேரமும் மருத்துவ மனைகளை கவனித்து வந்ததால் சான்றிதழ் அளிக்கும் வேலையை சரிவர செய்ய முடியவில்லை. எனவே, 2—8—1980-ஆம் நாள் முதல் 1982 ஆம் எண் ஆணையின்படி தொழிற்சாலைகளின் தொழிலாளர் சான்றிதழ் மருத்துவர்கள் என்ற முறையிலே தனி யாக ஆறு மருத்துவர்கள் பணியிடம் உருவாக்கப்பட்டிருக்கிறது. சென்னை, வேலூர், சேலம், சிவகாசி, திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி ஆகியவை அந்த ஆறு பணியிடங்கள். இவர்கள் குறிப்பாக எதற்காக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றால் தொழிற்சாலைகளில் வேலை பார்க்கும் 14 வயது முதல் 17 வயது வரையுள்ள இளம் பருவத்திலிருந்து தகுதி சான்றிதழ் அளிப்ப தற்கு, அவர்களுக்கான தகுதி சான்றிதழ்களை இந்த மருத்துவர் களே வழங்க வேண்டும். அவர்கள் கொடுக்கும் தகுதி சான்றிதழ் இல்லாதவர்களை தொழிற்சாலையில் வேலைக்கு அமர்த்துவது தண்டிக்கப்படக்கூடிய குற்றம் ஆகும். 1982-ல் சான்றிதழ் அளிக்கும் மருத்துவர்கள் அபாயகரமான தொழில்களாக அறி விக்கப்பட்டுள்ள தொழிற்சாலைகளிலுள்ள 7,682 தொழிலாளர் களை உடல் நலம் பற்றி பரிசோதனை செய்தார்கள். மேலும் அப்படிப்பட்ட தொழிற்சாகைளில் 4,012 இளம் சிறார்களை பரிசோதித்து மருத்துவச் சான்றிதழ் வழங்கியுள்ளார்கள்.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, அவர்களுக்கு வய்து பற்றிய சான்றிதழ் அளிப்பது மட்டுமல்ல இவர்களுடைய வேலை. அவர்களுடைய சுகாதாரத்தைப் பற்றியும் அவர்கள் பரிசோதனை செய்ய வேண்டும். அவர்கள் உடலில் நோய் இருக்கிறதா, என்ன நோய், அது பரவக்கூடிய நோயா என்பதையும் அவர்கள் பார்க்க வேண்டும். அதோடு இந்த இ.எஸ்.ஐ. திட்டத்தின்கீழ் வராத தொழிலாளர்களுடைய சுகாதாரத்தையும் அவர்கள் கவ னிக்க வேண்டும். இப்படிப்பட்ட நடவடிக்கைகளை மருத்துவத் துறையிலே சகலவற்றையும் செய்யக்கூடிய மருத்துவப் படிப்பு படித்தவர்களாலேயே செய்யக்கூடிய அவர்களுடைய காரியங்களை மேற்பார்வை செய்ய ஒரு தொழிற்சாலை உயர்மட்ட ஆய்வா ளரை எப்படி தலைவராக நியமிக்க முடியும்? அவர்களால் அது முடியுமா? இதற்கு மாவட்டத் தலைமை மருத்துவ அதிகாரியின் கண்ட்ரோல் இருக்க வேண்டாமா? மாவட்டத் தலைமை மருத்துவ அதிகாரியின் கண்ட்ரோலும் பொறுப்பும் இருந்தால்தான் இந்தப் பணியைச் சரியாகச் செய்ய முடியும். அரசாங்கம் இது குறித்து என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, சீஃப் இன்ஸ்பெக்டர் ஆப் பாக்டரீஸ் (ஹெல்த் அன்ட் சேப்டி) என்பவருக்குக் கீழே அவர்கள் வேலை செய்கிறார்கள். அவர்கள் கொடுக்கக்கூடிய சான்றிதழ் சரியாக இருக்கிறதா என்பதைப் பார்ப்பதற்கு தனியாக மருத்துவப் பிரிவைச் சேர்ந்தவர்கள் இருக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். இப்போதுதான் தனியாக மருத்துவர்களை இந்தப் பிரிவுக்குப் பெற்றிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லக்கூடிய யோசனைகளைப் பரிசோதனை செய்து பார்க்கலாம்.

தமிழக அரசிற்கு அன்பளிப்பாக அளிக்கப்பட்டுள்ள துளைபோடும் கருவி.

166—(*வினா எண். 16212) திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம். திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசிற்கு ஆயிரம் அடிக்கு அதிகமாகத் துளை போடும் மிஷின் ஒன்றை வெளிநாடு அன்பளிப்பாக அளித்துள்ளதற்கு மத்திய அரசின் சுங்க இலாகா பலகோடி ரூபாய் சுங்கத் தீர்வையாக வசூலித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) மற்றும் (ஆ): டானிஷ் நாட்டின் வெளிநாட்டு உதவி திட்டத்தின் கீழ் உப்பு கரிப்பு அதிகம் உள்ள கிராமங்களுக்கு குடிநீர் வழங்கும் திட்டத்திற்காக 4 துளைக் கருவிகள் தமிழ்நாட்டிற்கு கொடுக்கப்பட்டுள்ளது. இதற்கான சுங்கவரியாக ரூ. 168.50 லட்சம் மாநில அரசால் கொடுக்கப்பட்டுள்ளது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த துளை போடும் கருவிகளைத் தமிழக மக்களுக்கு வெளிநாட்டிலுள்ளவர்கள் இனாமாக அளித்திருக்கிறார்கள். அப்படி இனாமாக அளிக்கப்பட்ட இந்த கருவிகளுக்கு கிட்டத்தட்ட மூன்றரை கோடி ரூபாய் கொடுக்கப்பட்டதாக அமைச்சரவர்கள் சொன்னதாக நினைக்கிறேன். சுங்க இலாகா இதற்கு வரி கொடுக்கவேண்டுமென்று கட்டியிருப்பதாக கருதுகிறேன். அரசாங்கத்திற்கு இனாமாக கொடுக்கப்பட்டதை மத்திய அரசிடம் விஷயங்களை எடுத்துக் கூறி அவைகளை திரும்பப் பெறுவதற்கு இந்த அரசாங்கம் ஏதாவது முயற்சி எடுத்திருக்கிறதா ? மத்திய அரசாங்கம் என்ன பதில் சொல்லியிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, மத்திய அரசு நல்ல பதில் சொல்லியிருக்கிறது. மத்திய அரசு குடிநீர் பணிகளுக்கென துணை வரிகளுக்கு 23-6-1983 முதல் சுங்க வரி விதி விலக்கு அளித்துள்ளது. டேனிடா ரிக்குகளுக்கு 24-6-1983-க்கு முன்னால் சுங்க வரி கொடுத்துள்ளது. மத்திய அரசின் எக்சம்ஷன் தேதிக்கு முன்பு கொடுக்கப்பட்டு இருக்கிறது. சுங்க வரியைத் திருப்பி அளிக்குமாறு கோரப்பட்டுள்ளது. இதற்கான சாத்தியக் கூறுகள் இருந்தால், துரிதப்படுத்தி, மான்யத் தொகையை அதிகரித்து, செலுத்தப்பட்ட தொகைக்கு ஈடாக அதிக மான்யம் அளிக்கவும், மத்திய அரசு கோரப்பட்டுள்ளது. மத்திய அரசின் முடிவு நல்ல முடிவாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவர் அவர்களே, எக்சம்ப்ஷன் கொடுக்கப்பட்ட காலத்தை நீட்டிக் கப்பட்டது ஒரு புறம் இருக்கட்டும். ஏற்கனவே கட்டப்பட்ட பணத்தை மாநிலங்களுக்கு கொடுக்க வேண்டுமே தவிர, மான்யம் அதிகம் கேட்பது வேறு விஷயம். இது ஒரு கொள்கைப் பிரச்சினை என்ற அடிப்படையில் மக்கள் நலனுக்காக இனாமாக ஒரு நாடு கொடுக்கின்ற பொருளுக்கு, அதற்கு மத்திய அரசு சுங்க வரியிலிருந்து விதி விலக்கு அளிக்க வேண்டுமென்ற வற்புறுத்தலுக்கு மாநில அரசு தயாராக இருக்கிறதா ?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, நான் தெளிவாகச் சொல்லவில்லை என்று கருதுகிறேன். விதி விலக்கு கொடுக்கப்பட்டது 23-6-1983. இதற்கு முன்னதாக கொடுக்கப்பட்ட பணத்தை திருப்பிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். அப்படி கொடுக்கவில்லை என்று சொன்னால், விதி விலக்கு மாற்று யோசனையை தெரிவித்து இருக்கிறோம். எப்படியும் பெற்றுவிட வேண்டும் என்பதுதான் இந்த அரசினுடைய கொள்கை.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விதி விலக்கு கோரி இருப்பதாக சொன்னார்கள். அந்த தேதிக்கு முன்னே பணம் கொடுக்கப்பட்டதாகச் சொன்னார்கள். மத்திய அரசுக்கு மாநில அரசாங்கம் 1,500 ஏக்கர் மற்ற துறைகளுக்கு இலவசமாகக் கொடுத்துக் கொண்டு வருகிறது. இந்தக் காரணங்களைச் சுட்டிக்காட்டி, இப்படி வெளிநாடுகளிலிருந்து பொது மக்களுக்கு விநியோகிக்கப்படுகின்ற பொருளுக்கு முழு வரி விலக்கு கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1984 மார்ச் 5

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : இந்த வற் புறுத்தலில் தமிழக அரசிற்கு தனித் திறமை இருக்கிறது. மாண்பு மிகு திரு.பால்சுப்பிரமணியன் ஏற்றுக்கொள்வார்கள் என்று கருது கிறேன். அப்படி வற்புறுத்துவதன் காரணமாகத்தான் ஒரு தேதியிட்டு, இனிமேல் வசூலிக்க மாட்டோம் என்று சொல்கி றார்கள். ஆனால் ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். அதில் வெற்றி பெறுவோம் என்று நம்பு கிறோம்.

காஞ்சிபுரம் நகரத்திற்கான குடிநீர் அபிவிருத்தித் திட்டம்.

167—(*வினா எண். 18449) திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் நகரத்தில் தற்போதைய குடிநீர்த் திட் டத்தை அபிவிருத்தி செய்ய அரசிடம் செயற் குறிப்பு ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) காஞ்சிபுரம் நகராட்சிக் குடிநீர் அபிவிருத்தித் திட்டத் திற்கான ஆய்வு வேலைகளை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் முடித்து விட்டது. இதற்கான திட்ட அறிக்கை வாரியத்தினால் தயாரிக்கப்பட்டு வருகிறது.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : இந்த குடிநீர் திட்டத் திற்காக, எந்தெந்தப் பகுதிகளிலிருந்து தண்ணீர் எடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது ? ஏற்கனவே மேட்டுக் குப்பம், முசரக் குப்பம் போன்ற இடங்களில் விவசாயப் பணிகளுக்காக எடுக்கப் பட்ட ஆழ் துளைக் கிணறுகள் இருக்கின்றன. அந்தக் கிணறு களை இந்தக் குடிநீர் திட்டத்தில் பயன்படுத்திக் கொள்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : நகராட்சி வேண்டுகோளின்படி 1982 ஆம் ஆண்டில் 1,21 இலட்சத்தில் ஆய்வு மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கிறது. " தட் இஸ் இன் வெஸ்டிகேஷன் " — வாரியத்தால் அனுமதி வழங்கப்பட்டது. இந்தத் தொகையை காஞ்சிபுரம் நகராட்சி, வாரியத்திற்கு செலுத்திவிட்டது. விரைவான ஆய்வுகள் வாரியத்தால் செய்யப் பட்டு, முடிந்து விட்டன. இதற்கான திட்ட அறிக்கை 1984-85-க்கு வாரியத்தால் தயாரிக்கப்பட்டு வருகிறது. வாரியம் தயார் செய்து அரசிற்கு வரும்போது மற்றைய சோர்ஸ் என்ன ? ஸ்கீமினுடைய காஸ்ட் என்ன என்ற தகவல்கள் எல்லாம் கிடைக் கும்.



1984 மார்ச் 5]

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் நகராட்சி குடிநீர்த் திட்டத்தை எவ்வளவு காலத்தில் செயலாற்ற அரசு ஆணை இட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-50).

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னதைப் போல திட்ட அறிக்கை 1984-85 ஆண்டுக்காக தயாரிக்கப்பட்டு வருகிறது. திட்ட அறிக்கை தயாரிக்கப் பட்டு, அந்த அறிக்கை அரசுக்கு வந்த பிறகு, எவ்வளவு விரை விலே அதற்கு அனுமதி தர வேண்டுமோ அவ்வளவு விரைவில் அனுமதி தந்து, எவ்வளவு விரைவில் தொகை பெற வேண்டுமோ, அதைப் பெற்று, எவ்வளவு விரைவில் அதை அமுல்படுத்த முடியுமோ, அவ்வளவு விரைவில் அமுல்படுத்த எல்லா முயற்சி களும் எடுத்துக் கொள்ளப்படும்.

சென்னை இராயபுரம் தொகுதியில் சாக்கடை அடைப்பினால் ஏற்படும் சுகாதாரக்கேடு.

168—(*வினா எண். 19172) திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை இராயபுரம் தொகுதி புதிய 13-வது வட்டத் தில் உள்ள ஆதம்சாகிப் தெரு, ஆண்டியப்ப முதலி தெரு, அப்பையர் சந்து ஆகிய இடங்களில் அடிக்கடி சாக்கடை அடைப்பு ஏற்பட்டு சுகாதாரக்கேடு ஏற்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதை நிரந்தரமாக நிவர்த்தி செய்ய அரசிடம் ஏதேனும் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (அ) ஆம்.

(ஆ) அப்பையர் சந்து, ஆண்டியப்ப முதலி தெரு ஆகிய இடங்களில் மாட்டுக் கொட்டகைகள் அதிகம் இருப்பதால் கழிவு நீர் தடை நேரிடுகிறது. இவை உடனுக்குடன் அகற்றப்பட்டு வருகின்றன. ஆதம்சாகிப் தெருவின் கழிவுநீர்க் குழாய்கள் பழுதடைந்து இருக்கின்றபடியால் கழிவுநீர்த்தடை அடிக்கடி ஏற்படுகிறது. குழாய் மாற்றும் வேலை விரைவில் தொடங்க இருக்கிறது.

[1984 மார்ச் 5

திரு. ப. பொன்னுரங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே,
13-வது வட்டத்தை ஒட்டித்தான், 14, 15, 16 ஆகிய வட்டங்கள்
இருக்கின்றன. ஆனால் போர்டு உருவாவதற்கு முன்னால் இந்த
வேலைகளை எல்லாம் மாநகராட்சி நிர்வகித்து வந்தது. அந்த
நேரத்தில் மாநகராட்சி ஒரு திட்டம் தீட்டியது. ராபின்சன்
பார்க், அதாவது இப்போது அண்ணா பார்க் என்று அழைக்கப்
படுகிற அந்த பார்க் அருகில் ஒரு சம்ப் கட்டி அதிலே காலை
யிலே வருகின்ற கழிவு நீரைத் தேக்கி வைத்து, மாலையிலோ,
அல்லது பகலிலோ திறந்துவிடுகின்ற ஒரு திட்டத்தை மாநகராட்சி
தயாரித்தது. அந்தத் திட்டம் அமல்படுத்தப்படுமானால், இத்
தகைய அடைப்புகள் அடிக்கடி ஏற்படாது என்ற கருத்து நிலவு
கிறது. ஆகவே இந்த திட்டத்தை மீண்டும் பரிசீலிக்க போர்டு
முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது உள்ள அரசு தற்
போது எடுத்துள்ள நடவடிக்கைகளைப் பற்றிச் சொன்னேன்.
மாண்புமிகு உருப்பினர் அவர்கள் திருப்தி அடைவார்கள் என்று
கருதுகிறேன். இருந்தாலும் அவர்கள் ஒரு திட்டத்தைச் சொல்
கிறார்கள். அந்தத் திட்டத்தைப் பற்றிய முழு விவரங்களையும்
கொடுப்பார்களேயானால் அதை மெட்ரோ வாட்டர் எம். டி.
அவர்களிடம் கொடுத்து, பரிசீலனை செய்யச் சொல்வதில் அட்டி
யில்லை.

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவர் அவர்களே, நான்
வலியுறுத்துவதற்குக் காரணம் என்னவென்றால், காலையிலே தான்
சாக்கடை, மலம் போன்றவைகள் எல்லாம் வெளியே வருகின்றன.
நம்முடைய அமைச்சர் யூசப் அவர்கள் கூட அங்கே சென்று
பார்த்தார்கள். அங்கே ஒரு மசூதி இருக்கிறது. அந்த மசூதி
யைச் சுற்றிலும் தான் இந்த அவல நிலையிருக்கிறது.
அந்தத் திட்டத்தை அமைச்சர் அவர்கள் விரும்பினால்
தருகிறேன். துரிதமாக நடவடிக்கை எடுத்து, இந்தச்
சுகாதாரக் கேட்டை விரைவிலே நிரந்தரமாக நீக்குவதற்கு
அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று நான் அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ் இராகவானந்தம் : தலைவர் அவர்
களே, என்னிடம் இருக்கிற தகவல்படி, குழாய் மாற்று வேலைகள்-
அடிக்கடி கழிவு நீர்க்குழாய்கள் பழுதடைகின்ற காரணத்தால்
தான் இந்த நிலை ஏற்பட்டது என்று உறுதியாகச் சொன்னார்கள்
விரைவில் தொடங்கயிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்
கள் அதைவிட உறுதியாக தன்னுடைய திட்டத்தை வலியுறுத்து
கிற காரணத்தால், அந்த பர்ட்டிகுலர்ஸ், அந்த விவரங்
களைக் கொடுப்பார்களானால்; தகவல்களைக் கொடுப்பார்களா
னால், இந்த அரசு பரிசீலனை செய்ய தயாராக இருக்கிறது.



1984 மார்ச் 5]

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தங்களுடைய பதிலில் சொல்கின்ற போது, ஒன்றைச் சொன்னார்கள். மாடுகள் அதிகமாக இருந்து, அதனால், சாணம் வைக்கோல் போன்றவைகளால் அடிக்கடி அடைப்புகள் ஏற்படுத்கிறது என்று சொன்னார்கள். அது உண்மைத்தான். எனவே இது சம்பந்தமாக, இந்த மாடுகளை நகரத்தை விட்டு கொஞ்சம் தூரம் தள்ளி வைத்து, நான்கு பக்கங்களிலும், அந்த மாடுகளை வைத்து பாதுகாப்பதற்கும், பராமரிப்பதற்கும் ஒரு திட்டம் இருந்தது. அந்த திட்டத்தை அமுல்படுத்துவதற்கு அரசாங்கம் முன்வருமானால், நிச்சயமாக மாடுகள் நகரத்தைவிட்டு அகற்றப்படுகின்ற நிலை இருக்குமானால் கழிவுநீர்ப் பிரச்சினை தொடர்ந்து இருக்காது. அதோடு கூட, இந்த கழிவு நீர் சம்பந்தமாக— 1920-ல் ஆரம்பிக்கப்பட்ட திட்டம் இது. அன்றைய ஜனத் தொகைக்குத் தகுந்தபடி அமைக்கப் பட்ட திட்டம். ஆனால் இப்போது பத்து மடங்கு ஜனத் தொகை அதிகரித்திருக்கிறது. ஆகவே, உடனடியாக, முழுமையாக இந்த கழிவுநீர்ப் பிரச்சினையைத் திர்ப்பதற்கு, பழுதடைந்துள்ள அந்தக் குழாய்களை மாற்றுவதற்கு திட்டம் அரசாங்கத்திடம் உள்ளதா என நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, மூலக்கோள்விக்கும், இதற்கும் தொடர்பு இல்லை. மாடுகள் எல்லாம் சென்னை நகரத்தைவிட்டு வெளியே போக வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிறார் என்று கருதுகிறேன். அப்படி மாடுகளை நகரத்தை விட்டு வெளியிலே வைத்து, பராமரிப்பதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உறுதிமொழியும் கொடுத்து, திட்டத்தைத் தருவார்களானால், அதைப்பற்றி அரசு பரிசீலனை செய்யலாம்.

கொடைக்கானல் தாலூக்காவிலுள்ள பூலத்தூர், கும்பரையூர் கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கும் திட்டம்.

169—(*வினா எண். 19408) திரு. கா. கோபாலகிருஷ்ணன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கொடைக்கானல் தாலுக்கா பூலத்தூர், கும்பரையூர் ஆகிய ஊர்களில் குடிநீர் தட்டுப்பாடு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், பண்ணைக்காட்டிலிருந்து இவ்விரண்டு ஊர்களுக்கும் குடிநீர் விநியோகம் செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம். தற்போதைய குடிநீர் விநியோகம் இவ்விரு கிராமங்களின் முழுத் தேவைக்குப் போதுமானதாக இல்லை.

(ஆ) குடிநீர் வடிகால் வாரிய ஆய்வில் உள்ளது.

[1984 மார்ச் 5

## கன்னியாகுமரி மாவட்டத்தில் இயங்கும் குழந்தைகள் காப்பகங்கள்.

170—(*வினா எண். 17037)—திரு. ஜே. ஹேமச்சந்திரன். : மாண்புமிகு சத்துணவுத் திட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனின் கீழ் இயங்கும் குழந்தைகள் காப்பகங்கள் எவ்வளவு ?

(ஆ) இக்குழந்தைகள் காப்பகங்களைத் தேர்வு செய்வதற்கு அரசு பின்பற்றி வரும் நடைமுறைகள் என்ன ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : (அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் ஊராட்சி ஒன்றியங்களின் கீழ் இயங்கும் குழந்தைகள் நல மையங்களின் எண்ணிக்கை பின்வரு மாறு :—

| வரிசை எண்ணும் ஒன்றியத்தின் பெயரும். (1) | மையங்களின் எண்ணிக்கை. (2) |
|---|---|
| 1. ராஜாக்கமங்கலம் .. .. .. .. | 46 |
| 2. மேல்புறம் .. .. .. .. | 63 |
| 3. திருவட்டார் .. .. .. .. | 64 |
| 4. அகஸ்தீஸ்வரம் .. .. .. .. | 55 |
| 5. கிள்ளியூர் .. .. .. .. | 57 |
| 6. முஞ்சிறை .. .. .. .. | 100 |
| 7. தோவாளை .. .. .. .. | 41 |
| 8. தக்கலை .. .. .. .. | 77 |
| 9. குருந்தங்கோடு .. .. .. .. | 76 |
| ஆகமொத்தம் | 579 |

(ஆ) வறுமைக்கோட்டிற்கு கீழுள்ள குடும்பங்களிலுள்ள 2 விருந்து 4 வயதுக்குட்பட்ட குழந்தைகள் பயன்பெறும் வகையில் 70-லிருந்து 150 குழந்தைகளுக்கு ஒரு மையம் என்ற கணக்கில் 70 குழந்தைகளுக்கு மேலுள்ள அனைத்து கிராமங்களிலும் மையங்கள் திறக்க வகை செய்யப்பட்டுள்ளது. கிராமத்திலும் அனைத்து இனத்தவரும் பயன்பெறும் வண்ணம் ஒவ்வொரு மையம் அமைத்திட வகை செய்யப்பட்டுள்ளது.

திரு. டி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த குழந்தைகள் காப்பகத்திலும் ஆயாக்கள் நியமிக்கப்பட் டிருக்கிறார்கள். நண்பகல் உணவு திட்டத்திலும் ஆயாக்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள், ஆனால் குழந்தைகள் காப்பகத்



984 மார்ச் 5]

தில் பணிபுரியும் ஆயாக்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளத் தில் மட்டும் வித்தியாசம் இருக்கிறது. எனவே, குழந்தைகள் காப்பகத்தில் இருக்கிற ஆயாக்களுக்கு சம்பளத்தை உயர்த்து வதற்கு, அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத் திலே இருக்கும் குழந்தைகள் நல மையங்கள் எத்தனை என்பது பற்றியும் அந்த மையங்களை எப்படி தேர்வு செய்கிறோம் என்பது பற்றியும் கேட்கப்பட்டிருக்கிற கேள்வியாகும். ஆகவே, மாண்பு மிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போட்டால் விவரங்களை விளக்கமாகத் தரமுடியும்.

## வேதாரண்யம் ஒன்றியம் வாய்மேடு கால்நடை மருந்தகத்திற்கு கட்டிடம்

171—(*வினா எண். 17686)—திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் வேதாரண்யம் ஒன்றியம் வா மேடு கால்நடை மருந்தகம் ஒன்றியத்தின் கடைக்கோடியில் கட் டப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதை நிறுத்தி எல்லோருக்கும் பயன் படும் வகையில் கிராமங்களின் மத்தியில் அமைக்கப்படுமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) மற்றும் (ஆ) : வேதாரண்யம் ஒன்றியம் வாய்மேடு என்ற இடத்தி லுள்ள கால்நடை மருந்தகத்திற்கு நிரந்தர கட்டிடம் கட்டு வதற்காக சர்வே எண். 369/3 என்ற இடம் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது. அந்த இடம் கிராமத்தின் மையத்தில் உள்ளது. அத்தோடு அந்த இடம் பக்கத்து கிராம மக்களுக்கும் உபயோக மாகவும், தண்ணீர் வசதி கொண்டதாகவும் காணப்படுகிறது.

திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பக்கத்து கிராம மக்களுக்கும் பயன்படும் வகையில் இதனைக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுத்திருப்பதற் காக நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித் துக் கொள்கிறேன். இந்தக் கட்டிடத்தை விரைவில் கட்ட வேண்டும். ஆகவே இது சம்பந்தமாக அங்கே வழக்கு மன்றத் தில் இருக்கக்கூடிய வழக்கை துரிதமாக நடத்தி, விரைவில் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[1984 மார்ச் 5

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கு மன்றத்திலிருந்து தீர்ப்பு வந்தபிறகு அந்தக் கட்டிடம் கட்டுவதற்கான நடவடிக்கை களை அரசு மேற்கொள்ளும்.

பஞ்சாயத்துக்களில் செயல்பட்டுவரும் மகளிர் மன்றங்கள்.

172—(*வினா எண். 18150)—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) பஞ்சாயத்துக்களில் மகளிர் மன்றம் செயல்படுகின் றனவா?

(ஆ) அவைகளின் பணிகள் யாவை?

(இ) தமிழகத்தில் எத்தனை மகளிர் மன்றங்கள் உள்ளன?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) ஆம். பஞ்சாயத்துக்களில் மகளிர் மன்றங்கள் செயல்படுகின்றன.

(ஆ) 1. முதியோர் கல்வி கற்பித்தல்

2. தையல் வேலை கற்பித்தல்

3. இதர கைத்தொழில், அதாவது ஒயர் கூடை, பை, பர்ஸ் மற்றும் லேஸ் பின்னுதல் ஆகியவை கற்றுக்கொடுத்தல்.

4. குழந்தைக் கண்காட்சிகள் நடத்துதல்

5. பயிற்சி முகாம்கள் அமைத்து சத்துணவு பற்றி கிராம பெண்களுக்கு எடுத்துரைத்தல்.

6. மகளிர் மன்ற அங்கத்தினர்களை பொது அறிவு பெறும் பொருட்டு கல்விசுற்றுலா அழைத்துச் செல்லுதல்.

(இ) தமிழகத்தில் 11,183 மகளிர் மன்றங்கள் உள்ளன.

திரு. இ. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மகளிர் மன்றங்களுக்கு தையல் மெஷின்கள் கொடுக்கப்பட்டு, செயல்படுவ தாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால், பல்வேறு இடங்களில், மகளிர் மன்றங்கள் என்ற பெயராலே செயல்படும் இடத்தில், அந்த தையல் மெஷின்களை வாங்கி மூடி வைத்திருக்கக் கூடிய சூழ்நிலைதான் ஏற்பட்டிருக் கிறது. ஆகவே மகளிர் மன்றங்களை பரிசீலனை செய்து அவைகளை முறையாக செயல் பாட்டிற்குக் கொண்டு வர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வாரா என்று அறியவிரும்புகிறேன்.



1984 மார்ச் 5]

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு மகளிர் மன்றங் களில் தையல் இயந்திரங்களை வாங்கி மூடி வைத்திருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். எந்த இடம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிப்பார் களேயானால் அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு மேற் கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன் அனு மதியோடு வினாக்கள் - விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

(முற்பகல் 10–00)

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதிலில் ஒவ்வொரு மகளிர் மன்றத்திற்கும் ஒரு தையல் மிஷின் கொடுக்கப்பட்டதாகச் சொன்னார்கள். அப்பட்டிப்பட்ட தையல் பயிற்சி எந்த யூனி யனிலும் இன்றைக்கு நடைபெறவில்லை. தையல் டீச்சர்ஸ் எந்த வேலையும் செய்வதாகத் தெரியவில்லை. அப்படி வேலை செய்யவில்லையென்றால் அதுகுறித்து அமைச்சர் அவர்கள் என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறார்கள் என்று அறிய விரும்பு கிறேன். அதோடு சுற்றுலா செல்லக்கூடிய நிலைமைகளும் இல்லை. மகளிர் மன்றங்களுக்கு கொடுக்கக்கூடிய 5 ரூபாயை வைத்து அவர்கள் என்ன பலகாரம் செய்து மற்றவர்களுக்குக் காட்டமுடியும் என்று தெரியவில்லை. ஆகவே அந்தத் தொகை யை உயர்த்தவும், அவர்கள் சுற்றுலா சென்றுவரக்கூடிய முறை யிலேயும் நடவடிக்கைகளை எடுக்க அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவர் அவர் களே, எனக்குக் கொடுத்திருக்கிற விவரத்தின்படி 6 மகளிர் மன் றங்களுக்கு ஒரு தையல் ஆசிரியர் வீதம் ஊராட்சி ஒன்றியத் திற்கு 5 தையல் டீச்சர்கள் நியமிக்கப்பட்டு, ஒயர்கூடை, பை, பர்ஸ், மற்றும் லேஸ் பின்னுதல் ஆகியவை கற்றுக்கொடுக்கப் படுகின்றன, சுற்றுலா சமயங்களுக்கு மகளிர் மன்ற உறுப்பினர் களை அழைத்துச் சென்று அவர்களுக்கு பொது அறிவு, கல்வி அறிவு போன்றவற்றை அளிப்பதற்கு ஏற்ற வழிவகைகளை மகளிர் மன்றங்கள் செய்து கொடுக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அப்படிச் செய்யவில்லை என்று குறிப் பிட்டிருக்கிறார்கள். நான் அதை சமூகநலத்துறை இயக்குநர் அவர்களிடம் சொல்லி அப்படி செய்யவில்லையென்றால் அதைச் செய்ய வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு செய் கிறேன்.

### செவிடு மற்றும் ஊமை மாணவர்களுக்கு தொழிற் பயிற்சி அளிக்கும் திட்டம்.

173—(*வினா எண் 18211) திரு. செ. செம்மலை : மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) செவிடர் மற்றும் ஊமை மாணவர்களுக்குத் தொழிற் பயிற்சி அளிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) காது கேளாதோருக்கென சென்னையிலே உள்ள கிண்டி மற்றும் மதுரையிலுள்ள அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் மின் கம்பியாளர் போன்ற தொழிற் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

(ஆ) 1981 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் முதல் இந்தப் பயிற்சி நடத்தப்பட்டு வருகிறது. பயிற்சிக் காலம் 2 ஆண்டுகள். 15 முதல் 30 வயதிற்குட்பட்டுள்ள பள்ளி இறுதி ஆண்டு படிப்பு முடித்தவர்கள் சேர்க்கப்படுகின்றனர்.

### கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டம்.

174—(*வினா எண் 21303) திரு. டி. மணி :—மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

கன்னியாகுமரி மாவட்டத்தில் தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டம் அமுல்படுத்த அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : கன்னியாகுமரி மாவட்டத்தில், தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டம் அமுல்படுத்த, தற்போது கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

நிதி நிலைக்கேற்ப, இம் மாவட்டத்தில் இந்தத் திட்டத்தை அமுல்படுத்துவது பற்றி, நாளாவட்டத்தில் ஆய்வு செய்யப்படும்.



திரு. டி. மணி : தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலே தீவிர கால்நடைத் திட்டம் அமல்படுத்தப்பட வேண்டுமென்று சில வருடங்களாக நாங்கள் கோரிக்கையை வைத்து வருகிறோம். கால்நடைகளை வளர்க்கும் ஆர்வம் அந்தப் பகுதியிலே குறைந்துக் கொண்டே வருகின்ற நிலைமை உருவாகிவருகிறது. தரமான மாட்டுத் தீவனங்கள் வழங்கப்படாத காரணத்தினால் கருத்தரிப்பு குறைந்து கொண்டு வருகிறது. இந்தத் திட்டத்தை அமல்படுத்துவதற்கு கன்னியாகுமரி மாவட்டத்திலே இயற்கைச் சூழ்நிலைகள் சரியாக அமைந்திருக்கின்ற காரணத்தினால் இந்தத் திட்டத்தை அமல்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவர் அவர்களே, நான் பதிலிலேயே குறிப்பிட்டிருக்கிறேன். நிதி நிலைமைக்கு ஏற்ப கன்னியாகுமரி மாவட்டத்திலே அந்தத் திட்டத்தை அமல்படுத்துவதற்கு அரசு பரிசீலனை செய்யும்.

திரு. டி. மணி : தலைவர் அவர்களே, நான் என்னுடைய கோரிக்கையிலே கன்னியாகுமரி மாவட்டத்திலே கால்நடை வளர்க்கும் ஆர்வம் குறைந்து கொண்டே வருகிறது என்று குறிப்பிட்டிருக்கிறேன். குறிப்பாக குளித்தலையிலே கால்நடை பராமரிப்பு நிலையத்திலே விந்தூட்டல் ஏற்படுத்துகிற மாடுகள் பற்றாக்குறையாகவும், நோய்வாய்ப்பட்டதன் காரணமாகவும் விந்தூட்டலுக்குக் கேந்திரமான அந்தப் பகுதியிலே தரம் குறைந்து கொண்டு வருகிற நிலை இருக்கிறது. அதைக் கருத்தில் கொண்டு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து அந்த மாவட்டத்திலே தீவிர கால்நடைத் திட்டத்தை அமலாக்க நடவடிக்கை மேற்கொள்வார்களா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: எல்லாவற்றையும் பரிசீலித்து நிதிநிலைக்கு ஏற்றவாறு பரிசீலனை செய்யப்படும்.

திரு. கு. முத்துக்கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, தீவிர கால்நடைத் திட்டம் நிதிநிலைமையைப் பொறுத்து ஆரம்பிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தற்போது கன்னியாகுமரி மாவட்டத்திலே கால்நடை மருத்துவ மனையின் பணிகளைத் தீவிரமாகச் செயல் படுத்தக்கூடிய முறையிலே— அந்த ஆஸ்பத்திரியும், சப் சென்டரும் இரண்டும் ஒரே இடத்திலே சேர்ந்து இயங்கிக் கொண்டிருக்கிறது.—அவைகளை தனித்தனியாக மக்களுக்குப் பயன்படுகிற வகையிலே செயல்படுகின்ற முறையிலே இயங்கச் செய்வதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலே கேந்திர கிராமத் திட்டத்தை அமல்படுத்திக் கொண்டு வருகிறோம். மருந்தகமும், கிளை நிலையமும் ஒன்றாக இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர்

[1984 மார்ச் 5

அவர்கள் சொன்னார்கள். ஆனால் அவை தனித் தனியாகத் தான் செயல்படுகின்றன. எந்த இடத்தில் அப்படிச் செயல்படு கிறது என்பதை உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டால் அதைத் தனித்தனியாக செயல்படச் செய்வதற்கு வேண்டிய நடவடிக்கை களை அரசு மேற் கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடி வுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

### 3. உரிமைப் பிரச்சினை

'தினமலர்' மீது—தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவை உரிமை மீறல் குறித்த பிரச்சினை :—

21-2-1984 ஆம் நாளிட்ட சென்னைப் பதிப்பு "தினமலர்" நாளேட்டில் 4 ஆவது பக்கத்தில் ஒரு கருத்துப் படம் பிரசுரிக்கப் பட்டு இருந்தது. உறுப்பினர்கள் மனம் புண் படக்கூடிய வகை யில் அக் கருத்துப்படம் பிரசுரிக்கப்பட்டிருந்தது குறித்த பிரச்சினையை 23-2-1984 ஆம் நாளன்று திரு. ஆர். கிருஷ்ணன் அவர்கள் அவையில் எழுப்பினார்கள். உறுப்பினர்கள் மனம் புண்படக் காரணமாக அந்த கார்ட்டூன் அமைந்து விட்டதற்காக ஆசிரியர் வருத்தத்தைத் தெரிவித்து, அந்த நாளிதழில் 23-2-1984 ஆம் நாள் பதிப்பின் 3 ஆம் பக்கத்தில் வெளியிடப்பட்டு இருந்தது. தவறுக்கான வருத்தத்தை முதல் பக்கத்திலே போட வேண்டும் என்று உறுப்பினர்கள் சிலர் பேரவையில் கருத்துக் களைத் தெரிவித்தனர். வருத்தத்தை முதல் பக்கத்திலேயே, போட வேண்டும் என்றும், அவர்கள் எப்படி போடுகிறார்கள் என்பதை பார்த்துவிட்டு என்னுடைய தீர்ப்பை வழங்குவதாக வும் தெரிவித்திருந்தேன்.

அந்நாளேட்டின் ஆசிரியர் தனிப்பட வருத்தம் தெரிவித்து ஒரு கடிதத்தினையும் அனுப்பியுள்ளார். அக் கடிதத்தில் பின் வருமாறு எழுதியுள்ளார். Since some of the Members of Legislature have expressed their disPleasure over the Publi- cation of two cartoons in the issue of our daily, dated 20th and 21st of this month, I would like to clarify that no motive was intended behind that Publication. Kindly accept my regret.



1984 மார்ச் 5] [பேரவைத் தலைவர்]

மேலும் 24-2-1984 ஆம் தேதிய பதிப்பின் முதல் பக்கத்தில் 'வருந்துகிறோம்' என்ற தலைப்பிட்டு வருத்தத்தினைத் தெரி வித்து, இழிவு படுத்தும் நோக்கம் இல்லை என்றும் பத்திரிகை வெளியிட்டுள்ளது. பேரவையில் மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்கு இணக்கமாக இந்தப் பத்திரிகையின் ஆசிரியர் வருத்தத்தை முதல் பக்கத்தில் வெளியிட்டுள்ளமைக்கு என் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே இப் பிரச்சினையில் மேல் நடவடிக்கை தேவையில்லை என்று கருதுகிறேன்.

மேலும் அவையின் கண்ணியத்தைக் குறைக்கும் வகையிலோ அல்லது உறுப்பினர்களை இழிவு படுத்தியோ கருத்துப் படங்கள் வெளியிடுவதைத் தவிர்க்க வேண்டும் என்று பத்திரிகைகளைக் கேட்டுக் கொண்டு இப் பிரச்சினையை இத்துடன் விட்டு விடலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

### 4. அறிவிப்பு.

ஆளுநரிடமிருந்து வந்துள்ள செய்தி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மேதகு ஆளுநர் அவர் களிடமிருந்து 25-2-1984 ஆம் தேதியிட்ட கீழ்க்கண்ட செய்தி வரப் பெற்றது என்பதை பேரவைக்குத் தெரிவித்துக் கொள் கிறேன்.

"I have received with satisfaction your Resolution thanking me for my Address on the 13th February 1984 to the Members of the Legislature".

### 5. தகவல் கோரல்.

அ. மழையினால் தென் மாவட்டங்கள் பாதிக்கப்பெற்றுள்ளது,

திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைக்கும், நேற்றைய முதல் நாளும் பொழிந்த பெரு மழையின் காரணமாக விளாத்திக்குளம், தூத்துக்குடி, ஆத்தூர், புன்னக்காயல், நெல்லை, பாளையங்கோட்டை ஆகிய பகுதிகள் பாதிக்கப்பட்டு அந்த வெள்ளத்தினால், உயிரும், உடமைகளும் பாதிக்கப்பட்டதாக நாம் பத்திரிகையின் வாயிலாக அறிகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 54 ஆவது விதி இருக்கிறது. அந்த விதியின் கீழ் அறிப்புக் கொடுக்கலாம்.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, நேற்றைக்கும், நேற்றைய முதல் நாளும் பொழிந்த
பெரு மழையின் காரணமாக தாமிரபரணி ஆற்றில் வெள்ளப்
பெருக்கு ஏற்பட்டு குடிசைகள் அடித்துச் செல்லப்பட்டு பல
பேர் உயிர் இழந்து இருக்கிறார்கள். இதைப்பற்றி ஒத்திவைப்புத்
தீர்மானம் கொடுத்து இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒத்திவைப்புத் தீர்
மானம் வந்து இருக்கிறது. அது இலாக்காவுக்கு போய் இருக்
கிறது. என்ன நடவடிக்கை என்று பிறகு தெரியும். இது பாயிண்ட்
ஆப் ஆர்டரில் வராது.

திரு. எஸ். எஸ். வி. சித்தன் : நாளைக்கு எடுத்துக் கொள்ள
லாமே, சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இலாக்காவிலிருந்து பதில்
வரவேண்டும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : சீக்கிரம் எடுத்துக் கொள்ள
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-10)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் தலைவரவர்களே, நேற்றும், நேற்று முன் நாளும்,
பெருமழை பெய்த காரணத்தினால் திருநெல்வேலி மாவட்டத்தில்
தாமிரபரணியில் வெள்ளம் ஏற்பட்டு, குடிசைகள் பாதிக்கப்பட்டு,
பலர் வீடிழக்கும் நிலைமை ஏற்பட்ட உடனேயே மாவட்ட
ஆட்சித் தலைவரோடும் மற்ற அதிகாரிகளோடும் தொடர்பு
கொண்டு தக்க நிவாரணப் பணிகளை எடுத்துக் கொள்ள வேண்டு
மென்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. எந்த அளவிற்குச் சேதம்
ஏற்பட்டிருக்கிறது. எந்த அளவிற்கு நிவாரணம் அளிக்கப்பட்
டிருக்கிறது என்பது பற்றிய விவரங்கள் உடனடியாக இன்னும்
தெரிவதற்கில்லை ஆனால் அதுபற்றிய நடவடிக்கைகள் எடுக்
கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர்கள் கவன ஈர்ப்புத்
தீர்மானத்தின் மூலமோ அல்லது ஒத்தி வைப்புத் தீர்மானத்தின்
மூலமோ கேட்டிருக்கின்ற மற்ற விவரங்களைப் பற்றியெல்லாம்
அரசுக்குத் தகவல் வந்த பிறகுதான் அரசின் சார்பாகச் சொல்லு
கின்ற நேரத்தில் நிலைமைகளை விளக்கிக் காட்ட முடியும்.
அதற்கு அவகாசம் வேண்டும். ஆனால் அறிக்கை வருகின்ற
வரையில் வேலைகள் தடைப்படவில்லை. உடனடியாக எடுக்கப்
பட வேண்டிய வேலைகளை, மாவட்ட ஆட்சித் தலைவரும்,
உரிய அதிகாரிகளும் மற்றவர்களின் துணையைக் கொண்டு எடுக்க
வேண்டுமென்று அரசு ஆணையிட்டிருக்கிறது. அந்த நடவடிக்கை
களெல்லாம் துரிதமாகத் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்
டிருக்கின்றன.



(ஆ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை.

திரு. து. புருஷோத்தமன் : பேரவைத் தலைவரவர்களே,
சைதாப்பேட்டையில் மாணிக்கம் என்ற விசாரணைக் கைதி....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுதுதான் அது
பற்றி கொடுத்திருக்கிறீர்கள் ; அதை இலாககாவிற்கு அனுப்பி
விட்டேன். அங்கிருந்து பதில் வந்தால் நாளைக்கேகூட எடுத்துக்
கொள்ளலாம். (குறுக்கீடு). உடனடியாக விவாதிக்க முடியாது.
பதில் வந்தபிறகுதான் எடுத்துக்கொள்ள முடியும்.

(இ) உறுப்பினர்கள் விடுதி வராண்டாவில் வெளியார் படுப்பது.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத்
தலைவரவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கும் விடுதியில்
இரவு நேரங்களில் வராண்டாவில் அதிகமாகப் படுக்கிறார்கள்.
வராண்டாவிலேயே சிறுநீர் கழிக்கிறார்கள் ; மலம் கழிக்கிறார்
கள். அதுபற்றிப் பலமுறை தங்கள் கவனத்திற்குக் கொண்டு
வந்திருக்கிறேன். இராத்திரி நேரத்தில் அறைக்குள் வந்து தங்கு
வதைப்பற்றிக் கவலைப்படவில்லை. ஆனால், வராண்டாவில்,
யாரும் படுக்கக் கூடாது என்று உத்தரவு போடும்படியாகக்
கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினரவர்கள் சொல்
லுகின்ற கருத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். அந்தக் குற்றச்
சாட்டை மறுக்கவில்லை. ஆனால், உறுப்பினர்களின் ஒத்
துழைப்பு இல்லை என்றால் நான் என்ன செய்ய முடியும் ? மற்ற
வர்களைக் கண்டிக்கலாம். ஆனால், உங்களையெல்லாம் கண்
டித்துவிட்டு நான் எங்கே போவது ? இப்பொழுதுள்ள சூழ்
நிலையில் உறுப்பினர்களின் ஒத்துழைப்பு இருந்தாலொழிய ஒன்
றும் செய்ய முடியாது. ஆகவேதான், நீங்கள்தான் உங்களுக்
குள்ளே கலந்து பேசி நல்ல முடிவுக்கு வர வேண்டுமே தவிர,
வராண்டாவில் படுக்கிறார்கள் என்று சொன்னால் நான் என்ன
செய்வது ? உறுப்பினர்களுக்கு வேண்டியவர்கள்தான் அப்படிப்
படுக்கிறார்கள். எந்த உறுப்பினருக்கு அவர்கள் வேண்டியவர்கள்
என்று நான் பார்க்க முடியாது. ஆகவே, இதில் உறுப்பினர்
களின் ஒத்துழைப்புதான் கோரப்படுகிறது.

**(ஈ) உதகையில் படப்பிடிப்பின்போது கன்னட நடிகருக்கேற்பட்ட இடையூறு.**

**திரு. செ. சிவசாமி :** பேரவைத் தலைவரவர்களே, நேற்றையதினம் ஊட்டியிலே படம் எடுக்கின்ற நேரத்தில் மிகப்பெரிய அசம்பாவிதம். . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதுபற்றியெல்லாம் எந்த முறையில் கொண்டுவர வேண்டுமோ அந்த முறையில் கொண்டு வர வேண்டும். ராஜ்குமார் பிரச்சினையை எடுத்தால் பெங்களூர் பிரச்சினை என்று வந்துவிடும். ஆகவே, இதையெல்லாம் சட்டக் சபைக்குள் கொண்டு வரும்பொழுது மிகவும் ஜாக்கிரதையாகக் கொண்டுவர வேண்டும்.

**(உ) திருச்சியில் நடைபெறும் சமூகவிரோதச் செயல்கள்.**

**திரு. இரா. கருப்பையா :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, திருச்சி நகரத்திலே சமூக விரோதிகளின் கையோங்கி அதிகாரத்தையே அவர்கள் எடுத்துக்கொண்டு கலவரங்களை உண்டாக்கி, நகரத்தின் அமைதியைக் கெடுத்து. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதிகாரத்தை யார் கையிலிருந்து யார் கைப்பற்றினார்கள், எப்பொழுது கைப்பற்றினார்கள் என்றெல்லாமா நான் கேட்டுக்கொண்டிருக்க முடியும் ? இதை அனுமதிப்பதற்கில்லை.

**6. அரசினர் சட்ட முன்வடிவுகள்.**

**(அ)** பழைய இரும்பு வணிகர்கள், பழைய இரும்புத் துணுக்கு வியாபாரிகள், மோட்டார் வண்டி வகைகள் பழுதுபார்க்கும் பட்டறை, டிங்கர் கடை உரிமையாளர்கள் (முறைப்படுத்தல், கட்டுப்பாடு, உரிமம் வழங்கல்) சட்ட முன்வடிவு, 1984.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் —

"தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு பழைய இரும்பு வணிகர்கள், பழைய இரும்புத் துணுக்கு வியாபாரிகள், மோட்டார் வண்டி வகைகள் பழுதுபார்க்கும் பட்டறை, டிங்கர் கடை உரிமையாளர்கள் (முறைப்படுத்தல், கட்டுப்பாடு, உரிமம் வழங்கல்) சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."





தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

**(ஆ) திரைப்படங்கள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1984—தொடர்ச்சி.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்த பில்லைத் பொறுத்த வரையில் ஒன்றை நான் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த பில்லிலே பேசுகின்றபோது சினிமாவைப் பற்றி எல்லா விஷயங்களையும் இங்கே பேசுகின்ற நிலைமை இருக்கின்றது. அவ்வாறு பேசுவது சரியாக இருக்காது. இச்சட்ட முன்வடிவிலே குறிப்பிடப்பட்ட பொருளுக்குச்சம்பந்தம் இல்லாத விஷயங்களை எல்லாம் பேசிக்கொண்டு போனால், அவையின் நேரம் வீணாகும். எனவே, பில் சம்பந்தப்பட்டவரையில் மட்டும் மண்புமிகு உறுப்பினர்கள் கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

***திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பில்லின்மீது மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே கருத்துகளைச் சொல்வதற்கு நான் முயற்சிக்கிறேன். இந்த பில்லினுடைய காரண நோக்க விளக்கத்திலே, ஓராண்டிலே மூன்றுமாத காலத்திற்கு தமிழ்ப் படம் காட்ட வேண்டும் என்று ஒரு உத்தரவைப் போட்டதாகவும் அது செல்லத்தக்கதல்ல என்று ஹைகோர்ட்டிற்குச்சென்று வாதாடியதன் காரணத்தால், அங்கே சட்டத்திலே இதற்குரிய இடம் இல்லாதபோது இவை எல்லாம் எப்படி வர முடியும் என்று கூறிவிட்டதன் காரணத்தால்தான், சட்டப்படி இந்த உத்தரவு செல்லாது என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பு கூறிய காரணத்தால்தான் அப்படிப்பட்ட உத்தரவு செல்லத்தக்க வகையில் ஒரு சட்டமாகக் கொண்டுவரவேண்டும் என்ற முறையில்தான் இந்த பில் இங்கே அறிமுகம் செய்யப்பட்டதாகக் கூறியிருக்கிறார்கள். அப்படிப் பட்ட கட்டுக்கோப்புகள் ஓரளவுக்கு வருவதைப் பற்றி மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆதரிக்கின்ற அதே நேரத்தில் ஏற்கெனவே போடப்பட்ட உத்தரவானது 3 மாதங்கள்தான் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, இப்போது கொண்டுவரப்பட்ட சட்டத்திலேயும், 3 மாதங்கள் தமிழ் படங்களைக் காட்டவேண்டும் என்று அரசு போட்ட உத்தரவு செல்லாது என்று ஹைக்கோர்ட் சொல்லிவிட்டதன் காரணத்தால்,

அவ்வாறு மூன்று மாதங்கள் என்ற முறையிலே கொண்டுவந்திருந்
தால் அது பொருத்தமாக இருந்திருக்கும். ஆனால், அதற்குப்
பதிலாக தமிழ்ப்படங்களை இப்போது 9 மாதங்கள் காட்ட வேண்
டும் என்று இந்த பில்லிலே கொண்டுவரப்பட்டிருக்கிறது. எனவே
வர்த்தக ரீதியில் பார்த்தால்கூட இது சரியில்லை.

கிராமப்புறங்களைப் பொறுத்தவரையில் மற்ற படங்கள்
ஓடுவதில்லை. வருடம் பூராவும் தமிழ்ப்படங்கள்தான்
ின்றன. ஆகவே, தமிழுக்கு முதலிடம் கொடுக்க வேண்டும் ஒரு
என்பதில் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு கருத்து மாறுபாடு
இல்லை. தமிழைப் பாதுகாக்க வேண்டிய கடமை இருக்கின்றது.
ஆனால், மற்ற மொழிகளையும் பாதுகாப்பதற்கு நாம் கடமைப்
பட்டிருக்கிறோம். மற்ற மொழிகளைப் பாதுகாக்காத நிலைமை
ஏற்பட்டால் நம்முடைய தமிழ்ப் படங்கள் மற்ற இடங்களுக்குப்
போகின்றபோது வர்த்தக ரீதியில் பார்த்தால்கூட பல சிக்கல்
கள் ஏற்படும் என்பதற்கு ஒரு உதாரணத்தைத் தெரிவித்துக்கொள்
கிறேன்.

(முற்பகல் 10-20)

சமீபத்திலேகூட தமிழுக்கு முதல் முக்கியத்துவம் கொடுக்க
வேண்டுமென்று நாம் உத்தரவு போட, கன்னடத்தைப் பொறுத்த
மட்டில், கன்னடத்திற்கு ஏன் முதல் முக்கியத்துவம் கொடுக்கக்
கூடாது என்று கன்னடர்கள் கிளர்ச்சி செய்ய, ஆக பல சிக்கல்கள்
ஏற்பட்டு, ராஜ்குமார் ரசிகர் மன்றம் ஒரு கிளர்ச்சியை ஏற்
படுத்தி, அதனுடைய விளைவு இப்பொழுது சமீபத்திலே ஊட்
டிக்கு ஒரு படப்பிடிப்பிற்கு வந்தபொழுது, தமிழர்கள் கிளர்
அவர் படப்பிடிப்பே நடத்த முடியாத அளவு கிளர்ச்சி பண்ணு
கிற அளவுக்கு ஒரு மோதல் ஏற்படுகிற அளவுக்குப் போயிருக்கிறது
என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.
அது சரி என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வாதிடவில்லை.
தமிழுக்கு முதலிடம் கொடுக்க வேண்டும், முக்கியத்துவம்
கொடுக்கவேண்டும். ஒத்துக் கொள்கிறேன். அதே நேரத்தில்
மற்ற மொழிகளையும் பாதுகாக்க வேண்டிய கடமையும் பொறுப்
பும் நமக்கு இருக்கிறது என்ற நோக்கோடு பார்க்கின்றபொழுது
முன்பு போடப்பட்ட அந்த 120 எண் அரசு உத்தரவையே,
சட்டமாகக் கொண்டுவர வேண்டும் என்றுதான் மார்க்சிஸ்ட்
கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது. உதாரணமாக, பெரு நகரங்
களிலே இந்த மாதிரியாக வேறு மொழிப் படங்கள் நடக்கின்றன.
சென்னை, காஸினோ போன்ற தியேட்டரிலே வருஷம் பூராவும்
ஆங்கிலப் படம்தான் நடக்கிறது. அந்த மாதிரி இடங்களுக்கு
வேண்டுமானால் இது பொருந்தலாமே தவிர, மற்ற கிராமங்களில்
வருடம் பூராவும் தமிழ்ப்படம் நடக்கிறது. இன்னும் சொல்லப்
போனால் அடுத்த மாநிலத்திலிருந்து குறிப்பாக கேரளாவிலிருந்து
பல மலையாளப்படங்கள் முற்போக்கான கருத்துக்களோடு வரு
கின்றன. அதிலும் கூட அரசுக்குக் கொஞ்சம் ஐயப்பாடு உண்டு.





உதாரணமாக ஈநாடு என்ற மலையாளப் படம் வந்தது. அந்தப்
படத்திலே ஊழல் செய்கின்ற அமைச்சர்களையும், எம்.எல்.ஏக்
களையும் பற்றி வெளிவந்தது. அந்த மாதிரிப் படங்கள் இங்கு
வருவது சரியல்ல என்று இந்த உத்தரவு போடப்பட்டதோ என்று
கருதுவதற்கான அடிப்படையாக சந்தேகம் எழுகிறது. ஆகவே,
ஒரு மொழிக்கும், இன்னொரு மொழிக்கும் மோதல் ஏற்படுகின்ற
நிலையோ, அல்லது ஒரு மாநிலத்திற்கும் இன்னொரு மாநிலத்திற்
கும் ஒரு மோதல் ஏற்படுகின்றநிலையோ இல்லாமலிருக்க,
9 மாதம் என்பதற்குப் பதிலாக, 3 மாதம் என்று ஏற்கெனவே
போட்ட உத்தரவைச் சட்டமாகக் கொண்டு வர வேண்டுமென்று
மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே வலியுறுத்தி நான்
என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, தமிழ்நாடு
1984 ஆம் ஆண்டு திரைப்படங்கள் முறைப்படுத்துதல் திருத்த
அவசரச் சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. இது ஆதி சட்டம்
9/1955 திரைப்படங்கள் முறைப்படுத்துதல் என்பதற்குத் திருத்த
மாகும். காரண நோக்கத்தில் தமிழ் மாநிலத்தில் தமிழ் மொழி
பேசும் மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு இம் மாநிலத்திலுள்ள
திரையரங்குகள் 9 மாதங்களேனும் தமிழ்த் திரைப்படங்களைத்
திரையிட வேண்டியது அவசியம் என்று கருதப்படுகிறது. மேற்
படி நோக்கம் நிறைவேற இச்சட்டம் கொண்டுவரப்படுவதாகச்
சொல்லப்பட்டுள்ளது

ஆனால், விரை அறிக்கையில் ஏற்கெனவே ஒரு ஆண்டில்
12 வாரங்களுக்குக் குறையாத அளவு திரைஅரங்குகளில் திரை
யிடப்பட வேண்டும் என 11—1—1979 ஆம் தேதி 120-ஆம்
எண். அரசாணையில் குறிப்பிடப்பட்டு, பிறகு, தியேட்டர்காரர்
கள் கோர்ட்டுக்குப்போய் மேற்படி ஆணை செல்லாது என்று
தீர்ப்பு கூறியதால் இந்தப் புதிய சட்டம் தமிழ் மக்கள் சார்பில்
கொண்டுவரப்படுவதாகச் சொல்லப்படுகிறது.

நேரத்திற்கு ஒரு சட்டம் போடுவதால் உரிமதாரர்களுக்குப்
பல சிக்கல்கள் ஏற்படும் என்பதையும் மனதில் கொள்ள வேண்
டும். திரையரங்குகளைப் பொறுத்தவரையில் 'காம்பவுண்
டிங்' முறை வந்தபின் ஓரளவு நிம்மதியாக தியேட்டர்களை
நடத்திக் கொண்டிருந்தார்கள். கடந்த ஆண்டு திரையரங்கு
களுக்கு வரி விதிப்பின் மூலம் 37 கோடி ரூபாய் வரவு வந்ததாக
வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் சபையில் தெரிவித்திருக்
கிறார்கள் என்று நினைக்கிறேன். நீதிமன்றத்திற்கும் சட்டப்
பேரவைக்கும் ஒருசில நேரங்களில் நடைமுறையில் முரண்பாடுகள்
வருவது இயல்பு. அதை மனதில் கொண்டு 12 வாரம் தமிழ்ப்
படங்கள் காட்ட வேண்டும் என்பதைத் திடீரென்று 36 வாரங்கள்
நடத்த வேண்டும் என்று அவசரச் சட்டம் போட்டுவிட்டு, சட்ட
மாக்குவது பல சிக்கல்களை உருவாக்கும் என்று இந்த நேரத்தில்
கூறிக்கொள்கிறேன்.

[திரு. செ. சிவசாமி] [1984 மார்ச் 5

நான் கூட ஏதோ பெரிய சீர்திருத்தங்கள் கொண்டு வந்து புளு
படங்கள், நிர்வாணப்படங்கள், பார்க்கக்கூடாத படங்கள்,
தமிழ் மக்களின் பண்பைக் கெடுக்கும் படங்கள் இவைகளைத்
தடுத்து நிறுத்தும் சட்டம் தான் வருகிறதோ என்று நினைத்தேன்.
ஆனால் உள்ளே பார்த்தால் ஒன்றுமில்லை. தமிழின் பெயரால்
கொண்டு வரப்படுகிறது. மீண்டும் பரிசீலனை செய்து உரிம
தாரர்களின் கோரிக்கைகளையும் உணர்வுகளையும் கணக்கில்
எடுத்துக்கொண்டு இந்தச் சட்டங்கள் கொண்டு வரவேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கனவே தமிழ் மொழி படித்தவனுக்குத் தமிழ் நாட்டில்
வேலை இல்லை என்ற நிலைமை இருக்கிறது. மொழிக்காக
இந்தச் சட்டம் கொண்டுவந்திருக்கிறோம் என்பதைப் புரிந்து
கொள்ள முடியவில்லை. தேசிய ஒருமைப்பாட்டைப் பற்றி
நாம் நீண்ட பேச்சுக்களைப் பேசிக் கொண்டிருக்கிறோம். தற்
போது டெல்லியிலும், பம்பாயிலும், கல்கத்தாவிலும்
பல இலட்சம் தமிழர்கள் வாழ்கிறார்கள். இந்தச் சட்டத்தின்
மூலம் அவர்களைப் பாதிக்கக்கூடிய நிலை ஏற்படும் என்பதையும்
எடுத்துத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அறையிலே ஆட வேண்டியது அம்பலத்திலே காட்டப்படு
கிறது. மறைவினிலே காட்ட வேண்டியது வெள்ளித் திரை
யிலே கொண்டு வரப்பட்டுள்ளது. அப்படிப்பட்ட ஒரு நிலை
தமிழ்ப்படங்களிலே ஏற்படுகின்றது. குடும்பத்தோடு சினிமா
பார்க்கப் போவதென்றால் முடிவதில்லை. படம் ஆபாசமாக
இருக்கிறதென்று பாதியிலே எழுந்துவரவேண்டியிருக்கிறது. இவை
களை எல்லாம் முறைப்படுத்துவீர்கள் என்று எதிர்பார்த்தேன்.
ஆனால் உங்கள் நோக்கமெல்லாம் வேறாக உள்ளது என்று
சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். முறைப்படுத்துதல் என்று
சொல்லிக் கொண்டு பிற மொழிப் படங்களை மறைமுகமாக
தடை செய்வதைப் போல் உள்ளது. இது சரியானதல்ல. குறிப்
பாக இந்தி எதிர்ப்பை மனதில் கொண்டு செய்கிறீர்களோ என்று
ஐயப்பட வேண்டியுள்ளது. தாய்மொழி உணர்வு இருக்க வேண்டி
யதுதான். ஆனால் மொழி வெறியை உண்டாக்கி விடாதீர்கள்
என்று கேட்டுக்கொள்கிறேன். அது ஆபத்தானது. மொழி
வெறியின் காரணமாக அண்மையில் இலங்கையில் பட்ட கஷ்ட
நஷ்டம் நமக்கு ஒரு பாடமாக அமைய வேண்டுமென்று சுட்டிக்
காட்ட விரும்புகிறேன். ஊட்டியில் கன்னடப் படம் எடுக்கிற
போது போலீசாரின் அஜாக்கிரதை காரணமாக கலாட்டா ஏற்
பட்டது. அதன் காரணமாக பெங்களூரில் இருக்கிற தமிழர்
களுக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. நாடு முழுவதும் வெறி
உணர்ச்சி உருவாக்கப்பட்டு இந்தியா முழுவதிலும் இருக்கிற
தமிழர்களுக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கிறது என்பதை இந்த
நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



1984 மார்ச் 5] [திரு. செ. சிவசாமி]

பிறமொழிப் படங்களைப் பொறுத்தவரையில் கிராமப் பகுதி
களில் காட்டப்படுவதில்லை ; மேஜர் பஞ்சயாத்துப் பகுதிகளிலும்
காட்டப்படுவதில்லை. நகரப் பஞ்சாயத்துக்களில் எப்போதோ
ஒன்றிரண்டு படங்கள் போடப்படுகின்றன. சென்னை,
கோவை, மதுரை, போன்ற கார்ப்பரேஷன் பகுதிகளில் ஒன்றி
ரண்டு தியேட்டர்களில் காட்டப்படுகிறது. இதனால் தமிழுக்கு
தாழ்வு வந்து விடும், தமிழர்களுக்கு தாழ்வு வந்துவிடும் என்று
ஒரு சட்டம் கொண்டு வரும் அளவிற்கு தமிழர்கள் தாழ்ந்துவிட
வில்லை. இது பிற மொழி பேசுபவர்களை மனவேதனை அடையச்
செய்யும். ஆகவே, இப்படி ஒரு சட்டம் தேவையில்லை
என்று சொல்லிக்கொண்டு அமர்கிறேன்.

டாக்டர் கே. சௌரிராஜன் : தலைவர் அவர்களே, நம்மு
டைய மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள்
1984 ஆம் ஆண்டு திரைப்படங்கள் (முறைப்படுத்துதல்) திருத்தச்
சட்டமுன் வடிவை அறிமுகம் செய்திருக்கிறார்கள். இந்தச் சட்ட
முன்வடிவில் இந்திய தேசீய காங்கிரஸ் இயக்கத்தின் சார்பிலே
என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். இந்தச்,
சட்டத்தினுடைய நோக்கம், தட் இஸ், ஜெனிசிஸ் ஆப் தி பில்
என்னவென்று பார்போமேயானால் நாம் ஏற்கெனவே
அரசாங்க ஆணை ஒன்றைக் கொடுத்தோம். ஜி.ஓ. எம்.எஸ்
நம்பர் 120, ஹோம் டிபார்ட்மெண்ட், 11 ஜனவரி 1979. அதிலே
கட்டாயமாக 12 வாரங்களுக்கு தமிழகத்திலே உள்ள அனைத்து
சினிமாக் கொட்டகைகளிலும் தமிழ்ப்படம் திரையிடப்படவேண்டு
மென்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அந்த அரசாணையை
எதிர்த்து தியேட்டர் உரிமையாளர்கள் உயர்நீதி மன்றத்
திற்குச் சென்றார்கள். அங்கே அவர்கள் என்ன வாதம் செய்
தார்கள் என்ற தகவல் என்னிடம் இல்லை. ஆனால் உயர்நீதி
மன்றம் தியேட்டர் உரிமையாளர்களின் வாதங்களைக் கேட்ட
பிறகு அந்த ஆணை செல்லாது என்று அறிவித்துவிட்டார்கள்.
அதாவது அரசினுடைய ஆணை செல்லாது ; அதற்கு லெஜிஸ்ட்
லேட்டிவ் காம்பீட்டென்ஸ் இல்லையென்று சொன்னதாக எனக்
குத் தகவல். ஆகவே என்னைப் பார்த்து, இந்த அரசைப்
பார்த்து நீங்கள் உயர்நீதி மன்றத்திலே காம்பீட்டென்ஸ்
இல்லையென்று சொல்கிறீர்களா, 12 வாரங்கள் என்ன ஒன்பது
மாதங்கள் வரையில் நாங்கள் கட்டுப்படுத்த முடியும் என்றுஏதோ
ஒரு வீம்பு அல்லது பகைமை அல்லது பழிவாங்கும் உணர்வின்
அடிப்படையில் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறதோ
என்று என்னைப் போன்றவர்கள் நினைக்கிறோம். அடுத்தப்படி
யாக இதற்கு முந்தைய சட்டமுன்வடிவில் அமைச்சர் அவர்கள்
பேசுகிறபோது தமிழ் திரைப்படத் தொழிலுக்கு பெரிய ஆபத்து
இருக்கிறது ; 50 லட்சம், 60 லட்சம் என்று போட்டு படம் எடுக்கப்
படுகிற போது , 25 பைசா, 50 பைசாவிற்கு வீடியோ மூலமாக
படங்கள் திருட்டுத்தனமாக காட்டப்படுவதினால் தமிழக திரைப்
பட உலகமே பாதிக்கப்படுகிற நிலைமையில் இருக்கிறது என்று

எடுத்துச் சொன்னார்கள். நம்முடைய அமைச்சர் அவர்களுக்கு
தமிழ்த்திரைப்பட உலகத்திலே வெகுகாலமாக தொடர்பு இருக்
கிறது. அவர்கள் அதிலே ஈடுபட்டவர்கள். தமிழ்த்திரைப்
படத்தைப் பாதுகாக்க வேண்டுமென்று அவர்களுக்கு அக்கறை
இருப்பதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. திரைப்பட
காட்சிகளை வைத்தே ஆட்சியைப் பிடிக்கிற அளவிற்கு இருக்கிற
திரைப்படத் தொழில் நசித்துப் போகிறதே என்று வருத்தம்
ஏற்பட்டிருக்க வேண்டும். ஆட்சியைக் காப்பாற்ற வேண்டும்
என்பதற்கு காட்சியையும் காப்பாற்ற வேண்டும்என்ற அடிப்படை
யில் இந்தச் சட்டமுன்வடிவை அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்
கள் என்று சொன்னால் அது மிகையாகாது.

(முற்பகல் 10-30)

ஆனால் நான் ஒன்று கேட்கிறேன். தமிழ்த்திரைப்பட உலகம்
நசித்துப் போகிறது என்று சொன்னால் அது வீடியோ காட்சி மூல
மாக நசித்து விடவில்லை. இன்று ஹாலிவுட்டிலே டி.வி.
ஸ்டார்களுக்கு இருக்கும் மவுசு, கௌரவம் சினிமா நடிகர்களுக்கு
இல்லை. விஞ்ஞானம் வளர்ந்து வருகின்ற சூழ்நிலையில் சினி
மாக்களுக்கு இருக்கும் கௌரவம், மவுசு தமிழ்நாட்டில் வருங்
காலத்தில் டி.வி. ஸ்டார்களுக்கு அல்லது வீடியோ ஸ்டார்களுக்கு
வரலாம். காலத்தின் கட்டாயம் அப்படித்தான் இருக்கும் என்
றால் அதைச் சட்டத்தால் கட்டுப்படுத்தி திரைப்படத்திற்கு
கௌரவம் தேடிவிட முடியாது என்பதை மறந்துவிட வேண்டாம்
என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இந்தச் சட்டத்தைப் பார்க்கிறபோது
அவர்கள் புத்திசாலித்தனமாக ஒரு திருத்தத்தைக் கொண்டு
வந்திருக்கிறார்கள். அது என்னவென்று சொன்னால்,

"The Government may, in the interest of the general public in
the State of Tamil Nadu who speak mainly Tamil which is the official
language of the State, issue directions from time to time, to any class
of licence to exhibit Tamil Films for a period of not more than nine
months in a year."

தமிழ்நாட்டில் இருக்கும் கிராமங்களில் உள்ள தியேட்டர்களில்
எல்லாம் வருஷத்தில் உள்ள 365 நாட்களிலும் தமிழ்ப்படம்தான்
காட்டிக் கொண்டிருக்கிறார்கள். சென்னை, மதுரை, கோவை,
திருச்சி போன்ற சில மெட்ரோபாலிட்டன் நகரங்களில் மட்டும்
தான் பிறமொழிப் படங்கள் காட்டப்படுகின்றன. சென்னையை
எடுத்துக் கொண்டால், காசினோ போன்ற தியேட்டர்
களில் ஆங்கிலப்படம் பார்க்கலாம். ஸ்டார் தியேட்டருக்குப்
போனால் இந்திப்படம் பார்க்கலாம். இந்தத் தியேட்டர்களெல்





லாம் கூட 12 வாரங்கள் கட்டாயமாக தமிழ்ப்படங்கள் போட
வேண்டுமென்று சொல்லி ஒரு அரசாணை போடப்பட்டது அது
ஒட்டுமொத்தமாக நீதிமன்றத்தில் அடிபட்டு விட்டதால் அரசாங்
கம் இந்த சட்டத் திருத்தத்தைக் கொண்டுவந்திருக்கிறது.
இதிலே 9 மாதங்களுக்கு மேற்படாமல் தமிழ்ப்படங்கள் காட்ட
வேண்டுமென்று சட்டத்திருத்தம் கொண்டு வந்திருக்கிறீர்கள்.

"... issue directions from time to time, to any class of licences
to exhibit Tamil Films for a period of not more than nine months
in a year".

இதிலே நீங்கள் சாமர்த்தியமாகப் போட்டிருக்கிறீர்கள். 'நாட்
மோர் தேன் நைன் மந்த்ஸ்' என்றால் ஒரு நாள் காட்டினாலும்
போதும், அல்லது 8 மாதங்கள் 29 நாட்கள் காட்டினாலும் ஒரே
நிலைதான் வருகிறது.

"One day is also not more than nine months. Three months
is also not more than nine months. 8 months and 29 days is also
not more than 9 months."

அப்படியானால் எல்பின்ஸ்டன், ஸ்டார், காசினோ' போன்ற
தியேட்டர் உரிமையாளர்களும் (குறுக்கீடு) நான் சினிமாவுக்கு
அதிகமாகப் போவது இல்லை. ஆகையால் எல்பின்ஸ்டன் இப்
போது இருக்கிறதா இல்லையா என்று எனக்குத் தெரியாது.
9 மாதத்திற்கு மேற்படாமல் அதாவது 8 மாதம் 29 நாட்கள்
வரை தமிழ்ப் படங்கள் காட்டவேண்டும் என்பதற்கு இந்தத்
திருத்தம் வகை செய்கிறது. அதே நேரத்தில் உங்களுக்கு
வேண்டியவர்களாக இருந்தால் அவர்கள் ஒரு நாள் தமிழ்ப்படம்
காட்டினாலும் போதும் என்று உத்தரவு போடவும் உங்களுக்கு
இந்தச் சட்டம் அதிகாரம் அளிக்கிறது. இந்தச் சட்டம்
(It does not stand for any logic or reason) ஆகவே, ஏற்
கனவே அரசாங்க ஆணையில் சொல்லப்பட்டிருந்தது போல்
12 வாரங்கள் தமிழ்படங்கள் காட்டவேண்டுமென்று சட்டம்
கொண்டு வருவதுதான் நியாயமாக இருக்குமென்பது எனக்குப்
படுகிறது.

தற்போது இருக்கும் நிலையில் தமிழ்ப் படங்களைப் பார்த்
தால் மிகவும் மோசமாக இருக்கின்றன. அந்தக் காலத்தில்
ஹரிதாஸ், சிவகவி போன்ற சினிமாக்கள் 52 வாரங்கள் ஓடின.
இன்றைக்கு காலையில் வந்த சினிமா மாலையில் மாற்றப்படு
கிறது. வாரக்கணக்கில் ஓடுகின்ற சினிமாக்கள் எண்ணிக்கை
யில் மிகக் குறைவு. தமிழ் திரைப்படங்களில் வருகின்ற வசனங்
கள் மிகவும் ஆபாசமாகவும் இருக்கின்றன. அதைத் தடுக்க
வேண்டும். ஆகவே தமிழ்ப்படங்கள் 50 காட்சிகள் காட்டினால்

போதும் என்று சட்டத் திருத்தம் கொண்டு வரலாம். நான் மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். தமிழ்ப்படங்களிலுள்ள ஆபாச வசனங்களைத் தடுப்பதற்கும் வழிவகை செய்யவேண்டும். அதே நேரத்தில் இந்தச் சட்டத்தை வாபஸ் பெற்று ஏற்கனவே சொன்னதுபோல் 12 வாரங்கள் அல்லது 36 காட்சிகள் தமிழ்படங்கள் காட்டித் தீரவேண்டும் என்று சட்டத்திருத்தம் கொண்டுவாருங்கள் என்று இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் கேட்டு வாய்ப்பளித்ததற்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற 1984 ஆம் ஆண்டு திரைப்படங்கள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பளித்ததற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள தமிழ்நாட்டிலே உற்பத்தியாகின்ற தமிழ்த்திரைப்படங்களுக்கு தியேட்டர் இல்லாத நிலைமையை மாற்றுவதற்காக இந்தச்சட்ட முன்வடிவைக்கொண்டு வந்திருக்கிறார்கள். குறிப்பாக சென்னை, மதுரை, கோவை, திருச்சி போன்ற பெருநகரங்களில் நல்ல வசதியான தியேட்டர்களில் தமிழ்ப் படங்களைக் காட்டுவதற்குப் பதிலாக அங்கே ஆங்கிலப் படங்களையும், வடநாட்டிலிருந்து வருகிற இந்திப் படங்களையும் காட்டுகிறார்கள், அவற்றின் மூலம் நல்ல வருமானத்தைப் பெறுகிறார்கள். அதனால் தமிழ்த்திரைப்படங்கள் தயாரிப்புக்கு ஊக்கமில்லால், உதவி இல்லாமல் இந்தத் தொழில் நசிந்துவிடும் சூழ்நிலை உருவாகிறது. இந்தத் தொழில் நசிந்துவிடாமல் இருக்க, தமிழ்த்திரைப்படங்களை அதிகமாகத் தயாரிக்க ஊக்கமளிக்கும் வகையில் மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்தச் சட்ட முன்வடிவினைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

திரு. செ. சிவசாமி : சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது வடநாட்டிலிருந்து வருகிற இந்திப்படங்கள் என்று கூறினார்கள். இப்போது சென்னையில் கூட இந்திப்படங்கள் நிறைய எடுக்கிறார்கள் என்பதை அவர்களுக்கு நினைவுபடுத்துகிறேன்.

திரு. எம். எஸ். மாணிக்கம் : வட நாட்டு இந்திதான் இங்கும் இருக்கிறது. தென்னாட்டு இந்தி என்று ஒன்று இல்லை என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி வேற்றுமொழிப் படங்களுக்கே முதலிடம் கொடுத்து, பெரும் இலாபம் சம்பாதிக்கின்ற உரிமை தியேட்டர் உரிமையாளர்களுக்கு



தயாரிப்பாளர்களுக்கு இருக்கின்ற காரணத்தால் தமிழ்ப்படத் தலைவர் அவர் ஊக்கமளிக்கும் வகையில் மாண்புமிகு புரட்சித் நடவடிக்கைகயை எடுத் களுடைய அரசு இப்படிப்பட்ட ஒரு பாராட்டுக்களைத் தெரி திருக்கிறது. அதற்காக என்னுடைய வித்துக்கொள்கிறேன்.

வேற்றுமொழிப் படங்களைக் காட்டி பெரும் வருமானத் தைப் பெற்று வந்தவர்கள், தமிழ்ப் படங்களையும் திரையிட வேண்டுமென்று ஒரு உத்தரவைப் போட்டபோது, அவர்கள் உயர் நீதிமன்றத்திற்குச் சென்று தடை உத்தரவு பெற்றார்கள். இது ஒரு சட்டம் இல்லை. நிர்வாக ஆணை என்று காரணம் காட்டி, அந்தஉத்தரவுக்குத் தடைபெற்றார்கள்; அந்த உத்தரவை ரத்து செய்துவிட்டார்கள். ஆகவேதான் நம்முடைய நோக்கத்தை நிறைவேற்றுகின்ற வகையில் ஒரு சட்டத்தைக் கொண்டு வந் திருக்கிறார்கள். லைசென்ஸ் வழங்கும்போதே, சட்டத்தின் மூலமாக, குறிப்பிட்ட காலத்திற்கு தமிழ்ப் படங்களைக் காட்டி யாக வேண்டு என்ற நிலை இதிலே இருப்பதினால் நான் இந்தச் சட்டத்தை வரவேற்று, பாராட்டி, அமர்கிறேன்.

திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலே அறிமுகப்படுத்தி, விவாதத்திற்கு வைக்கப்பட்டிருக்கிற தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு திரைப்படங்கள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன் வடிவினைப் பற்றிப் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய மேலான கருத்துக்களைத் தெரிவித் திருக்கிறார்கள். பொதுவாக இந்தச் சட்டத்தை எல்லோரும் வரவேற்றிருக்கிறார்கள். அவர்களுக்கு நன்றி தெரிவிக்க கடமைப் பட்டிருக்கிறேன்.

*மாண்புமிகு

ஆனால் இந்தச் சட்டத் திருத்தத்தை வரவேற்கின்ற நேரத் திலே இந்தச் சட்டத் திருத்தம் சட்டமாக நிறைவேற்றப்படு மானால் பாதகம் ஏற்படுமோ என்கின்ற ஐயப்பாடுகளைத் தெரி வித்தார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் இதிலே எந்தவிதமான ஐயமோ அச்சமோ கொள்ள வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். பொதுவாக எல்லோருடைய நன்மையையும் கருதித்தான் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. என்பதை நான் அரசின் சார்பிலே உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னதைப்போல மூன்று ஆண்டுகளுக்கு முன்பு தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபையிலே இருந்து ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி அரசுக்கு கருத்துத் தெரிவிக்கப்பட்டது. இன்றைக்கு தமிழ்ப் படங்களின் தயாரிப்பு அதிகமாகியிருக்கிறது. ஆண்டு ஒன்றுக்கு 40 தமிழ்ப் படங்களே தயாரிக்கின்ற நிலைமை இருந்தது மாறி இன்றைக்கு

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1984 மார்ச் 5

120 அல்லது 130 தமிழ்ப் படங்கள் தயாரிக்கப்படுகின்றன. அது
மட்டுமல்லாமல் வேற்று மொழிப் படங்களிலிருந்து தயாரிக்கப்
படுகின்ற தமிழ்ப் படங்களும் இருக்கின்றன. அதைப் போன்று
வேற்று மொழிப் படங்களும் இன்றைக்கு தமிழ்நாட்டில் அதிக
மாக திரையிடப்படுகின்ற சூழ்நிலையும் வளர்ந்துகொண்டி
ருக்கிறது.

(முற்பகல் 10-40)

இந்த நிலையில் தமிழ்ப் படங்களைத் திரையிடுவதற்கு,
நல்ல தியேட்டர்களில், வசதியுள்ள தியேட்டர்களாக
புதிதாகக் கட்டப்படுகின்ற தியேட்டர்களில், சில நேரங்களில்
மறுக்கின்ற நிலைமை ஏற்படுகிறது. புறக்கணிக்கப்
படுகின்றது என்ற உணர்வை தென்னிந்திய திரைப்பட
வர்த்தகக் கழகம் தெரிவித்ததையொட்டித்தான் மேற்கு
வங்காளத்திலே அரசு ஒரு ஆணை பிறப்பித்திருப்பதை
யொட்டி, 12 வாரங்களாவது தமிழ்ப் படங்களை திரையிட்டாக
வேண்டும் என்கிற ஆணையைப் பிறப்பித்தோம். அதை ஏற்றுக்
கொள்ள மறுத்து, திரைப்படக் கொட்டகை உரிமையாளர்
களில் சிலர் நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். நீதிமன்றம்
சட்டத்தின்படி அரசுக்கு உரிமை இல்லாத ஒரு சூழ்நிலையில்,
நீங்கள் ஆணை பிறப்பிக்க இயலாது என்று சொன்னதற்காக
இப்போது நாம் அந்த உரிமையைப் பெற்றுக் கொள்வதற்காக,
இந்தச் சட்டமுன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறாமே தவிர,
மிரட்டுவதற்காக அல்ல, சரி, அப்படியானால்; அந்த மூன்று
மாதங்கள் என்றுதானே இருக்கவேண்டும். ஏன் 9 மாதங்களுக்கு
மேற்படாமல் என்று—போட்டிருக்கிறீர்கள் பழி வாங்குகிற நோக்
கத்தோடு அல்லது ஆணவத்தோடு கொண்டு வருகிறீர்களா என்று
மாண்புமிகு உறுப்பினர் சௌரிராஜன் தெரிவித்தார்கள். இது
பழி வாங்குகிற நோக்கமும் அல்ல ஆணவமும் அல்ல. ஒரு அரசு
ஆணை பிறப்பிக்கிறபொழுது அது அந்தச் சூழ்நிலைக்கு
ஏற்ப அரசு ஆணை பிறப்பிக்கப்படும். காரணம், அந்த சூழ்நிலை
மாறுகின்ற நேரத்தில், அரசு ஆணை மாற்றப்பட முடியும்.
ஆனால் சட்டமாக சட்டத்திலே இடம் பெறுகிற ஒரு சூழ்நிலை
ஏற்படுத்தப்பட்டு, சட்டமுன்வடிவாக வருகிறபோது சட்டம்
ஒவ்வொரு மாதமும் திருத்தப்படுகின்ற சூழ்நிலைக்கு சட்டம்
செய்யமுடியாது. இன்றைக்கு கால வளர்ச்சியைப் பற்றி,
விஞ்ஞான வளர்ச்சியைப் பற்றி, வீடியோ வளர்ச்சி பற்றியெல்லாம்
சொன்னார்கள். அந்த அளவிற்கு திரைப்படத்திலே
எனக்கு அனுபவமே இல்லை என்று சொல்லிக்கொண்டு, இவ்
வளவு அனுபவம் பெற்றிருப்பதிலிருந்து அவர் டாக்டர் சௌரி
ராஜன் என்று வெளியிலே நமக்குத் தெரிகிறதே தவிர, அவர்கள்
மறைமுகமாகத் திரைப்படத் துறையிலே மிகுந்த அக்கறை,



1984 மார்ச் 5] [திரு. ஆர். எம். வீரப்பன்]

குறிப்பாக இந்த வீடியோத் துறையில் அக்கறை வைத்திருக்
கிறாரோ, தொடர்பு ஏதாவது இருக்கிறதோ என்று கூடதெரிந்து
கொள்ள விரும்புகிறேன். ஆகவே, அப்படிப்பட்ட செய்திகளை,
விவரங்களைத் தந்ததற்கு மகிழ்ச்சி. அந்த வீடியோத்
தொழிலை அழிக்கமுடியாது, அது வளர்கின்ற, விஞ்ஞான
அடிப்படையில் வளர்கின்ற தொழில் என்பதால் தான் அதை
முறைப்படுத்துவதற்காக இந்தச் சட்டம் கொண்டுவந்தோமே
தவிர, அழிப்பதற்காக அல்ல, தடைப்படுத்துவதற்காக அல்ல.
ஆகவே அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில், இப்படிப்பட்ட ஒரு
சட்டமுன்வடிவாக வருகிறபோது, சட்டமாக ஒரு சட்டத்திலே
இடம் பெறுகிறபோது, மாதம் ஒரு முறைக்கு அதை திருத்திக்
கொண்டு இருக்கின்ற சூழ்நிலைக்கு எந்தச் சட்டமன்றமும்
சட்டத்தை நிறைவேற்றமுடியாது. இந்த வளர்ச்சி எங்கே
போய் நிற்கும் என்று நம்மால் சொல்லமுடியாது. நான் ஒன்றைத்
தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு வளர்ந்து வருகின்ற
சூழ்நிலையில் எப்படி தமிழ்ப் படங்கள் எண்ணிக்கையிலே
வளர்ந்து இருக்கின்றனவோ, அதைப்போல் தென்னிந்திய
மொழிப்படங்கள் எல்லாம் வளர்ந்திருக்கின்றன. இன்னும்
சொல்லப்போனால், தமிழ் படங்கள் தான் ஒரு காலத்தில்
அதிகமான எண்ணிக்கையில் தயாரிக்கப்பட்டது. இப்போது
அதைத் தாண்டி, ஆங்கிலம், தெலுங்கு படம், கன்னடப் படம்,
மலையாளப்படம் தயாரிக்கப்படுகின்றன. சென்ற ஆண்டு
கணக்கைப் பார்த்தால், தமிழ்ப் படங்கள் பின்தங்கியிருக்கின்றன
மற்ற மொழிப் படங்கள் முன்னேறியிருக்கின்றன. எண்ணிக்கை
யிலே, அதைப்போலவே இந்திப் படங்களுடைய வளர்ச்சியும்
அதிகமாக இருக்கின்றது. மற்றைய மொழிகளிலே, தேசீய
மொழிப் படங்கள் தயாரிப்பிலே இன்றைக்கு ஈடுபட்டுக்
கொண்டிருக்கின்றன. வளர்ந்துகொண்டு வருகின்றன. அப்
படிப்பட்ட ஒரு காலம் வந்தால், தமிழகத்திலேயே
தமிழ்ப் படங்கள், மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே தெரிவித்
ததைப் போல, அவர்களே இங்கே சான்றிதழ்களை வழங்குவதைப்
போல, தமிழ்ப் படங்கள் என்பது திரைப்படக் கொட்டகை
களிலே போடுவதற்கு லாயக்கற்ற படம். அதனாலேயே இந்த
நாட்டு மக்களுக்கு நாங்கள் நன்மை செய்ய வேண்டுமென்றால்,
ஆங்கிலப் படத்தையும், இந்திப் படத்தையும், வேற்று மொழிப்
படத்தையும் தான் போட முடியும் என்று திரைப்படக் கொட்
டகை அதிபர்கள் முடிவு எடுக்கக் கூடிய காலம் கூட வரலாம்.
அப்படி ஒரு சூழ்நிலைக்கு இந்தத் தமிழகத்தைக் கொண்டு செல்ல
வேண்டுமென்று சட்ட மன்ற உறுப்பினர்கள் விரும்ப மாட்டார்
கள். நாட்டு மக்களும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். நாம்
கட்டாய இந்தியை, இந்தித் திணிப்பை எதிர்க்கிறபோது ஒரு
வாதத்தை வைக்கிறோம். நாங்கள் இந்தி மொழிக்கு விரோதிகள்
அல்ல. கட்டாய இந்திக்கு விரோதிகள், இந்தித் திணிப்புக்கு
விரோதிகள். எங்களை இரண்டாந்தர குடிமக்களாக மாற்றா
தீர்கள் என்பது தான் நாம் வைக்கிற வாதம். அதைப் போல

தமிழகத்தில், தமிழ் நாட்டில், தமிழ் மக்கள் வாழ்கிற மாநிலத்
தில், இங்கே தமிழ் மொழியை நம்பிப் பிழைப்பு நடத்திக் கொண்
டிருக்கிற, தொழில் நடத்திக் கொண்டிருக்கிற திரை அரங்கு
களின் உரிமையாளர்கள், அவர்கள் தமிழர்களாகவும் இருக்க
லாம் அல்லது வேறு மாநிலத்தைச் சார்ந்தவர்களாகவும் இருக்க
லாம். ஆனால் இந்தியர்கள். அவர்கள் இங்கே வந்து இந்தத்
தொழிலில் ஈடுபட்டு, இந்த தாய் மொழியாம் தமிழ்-தொன்மை
மிக்க தமிழ், தமிழ் எங்கள் உயிருக்கு நேர் என்று போற்றப்படு
கின்ற தமிழ், யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல்
இனிதாவது எங்கும் காணோம் எனறு பாரதி போற்றிய தமிழ் ;
கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தில் முன்தோன்றி மூத்தகுடி
பிறந்த தமிழ் என்று புகழப்படுகின்ற அந்தத் தமிழ் —மொழிப்
படத்தை — நான் என்னுடைய திரை அரங்கத்திலே அந்தப்
படத்தை திரையிட மாட்டேன் என்று சொல்லுகிற உரிமையை
இந்தத் தமிழ் மாநிலத்திலே தொழில் நடத்துகிற ஒருவருக்கு
இந்தச் சட்டமன்றம் உரிமை அளிக்காது என்று நான் நிச்சயமாக
நம்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). நீங்கள் அந்த உணர்
வின் அடிப்படையிலே புரிந்து கொண்டு பாராட்டியிருக்கிறீர்கள்.
ஆனால் எழுப்புகிற ஐயத்திற்கு விளக்கம் அளிக்க வேண்டியது
அரசின் கடமை.

மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் இதை வர
வேற்கிற அந்தத் தோரணையிலேபேசி, இது என்ன 9 மாதம்? ஏன்
10 மாதமாக வைத்துக் கொள்ளலாமே என்றார்கள். நாம் சட்ட
மன்றத்திலே பேசிக் கொண்டிருக்கிறோம். சட்டங்களை நிறை
வேற்றிக் கொண்டிருக்கிறோம். சட்ட மன்றத்திலே ஒரு பிரச்
சினை வருகிறது என்றால், சட்ட முன்வடிவு வருகிறது என்றால்,
எவ்வளவு ஆராய்ந்து கொண்டு வருகிறோம் என்று இந்தச் சட்ட
மன்றத்தை நாட்டு மக்கள் கூர்ந்து கவனித்துக் கொண்டு இருக்
கிறார்கள். இங்கேயிருக்கிற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட
வர்கள். இந்த நாட்டு மக்களுக்காக, நாட்டினுடைய நல்வாழ்
விற்காக, நாட்டு மக்களுடைய உரிமைக்காக, மொழியைப்
பாதுகாப்பதற்கு, சமுதாயத்தைப் பாதுகாப்பதற்கு, சட்டங்
களை செய்து கொண்டிருக்கிறோம் என்று கூர்ந்து கவனித்துக்
கொண்டிருக்கிற நேரத்தில், அவர்கள் 9 மாதம் என்று இருப்
பதை ஏன் 10 மாதம் என்று மாற்றக்கூடாது என்கிறார்கள்.
நான் அவர்கள் சொல்கிறபோது, அவர்கள் பேசுகிற போது,
கவனித்துக் கொண்டிருந்தேன். அவர்கள் சொல்கிற நேரத்திலே
ஒன்றைச் சொல்லியிருக்கலாம். என்னாலே புரிந்து கொள்ள
முடியும். ஏன் 9 மாதம் என்று போடுகிறீர்கள், ஆண்டு முழுவதும்
என்று போடுங்கள், தமிழ்ப்படம் தான் திரையிடப்பட வேண்டும்
என்று அவர்கள்சொல்லியிருந்தால், அவர்களுடைய அபரிமிதமான
உணர்வை என்னாலே புரிந்து கொள்ள முடியும். ஆனால் இதை
ஒரு விளையாட்டு இடமாக கருதிக் கொண்டு இருப்பது போல்-
நான் விளையாடினால் என்று சொல்லவில்லை, விளையாட்டுத்
தனம் என்று எடுத்துக் கொள்ளவும் இல்லை - ஆனால் ஏன்





9 மாதம் என்று வைத்துக் கொண்டிருக்கிறீர்கள் ? 10 மாதம்
என்று வைத்துக் கொள்ள வேண்டியதுதானே என்றார்கள்.
இங்கே மற்றக் கட்சியைச் சேர்ந்த, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்
கட்சியைச் சேர்ந்த, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த,
காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் எல்லாம் அவர்கள்
தங்களுடைய உண்மையான ஐயப்பாட்டை எழுப்பினார்கள். ஏன்
நீங்கள் 3 மாதங்கள் என்று வைத்துக் கொள்ளக் கூடாது ? அதை
ஏன் அதிகப்படுத்துகிறீர்கள் என்று கேட்பதிலே ஒரு வாதம்
இருந்தது, ஒரு நியாயம் இருந்தது. வாதத்திற்கு ஒரு அடிப்படை
இருந்தது. ஆனால் ஏன் 9 மாதம் ? ஏன் 10 மாதமாக இருந்தால்
என்ன ? என்று இந்த சட்டமன்றத்தை அவர்கள் ஏதோ வேலை
யற்றவர்கள் எல்லாம் உட்கார்ந்து கொண்டு இங்கே சட்டங்களை
நிறைவேற்றிக் கொண்டு இருக்கிறோம் என்பதைப் போல அவர்
கள் இங்கே பேசியதை நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்
கிறேன். ஆகவே அவர்கள் நல்ல கருத்தோடு, நல்ல உணர்வோடு
இந்தச் சட்டத்தை வரவேற்றார்கள் என்றே நான் ஏற்றுக்கொள்
கிறேன். ஆனால் ஏன் 10 மாதம் என்று கொண்டுவரவில்லை,
ஏன் 11 மாதம் என்று கொண்டு வரவில்லை என்று இவர்கள்
சொன்ன கருத்து ஒரு நியாயமான உணர்வின் அடிப்படையிலே
எழுப்பப்படவில்லை என்பதை மாத்திரம் நான் இந்த நேரத்
திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போலவே அவர்கள் 'மே' என்பதற்குப் பதிலாக ஏன்
'ஷெல்' என்று போடக் கூடாது என்று கேட்டார்கள். நான்
அதற்குரிய பதிலைத் தான் மாண்புமிகு உறுப்பினர் டாக்டர்
சௌரிராஜன் அவர்களுக்கும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கி
றேன். இங்கே திருத்தம் கொடுத்திருக்கிற நண்பர் சித்தன்
அவர்களுக்கும் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன். 'மே' என்று
ஒரு சட்டத்திலே போடுவது என்பது, இந்த அரசாங்கத்திற்கு
ஒரு முழு உரிமையைக் கொடுக்காமல், ஒரு இடத்திலே கட்டுப்
படுத்தி வைப்பதற்குத் தான் 'மே' என்று பெயர். 'ஷெல்' என்று
போட்டால், அவர்களுக்கு மான்டேட்டரி வந்துவிடுகிறது. 9
மாதத்திற்குள்ளே அவர்கள் போட்டாக வேண்டும். ஆனால்
இன்றைக்குள்ள சூழ்நிலை 'மே' என்று இருப்பதன் மூலம் அர
சாங்கம் சூழ்நிலைகளுக்கு ஏற்ப, தேவைகளுக்கு ஏற்ப, மக்க
ளுடைய உணர்வுகளுக்கு ஏற்ப, எந்த அளவிற்கு வேண்டுமானால்
செய்யலாம் ; செய்யாமலும் இருக்கலாம். அதனாலேதான்
'மே' என்று போட்டு இருக்கிறோம். ஆனால் மாண்புமிகு உறுப்
பினர் ரகுமான்கான் அவர்கள் ஏன் 'ஷெல்' என்று போடவில்லை
என்று கேட்டதிலே எனக்குப் பொருள் புரிகிறது. எந்த இடத்
திலே 'ஷெல்' போட வேண்டும். எந்த இடத்திலே 'மே' போட
வேண்டும் என்பது மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்
கள் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழ
கத்தை விட, தமிழ் மக்களுடைய நலனில் அக்கறை கொண்டி
ருக்கிற, தமிழகத்தின் தன்னாயகன் மாண்புமிகு முதல்வர் டாக்டர்

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1984 மார்ச் 5

புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசுக்கு நிச்சயமாகத் தெரி
யும் என்பதை நான் இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்
கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). எனவே எங்களைப் பொறி
யிலே சிக்க வைத்து விடலாம் என்று அவர்கள் கருதுவார்களா
னால், அதற்கு நாங்கள் இளைத்தவர்கள் அல்ல. அதற்கு நாங்கள்
ஆட்களும் அல்ல. ஆகவே இந்த சட்டத்தினுடைய நோக்கமே,
ஒரு நல்ல நோக்கத்திலே கொண்டு வரப்பட்டிருக்கிறது என்
பதே, அந்த 'ஷெல்' என்று போடாமல், 'மே' என்று போட்ட
திலேயிருந்து நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். ஆகவே,
அப்படிப்பட்ட ஒரு உணர்வை, இன்றைக்கு தமிழகத்தில், தமி
ழகத்தினுடைய தலை நகரத்திலே, நான் தமிழ்ப் படத்தை திரை
யிடமாட்டேன் என்று சொல்கிற உரிமை எந்த ஒரு திரைப்பட
அரங்கத்தினுடைய உரிமையாளருக்கும் தருவதற்கு இந்தச் சட்ட
மன்றம் அனுமதி அளிக்காது என்ற உணர்விலே தான் இந்தச்
சட்டமுன்வடிவை நாங்கள் இங்கே கொண்டு வந்திருக்கிறோம்.
(மேசையைத் தட்டும் ஒலி).

(முற்பகல் 10-50)

அப்படியானால் இது 9 மாதங்கள் என்று இருக்குமா என்று
கேட்கிற, நியாயமாக அச்சப்படுகிறவர்களுக்கு கவலைப்படு
கிறவர்களுக்கு அரசாங்கத்தின் சார்பிலே தெளிவுபடுத்தக்
கடமைப்பட்டிருக்கிறேன். நிச்சயமாக எங்களுக்கு அந்த எண்
ணமே இல்லை. இது எந்த அளவுக்கு தேவைப்படுகிறதோ அந்த
அளவுக்குத் தான் — ஆனால் குறைந்த பட்சம் 3லிருந்து 4 மாதங்
கள் நிச்சயமாக வலியுறுத்தப்படும். - அதுவும் ஒரு வேளை எங்
காவது தேவைப்படுமானால், இன்றைக்கே சொல்கிறேன் பல
இடங்களிலே பல தியேட்டர்காரர்கள் நாங்கள் அப்படி அதை
போட முடியவில்லை, அடுத்த ஆண்டிலே நாங்கள் சேர்த்துப்
போடுகிறோம் என்று கேட்பார்களேயானால், அதற்கும் அர
சாங்கம் விதிவிலக்கு அளிக்கும். அது நடந்து கொண்டு இருக்கும்.
இதுதான் நிலைமையே தவிர, ஏதோ தேவையானவர்களை வேண்
டும் என்றே விட்டுவிட்டு, மற்றவர்களுடைய தலையிலே சுமத்த
வேண்டும் என்பதற்காக எந்தச் சட்டமும் செய்யப்படுவது அல்ல.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை).

மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் அப்படி சந்
தேகப்படுவார்களேயானால், அது அவர்களுக்கே உரிய உரிமை.
அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு கொண்டு வரக்
கூடிய சட்டங்களை சந்தேகப்படுவதற்கும், அதைப்பற்றி குற்றம்
கூறுவதற்கும் குறை சொல்வதற்குமேதான் அவர்கள் எதிர்க்
கட்சியாக இருக்கிறார்கள். ஆனால், மாண்புமிகு உறுப்பினர்



1984 மார்ச் 5] [திரு. ஆர். எம். வீரப்பன்]

டாக்டர் சௌரிராஜன் அவர்களுக்கு ஏன் இந்த சந்தேகம் வந்தது என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. எந்தவித உள்நோக்கமும் இந்தச் சட்ட முன்வடிவிலே இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மூன்றிலிருந்து நான்கு மாதங்கள்... (குறுக்கீடு) (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அமைச்சர் பேசி முடித்த பிறகு நீங்கள் விளக்கம் கேட்க வேண்டியிருந்தால் கேட்டுக்கொள்ளலாம். இடையிலே குறுக்கிடவேண்டாம்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : ஆனாலும், 3லிருந்து 4 மாதங்கள் நிச்சயமாக அமல்படுத்தப்படும். அதற்கு மேலே எங்காவது தேவையானால், எப்போதாவது தேவையானால், இன்றைக்கு இல்லை, இன்னொரு காலத்திலே தேவையானால் அன்றைக்கு இந்த அரசு இருந்தாலும் சரி அல்லது எந்த அரசு இருந்தாலும் சரி, அவர்களுக்குத் தேவையானால் பயன்படுத்துவதற்காகத்தான் சட்ட முன்வடிவுகளிலே நாம் இத்தகைய பிரிவுகளைச் சேர்த்திருக்கிறோம். அப்படி பிரிவுகளைச் சேர்க்கின்ற போது, மேன்டேட்டரியாகச் சேர்க்காமல் இருப்பதிலிருந்தே இந்த அரசினுடைய நல்ல நோக்கத்தை புரிந்துக் கொள்ளலாம். இது தொழிலை அழிக்கக் கூடாது என்ற நோக்கத்திலேதான் சேர்க்கப்பட்டிருக்கிறது.

ஆனால் என்ன காரணத்தினாலேயோ மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சௌரிராஜன் அவர்களுக்கு, இந்த திரைப்படத் தொழில் மீது கொஞ்சம் கவலையோடு கூடிய வெறுப்புணர்ச்சி தோன்றியிருக்கிறது. நல்லவேளை இந்தத் திரைப்பட தொழில் மீது தோன்றிய வெறுப்புணர்ச்சி வீடியோ டி.வி. மீது அவர்களுக்குத் தோன்றவில்லை. அது வரை பாராட்டுகிறேன். வரவேற்கிறேன். வீடியோவிலே வந்தாலும், டி.வியிலே வந்தாலும், அதுவும் திரைப்படம் தான். அதிலேயும் நடிகர்கள்தான் நடிக்கிறார்கள். இவர்கள் சினிமா நடிகர்கள், அவர்கள் டி.வி. நடிகர்கள். ஆனால் இரண்டு பேரும் ஒரே அந்தஸ்தில்தான் வருகிறார்கள். இந்தத் திரைப்படத்தைப்பயன்படுத்தி ஆட்சிக்குவந்தவர்கள் ஆட்சிக்கு வந்தவர்கள் என்று சொல்லிக் கொண்டிருக்கக்கூடிய நேரத்திலே, அதை இன்னும் பயன்படுத்த தெரியாமல் இருக்கிறார்களே என்று அவர்களுடைய கட்சியிலேயே குரல் எழுப்பிக் கொண்டிருக்கிற நேரத்திலே, மார்ண்புமிகு உறுப்பினர் டாக்டர் சௌரிராஜன் அவர்கள் எவ்வளவு அதிருப்தியை கொண்டிருக்கிறார்கள் என்று என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. இதை தெரிந்துக் கொள்பவர்கள் தெரிந்துக் கொள்ளட்டும். ஆகவே, எப்படிப்பட்ட உணர்விலும், எந்த உள்நோக்கத்திலும் இந்தச் சட்டம் கொண்டுவரப்படவில்லை.

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1984 மார்ச் 5

தமிழ்நாட்டில் தமிழ் மொழிக்கு உரிமை கொடுப்பதற்காகத்
தான், இந்தச் சட்டமுன்வடிவு கொண்டு வரப்படுகிறது. தமிழ்
மகன் தமிழ் மொழியைப் பேசுகிற காரணத்தாலேயே, ஒரு
தியேட்டரிலே தமிழ்ப் படத்தைப் பார்க்க முடியாது என்கிற
இரண்டாம் தர குடிமகனாக தமிழ் நாட்டிலே உருவாகிற நிலை
மையை, தமிழக அரசு அனுமதிக்காது. ஆனால் எத்தகைய
இடர்ப்பாடுகள் இந்தச் சட்டத்தினாலே வருமேயானாலும் அதை
உடனடியாக நீக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். அரசு
தயாராக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சௌரி
ராஜன் அவர்கள் அதற்காக நமக்கு சிபாரிசுக்கு வந்தாலும், சரி
அல்லது மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் வந்தாலும் சரி,
அல்லது கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் வந்தாலும் சரி,
இல்லை வேறு கட்சியின் சார்பிலே வந்தாலும் சரி, அவர்க
ளுடைய நியாயமான உரிமைகள் பாதுகாக்கப்படும்.

இன்றைக்கு இதைப்பற்றி கருத்துக்கள் சொல்கிற நேரத்
திலே ஒரு கருத்தினை வெளியிட்டார்கள். இப்படிப்பட்ட சட்
டத்தினாலே தான் கர்நாடகத்திலே குழப்பம் வந்தது என்று
சொன்னார்கள். நாம் ஒன்றும் இதை முதன்முதலாக செய்து
விடவில்லை. முதன்முதலாக இந்தியாவிலேயே இப்படிப்பட்ட
ஆணையைப் பிறப்பித்தது மேற்கு வங்கத்திலே தான். அதை
தயவு செய்து தெரிந்து கொள்ளவேண்டும். அதற்குப் பிறகு
கர்நாடகத்திலே ஆணை பிறப்பித்தார்கள். ஆனால் இப்போது
கர்நாடகத்திலே இருக்கிற அமைச்சர் இதிலே 6 மாதம் என்று
கொண்டு வந்து நாங்கள் சட்டம் செய்ய இருக்கிறோம் என்று
அறிவித்திருக்கிறார்கள். நான் இதைச் சொல்கிற நேரத்தில் தமி
ழகம் தான் இந்திய ஒற்றுமைக்கே நிலைக்களனாக இருக்கிறது
என்பதை எடுத்துக் கூற கடமைப்பட்டிருக்கிறேன். தமிழகம்
தான் இந்திய ஒருமைப்பாட்டிற்கே அடிப்படையாக அமைந்
திருக்கிறது. இங்கே எத்தனை லட்சம் பேர் இந்தி பேசுகிறவர்
கள் இருக்கிறார்கள் ? ஆனால் எத்தனை தியேட்டர்களிலே
எத்தனை வாரங்கள் இந்திப் படங்கள் ஓடுகின்றன? இங்கே
எத்தனை லட்சம் பேர் ஆங்கிலம் பேசுவதை தாய் மொழியாகக்
கொண்டிருக்கிறார்கள்? ஆனால் எத்தனை தியேட்டர்களிலே
ஆங்கிலப் படங்கள் போடப்படுகின்றன?

ஆனால் பம்பாய் மாநிலத்திலே, மராட்டிய மாநிலத்திலே
15 லட்சம் எண்ணிக்கைக்கு மேற்பட்டவர்கள் தமிழர்கள்
வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அப்படி 15 லட்சம் பேர்
களுக்கு மேற்பட்டவர்கள் வாழக் கூடிய பம்பாய் நகரத்திலே
அந்தக் காலத்திலே 2 தியேட்டர்களிலேதான் தமிழ் படம் திரை
யிடப்பட்டது.



1984 மார்ச் 5] [திரு. ஆர். எம். வீரப்பன்]

பிறகு ஒரு தியேட்டரிலே திரையிடப்பட்டது. இன்றைக்கு
ஒரு வாரம் திரையிடப்படுவதற்கு பம்பாய் நகரத்
திலே திரையரங்குகள் இல்லை. டெல்லியிலே லட்சக்கணக்
கானவர்கள் இருக்கிறார்கள். ஆனால் ஒரு அரங்கிலே தமிழ்ப்
படம் திரையிடப்பட முடியாது. கல்கத்தாவிலே இருக்கிறார்
கள், அங்கே ஒரு திரையரங்கிலே தமிழ்ப் படம் திரையிடப்
பட முடியாது. நான் இதைச் சொல்வதற்குக் காரணம்,
அங்கேயே திரையிடப்பட முடியவில்லை. அதனாலே இங்கே
நாங்கள் திரையிட முடியாமல் தடுக்கிறோம் என்பதல்ல. என்
றைக்கும் தமிழகம் தான் பரந்த மனப்பான்மையோடு பரந்த
உணர்வோடு தேசிய உணர்வோடு நடந்துகொள்கிற மாநிலம்
அதைப் பாதுகாக்கிற உணர்வுடன் இன்றைக்கு இருக்கிற அரசு
இயங்கிக்கொண்டிருக்கிறது என்பதற்காக நான் எடுத்துக்
காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நேற்று முன்தினம் உதகமண்டலத்திலே, ஊட்டியிலே நம்
முடைய நண்பர் ராஜ்குமார் அவர்கள் படப்பிடிப்பின்போது
ஒரு சம்பவம் நடந்தது பற்றி மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்
டார்கள். உண்மையிலேயே தமிழக அரசு தமிழக மக்களின்
சார்பிலே அதற்கு வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.
மாண்புமிகு முதல்வர் அவர்கள் உடனடியாக சேலத்திலிருந்தே
அந்த நடவடிக்கையை எடுத்தார்கள். பாதுகாப்பு அளிக்கத்
தவறிய அந்த காவல்துறை அலுவலர்கள் மீது நடவடிக்கை
எடுக்கப்பட்டிருக்கிறது. உயர் அதிகாரி உடனடியாக மாற்றப்பட்
டிருக்கிறார்கள்.

ஆனால் இந்த நேரத்திலே ஒன்றை நான் தெரிவித்துக்
கொள்ள விரும்புகிறேன். மொழியைக் காப்பாற்றுகிறோம்,
இனத்தைக் காப்பாற்றுகிறோம் என்று கலவரங்களை, வன்
முறையைத் தூண்டுகிறவர்கள் சில பேர்கள் மக்களுடைய
வாழ்க்கையையே பாதித்துக் கொண்டிருக்கிறார்கள். அமைதி
யையே அழித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மொழிக்
காகவும் இல்லை, இனத்திற்காகவும் இல்லை, அவர்களுடைய
சொந்த உணர்வுகளைத் திருப்திப்படுத்திக் கொள்வதற்காக
கலவரங்களிலே ஈடுபடுகிறார்கள். அப்படிக் கலவரங்களிலே
வன்முறையிலே ஈடுபடுகிறவர்களை இந்த அரசு தமிழ் மக்களின்
சார்பிலே வன்மையாகக் கண்டிக்கிறது. மாண்புமிகு புரட்சித்
தலைவர் அவர்கள் சார்பிலேயும் வன்மையாகக் கண்டிக்கிறோம்.
ஆனால் அதேநேரத்திலே ஒன்றை நான் தெரிவித்துக்கொள்ளவும்
கடமைப்பட்டிருக்கிறேன்.

சில மாதங்களுக்கு முன்னாலே பெங்களூரிலே ஒரு அர்த்தால்
நடைபெற்றது. ஒரு மொழிப் போராட்டம் நடைபெற்றது.
கன்னட மொழிக்காக சிலர் கிளர்ச்சியை நடத்தினார்கள்.
தமிழ்நாட்டிலேயிருந்து அப்போது படப்பிடிப்பிற்காக சென்றிருந்த
தமிழ்ப் படத் தயாரிப்பாளர்கள் விரட்டி அடிக்கப்பட்டார்கள்,

அங்கே பாதுகாப்பு இல்லை.
தொடர்ந்து நடத்த முடியாமல் அவர்கள் படப் பிடிப்பைத்
நான் இந்த நிலைமையை எடுத்துக் தமிழகத்திற்கு வந்தார்கள்.
அங்கே இருந்து இங்கே வருகிறவர்களை காட்டுவதன் மூலம் இப்படி
என்பதற்காக அல்ல. ஆனால், இந்தக் விரட்ட வேண்டும்
கிறவர்கள் சமுதாய விரோதிகள். காரியங்களிலே ஈடுபடு
கலவரத்தை விளைவிக்கின்ற சமுதாய வன்முறையைத் தூண்டுகிற,
எந்த மொழி மீதும் அக்கறை இல்லை. விரோதிகள். அவர்களுக்கு
அக்கறை இல்லை. அவர்கள் கலங்கிய எந்த இனத்தின் மீதும்
முயல்கின்றவர்கள், அல்லது குட்டையைக் குட்டையிலே மீன்பிடிக்க
மீன் கிடைக்கிறதா என்று அலைகின்றவர்கள். கலக்கி விட்டுவிட்டு
அரசாங்கம் மிகுந்த விழிப்புணர்ச்சியோடு அவர்களை
கொண்டு இருக்கிறது. ஆகவே அந்த நிகழ்ச்சியைப் கண்காணித்துக்
வரை தமிழக அரசு மிகத் தெளிவாக இருக்கிறது. பொறுத்த
இந்தியா முழுமையும் பரவியிருக்கிற தமிழ் மக்கள் ஆனால்
உரிமைகளைப் பாதுகாக்கவேண்டும் என்பதிலே அவர்களுடைய
உரிமைகளுக்கு ஊனம் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதிலே அவர்களுடைய
அரசு மிகுந்த எச்சரிக்கையோடு இருக்கிறது. ஆகவே தமிழக
மொழிப் படத்தையும் இங்கே திரையிடுவதை, காட்டுவதை எந்த
அரசு தடுக்க விரும்பவில்லை. மக்கள் விரும்பினால் பார்க்கட்டும். இந்த
மக்கள் விரும்பினால் பார்த்து மகிழட்டும்.
மொழிப் படங்களைக் காட்டுவதன் மூலம் ஆனால் மற்ற
பாரம் தடைபெறுகிறது, தங்களுக்கு தங்களுடைய வியா
என்பதற்காக தமிழ் மொழியை, தமிழ் வருமானம் வருகிறது
இரண்டாம் தரமாக்க நினைக்கிறவர்கள் இனத்தை தமிழ் மக்களை
நடத்திக்கொண்டிருக்கிறார்கள் என்கிற இங்கே தொழில்
வேரோடும் வேரடி மண்ணோடும் அந்த உணர்வை
தயாராக இருக்கிறது என்பதைச் அழிக்க இந்த அரசு
இருக்கிற ஐயப்பாடுகளை யெல்லாம் சொல்லி, உங்களுக்கு
ஐயம் கொள்ள வேண்டிய அவசியம் நீக்கிவிட்டேன். இதிலே
மேற்போகாமல் என்று போட்டதற்குக் இல்லை. 9 மாதத்திற்கு
மன்றத்தினுடைய தீர்ப்பில் காரணமே உச்ச நீதி
குறைந்த பட்சம், நீங்கள் அது எடுத்துக்காட்டப்பட்டது.
எவ்வளவு காலம் இதை வைத்துக்கொண்டிருந்தால்,
அப்படிப்பட்ட ஒரு வேண்டுமானாலும் நீங்கள் நீட்டலாம்.
கூடாது, அதிகமான அதிகாரத்தை ஒரு அரசு எடுத்துக்கொள்ளக்
டால் அதற்குள்ளே கால கட்டத்தை நீங்கள் வைத்துக்கொண்
பட்டுவிடும். அந்த உங்களுடைய உரிமைகள் வரையறுக்கப்
வைத்திருக்கிறோமே உணர்விலேதான் ஒன்பது மாதம் என்று
படத்தைத்தான் தவிர, 9 மாதம் முழுவதும் நீங்கள் தமிழ்ப்
திரையரங்கு காட்டவேண்டுமென்று சொல்லி நாளைக்கே
அரசாங்கமே உரிமையாளர் எனக்கு படமே கிடைக்கவில்லையே
மைக்கு நாங்கள் வாங்கித் தரவேண்டுமென்று சொல்கிற நிலை
தமிழ் மக்களை ஆளாகமாட்டோம் என்பதையும் சொல்லி,
குடிமக்களாக முதல் தரக் குடிமக்களாக, உலகம் பாராட்டுகிற
அந்த மிகச் சிறந்த இனத்தினுடைய பெருமையை,





உரிமையை காப்பதற்காகத்தான் இந்தச் சட்ட மூன் வடிவு என்பதை எடுத்துச் சொல்லி, இதை எல்லோரும் பொதுவாக வரவேற்றிருக்கிறார்கள், ஐயப்பாடுகளை நீக்கியதற்குப் பிறகு இந்தத் திருத்தங்களையெல்லாம் திரும்பப் பெற்றுக் கொண்டு இதை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன். வணக்கம்.

(முற்பகல் 11–00)

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, நான் விளக்கம் கேட்பது மட்டும் அல்ல, இது சம்பந்தமாக திருத்தம் கொடுத்திருக்கிறேன். திருத்தத்தைப் பற்றி பேசுகிறபோது சில கருத்துக்களை வலியுறுத்திச் சொல்கிற உரிமை உண்டு. எனவே அதை இப்போதே சந்தர்ப்பமாக எடுத்துக்கொண்டு கேள்வியை அமைச்சர் அவர்கள் இடத்திலே கேட்டு விடுகிறேன். நீங்கள் கொண்டு வந்து இருக்கக்கூடிய இந்தச் சட்டத்தைப் பொறுத்தமட்டில் திராவிட முன்னேற்றக் கழகம் மனப்பூர்வமாக வரவேற்கிறது. தமிழ்ப் படம் 9 மாதம் தமிழ் நாட்டில் காட்டப்பட வேண்டும் என்ற கருத்தில் எங்களுக்கு எந்தவிதமான கருத்து வேறுபாடும் கிடையாது. நிச்சயமாக தமிழ் நாட்டில், தமிழ் மண்ணில் தமிழர்களுக்கு தமிழ்ப் படம் அதிகமாகக் காட்டப்படவேண்டும் என்பதை திராவிட முன்னேற்றக் கழகம் வரவேற்கிறது. மாறுபாடு கிடையாது. ஆனால் சொல்வது எல்லாம் அப்படி ஒரு சட்டமே இன்னும் வரவில்லை. 9 மாதம் தமிழ் சினிமா காட்டி ஆக வேண்டும் என்று சட்டமே இப்போது இல்லை. அப்படிப் போடுவதற்கு ஒரு அதிகாரம் கேட்டு வந்த சட்டம்தானே தவிர, 9 மாதம் தமிழ் சினிமா காட்ட வேண்டும் என்ற சட்டம் இல்லை. அப்படி இனிமேல் போடுவதற்கு ஒரு அதிகாரத்தை பெறுவதற்காகத்தான் ஒரு சட்டம் 'எனேபிலிங் பவர்' அதைத்தான் இங்கே வாங்கியிருக்கிறோம். இன்னும் சட்டம் போட்டுவிடவில்லை. எனவே 9 மாதம் தமிழ் சினிமா காட்ட வேண்டும் என்ற சட்டம் அல்ல இது. அப்படிப் போடுவதற்கு ஒரு அதிகாரத்தை கேட்டு இருக்கிறோம். நான் கேட்கிறேன் அந்த சட்டத்தை கொண்டு வாவதற்கு என்ன சிக்கல். இரண்டாவது கேள்வி இது முக்கியமானது (குறுக்கீடு) (ஷெல்) என்ற வார்த்தை அவசியம் இருந்து ஆகவேண்டும். (குறுக்கீடு) அமெண்டுமெண்டில் பேசலாம் அமெண்டுமெண்டு கொடுத்து இருக்கிறேன் அந்த உரிமையில் பேசுகிறேன். அப்போது பேச வேண்டாம் என்று சொன்னால் உட்கார்ந்துவிடுகிறேன். (குறுக்கீடு) திராவிட முன்னேற்றக் கழகம் இந்தச் சட்டத்தை எதிர்க்கிறதா ? ஆதரிக்கிறதா என்பதில் ஒரு தவறான கருத்தை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் 9 மாதம் தமிழ் சினிமா படம் காட்டவேண்டும் என்ற அந்த கருத்தை, அதற்கான அதிகாரம் வேண்டும் என்ற அந்தக் கருத்தைத் வரவேற்கிறது. மீதியை அமெண்டுமெண்டில் பேசுகிறேன்.

[1984 மார்ச் 5

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"தமிழ்நாடு 1984-ஆம் ஆண்டு திரைப்படங்கள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 2/1984) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவு 2

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"பிரிவு 2 சட்ட முன் வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்".

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன் ;

"In clause 2, in the proposed new sub-clause (ii), *for* the words " not more than nine montns in a year", *substitute* the words 'for a period of ten months in a year."

In Clause 2, in the proposed new sub-clause (ii), *for* the word "may" *substitute* the word, "shall".

THIRU P. PONNURANGAM : Sir, I second the amendment.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, இங்கே கொண்டு வரப்பட்டு இருக்கக்கூடிய இந்தச் சட்டம் மூலம் சட்டம் கொண்டு வருவதற்கு ஒரு அதிகாரத்தைத் தான் நீங்கள் கேட்டு இருக்கிறீர்கள். அவசியம் அந்த அதிகாரம் இருந்தால்தான் சட்டமே கொண்டு வரமுடியும்; விரைவில் சட்டம் கொண்டுவர வேண்டும். இன்னும் ஒன்றைக் கூறுகிறேன். அந்தச் சட்டத்திலே 9 மாதம் என்று சொல்கிற நேரத்தில் அவசியம் காட்டியே தீரவேண்டும். 'ஷெல்' என்ற வார்த்தையைப் பயன்படுத்தவேண்டும். அதற்கு பதிலாக 'மே' என்ற வார்த்தையை பயன்படுத்தினால், காட்டுவதும் காட்டாமல் இருப்பதும் அவர்களுடைய உரிமை ஆகிவிடும். எனவே அந்தச் சட்டச் சிக்கலை அமைச்சர் அவர்கள் கவனிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். 9 மாதம் என்பதை கிண்டல் செய்வதற்காக நான் சொல்லவில்லை, நம்முடைய அமைச்சர் அவர்கள்





சுப்ரீம் கோர்ட் தீர்ப்பைக் கூட சுட்டிக்காட்டினார்கள். அதிலே நான் அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன், அந்த சுப்ரீம் கோர்ட் தீர்ப்பிலே கூட என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால் 7 மாதம், 8 மாதம், 9 மாதம், 10 மாதம் என்று சொல்லவில்லை. ஒரு வருடத்தில் மேக்ஸிமம் எவ்வளவு மாதம் வைக்க முடியுமோ அவ்வளவு மாதம் வையுங்கள் என்ற பொருள் தான் அதில் அடங்கியிருக்கிறது. எனவே அமைச்சர் அவர்களைக் கேட்கிறேன். அது என்ன 9 மாதம். வருடத்தில் 8 மாதம், 10 மாதம், 7 மாதம் என்று இருக்கிறது. அப்படி என்ன விசேஷம் அந்த நம்பரைத் தேர்ந்தெடுத்து இருக்கிறீர்கள். அதிலே, என்ன விசேடம் என்ற அர்த்தத்தில் தான் ஒரு பாஸிங் ரிமார்க் ஆக கேட்டேனே தவிர, என்னுடைய விவாதத்தினுடைய நோக்கமே அது அல்ல. 10 மாதம் கூட இருக்கலாம் ஏன் கூடாதா? 11 மாதம் கூட வைக்கலாம் ஏன் கூடாதா? அதில் என்ன விசேஷம் என்று அதைக் கேட்டேன்.

அடுத்து, Not more than nine months in a year என்று ஒரு பிரிவிலே இருப்பதாகக் கருதுகிறேன்.

திருத்தம் அமைச்சர் கொடுத்திருக்கிறார் என்று கருதுகிறேன். 'லெஸ் தேன்" என்பதற்குப் பதிலாக 'மோர் தேன்' என்று சொல்லிவிட்டால், ஒன்பது மாதங்களுக்கு மேலே போடுவதே தப்பு என்று ஆகிவிடும். "லெஸ் தேன்" என்று போட்டால்தான் ஒனபது மாதங்கள் காட்டுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. நான் பத்து மாதங்கள் தமிழ்ப் படங்களைக் காட்டுவதற்குத் தயாராக இருக்கிறேன்; பத்து மாதங்கள் போடுவதற்கு விரும்புகிறேன் என்று வைத்துக்கொள்ளுங்கள், 'நாட் மோர் தேன்' 9 மந்த்ஸ்" என்று திருத்தம் கொடுத்துவிட்டால், 9 மாதங்களுக்குப் பிறகு 10 மாதங்களுக்கு, 11 மாதங்களுக்குத் தமிழ்ப் படங்களைப் போடுவதே தப்பு என்று வந்து விடுகிறது. ஆகவே "லெஸ் தேன் 9 மந்த்ஸ்" என்று இருக்கவேண்டும்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, நான் இதற்கெல்லாம் நான் விளக்கம் அளித்துக்கொண்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் கொஞ்சம் அமைதியாக, பொறுமையாக இருந்து கேட்டிருந்தால் எனக்கு இந்த வேலையே வந்திருக்காது. ஏன் "ஷெல்" போடவில்லை, ஏன் "மே" போட்டோம் என்பதற்கும் தெளிவாகச் சொல்லிவிட்டேன். "நாட் லெஸ் தேன்" என்பதற்குப் பதிலாக, "நாட் மோர் தேன்" என்று இருப்பதற்கும் சொல்லிவிட்டேன். "நாட் லெஸ் தேன்" என்று போட்டால்—அதிலேதான் உச்ச நீதிமன்றம் சுட்டிக்காட்டியது. "நீ குறைவாக ஒரு குறிப்பிட்ட காலத்தை விட்டு விட்டு இவ்வளவு காலம் என்று எடுத்துக் கொண்டால் அதற்கு எல்லையே இல்லாமல் போய்விடும்; அப்படிப் போடக்

கூடாது ; அரசாங்கத்திற்கு இருக்கின்ற அதிகாரத்தை ஒரு
வரைப்படுத்திவிடுங்கள்; ஒரு எல்லையைக் குறிப்பிட்டு விடுங்கள்!
அதற்குள்ளே நீங்கள் உங்களுடைய அதிகாரத்தை வைத்துக்
கொள்ளுங்கள்'' என்று, அதனாலேதான், ''நாட் மோர் தேன்''
என்று ஆங்கிலத்தில் இருக்கிறது.

திரு. அ. ரகுமான்கான் : ''ஷெல்'' என்று ஏன் போடக்
கூடாது?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : அதைத்தான் நான்
பேசினேன். ''ஷெல் '' என்றால், ''மேன்டேட்டரி'' வந்து
விடுகிறது. இந்தச் சட்டமுன்வடிவை அறிமுகப்படுத்தும்
பொழுது கமயூனிஸ்ட் மார்க்சிஸ்ட் கட்சியைச் சேர்ந்த
அருமை நண்பர் மாண்புமிகு ஹேமச்சந்திரன் அவர்கள்
இதைத்தான் எழுப்பினார்கள், அது அரசியல் சட்டத்தின்
உரிமையைப் பாதிக்காதா என்று கேட்டார்கள்.

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவரவர்களே....

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : துணைத் தலைவ
ரவர்களே, நான் சொல்வதைத் தயவு செய்து அவர் கேட்க
வேண்டும். அவரே பேசி, நிறைவேற்றிக் கொடுப்பது என்றால்
அதை இந்த நாட்டு மக்கள் அனுமதிக்கின்றபோழுது.
செய்கின்ற அப்படி ஒரு காலம் வரட்டும்; பார்ப்போம்
ஆனால் இப்பொழுது இந்த அரசாங்கம் இந்தச் சட்ட
முன்வடிவை நிறைவேற்றிக்கொண்டிருக்கிறது. ஆகவே,
சொல்கின்ற விளக்கத்தையாவது கேட்க வேண்டும். ஒன்று,
தெரிந்துகொள்ள முயலவேண்டும். தூங்குகிறவர்களை
எழுப்பி விடலாம்; ஆனால் தூங்குவதைப் போன்று நடிப்பவர்
களை எப்படி எழுப்புவது.

''ஷெல்'' என்று போட்டாலே அது நாளைக்கு
சட்டத்தின்படி பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு விடலாம்.
''மே'' என்று இருப்பதன் மூலம் அரசாங்கம், இந்த
நாட்டு மக்களுடைய நன்மைகளைக் கருதி, பொதுமக்க
ளுடைய நலன்களைக் கருதி, தேவையானால் அந்த உரிமை
களைப் பயன்படுத்தும்; அதற்காகத்தான் ''மே'' இருக்கிறது.
அதை மிகுந்த எச்சரிக்கையோடு நாங்கள் போட்டிருக்கிறோம்,
எனவே, எங்களை இந்தச் சட்டப் பொறிக்குள்ளே சிக்க
வைத்து விடலாம் என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள்
முயற்சிக்க வேண்டாம். இந்த அரசாங்கம் எவ்வளவு
தெளிவாக சட்ட முன்வடிவைத் தயாரிக்க வேண்டுமோ அந்த
அளவிற்குத் தயாரித்துக் கொண்டிருக்கிறது. அதனால்தான்,
''ஷெல்'' போடவில்லை; ''மே'' போட்டிருக்கிறோம்.



இன்னொன்றும் இதில் இருக்கிறது. மற்ற மொழிக்காரர்
களை இங்கே உள்ளேயே வர விட மாட்டோம் என்று
அச்சப்படுகிறார்களே அந்த அச்சத்தை நீக்குவதற்கும் இந்த
''மே'' பயன்படும். இந்தச் சட்ட முன்வடிவை அரசாங்கம்
அதிகாரத்தின் மூலம் பெற்றுக் கொண்டதற்குப் பிறகு;
எவ்வளவு காலம் என்று நிர்ணயிக்க இருக்கிறது. அது
சென்னைக்கு ஒரு மாதிரியாக இருக்கலாம்; மதுரைக்கு ஒரு
மாதிரியாக இருக்கலாம். ஆனால முழுவதும் தமிழ்ப் படங்
களையே போடுகின்றவர்களைப் போய் யாரும் தடுக்க
முடியாது: சட்டமும் தடுக்க முடியாது. ஆனால், போட
மாட்டோம் என்று சொல்பவர்களைத்தான் இந்தச்
சட்டம் போய்த் தடுக்கும்; குறுக்கிடும் என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவரவர்களே,
ஒன்பது மாதங்கள் போட்டே தீர வேண்டுமென்று போட்டால்,
மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்கள் சந்தேகம்
எழுப்பியதைப்போல, நீதிமன்றத்திலே சிக்கலாக்கப்படும் என்று
நம்முடைய அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். ஆனால் உங்
கள் மூலமாக நான் அமைச்சரவர்களுக்குத் தெரிவித்துக்
கொள்கிறேன், நீதிமன்றத்திலே இந்தப் பிரச்னை குறித்து
சிக்கல் வருவதற்கு காரணமே கிடையாது. ''ஷெல்'' என்று
போடாமல், ''மே'' என்று போடுவதில் சில அபாயங்கள்
இருக்கின்றன. ஒன்று, ஒன்பது மாதங்கள் காட்டியே தீர
வேண்டுமென்று கட்டாயப்படுத்தாமல், பட முதலாளிகள்
அல்லது தியேட்டர் ஓனர்கள் விருப்பப்படி செய்யுங்கள்
என்று அவர்களுக்கு ஒரு வாய்ப்பு கொடுப்பதற்கு இடமிருக்-
கிறது. ''ஷெல்'' என்று போட்டால் கோர்ட்டில் செல்லு
படியாகாது என்றால், சட்டமன்றத்தில் இருக்கக்கூடிய பிரச்
னைகள் குறித்துப் பலருக்குப் பல அபிப்பிராயங்கள் இருக்கலாம்.
உதாரணமாக,

In order to promote the interest of the Tamil Culture in Tamil Nadu."

நீங்கள் ஏற்கனவே ஒரு சட்டம் போட்டீர்கள், முறைப்படி
12 மாதங்கள் தமிழ்ப் படம் காட்ட வேண்டுமென்று
போட்டீர்கள். அப்பொழுது உங்கள் சட்ட இலாக்கா இல்லையா,
சட்ட மந்திரி இல்லையா, நீங்கள் இல்லையா. போன
உடனே கோர்ட்டிலே எப்படிச் செல்லுபடியாகாமல் போய்
விட்டது? ஆகவே, இந்தச் சர்க்கார் போடும்
சட்டங்களெல்லாமே கோர்ட்டிலே செல்லுபடி ஆகி
விடுகிறது என்று சொல்லுகின்ற அளவிற்கு அப்படியா
எல்லாச் சட்டங்களையும் கொண்டு வந்திருக்கிறீர்கள்?

[திரு. அ. ரகுமான்கான்] [1984 மார்ச் 5

எனவே, '' ஷெல் '' என்று போடாமல் '' மே '' என்று போடுவது பட முதலாளிகளை மிரட்டுவதற்காகத்தான்; உண்மையாக தமிழுக்காக அல்ல, என்னுடைய திருத்தத்தை நான் வலியுறுத்துகிறேன்.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

''பிரிவு 2 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, பிரிவு 2 நிறைவேற்றப்பெற்றது.

(முற்பகல் 11.10)

பிரிவு 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1 முகப்புரை நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன். ''தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு திரைப்படங்கள் (முறைப் படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப்பேரவை சட்ட முன்வடிவு எண். 2/1984) நிறைவேற்றப்பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

**(இ) கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன் வடிவு 1984.**

**திரு. ப. பொன்னுரங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன்.

''ஆளுநர் அவர்களால் 8—12—1983-ஆம் தேதியன்று பிறப்பிக்கப்பெற்ற தமிழ்நாடு 1984-ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்த அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண்.15--1983) இப் பேரவை நிராகரிக்கிறது''.

**திரு. து. புருஷோத்தமன்:** இத் தீர்மானத்தை நான் வழி மொழிகிறேன்.



1984 மார்ச் 5]

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன்—

'' தமிழ்நாடு 1984-ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு **(சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 13-1984) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்.''

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னுரங்கம் அவர்களின் தீர்மானமும், மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானமும் பேரவையின் முன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன.

**திரு. உ. சுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1984-ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் தனி அதிகாரிகளை நியமித்தல் திருத்தச் சட்டம் ஏன் நிராகரிக்கப்படுகின்றது என்பதற்கு ஒருசில காரணங்களைச் சொல்ல நான் ஆசைப்படுகிறேன்.

இவ்வாறு தனி அதிகாரிகளுடைய பதவி நீடிப்பு என்பது தொடர்ந்து வருகின்ற ஒரு தொடர் வியாதியாக இருந்து வருகின்றது. நாட்டிலே எத்தனையோ வகையான வியாதிகள் எல்லாம் இருந்தன. அப்படிப்பட்ட கொள்ளை நோய், அம்மை நோய் போன்ற பெரிய நோய்களை எல்லாம் நாம் ஒழித்துவிட்டோம். ஆனால் இந்த வியாதி எப்போதுதான் ஒரு முடிவுக்கு வருமோ தெரியவில்லை. ஆகவே நாட்டின் நலன் கருதி, நாட்டு மக்களின் நலன் கருதி, இப்படி எல்லா வற்றையும் தனி அதிகாரிகளின் ராஜ்யமாக ஆக்குவது விரும்பத்தக்கதல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை).

கூட்டுறவு என்பதன் அடிப்படைத் தத்துவமே மக்கள் கூட்டாக ஒன்று சேர்ந்து ஒரு இயக்கம் அல்லது ஸ்தாபனத்தை அமைந்து ஒழுங்காகச் செயல்படுவதுதான். அப்படிப்பட்ட ஸ்தாபனங்களில் நீண்ட காலத்திற்கு தனி அதிகாரிகளை வைத்துக் கொண்டிருப்பது சரியல்ல. கூட்டுறவுத் தத்துவத் தில் அடிப்படையையே ஒழித்துவிட்டு தனி அதிகாரிகளின் காலத்தை நீடித்துக்கொண்டே செல்வது என்பது எந்தவிதத் திலே நியாயம், எந்தவிதத்திலே பொருந்தும் என்பதை சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

** 1984-ம் ஆண்டு பிப்ரவரி 21-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

[திரு. உ. சுப்பிரமணியன்] [1984 மார்ச் 5

நமது உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பஞ்சாயத்து
போர்டு, யூனியன் தேதிகளை, நீண்ட நெடுங்காலமாகத்
தள்ளி வைத்து, இப்போது ஒரு தேதியைச் சொல்லியிருக்கிறார்
கள். ஆண்டவன அருளாலே அந்தத் தேதியிலே தேர்தல்
நடக்க வேண்டுமென்ற என்னுடைய பிரார்த்தனையைத்
தெரிவிக்கிறேன். அகவே, இந்தக் கூட்டுறவு ஸ்தாபனங்
களுக்குத் தனி அதிகாரிகள் நியமிப்பது என்பது எந்தவிதத்
திலும் விரும்பத்தக்கது அல்ல என்பதை நான் சொல்ல
வேண்டியது அவசியம் இல்லை. கூட்டுறவு ஸ்தாபனங்
களே, ஜனங்களுடைய அன்றாடத் தேவையைப் பூர்த்தி
செய்வதற்குத்தான். அந்தந்தப் பகுதியிலே உள்ள மக்களு
டைய விருப்பத்திற்கு ஏற்ப அந்த அமைப்பை உபயோகப்
படுத்திக் கொள்ள வேண்டு மென்பதுதான் கருத்து
நெடுங்காலமாகத் தொடர்ந்து தனி அதிகாரிகள் நீடிப்பதன்
மூலம், நாட்டிலே பல்வேறு வகையில் அதிகாரிகள் ஆட்சி
இருப்பதைப் போல், அந்தக் கூட்டுறவு ஸ்தாபனங்களில்
இல்லாமல், அவர்கள் பிடியிலிருந்து விடுதலை வேண்டுமென்ற
கருத்தில்தான் இதை நிராகரிக்க வேண்டுமென்று நான்
கேட்டுக்கொள்கிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு மாந்
றுத் தலைவர் அவர்களே, இன்றையதினம் கூட்டுறவுத் துறையி
லுடைய தனி அதிகாரிகள் பதவிக் காலத்தை நீட்டிக்கக்கூடிய
இந்த மசோதாவின்மீது சில கருத்துக்களை நான் தெரிவிக்கக்
கடமைப்பட்டிருக்கிறேன். எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு
உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல, இன்றையதினம்
தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை நீட்டிக்கக்கூடிய சட்டங்
கள், சட்டமன்ற எந்தக் கூட்டத்தொடர் வந்தாலும், அதிலே
ஒரு மசோதா வருவது வாடிக்கையாக இருந்து வருகிறது.
ஆனால், இதுவரையிலும் வாக்குறுதி அளித்து வந்த அமைச்சர்
அவர்கள் மாறி இருக்கிறார்கள். புதிய அமைச்சர் அவர்கள்
பொறுப்பேற்றிருக்கிறார்கள். புதிய அமைச்சர் அவர்கள் இந்த
வாக்குறுதியை நிறைவேற்றி, கூடிய விரைவில் ஜனநாயக முறைப்
படி கூட்டுறவுகளுக்குத் தேர்தல் நடத்த ஆவன செய்ய வேண்டு
மென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஜனநாயகம் சீர்குலைந்து
கொண்டிருக்கிறது என்பதற்கு அடையாளம்தான் பஞ்சாயத்துத்
தேர்தல், கூட்டுறவுத் தேர்தல் நடத்தப்படாமல், அதிகாரிகளிடம்
அந்தப் பொறுப்புகளை ஒப்படைத்திருப்பது என்பது என்னுடைய
எண்ணமாகும். இன்றையதினம் கூட்டுறவுகள் சரியான முறை
யிலே இயங்காத காரணத்தாலே, கிராமப்புறத்திலே இருக்கிற
மக்களுக்கு அத்தியாவசியமானப் பண்டங்கள், உரம், பூச்சி
மருந்துகள், அரிசி, மண்ணெண்ணெய், போன்றவை கிடைக்காமல்
இருப்பதை நாம் காண்கிறோம். கூட்டுறவு அமைப்புகளில் அதி
காரிகள் போடப்பட்டிருக்கிற காரணத்தால்தான் பல கூட்
டுறவுச் சங்கங்கள் இன்றையதினம் நட்டத்திலே இயங்கிக் கொண்



1984 மார்ச் 5] [திரு. இரெ. இராசமாணிக்கம்]

டிருக்கின்றன என்பது என்னுடைய கருத்தாகும். கூட்டுறவுச்
சங்கங்களிலே பணியாற்றிக் கொண்டிருக்கிற பணியாளர்களுக்குச்
சரியான முறையிலே சம்பளம்கூட வழங்குவதற்குச் சில கூட்டுற
வுச் சங்கங்களில் பணம் இல்லையென்று சொல்கிறார்கள்.
ஏராளமான கூட்டுறவுச் சங்கங்கள் நட்டத்திலே இயங்கிக் கொண்
டிருக்கின்றன. ஆகையினாலே ஜனநாயக முறைப்படி தேர்தலை
நடத்தி, கூட்டுறவுச் சங்கங்கள் நல்ல முறையிலே இயங்குவதற்கு
வழிவகைகள் காணவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே பணி
வன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

சில இடங்களில் அமுதம் அங்காடிகள் இல்லையென்றால்,
அந்தக் கிராமங்களில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக, அங்காடிக்
கடைகள் நடத்தப்பட்டு வந்தன. அந்தக் கடைகள் பெரும்பகுதி
கிராமங்களில் மூடப்பட்டு இருக்கின்றன. அப்படி அமுதம் அங்
காடிக் கடைகள் இல்லாத கிராமங்களில் இருந்த கூட்டுறவுக் கடை
களும் மூடப்பட்டிருக்கிற காரணத்தால், கிராமப்புறத்திலே இருக்
கிற மக்களுக்கு அத்தியாவசியப் பண்டங்கள் கிடைக்கவில்லை.

என்னுடைய தொகுதியில் கோட்டவாசல் ஒன்றியத்தில் சுரைக்
காய்வாசல் என்ற ஊரில், அமுதம் அங்காடியும் இல்லை, கூட்
டுறவுக் கடையும் இல்லை. இதனால், 5, 6 கிலோ தூரம்
தள்ளி உள்ள ஆலத்தூர் கிராமத்திற்கு அந்த சுரைக்காய்வாசல்
கிராம மக்கள் செல்ல வேண்டிய நிலைமையிருக்கிறது. நான்
சென்ற மாதம் 28 ஆம் தேதி மாவட்ட வளர்ச்சி மன்றத்திலே
மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே சொல்கிறபொழுது, இப்படி
5, 6 கிலோ மீட்டர் தூரம் சென்று அத்தியாவசியப் பொருள்
களை வாங்கவேண்டியிருக்கிறது. ஆகவே, இதனால் மக்கள் கஷ்
டப்படுகிற நிலைமை மாற்றி, ஒவ்வொரு ரெவின்யூ கிராமத்திற்
கும் ஒரு அமுதம் அங்காடி அல்லது, ஒரு கூட்டுறவு அங்காடி
அமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொண்டேன். ஒவ்
வொரு வருவாய் கிராமத்திற்கும் ஒவ்வொரு அங்காடி இருக்க
வேண்டுமென்பதுதான் இந்த அரசினுடைய கொள்கை. இருந்
தாலும்கூட சில பகுதிகளிலே விடுபட்டுவிட்டது என்று மாவட்ட
ஆட்சித் தலைவர் அவர்கள் பதில் சொன்னார்கள். கண்டிப்பாக
ஒவ்வொரு வருவாய் கிராமத்திற்கும் ஒவ்வொரு அங்காடி என்ற
முறையில் கூட்டுறவுத்துறை கடையாக இருந்தாலும் அல்லது
நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் அங்காடியாக இருந்தாலும்
திறக்கப்பட வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்
கொள்கிறேன்.

(முற்பகல் 11-20)

தமிழகத்திலே பல் ஆண்டுக்காலமாக விவசாயிகள் பாதிக்கப்
பட்டு வருகிறார்கள். 1977-லிருந்து தொடர்ந்து பாதிக்கப்பட்டு
வருகிறார்கள்.

தொடர்ந்து பாதிக்கப்படுகிற விவசாயிகளுக்கு தேர்தல் நேரத்திலே இன்றைய தினம் ஆட்சியிலே இருக்கிற நீங்கள் வாக்குறுதி தந்தீர்கள். கூட்டுறவுக் கடன்கள் அனைத்தையும் தள்ளுபடி செய்வோம் என்று சொன்னீர்கள். அதற்குப் பிறகு 60 கோடி ரூபாய் அளவிற்கு தள்ளுபடி செய்யப்படுமென்று அறிவிக்கப்பட்டது. பாதிக்கப்பட்டவர்களுக்கு, 5 ஏக்கர்களுக்குக் குறைவாக நிலம் வைத்திருக்கிறவர்களுக்கு கூட்டுறவுக் கடன்கள் தள்ளுபடி செய்யப்படுமென்று சட்டமன்றத்திலே அறிவிக்கப்பட்டது. ஆனால், தமிழக முதல்வராக இருக்கிற மாண்புமிகு எம். ஜி. ஆர். அவர்கள் அண்ணா சிலையின் முன்னால் பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு பிறந்த நாள் விழா எடுக்கிறபோது ஒன்றை அங்கே சொன்னார்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவு இரண்டு காரணங்களுக்காக கொண்டுவரப்பட்டிருக்கின்றது. முதலாவது காரணம், சட்டமன்றம் இல்லாத காலத்தில் தனி அதிகாரிகளின் பதவி காலத்தை 3 மாத காலத்திற்கு நீட்டித்து ஆளுநர் அவர்கள் உத்தரவு பிறப்பித்து இருந்தார்கள். அதை ஏற்கவும், அது அந்த மார்ச் மாதத்தோடு முடிவடைகிறது. அதையும், அதை இன்னும் 6 மாத காலத்திற்கு நீட்டிக்கவும் என்பதற்குள்ளே மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்து சொல்வார்களானால் நலமாக இருக்கும். மாண்புமிகு உறுப்பினர் கூட்டுறவு மானியக் கோரிக்கையிலே பேசுவதைப் போல இப்போது பேச வேண்டியதில்லை. மானியக் கோரிக்கையில் பேசலாம், அப்போது விவரம் சொல்லலாம். எனவே, சட்டமுன்வடிவிற்கு பொருந்துகிற வகையிலே உறுப்பினர் அவர்கள் உரை நிகழ்த்தும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வே. இரா. ஜெயராமன்)** உறுப்பினர் அவர்கள் சட்ட முன்வடிவை ஒட்டிப் பேச வேண்டும்.

**திரு. இரெ. இராசமாணிக்கம் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் சட்டமுன்வடிவின் மீது நான் இப்போது பேசிக்கொண்டு இருக்கிறேன். கூட்டுறவுச் சங்கங்களுக்கு தனி அதிகாரிகளின் பதவிக்காலத்தை நீட்டிக்கவேண்டிய அவசியம் குறித்து இதிலே வந்திருக்கிறது. தனி அதிகாரிகள் இருப்பதால் இன்றையதினம் நிர்வாகம் எப்படிச் சீர் கெட்டிருக்கிறது என்பதை எடுத்துச் சொல்லி அந்த அடிப்படையில்தான் பேசிக்கொண்டிருக்கிறேன்.



அண்ணா அவர்கள் பிறந்த நாளில் 240 கோடி ரூபாய் ரத்து செய்யப்படும் என்று சொன்னார்கள். நாங்கள் சட்டமன்றத்தில் கேட்டோம். நீங்கள் 60 கோடி என்று அறிவித்ததற்குப்பிறகு 240 கோடி என்று அண்ணா அவர்கள் பிறந்த நாள் விழாவில் சொல்லி இருக்கிறீர்களே என்று கேட்டபோது, தொடர்ந்து எங்களுடைய ஆட்சி ஐந்தாண்டு காலத்திற்கு இருக்கிறவரையில், விவசாயிகள் நிவாரணம் அடைகிற வகையில் அறிவித்தோம். தொடர்ந்து விவசாயிகள் பாதிக்கப்படுகிற போதெல்லாம் நாங்கள் நிவாரணம் வழங்குவோம் என்றும், கடன் தள்ளுபடி செய்வோம் என்றும் முதல்வர் அவர்கள் சொன்னார்கள். நான் அந்த அடிப்படையில் கேட்கிறேன். தொடர்ந்து விவசாயிகள் பாதிக்கப்பட்டு வருகிறார்கள். இந்த ஆண்டு தமிழகத்திலே எல்லா மாவட்டங்களும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, விவசாயிகள் கடன்களை, கூட்டுறவுக் கடன்கள் மற்ற எல்லா கடன்களையும் ரத்து செய்து கொடுங்கள் என்று நான் உங்களை இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். கூட்டுறவுக் கடன்களைப் பொறுத்த வரையில் அதிகமாக ஒன்றும் வழங்கப்படவில்லை. 1982–83இல் 67.18 கோடியும், 1983–84 டிசம்பர் மாதம் முடிய 58.04 கோடி ரூபாய் வழங்கப்பட்டிருக்கின்றன. எவ்வளவோ தேவையில்லாத செலவுகளை எல்லாம் நாம் செய்துகொண்டிருக்கிறோம். ஆகவே, இந்தக் கடன்களை தள்ளுபடி செய்து கஷ்டத்திற்குள்ளாகி இருக்கிற விவசாயிகளுக்கு ஒரு நிம்மதியான வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதே அடிப்படையில் விவசாயிகள் இந்த ஆண்டில் வாங்கியிருக்கிற கூட்டுறவுக் கடன்கள் அத்தனையையும் தள்ளுபடி செய்து, பழைய கடன்களுக்கு வட்டியை தள்ளுபடி செய்து, அசலை நீண்டகாலக் கடனாக மாற்றியமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அசல் என்று சொல்கிற போது கூட்டுறவு விதிகளில் ஒரு விதி இருக்கிறது. அசல் எவ்வளவு கொடுத்திருக்கிறார்களோ அந்த அளவிற்கு வட்டி வாங்கலாம், ஒருவருக்கு 2,000 ரூபாய் அசல் தந்தால் 2,000 ரூபாய் வட்டி வாங்கலாம். ஒருவர் ஆயிரம் ரூபாய் பணம் செலுத்தினால் அந்த ஆயிரத்தை வட்டியிலே வரவு வைத்து விடுவார்கள். அதற்குப் பிறகு பாக்கி இருக்கிற வட்டியையும், அசலையும் ஒன்றாகச் சேர்த்து அசலாக டெகிரி செய்து விடுவது கூட்டுறவுச் சங்கங்களுடைய வாடிக்கை. அதற்கு பிறகு டெகிரி செய்யப்பட்டத் தொகையை அசலாகக் கருதி அதற்குச் சமமாக வட்டி வாங்குவது கூட்டுறவு பை-லா-விலே இருக்கிறது. ஆகவே, அந்த அடிப்படையிலே வட்டி வாங்காமல், எவ்வளவு கடன் வாங்கி இருக்கிறாரோ அசல், அந்த அளவிற்குள்ளாக வட்டி வாங்குவதற்கு அதிலே ஒரு திருத்தத்தைக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டு, இந்த ஆண்டுக் கடனில் வட்டியை தள்ளுபடி செய்து, அசலை நீண்டகாலக் கடனாக மாற்ற வேண்டும். பாக்கிக் கடன்களை எல்லாம் தள்ளுபடிசெய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்

[திரு. இரெ. இராசமாணிக்கம்] [1984 மார்ச் 5

கொள்கிறேன். கண்டிப்பாக தனி அதிகாரிகள் பதவிக்காலத்தை நீட்டிக்காமல், இப்போது நீங்கள் அறிவித்து இருக்கிற இந்தக் காலக்கெடுவிற்குள்ளாகக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தல் நடத்தி ஜனநாயகம் வாழ வழிவகுத்துத் தர வேண்டுமென்று கேட்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. என். வரதராஜன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்களின் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவின் மீது சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

ஏற்கனவே பல முறை இந்த அவையில் தனி அதிகாரிகளின்
பதவி நீட்டிப்புக் குறித்த மசோதாவின் மீது விவாதம் நடை
பெற்று அதற்கு அமைச்சர் அவர்கள் பதிலளிக்கிறபோது முழுமை
யான கூட்டுறவு சட்டம் இல்லாத காரணத்தால்தான் தனி
அதிகாரிகளின் பதவிக் காலம் நீட்டிக்கப்படவேண்டிய கட்டாயம்
இருக்கிறது. என்று பதிலளித்திருக்கிறார்கள். ஆனால், முழுமை
யான ஒரு கூட்டுறவுச் சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னாலும்
இத்தகைய நீட்டிப்பு மசோதா கொண்டுவருவது வேதனையை
யும், கவலையையும் தரக்கூடியதாக இருக்கிறது. வேறு பலவித
மான தட்பவெட்ப நிலைமைகள் மோசமாக உள்ள சூழ்நிலை
யிலும் இந்தப் பதவி நீட்டிப்பு சரியானதல்ல என்று எனக்குத்
தோன்றுகிறது. பொதுவாகவே நம்முடைய ஜனநாயகத்தில் சிறு
பான்மை மக்களால் நிர்வகிக்கப்படுகிற அமைப்புகளாக இந்த
கூட்டுறவுச் சங்கங்கள் இருப்பதை நாம் பார்க்கிறோம்.
இவற்றில் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகள் இல்லாத கார
ணத்தால் இன்றைக்கு மக்களுக்குத் தேவைப்படுகிற பல காரியங்
கள் நிறைவேற்றப்படாமல் இருப்பது மட்டுமல்லாமல் ஊழலும்
ஊதாரித்தனமும் வடிவெடுத்திருக்கின்றன. இன்றைக்கு அதி
காரத்தில் உள்ளவர்கள் பொறுப்பில் உள்ளவர்கள் செய்கிற
சில நிர்ப்பந்தத்தின் காரணமாக இத்தகைய நீட்டிப்பு வரு
கிறது என்று ஊரே பேசுகிறது. இப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட
அமைப்புகள் இல்லாத காரணத்தால் அவற்றில் கரையான்
ஊடுருவிக் கொண்டிருக்கிறது. இத்தகைய சக்திகளின் ஊடுருவல்
காரணமாக சாதாரண ஜனங்களுக்கு கிடைக்க வேண்டிய
நன்மைகள் கிடைக்கவில்லை. இன்றைக்கு கூட்டுறவுத் துறையில்
பல்வேறு பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் இருக்கின்றன. இன்று
விலைவாசி ஏறியிருக்கும் நிலையில் கூட்டுறவுத் துறையின் மூல
மாக நேரடியாகக் கொள்முதல் செய்து அவற்றை தகுந்த முறை
யில் விநியோகம் செய்வதைப் பற்றி ஆலோசிக்க சரியான ஒரு
அமைப்பு இல்லை. அவ்வாறு ஆலோசிக்க தகுந்த வகையில்
அங்கே பொதுஜனப் பிரதிநிதித்துவத்திற்கும் இடமில்லை.



1984 மார்ச் 5] [திரு. என். வரதராஜன்]

கடன் என்ற பிரச்சினை இன்றைக்கு விவசாயிகளை மிகவும் பாதித்திருக்கிறது. கடந்த காலத்தில் இந்தத் துறையைப் பொறுப்பேற்றிருந்த அமைச்சர் மாற்றப்பட்டு இன்றைக்கு புதிய அமைச்சர் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறார். இது ஒரு பெரிய மாறுதல் என்று நான் சொல்ல விரும்பவில்லை. ஆனால் அவருடைய அனுபவத்தை இவர் பெற்றுக் கொண்டால் நல்லது விவசாயிகளின் குறைகளைத் திர்ப்பதற்காக விவசாய உயர்மட்டக் குழு ஒன்று அமைத்தோம். அவர்கள் விவசாயிகளின் பிரச்சினைகளை ஆராய்ந்து ஆழ்ந்து பரிசீலித்து விவசாய மக்களுக்கு நன்மைகளைச் செய்ய வேண்டிய வகையில் பல்வேறு தீர்மானங்களை நிறைவேற்றி அனுப்பியிருக்கிறார்கள். இந்தக் கடன் நிவாரணத்தைப் பற்றியும் அந்த விவசாய உயர் மட்டக் குழு தீர்மானத்தை நிறைவேற்றி அரசுக்கு அனுப்பியிருக்கிறது. அது இன்னும் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. இத்தகைய நிலைமைகளின் காரணமாக விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். உதாரணத்திற்கு நான் ஒன்று சொல்ல வேண்டுமானால் எனக்கு ஒரு விவசாயியிடம் இருந்து கடிதம் வந்திருக்கிறது. அதில் குறிப்பிட்டிருப்பதை நான் இங்கு தெரிவிக்க விரும்புகிறேன்.

திண்டுக்கல் அருகில் உள்ள செட்டிநாயக்கன்பட்டி விவசாயச் சேவை கூட்டுறவுச் சங்கத்தில் திரு. கா. பழனிச்சாமி சன் ஆப் கந்தசாமிப் பிள்ளை என்பவர் கடன் பெற்றிருந்தார். அவருடைய கடன் எண் 705. அவருக்கு அந்த சொசைட்டி 22—12—1983ல் ஒரு நோட்டீஸ் அனுப்பியுள்ளது. அவர் வாங்கிய கடன் அசல் ரூ. 3,790. அந்தக் கடனுக்காக அவர் இப்போது கட்ட வேண்டும் என்று நோட்டீஸ் கொடுத்துள்ள தொகை 12,008 ரூபாய். அவர் வாங்கிய அசலுக்கு வட்டி ரூ. 1,740. அதற்கு அபராத வட்டி ரூ. 3,053. அந்தத் தொகைக்கு வட்டி சேர்த்து ரூ. 3,425 ஆக மொத்தம் ரூ. 12,008 கட்டவேண்டுமென்று நோட்டீஸ் வந்திருக்கிறது. இதெல்லாம் நான் ஏன் இந்த அவையில்விவாதத்திற்கு எடுத்துச் சொன்னேன் என்றால், கூட்டுறவுத் துறையில் நிறைய தவறுகள் புரையோடிப் போயிருக்கின்றன. இன்று விவசாயிகளுக்கு கடன் நிவாரணம் வேண்டும். அவர்கள் பெற்ற கடனை ரத்துச் செய்ய வேண்டும். ஏனென்றால் சாதாரண விவசாயிகளால் அவற்றைக் கட்ட முடியாது. இன்றைக்கு புதிதாகக் கடன் கொடுப்பது எப்படி இருக்கிறது என்றால் ஏதோ பேப்பரில் மாற்றி மாற்றி எழுதி கடன் கொடுத்ததாகக் கணக்கு வருகிறதே தவிர தேவப்படும் விவசாயிக்கு கடன் வழங்கும் நிலை குறைந்து வருகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. என். வரதராஜன்] [1984 மார்ச் 5

இந்தத் திருத்தச் சட்டம் கூட்டுறவுத் துறைக்கு தேர்தல் நடத்து வதை, விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய கடன் பளுவைக் குறைத்து, அவர்களுக்கு பாதுகாப்பு கொடுப்பதை, விவசாயி களுக்கு புதிய கடன் கொடுப்பதை, தடை செய்வதாக இருக் கிறது. வறட்சியால் பெரும் பாதிப்பு ஏற்பட்டு, அதற்குப் பின்னால் மழை பெய்து அதனாலும் நாசமடைந்திருக்கிற விவசாயப் பெருங்குடி மக்களுக்கு விரைவாக விவசாயப் பணி களை மேற்கொள்ள புதிய கடன் தேவைப்படுகிறது. அவர் களுக்கு இந்தக் கடனைக் கொடுப்பதற்குக் கூட கூட்டுறவுத் வுறைக்கு உடனடியாக தேர்தலை நடத்த வேண்டியது மிக மிக விவசியம் என்று வற்புறுத்தி அமர்கிறேன்.

(முற்பகல் 11-30)

திரு. பொ. உத்திரபதி : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர் களே, கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்டத்தின் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார் பாக சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இப்படி தனி அதிகாரிகளை தொடர்ந்து நீட்டித்துக் கொண்டிருப்பது சரியல்ல. கூட்டுறவுத் துறைக்கு என்று ஒரு முழுமையான சட்டம் வந்தால் தான் கூட்டுறவுத் துறையில் இருக்கக்கூடிய இடையூறுகளைப் போக்கி, தேர்தல் நடத்தி, கூட்டுறவுத் துறை மக்களுக்கு ஆக்கப்பூர்வமான பணிகளை முழுமையாகச் செய்ய முடியும் என்று சொல்லி, இந்த சட்ட மன்றத்தில் ஒரு சட்டத்தைக்கொண்டு வந்து நிறைவேற்றினோம். நாம் நிறைவேற்றிய அந்தச் சட்டம் ஜனாதிபதிக்கு அனுப்பப் பட்டு, ஜனாதிபதி அனுமதி அளித்துவிட்டார் என்று நான் கேள்விப்படுகிறேன். அப்படி அனுமதி கிடைத்து, சட்டம் வந்த பிறகும் தேர்தலை நடத்தாமல் மீண்டும் தனி அதிகாரிகளுடைய பதவியை நீட்டிப்பது என்பது சரியல்ல.

நீங்கள் அடிக்கடி சொல்கிறீர்கள். நாங்கள் மக்களைக் கண்டு பயப்படவில்லை. மக்கள் எங்களுக்கு வாக்களிப்பார்கள் என்று சொல்கிறீர்கள். ஆனால் கூட்டுறவுத் துறையில் தேர்ந்தெடுக்கப் பட்ட அமைப்பு இல்லாததால் இன்றைக்கு எத்தனையோ சொசைட்டிகளில் தனி அதிகாரிகள் ஊழல் புரிந்து, இந்த ஆட்சி யால் பலர்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு, அவர்கள் வெளி யேற்றப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, தனி அதிகாரிகள் காலத்தில் ஊழல் மலிந்துவிட்டது என்பது உங்களுக்கேத் தெரியும்.



1984 மார்ச் 5] [திரு. பொ. உத்திராபதி]

சென்ற ஆண்டு நான் ஒரு ஊழலைப்பற்றி அரசின் கவனத் திற்குக் கொண்டுவந்தேன். திருத்துறைப்பூண்டியில் ஒரு கூட்டு றவு அங்காடியில் ஒரு தனி அதிகாரி தீபாவளிக்கு துணி கொள் முதல் செய்த வகையில் ஆயிரக்கணக்கான ரூபாய்க்கு ஊழல் செய்துவிட்டது பற்றி அமைச்சரிடம் தெரிவித்தேன். அதுபற்றி நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்; இல்லை என்று சொல்ல வில்லை. ஆக இப்படி தனி அதிகாரிகள் நீட்டிப்பால் கூட்டுறவுத் துறையில் பல்வேறு ஊழல்கள் நடைபெறுகின்றன. இந்த ஊழல்களைப் போக்க வேண்டுமென்றால் உடனடியாக தேர்தலை நடத்த வேண்டும். தேர்தலை நடத்து வதற்குப் பதிலாக மறுபடியும் தனி அதிகாரிகள் பதவிக்காலத்தை நீட்டிப்பது முறையல்ல.

கூட்டுறவுச் சங்கங்களில் விவசாயக் கடன் வழங்குகிறார்கள். இன்றைக்கு பல்வேறு காரணங்களால், தொடர்ந்து வறட்சி, வெள்ளம் போன்ற இயற்கைச் சூழல்களால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டு மிகவும் கஷ்டமான ஒரு நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் தனி அதிகாரிகள் அரசாங்கத்திற்கு உண்மையான கணக்கைக் காட்டுவது இல்லை. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் தஞ்சை மாவட்டத் தில் கடந்த மாதம் ஏற்பட்ட பெரிய வெள்ளச் சேதத்தைக்கூட அங்கே இருக்கக்கூடிய அதிகாரிகள சரியாக கணக்கு எடுக்காமல் முதலமைச்சருக்கு தவறான கணக்கு கொடுத்து முதலமைச் சரும் அது சரி என்று அறிவித்து, அதற்குப் பின்னால் முதல மைச்சர் நேரடியாக வந்து பார்த்து உண்மையை அறிவித்தார் கள். இதற்கு என்ன காரணம்? கூட்டுறவுத் துறையில் இருக்கிற தனி அதிகாரிகள் பாதிப்புக் கணக்கை சரியாக எடுக்காததுதான்.

அவர்கள் சரியான கணக்கைக் கொடுக்காத காரணத்தால் தஞ்சை மாவட்டத்தில் 22-ந் தேதி முதல் 31-ந் தேதி வரையில் வெள்ளப் பெருக்கம் ஏற்பட்டு, தஞ்சை மாவட்டமே வெள்ளத்தில் மிதக்கிறது. ஆனால் கும்பகோணத்தில் இருக்கிற மத்திய வங்கி தனி அதிகாரி அவருடைய கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக வழங்கப்பட்ட கடனை வசூல் செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். பணம் கட்ட வில்லை என்றால் ஜப்தி செய்யச் சொல்லி, ஜப்தி நோட்டீஸ் அனுப்புகிறார். அதை எல்லாம் வாங்கி அரசுக்கு அனுப்பி யிருக்கிறோம். தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகள் இருந்தால் விவசாயிகளுடைய உண்மையான துயரங்களை எடுத்துச்சொல்லி தகுந்த பரிகாரம் காண வழி ஏற்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பு இல்லாத காரணத்தால் தஞ்சை மாவட்டமே வெள் ளத்தில் மிதக்கும்போது தனி அதிகாரி விவசாயக் கடனை வசூல் செய்ய ஜப்தி நோட்டீஸ் அனுப்பியிருக்கிறார். இப்படிப்பட்ட சங்கடங்களைப் போக்க தேர்தலை விரைவிலே நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும்.

[திரு. பொ. உத்திராபதி] [1984 மார்ச் 5

விவசாயிகள் பெருத்த கஷ்டத்தில் இருக்கிற இந்த நேரத்தில்
கூட அமைச்சரவர்கள் தஞ்சை, புதுக்கோட்டை, திருச்சி தவிர
மற்ற இடங்களில் நிர்ப்பந்தம் இல்லாமல் வசூல் செய்ய வேண்டு
மென்று திருச்சியிலிருந்து பேட்டி கொடுத்திருக்கிறார்கள்.
விவசாயிகள் கூட்டுறவுத் துறையில் பெற்றிருக்கக்கூடிய கடன்
அளவு அவர்கள் வைத்திருக்கிற நிலத்தின் மதிப்பைவிட அதிகமாகி
விட்டது. அவர்களால் கடனை திருப்பிச் செலுத்த முடிய
வில்லை. ஆகவே, அந்தக் கடனை தள்ளுபடி செய்து, தஞ்சை
மாவட்ட விவசாயிகளைப் பாதுகாக்க அமைச்சரவர்கள் நட
வடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கூட்டுறவு
ஊழியர்கள் பணியாற்றுகிறார்கள். இப்போது பல
கூட்டுறவுச் சங்கங்களுக்கு வருமானம் இல்லாமல், 3, 4
மாதங்கள் சம்பளம் கிடைக்காமல் பணியாளர்கள் கஷ்டப்படு
கிறார்கள். செயலாளர்களுக்கு மாதாமாதம் சம்பளம் கொடுத்து
விடுகிறார்கள். கிளார்க் போன்று கீழ்நிலையில் பணியாற்றுகிற
வர்களுக்கு சம்பளம் கிடைக்கவில்லை. ஏனென்றால், இந்தச்
சொசைட்டிக்கு வருமானம் இல்லை ஆகையால் சம்பளம்
இல்லை என்று சொல்கிறார்கள். 3, 4 மாதங்கள் எப்படி
சம்பளம் இல்லாமல் இருக்கமுடியும்? செயலாளர்களுக்கு எப்படி
மாதாமாதம் சம்பளம் வழங்கப்படுகிறதோ, அதே போல்
கீழ்நிலையிலுள்ள, குறைந்த சம்பளம் வாங்கக்கூடிய சிப்பந்தி
களுக்கும் சம்பளம் கிடைக்க அமைச்சரவர்கள் நடவடிக்கை
எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒவ்வொரு ஜூலை மாதமும் கூட்டுறவு ஆண்டு
ஆரம்பிக்கும். இப்போது 6 (ஆறு) மாதம் நீட்டிக்
கிறார்கள். ஆறு மாதம் என்றால் ஜூலை மாதத்தை கடந்துவிடு
கிறோம். புதிய திட்டங்கள் வந்தால் அடுத்த ஆகஸ்ட் மாதத்
திலிருந்து இந்தக் கூட்டுறவுத்துறையை செம்மையாக செயல்
படுத்தமுடியும். அதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பு வர
வேண்டும். ஆறு மாதம் நீட்டிக்கப்பட்டதோடு, ஜூலை மாதத்
தைக் கடந்துவிட்டால், வரக்கூடிய புதிய நிர்வாகத்தை தனி
அதிகாரியிடமே கொடுத்துவிட்டால், மேலும் ஊழல் நடக்கும்.
இதற்கு வாய்ப்பளிக்காமல் அமைச்சர் அவர்கள் எல்லாக் கட்சி
பிரதிநிதிகளை கலந்தாலோசித்து, இந்த ஜூன் மாதத்திலேயே
தேர்தலை நடத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.
ஜனநாயகத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கக் கூடிய அளவிற்கு
தமிழக, மக்களுக்கு முன்னாலே, தேர்தல் வராது போலிருக்கிறதே
என்ற அந்த நிலையை போக்க ஜனநாயகத்திற்கு முக்கியத்துவம்
கொடுத்து தேர்தலை ஜூன் மாதமே நடத்தவேண்டும். தமிழகத்
திலே கூட்டுறவுகளில் தனி அதிகாரிகளுடைய ஆட்சிதான் நடக்



1984 மார்ச் 5] [திரு. பொ. உத்திராபதி]

கின்ற மனோபாவம் மக்களிடையே இருக்கிறது. ஆகவே அதைப்
போக்குகின்ற முறையில் இந்தக் கூட்டுறவுக்களுக்கான தேர்
தலை ஜூன் மாதத்தில் நடத்தி, அந்தப் புதிய அமைப்பை உரு
வாக்குவதற்கு வசதி செய்துதரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு
இந்தச் சந்தர்ப்பம் அளித்ததற்காக நன்றிகூறி அமைகிறேன்.
வணக்கம்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு மாற்
றுத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவு மேதகு
ஆளுநர் அவர்களால், அவசரச் சட்டத்தின் மூலமாக 8—12—1983
லிருந்து மார்ச் 9 ஆம் தேதி முடிய 3 மாத காலம், தனி அலு
வலருடைய பதவிக் காலம் நீட்டிக்கப்பட்டதை ஏற்கவும்,
9—3—1984 முதல் மேலும் 6 மாத காலம் தனி அலுவலருடைய
பதவிக் காலத்தை நீட்டிக்க வேண்டிய அவசியம் உள்ளது என்ற
காரணத்தினாலேயும், இந்தச் சட்ட முன்வடிவு அவையில் நிறை
வேற்றப்பட கொண்டு வரப்பட்டிருக்கிறது. மாண்புமிகு மன்றத்
தினுடைய உறுப்பினர்கள் பேசுகிறபோது ஜனநாயக ரீதியில்,
மக்களுடைய பிரதிநிதிகள் பொறுப்புக்களை ஏற்று, கூட்டுறவு
அமைப்புகளை நடத்தி அதற்குரிய சந்தர்ப்பமும், வாய்ப்பும்
அளிக்க வேண்டுமென்று இங்கே எடுத்துச் சொன்னார்கள். இறுதி
யாகப் பேசிய சட்டமன்ற உறுப்பினர் திரு. உத்திராபதி அவர்கள்
ஜூன் மாதத்திலேயே தேர்தலை நடத்த முயற்சியுங்கள் என்று
கேட்டுக் கொண்டார்கள். இராசமாணிக்கம் அவர்கள் பேசுகிற
போது மானியக் கோரிக்கையிலே இதையெல்லாம் பேச வேண்
டும் என்று சொல்லியும், தொடர்ந்து விவசாய மக்கள் மத்தியில்
இருக்கின்ற பல்வேறு விதமான பிரச்சினைகளை எடுத்து வைத்
தார்கள். இந்த அரசைப் பொறுத்த வரைக்கும், திரு. உத்திரா
பதி சொன்னதைப் போல, இங்கே மன்றத்திலே அடிக்கடி சொல்
வார்கள். நீங்கள் ஏன் தேர்தலுக்கு பயப்படுகிறீர்கள் ? நீங்கள்
தான் வெற்றி அடைவீர்கள் என்று சொன்னார்கள். இப்போது
சொல்கிறபோது கூட, அந்த நம்பிக்கையின் அடிப்படையில் சொல்
கிறோம், தேர்தலை நடத்துவதிலே இந்த அரசு பயப்படவில்லை.

(முற்பகல் 11—40)

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் மேலே மக்கள்
கொண்டிருக்கிற ஈடுபாடும், அன்பும் இந்த நாடறிந்த ஒன்றுதான்.
எனவே அவர்கள் சொன்னதைப் போல, தட்ப வெப்ப நிலை
பாதிக்கப்படாமல் இருக்கிற சூழ்நிலையில் இப்போது கூட ஏன்
நீங்கள் தேர்தலைத் தள்ளிப் போடுகிறீர்கள் என்று கேட்டார்கள்.
எங்களைப் பொறுத்தவரையில் தட்ப வெப்ப நிலை கணக்கிலே
கொண்டு அதற்காக தேர்தலைத் தள்ளி வைக்கப்பட வில்லை
என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்
டிருக்கிறேன். புதிய சட்டத்தின் கீழ் தேர்தல்கள் நடத்தப்படும்
என்று அறிவித்தீர்கள். புதிய சட்டம் ஜனாதிபதி அவர்களால்
ஏற்கப்பட்டதற்குப் பின்னாலே, ஏன் தேர்தல்கள் நடத்தப்பட

வில்லை என்று இங்கே கேட்கப்பட்டது. 1983 ஆம் ஆண்டு
கூட்டுறவுச் சங்கங்களுக்கான சட்டம் (தமிழ்நாடு சட்டம் 30/
1983), 1–11–1983 அன்று தமிழ்நாடு அரசிதழிலே வெளியிடப்
பட்டது. இந்தியா முழுமைக்கும் கூட்டுறவுத் துறைக்கு, கூட்
டுறவு அமைப்புக்களுக்கு, வழி காட்டுகிற சட்டமாக பல்வேறு
புது அம்சங்களை உள்ளடக்கியதாகவும், கிராமங்களிலே இருக்
கிற ஏழை எளிய சாதாரண மக்கள், கூட்டுறவுத் துறைகளிலே,
பிரதம சங்கங்களிலே இடம் பெறத்தக்க அளவிலே பல்வேறு
விதமான மக்கள் நலனைக் கருத்திலே கொண்டு, மாற்றங்கள்
பெற்றிருப்பதாக இந்தப் புதுச் சட்டம் அமைந்திருக்கிறது.
அதன் கீழே விதிகளை உருவாக்குகிற பணிகள் ஏறக்குறைய நிறை
வேறுகிற நிலையில் இருக்கின்றன. அப்படி விதிகளை நிறை
வேற்றியதற்குப் பின்னால் பங்க்சனல் ரிஜிஸ்ட்ரார் என்று சொல்
லப்படுகிற, இயங்கு பதிவாளர்களுடைய கருத்துக்கள், நிறை
வேற்றப்பட்ட அந்த விதிகளின் மேலே கருத்துக்களைக் கேட்ப
தற்காக அவர்களுக்கு, அந்த விதிகளின் கோவைகள் சுற்றுக்கு
அனுப்பப்பட்டு இருக்கின்றன.

அதைப் போலவேதான் செலக்ட் கமிட்டியிலே, ஆய்வுக்
குழுவிலே உறுப்பினர்களாக இருந்த மாண்புமிகு சட்டமன்ற
உறுப்பினர்களுக்கும் அந்த விதிகள் தயாரானதும், ஆய்வுக் குழு
உறுப்பினர்களுக்கு, மீண்டும் சுற்றுக்கு அனுப்பப்படும். அவர்
களுடைய கருத்துக்களும் கேட்கப்படும் என்று இந்த மன்றத்திலே
கொடுக்கப்பட்ட அந்த வாக்குறுதியைக் கருத்திலே கொண்டு,
விதிகள் செய்ததற்குப் பின்னாலே, செலக்ட் கமிட்டி உறுப்பி
னர்களுக்கு அனுப்பப்பட வேண்டியிருக்கிறது. அவர்களுடைய கருத்
துக்களையும் கேட்டு, விதிகளை இறுதியாக்கி, வெளியிட்ட
பின்னால், சட்ட பூர்வமான அறிக்கை, ஸ்டேச்
சுட்டரி நோட்டிபிகேசன், பதிவாளர்கள், சட்டத்துறை
அதிகாரிகளோடு கலந்து, அதற்குப் பின்னாலே, வெளியிட
வேண்டியிருக்கிறது. பிறகு புதுச் சட்டம் அமுல்படுத்தும் தேதியை
அறிக்கை மூலமாக அறிவிக்கப்பட்ட பிறகு, புதுச் சட்டத்தின்
கீழே தேர்தல் நடக்க இருக்கின்ற காரணத்தால், தேர்தல்
அதிகாரிகளாக செல்ல இருக்கிற கூட்டுறவுத் துறையைச் சேர்ந்த
அதிகாரிகளுக்கு, இந்தத் தேர்தலை நடத்த பயிற்சி
அளிக்க வேண்டியிருக்கிறது. ஆகவே நான் சொன்ன இந்தக்
காரணங்களை மனதிலே கொண்டு, இவற்றுக்கு எல்லாம் கால
தாமதம் ஆகும் என்ற காரணத்தால்தான், ஏற்கனவே தனி
அதிகாரிகள் இயங்கிக் கொண்டு இருக்கிற அந்த அமைப்புக்களிலே
அவர்களுடைய பதவிக் காலத்தை மேலும் 6 மாதம் நீட்டிப்பதற்கு
இந்தச் சட்ட முன் வடிவு இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிறது.
இதிலே மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகிறபோது ஜனநாயக
ரீதியாக அமைப்பே இல்லை என்றார்கள். நான் இங்கே சொல்ல
வேண்டும் என்றால், ஏறக்குறைய 380 அமைப்புக்களிலேதான்
தனி அதிகாரிகள் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறார்கள்





ஏறக்குறைய 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பலவிதமான அமைப்
புக்களிலே, 1972 வாக்கிலே தேர்தல் நடந்த போது, அப்போது
திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே இருந்தபோது, அப்
போது வந்த, அந்தச் சங்கங்களிலே தேர்ந்தெடுக்கப்பட்டவர்
கள்தான், இன்னும் கிராமக் கடன் சங்கங்களிலே, சேவா சங்கங்
களிலே, தொடர்ந்து தலைவர் பதவிகளிலே பொறுப்பேற்று
நடத்திக் கொண்டிருக்கிறார்கள். எனவே எங்களைப் பொறுத்த
வரையில் இப்போது மக்கள் யாரை விரும்புகிறார்களோ, அவர்
களை, இப்போது இருக்கிற 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட அமைப்
புக்களிலே, 1972 வாக்கிலே தேர்ந்தெடுக்கப்பட்ட அவர்களை
மக்கள் விரும்பினால் வைத்துக் கொள்ளவும், மாற்ற விரும்பி
னால், மாற்றவும், அதற்கு ஏற்ப தேர்தலை நடத்த வேண்டும்
என்றுதான் இந்த அரசு மிக ஆவலோடு இருக்கிறது. எனவே
தற்போது 6 மாதம் அவகாசம் வேண்டும் என்று கேட்டிருக்
கிறோம். எவ்வளவு விரைவிலே தேர்தலை நடத்த முடியுமோ,
அவ்வளவு விரைவிலே தேர்தலை நடத்த இந்த அரசு தயாராக
இருக்கிறது என்பதை, இந்த உத்தரவாதத்தை மாண்புமிகு முதல்
அமைச்சர் அவர்கள் சார்பிலே, தெரிவித்துக் கொண்டு, விவ
சாயிகளுடைய கடன்களைப் பொறுத்தவரையில், இங்கே நண்பர்
இராசமாணிக்கம் அவர்கள் பேசுகிறபோது பல்வேறு விதமான
கருத்துக்களைச் சொன்னார்கள். விவசாயிகளுடைய கடன்களை,
தள்ளுபடி செய்வதாக அரசு ஏற்கெனவே அறிவித்திருந்ததே.
அதற்கேற்ப நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை
யே என்று இங்கே பேசுகிறபோது சுட்டிக் காட்டினார்கள். நான்
சொல்வேன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததைப்
போல, ஏறக்குறைய சுமார் 200 கோடி ரூபாய் அளவுக்கு சிறு
விவசாயிகளுக்கு கடன்களை தள்ளுபடி செய்தும் நடுத்தர கடன்
களை நீண்ட கால கடன்களாக மாற்றி அமைத்தும், பல்வேறு
விதமாக விவசாயிகளுக்கு நன்மை பயக்கிற பல பணிகளில் இந்த
அரசு இந்தியாவுக்கே வழி காட்டியாக செயல்பட்டு வருகிறது.
விவசாயிகளைப் பொறுத்த வரைக்கும் விவசாயிகளுக்கும கன்ஸ்யூ
மர்ஸ் என்று சொல்லப்படுகிற நுகர்வோர்களுக்கும் நன்மை
தரக்கூடிய பல்வேறு விதமான முயற்சிகளை இந்த அரசு மேற்
கொண்டு வந்திருக்கிறது.

விவசாயக் கடன்களைத் தள்ளுபடி செய்வதைப் பொறுத்த
வரைக்கும் மத்திய அரசு அதனை ஏற்றுக் கொள்ளவில்லை.
ஏற்கெனவே தள்ளுபடி செய்வதைக் கூட கண்டித்து, இந்த நிலை
தொடருமேயானால் நிதி உதவி நிறுத்தப்பட உள்ளதாக நபார்ட்
நிறுவனம் நமக்கு எச்சரிக்கை செய்துள்ளது. ஆகவே, இயற்கை
யின் பாதிப்பால் பாதிக்கப்பட்டிருப்பவர்களுக்கு கடன் தள்ளுபடி
செய்ய, வட்டி தள்ளுபடி செய்ய, இயற்கையின் சீற்றத்தால்
பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண நிதியாக உதவி செய்திட

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1984 மார்ச் 5

முன் வர வேண்டும் என்று மத்திய அரசை இந்த அரசு கேட்டுக் கொண்டிருக்கிறது. என்பதை இந்த நேரத்திலே சொல்லி, கொண்டு வரப்பட்டிருக்கிற சட்டமுன் வடிவினை ஏற்றுக் கொண்டு கொடுக்கப்பட்டிருக்கிற திருத்தங்களை திரும்பப் பெற்றுக் கொண்டு நிறை வேற்றித் தருமாறு கேட்டுக்கொள் கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் : (திரு. வே. இரா. ஜெய ராமன்) : பேரவை முன்னுள்ள கேள்வி :

" தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/1984) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும். "

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொளளப்பெற்றது.

பிரிவுகள் 2, 3 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந் தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு மாற் றுத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங் கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/ 1984) நிறைவேற்றப் பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.



1984 மார்ச் 5]

(ஈ) ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1984.

(உ) ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நிய மித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு 1984.

(ஊ) ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு 1984.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன் :

" தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதி காரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு ** (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 4/1984) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும் ".

அத்தோடு இன்னும் 3 மசோதாக்கள் இது குறித்தே இருக கின்றன. ஆகவே நான்கையும் இங்கே சேர்த்து ஒன்றாக எடுத்துக் கொள்வதால், மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய மேலான கருத்துக்களைத் தெரிவிக்க வாய்ப்பாக இருக்கும். ஏனென்றால் ஏற்கெனவே பஞ்சாயத்துத் தேர்தல்கள் பற்றியும், நகராட்சித் தேர்தல்கள் பற்றியும் ஆளுநர் உரையிலேயே தேதிகள் குறிக்கப் பட்டு அறிவிக்கப்பட்டு விட்டன. அதற்குரிய நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, அதிகமான பேச்சுக்கே இதில் இடம் இல்லை என்று நினைக்கிறேன். ஆகவே, பேச்சே கூட இல்லாமல் இவைகளை நிறைவேற்றித் தரலாம் என்று நான் மாண்புமிகு தலைவர் அவர்களின் மூலமாகக் கேட்டுக் கொள் கிறேன். ஏனென்றால் எல்லா வேலைகளும் தீவிரமாக நடை பெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதைக் குறிப்பிடக் கடமைப் பட்டிருக்கிறேன் (குறுக்கீடு).

திரு. துரைமுருகன் : பஞ்சாயத்து நிர்வாகமும், நகராட்சி நிர்வாகமும் இரண்டும் வெவ்வேறானவை. ஆகவே, பஞ்சாயத்து தனியாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். நகராட்சிகள் தனி யாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். இரண்டிலும் சட்ட வேறுபாடுகளும், நிலைமை வேறுபாடுகளும் இருக்கின்றன. நக ராட்சிகள் பற்றித் தனியாக செய்திகள் இருக்கின்றன. பஞ்சாயத் துக்கள் பற்றித் தனியாக செய்திகள் இருக்கின்றன. ஆகவே, தனித்தனியாக (குறுக்கீடு).

Sorry, we are objecting....

தனித்தனியாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்கிற எங்களுடைய கருத்தை சபாநாயகரிடம் சொல்கிறோம். ஏற்கெனவே அப் பிடிப்பட்ட மரபுகள் நம்முடைய அவையிலே கடைப்பிடிக்கப்பட் டிருக்கின்றன.

---

** 1984 ஆம் ஆண்டு பிப்ரவரி 18 ஆம் தேதி தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

(முற்பகல் 11–50)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் : (திரு. வே. இரா. ஜெயராமன்) : சில நேரங்களிலே ஒன்றாக எடுத்துக்கொண்டிருக்கிறோம். ஒன்றாக எடுத்துக்கொண்டு பேசுகிறவர்கள் ஒன்றாகப் பேசிக்கொள்ளலாம். ஓட்டெடுப்பிற்கு வருகிறபோது தனித்தனியாக எடுத்துக்கொள்ளலாம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

திரு. துரைமுருகன் : ஊராட்சிகளின் நிலைமை வேறு, நகராட்களின் நிலைமை வேறு, தங்களுக்குத் தெரியும். ' யு ஆர் வெல்-நோன் லெனர்டு லாயர் '.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒன்றாக எடுத்துக் கொண்டால் நேரம் மிச்சமாகும். சீக்கிரமாக முடித்துவிடலாம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தனித்தனியாக எடுத்துக் கொள்ளலாம்.

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, இங்கே நேரத்தின் அருமையைக் கருதி விரைவிலே முடிக்கவேண்டுமென்று சொல்லி, நாங்கள் தேதியையே அறிவித்து விட்டோம், ஆகவே பேசாமலே நிறைவேற்றலாம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த நேரத்தைப் பயன்படுத்திக் கொண்டு குறைந்த பட்சம் ஊராட்சிகளிலும், நகராட்சிகளிலும் உள்ள நிலைமைகளைச் சொல்வதற்கு அரசின் கவனத்திற்குக் கொண்டுவருவதற்கு முடியும். அப்படி ஏற்கனவே தெரிவிக்கப் பட்ட கருத்துக்களுக்கு பயன் ஏற்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : குறைபாடுகளைப் பற்றி எல்லாம் அந்த மானியத்திலே பேசிக்கொள்ளலாம்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இது வரையிலே இந்த மாமன்றத்தில் இந்த மசோதாக்கள் வருகிற நேரத்திலே ஒன்றாக எடுத்துக்கொண்டு கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்கள் கூறியிருக்கிறார்கள். ஏற்கனவே தேதிகள் அறிவிக்கப்பட்டு உடனடியாக தேர்தல் நடத்துவதற்கான ஆயத்தங்களை செய்துகொண்டிருக்கிறோம். (குறுக்கீடு) எப்போது நாமினேஷன் போட வேண்டும். எப்போது அறிக்கை கொடுக்கப்படும் என்பதையெல்லாம் நான் இப்போது சொல்லப்போகிறேன்.



திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தாங்கள் தீர்ப்பு சொல்லி விட்டீர்கள். அதற்குப் பிறகு அமைச்சர் அவர்கள் சொல்லலாமா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதற்கு மட்டுமில்லை, இம்மாதிரி எல்லாவற்றிற்கும் சொல்லி உறுதுணையாக இருக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு) ஊராட்சிகள் சம்பந்தப்பட்ட 3 சட்ட முன்வடிவுகளையும் ஒன்றாக எடுத்துக்கொள்ளலாம். நகராட்சி பற்றிய சட்ட முன்வடிவை தனியாக எடுத்துக்கொள்ளலாம்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

'' தமிழ்நாடு 1984-ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்த சட்ட முன்வடிவு ** (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 5/1984) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெறவேண்டும் ''.

தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு ** (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 6/1984) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்''

*திரு. பி. எம். தங்கவேல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று நமது மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்து இருக்கக் கூடிய தீர்மானத்தின் மீது நான் சார்ந்து இருக்கின்ற இந்திய தேசிய காங்கிரஸ் சார்பில் ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தங்களது குறிப்பில் கூறினார்கள்: 1979 ஆம் ஆண்டிலிருந்து பல முறை இந்த தனி அதிகாரிகள் கால நீட்டிப்பை கேட்டு வந்து இருக்கிறார்கள் என்று. (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒருசிறந்த வழக்கறிஞர் என்பது நாடு அறிந்த உண்மை. நாம் கோர்ட்டில் வாய்தா வாங்குவதைப் போல் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்று தனி அதிகாரிகள் நியமனத்தை அடிக்கடி தள்ளிப் போட்டுக்கொண்டு வருவது சாலச் சிறந்தது அல்ல என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே ஊராட்சி ஒன்றியங்களில் பல முறைகேடுகள் நடந்து கொண்டு இருப்பது நாடு அறிந்த விஷயம். தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு உறுப்பினர் இல்லாததால் பஞ்சாயத்து போர்டு ஆனாலும் சரி, பஞ்சாயத்து யூனியன் ஆனாலும் சரி, அங்கு எல்லாம் பல

** 1984 ஆம் ஆண்டு பிப்ரவரி 18 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

ஊழல்கள் அதிகரித்து இருக்கிறது. எனது தொகுதியில் உள்ள கடலூர் பஞ்சாயத்து யூனியனில் பல முறைகேடுகள் நடந்தது அது பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் அங்குள்ள மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் எடுத்து கூறியதன் விளைவாக அங்கிருந்த ஈ.ஓ.பி. சஸ்பெண்டு செய்யப்பட்டு இருக்கிறார். யூனியனில் உள்ள என்ஜினியர் சஸ்பெண்டு செய்யப்பட்டு இருக்கிறார். இன்னும் பல கிளார்க்குகள் சஸ்பெண்டு செய்யப்பட்டு இருக்கிறார் கள். ஈ.ஓ.பி., கடலூர் ஏறத்தாழ 21 பஞ்சாயத்துக்களில் எந்த வேலையும் செய்யாமல் லைட் போட்டதாகவும், பம்புசெட் ரிப்பேர் செய்ததாகவும் பல பொய் கணக்குகளை எழுதி அந்த யூனியன்களுடைய பணத்தை கொள்ளை அடித்து இருக்கிறார்கள் அது சம்பந்தமாக சஸ்பெண்டு செய்யப்பட்டு இருக்கிறார்கள். அவர் மேல் டிபார்ட்மெண்டு ஆக்ஷன் மட்டும் போதாது, அவர்கள் மேல் கிரிமினல் ஆக்ஷன் எடுக்க வேண்டும், என்று கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். பஞ்சாயத்து போர்டு தலைவர் தேர்தல் ஏப்ரல் மாதத்தில் நடக்குமா என்பது சந்தேகக் குறியாக இருக்கிறது.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை).

ஏப்ரலில் தேர்தல் வருகிறது என்றால் ஆளும் கட்சிக்காரர் களும், எதிர் கட்சிக்காரர்களும் தேர்தல் வேலைகளை ஆயத்தமாக செய்யவேண்டும். எதிர்க்கட்சிக்காரர்கள் தேர்தல் வேலைகளை ஆயத்தமாக செய்துகொண்டு இருக்கிறார்கள். ஆனால் ஆளும் கட்சிக்காரர்கள் தேர்தல் வேலைகளில் எந்தவிதமாக ஆயத்தத் தையும் செய்யாமல் இருப்பதன் காரணத்தால், கிராமத்திலுள்ள மக்களும் நகரத்தில் உள்ள மக்களும் தேர்தல் வராதுபோல் இருக்கிறது என்று பேசிக்கொள்கிறார்கள். மாண்புமிகு அமைச் சர் அவர்களை இந்த சமயத்தில் கேட்டுக்கொள்கிறேன். பஞ்சாயத்து தேர்தல் குறிப்பிட்டப்படி ஏப்ரல் மாதத்தில் நடை பெறும் என்று அறிவிக்கவேண்டும் என்று கேட்டு என் உரையை முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த சட்டப் பேரவையில் இது போன்று ஊராட்சி மன்றங்கள், அல்லது ஒன்றியங்கள் தனி அதிகாரிகளின் பதவி காலத்தை நீட்டிப்பது பல காலங்களில் ஆளுநர் அவர்களின் மூலமாகவோ நாம் நிறைவேற்றுவது அவசர சட்டத்தின் மூலமாகவோ அல்லது பேரவையின் ஒப்புதலை வைத்து பெற்றுக்கொண்டு இருக்கிற ஒரு சடங்காக, அது வாடிக்கையாக நடை முறை காரியமாக இது நிகழ்ந்து கொண்டு இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை அறிமுகப்படுத்துகின்றபோது சொன் னார்கள் தேதியை அறிவிக்கப்போகிறேன். விவாதம் வேண்டுமா என்றார்கள், இப்படி பல முறை தேதி அறிவித்து நாமினேஷன் போடவைத்து அதற்கு பிறகு அந்த வேட்பாளர்கள் கட்டணத் தொகையை திருப்பி வாங்கிக்கொள்ளுங்கள் என்று உத்திரவிட்டு



காரணத்தினால் உங்கள் மீது எங்களுக்கு மட்டும் அல்ல, நாட்டில் இருக்கின்ற கிராம மக்களுக்கு ஒரு நம்பிக்கை ஏற்பட மாட்டேன் என்கிறது. இந்த நேரத்தில் நான் அமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஏப்ரல் 19 என்று அறிவித்து இருக்கிறீர்கள். இந்தப் பேரவைக் கூட்டம் ஏப்ரல் முதல் வாரம் வரை நடைபெறுவதாக சொல்லியிருக் கிறார்கள். ஆனால் நீங்கள் எப்படி தேர்தலை நடத்தப்போகி றீர்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே விளக்குவார்கள் என்பதை நான் நம்புகிறேன். ஆனால் பொதுவாக கிராமங்களிலும் சரி, நகரங்களிலும் சரி ஆளும் கட்சியைச் சேர்ந் தவர்களே தேர்தல் நடைபெறாது என்று சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். அதை அமைச்சர் அவர்கள் சொன்னால் நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஆளும் கட்சிக்காரர்கள் தேர்தல் நடைபெறாது என்று சொல்லுகிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகிறார்கள் ஒரு தவறான செய்தியை இங்கே நீங்கள் சொல்லிவிடக்கூடாது என்பதற்காக இதை கூறுகிறேன்.

ஏன் என்றால் ஏற்கனவே நாம் ஆளுநர் உரையிலே சொல்லிய தற்கு பின்னாலே இந்த ஆட்சி அதற்குரிய நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு இருக்கின்ற நேரத்தில் ஆளும் கட்சிக்காரர்கள் இப்படி சொன்னதாக தவறான செய்தியை தயவுசெய்து சொல்ல வேண்டாம். உங்களுக்கு வேண்டிய எண்ணம் அப்படி இருந்தால் நடக்கக்கூடாது என்ற எண்ணம் இருந்தால் தயவுசெய்து அதை வெளியிடுங்கள் நான் வேண்டாம் என்று சொல்லவில்லை.

(நண்பகல் 12—00)

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு மாற்றுத் தலைவ ரவர்களே, எங்களுடைய அபிப்பிராயத்தைத்தான் ஒவ்வொரு முறையும் நாங்கள் சொல்லியிருக்கிறோம். தேர்தல் வையுங்கள் தேர்தலை வைத்தால் நாங்கள் சந்திக்கத் தயாராக இருக்கி றோம் என்று இந்தப் பேரவையிலேயே பலமுறை வேண்டியும் இருக்கிறோம் ; சவால் விட்டும் இருக்கிறோம் ; பணிவாகவும் கேட்டிருக்கிறோம். ஆனால் நீங்கள் எந்தத் தேர்தலையாவது நடத்த முன் வந்திருக்கிறீர்களா? சற்று முன்புகூட, கூட்டுறவுத் துறை அமைச்சரவர்கள் பதில் கூறினார்கள். கூட்டுறவுத் துறை சட்டங்கள் எல்லாம் இயற்றப்பட்டன. ஆனால் அதில் என்ன ஆயிற்று? அதற்கு யார் குறுக்கே நின்றார்கள் என்று கேட் கிறோம்.

[1984 மார்ச் 5

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு மாற்றுத்
தலைவரவர்களே, அந்தச் சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பட்டு
சட்டமாக ஆக்கப்பட்டு விட்டது. விதிகளெல்லாம் தயார்
செய்யப்பட்டு வருகின்றன. அதற்குப் பிறகு தேர்தல் நடக்கும்
என்று தெரிவித்தேன். எனவே, மாண்புமிகு உறுப்பினரவர்கள்
உள்ளாட்சித்துறை சம்பந்தப்பட்ட சட்ட முன்வடிவில் பேசினால்
நல்லது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர்
அவர்களே, தேர்தல் விரைவாக வரும் என்று சொல்கிறார்கள்.
அதை நாங்கள் நம்புகிறோம். தேர்தலைத் தவறாமல் அறிவித்த
தேதியிலே நடத்தினாலே தமிழ்நாட்டு மக்களின் சார்பாகவும்,
வாக்காளர்களின் சார்பாகவும் நன்றி செலுத்தக்கூடத் தயாராக
இருக்கிறோம்.

இந்தச் சந்தர்ப்பத்திலே, அந்த இலாக்காவில் இருக்கின்ற
ஒன்றிரண்டு குறைபாடுகளை நான் கூறுவது, தேர்தல் வருகின்ற
வரையில் இவைகளெல்லாம் நிவர்த்தி செய்யப்படலாம் என்ப
பதற்காக அரசுக்கு ஆலோசனையாக வைப்பதற்காகத்தான்
என்று சொல்லி, அவைகளைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சிறிது நேரத்திற்கு முன் இந்தப் பேரவையிலேயே மின்சாரம்
எப்படியிருந்தது என்பதை நாம் பார்த்தோம். அதைப்
போன்றுதான் கிராமங்களிலே உள்ள தெரு விளக்குகளெல்லாம்
எரிந்து ஆண்டுக்கணக்கில் ஆகின்றன. இவைகள் எரிவதற்கு
உள்ளாட்சித் துறை தக்க கவனம் செலுத்த வேண்டும்.

ஏற்கனவே ஊராட்சி மன்றங்களில் கட்டப்பட்ட மேல் நிலை
நீர்த்தேக்கத் தொட்டிகளும், ஆதி திராவிடர் குடியிருப்புகளிலே
கட்டப்பட்டுள்ள தரை மட்ட நீர்த் தேக்கத் தொட்டிகளும்
சிறு சிறு காரணங்களுக்காகப் பயன்படாமல் இருக்கின்றன.
100 ரூபாய், 80 ரூபாய், செலவிட்டுப் பழுது பார்த்தால் பயன்
கிடைக்கும். தற்பொழுது பெரு மழை பெய்திருக்கிறது. எனவே
கிணறுகளில் தண்ணீர் இருக்கிறது. அதை மக்களுக்கு அளிக்க
முடியும். அதைக் கூட ஒன்றியங்களின் தனி அதிகாரிகள் செய்
வதற்குத் தயங்குகிறார்கள். ஆணையாளர்கள் அதைச் செய்யா
மல் மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளும், தரை மட்ட
நீர்த் தேக்கத் தொட்டிகளும் இயங்காமல் இருந்து வருகின்றன
என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1984 மார்ச் 5] [திரு. பெ. சு. திருவேங்கடம்]

நம்முடைய அமைச்சரவர்கள் உதாரணம் சொல்ல முடியுமா
என்று கேட்பார்கள். உதாரணம் சொல்கிறேன். சமீபத்தில்
கூட, என்னுடைய ஒன்றியத்திற்கு வந்தார்கள். துரிஞ்சாபுரம்
ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள வள்ளிவாகை என்ற கிராமத்திலும்,
இனாம்காரை என்ற கிராமத்திலும் ஆதி திராவிடர்களுக்குக்
கட்டப்பட்ட தரைமட்ட நீர்த் தேக்கத் தொட்டிகளுக்கு ஒன்றிய
ஆணையாளர் செய்ய வேண்டிய கடமைகள் செய்யப்படாமல்
இருப்பதால் ஆண்டுக் கணக்கில் பயன் இல்லாமல் இருக்கின்றன.
உங்களிடத்தில் பலமுறை அதற்காக விண்ணப்பம் தந்திருக்கி
றேன். மாவட்ட ஆட்சித் தலைவரைச் சந்தித்திருக்கிறோம்.
ஆனால் அது இன்னும் இயங்காத நிலைமை இருந்து வருகிறது
என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்
பட்டிருக்கிறேன்.

நேற்று நான் அமைச்சரோடு தொலைபேசி மூலமாகத்
தொடர்பு கொண்டேன். தனி அதிகாரியின் தான்தோன்றித்
தனத்தால்தான் இன்றைக்கு இந்த அளவிற்குச் சென்றிருக்கிறது
என்பதை இந்த அவையில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கலசப்பாக்கம் ஒன்றியத்தில், கலசப்பாக்கம் கிராமம் மட்டும்
அல்ல, அதில் உள்ள 40-க்கு மேற்பட்ட ஊராட்சிகள் அனைத்தும்
கிராமப் பஞ்சாயத்துக்கள். அதில் ஒன்றுகூட நகரப் பஞ்சாயத்து
இல்லை. ஆனால் அந்த ஒன்றிய ஆணையாளர் , தன்னிச்சையாக
ஒரு ஊராட்சி ஒன்றியத் தீர்மானத்தில் கையெழுத்து இட்டாரே
யானால் அந்தத் தீர்மானம் நிறைவேறிவிடுகிறது. அதனால்
தான் தண்ணீருக்கு 1 ரூபாய், 2 ரூபாய் என்ற அளவிற்கு
வீடுகளுக்குக் குடிநீரை சப்ளை செய்தால் என்று இருந்தது
அந்தக் கட்டணத்தைப் பொறுத்தவரையில், இனிமேல் நீங்
கள் மீட்டர் வைத்தாக வேண்டும் அல்லது மாதத்திற்கு 10 ரூபாய்
கட்டணம் செலுத்த வேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்றி
அதை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பி, அவரும் அதை
அங்கீகரித்து இருக்கிறார். மாவட்ட ஆட்சித் தலைவருக்குத் தவ
றான செய்திகளை ஆணையாளர் சொல்லி அது மாவட்ட
கெசட்டிலேயும் வந்து விட்டது. இன்றைக்கு அதிகாரம் அவர்கள்
கைக்கு வந்துவிட்டது.

திருவண்ணாமலை நகரம் ஒரு முதல்தர முனிசிபாலிட்டியாகும்.
வீட்டிற்கு 10 ரூபாய் என்று நகராட்சி மன்றத்திலே செலுத்த
வேண்டும் என்று அங்கே இருக்கின்றது. ஆனால் ஆயிரம் பேர்,
500 பேர் வாழக்கூடிய சிறு சிறு கிராமங்களிலும் ஆணையாளர்
வந்ததற்குப் பிறகு கட்டணத்தை உயர்த்துகிறார். ஒரு மீட்டர்
200 ரூபாய் அளவுக்கு ஆகின்றது என்றெல்லாம் சொல்கிறார்கள்.
இது தேவையா ? எனவே இது குறித்து மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் தெளிவாகச் சொல்ல வேண்டும். ஆகவே, தற்போது
தேர்தல் வருகின்றது என்று அறிவிக்கப்பட்டுவிட்டதன் காரணத்
தால் ஊராட்சி மன்றங்களிலே உறுப்பினர்களும், தலைவர்களும்

[திரு. பெ. சு. திருவேங்கடம்] [1984 மார்ச் 5

தேர்ந்தெடுக்கப்படுகின்ற வரையில் இப்போது என்ன கட்டணம் இருந்து வருகிறதோ அதே கட்டணம்தான் நீட்டிக்கப்பட வேண்டும் என்றும் மக்களின் பிரதிநிதிகள் வந்து பிறகு வேண்டும் என்றால் அவர்கள் தேவைப்பட்டால் உயர்த்திக்கொள்ளலாம் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் தனி அதிகாரிகள் அப்படிப்பட்ட காரிங்களைச் செய்யக்கூடாது என்று நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து மக்கள் குழு என்று ஒன்றைப் போட்டிருக்கிறீர்கள். கோட்ட வளர்ச்சி அதிகாரிகள் எங்களுக்கெல்லாம் தபால் அனுப்பு வார்கள், இன்றையதினம் மக்கள் குழு கூட இருக்கின்றது என்று. ஆகவே சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்களும் அந்த மக்கள் குழுவிலே அங்கத்தினர்களாக இருப்பதால், இப்படிப்பட்ட காரியங்களைப் பற்றி எல்லாம் சட்டமன்றத்திலே சொல்வதை விட இந்த மக்கள் குழுவிலே போய்த் தெரிவித்தால் நேரடியாக நடவடிக்கைகள் எடுப்பதற்கு உதவியாக இருக்கும் என்று நினைத்து கொண்டிருப்போம். அவ்வாறு நினைத்துக் கொண்டிருக்கின்ற நேரத்தில் இன்னொரு தபால் வரும். அதாவது கோட்ட வளர்ச்சி அதிகாரிகளுக்கு மாவட்ட வளர்ச்சி அதிகாரிகளோடு கூட்டம் இருப்பதால் இந்த மக்கள் குழுவின் கூட்டம் ஒத்தி வைக்கப்படுகின்றது என்று இன்னொரு தபால் வரும். இப்படியே பலமுறை ஒத்தி வைத்திருக்கிறார்கள். மக்கள்குழுக்கூட்டம் நடப்பதில்லை. மக்கள் குழுவிற்கு பெரிய அதி காரம் ஏதும் இல்லை என்றாலும் பல்வேறு பிரச்சினைகளை பற்றி அங்கே சொல்ல வாய்ப்பு இருக்கிறது. அந்த வாய்ப்பினை கூட பயன்படுத்தாமல், எங்களுடைய ஆலோசனைகளைக் கேட்காத நிலைமையில் கூட்டங்கள் நடத்தப்படாத நிலைமைகள் இருக்கின்றன.

கிராமங்களிலே பாதைகள் எல்லாம் மிக மோசமான நிலையில் இருக்கின்றன. தற்போது பெய்த பெருந்த மழையின் காரண மாக கப்பிச்சாலைகளும், தார் சாலைகளும் மிக மோசமான நிலைமையில் இருக்கின்றன. அவற்றின் பராமரிப்புக்களைப் பற்றி ஊராட்சி ஒன்றியங்கள் கவனிப்பதே இல்லை. அதற்கு ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

துரிஞ்சாபுரம் ஒரு சிறிய கிராமம். அங்கே எல்லா வளர்ச்சி அதிகாரிகளுக்கும் குடியிருப்புக்கள் கட்டப்பட்டிருக்கின்றன. அமைச்சர் அவர்கள் கூட அந்த அலுவலகத்திற்குச் சென்றார்கள். அந்த குடியிருப்புகளிலே எல்லாம் யார் குடியிருக்கிறார்கள்? எல்லோரும் நகரத்தை நோக்கி சென்றுவிட்டார்கள். அதுபற்றிக் கேட்பதற்கு ஆள் இல்லை. கிராம சேவக்கைப் பார்க்க வேண்டுமா, திருவண்ணாமலை நகரத்திற்குத்தான் செல்ல,



1984 மார்ச் 5] [திரு. பெ. சு. திருவேங்கடம்]

வேண்டும். ஆணையாளரைப் பார்க்க வேண்டுமா, திருவண்ணா மலைக்குத்தான் செல்ல வேண்டும். இன்ஜினீயரைப் பார்க்க வேண்டுமா, திருவண்ணாமலைக்குத்தான் செல்ல வேண்டும். இப்படி அந்த குடியிருப்புக்களிலே அதிகாரிகள் தங்காத நிலைமை இருக்கின்றது. அந்த அளவுக்கு இன்றைய தினம் நிலைமை மாறி விட்டது.

கிராமங்களிலே ஊராட்சி ஒன்றியத் தலைவர்களும், உறுப் பினர்களும் இல்லாத காரணத்தால் விளக்குகள் கூட எரியவில்லை. சாலைகள் செப்பனிடப்படவில்லை; மேல்நிலைத் நீர்த் தேக்கத் தொட்டிகள் இயங்கவில்லை. மக்களின் அடிப்படைத் தேவை களான காரியங்கள் எவையும் இந்தத் தனி அதிகாரிகளால் செய் யப்படாத நிலைமைதான் இருக்கின்றது. அவர்கள் அவற்றின் நிதியைத் துஷ்பிரயோகம் செய்கிறார்கள். ஒன்றியங்களிலே இப்படிப்பட்ட நிலைமைகள் இருப்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரடியாக வந்து பார்த்தால் அவர்களே ஆதாரங்களை எடுத்து வந்து எங்களுக்குச் சொல்லாம். அப்படிப்பட்ட சூழ் நிலை இருக்கின்றது.

உதாரணமாக கலசப்பாக்கத்திலே மக்களின் பிரதிநிதிகள் மற்றும் ஊராட்சி மன்றத் தலைவர்கள் எல்லாம் இருந்தபோது, அதாவது அந்த ஊராட்சி மன்றம் கலைக்கப்பட்டபோது ஒரு இலட்ச ரூபாய் நிதி இருந்தது. அங்கே மோட்டார்கள் இருந்தன. ஆயில் என்ஜின்கள் இருந்தன. ஆனால் இன்றைய தினம் அங்கே சென்று பாருங்கள். பணம் இருக்கின்றதா என்றால் இல்லை. காரியங்கள் செய்யப்படுகின்றனவா என்றால் இல்லை. அந்தப் பணம் எல்லாம் எங்கே போனது என்று கண்டுபிடிக்க வேண்டிய வேலை மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வேலை என்பதை உங்கள் மூலமாக அவருக்கு நான் நினைவுபடுத்தி, இப்படிப்பட்ட காரியங்களில் அக்கறை செலுத் துங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிப்பட்ட தனி அதிகாரிகள் மீது தக்க நடவடிக்கைகளை எடுங்கள். கிராமங் களிலே இருக்கின்ற குறைபாடுகள் நீங்க, கிராமங்கள் மறுமலர்ச்சி அடைய ஊராட்சி மன்றத்திற்கும், ஊராட்சி ஒன்றியத்திற்கும் விரைவாகத் தேர்தலைக் கொண்டு வாருங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். மக்கள் யாரை விரும்புகிறார்களோ அவர்கள் வெற்றி பெறட்டும். தேர்தல் வந்தால்தான் மக்களின் குறை பாடு நீங்கும் என்று சொல்லி உடனடியாகத் தேர்தலை நடத்துங் கள் என்று கேட்டு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

*திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஊராட்சி மன்றம், ஊராட்சி ஒன்றியம் தனி அதிகாரிகள் காலத்தை நீட்டிக்கின்ற இந்த மசோதாவின்மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்தத் தேர்தல்கள் நீண்ட காலமாக மாகவே நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டு, இப்பொழுது கடைசியாக ஏப்ரல் மாதத்திலே நடத்தப்படப் போவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. நிச்சயமாக அந்தக் காலத்திலே நடைபெறுவதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் செய்ய வேண்டுமென்று நான் வற்புறுத்தி கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு கிராமங்களில் நீண்ட பல காலமாக ஊராட்சி மன்றங்கள் இல்லாத காரணத்தால், கிராமங்களின் தேவைகள் எந்த அளவுக்குப் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றன என்பதைப் பற்றி ஏற்கனவே இந்த மன்றத்திலே எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், கிராமத்திலே உள்ள விளக்குகள் பல ஆண்டுகளாகவே எரிவதே கிடையாது. அவை எரிகின்றனவா, இல்லையா என்று பார்த்து மின்சார இலாகாவிற்குச் செல்ல வேண்டிய ஊராட்சிமன்ற கிராம நல அலுவலர்கள் அந்த வேலையைச் செய்வதில்லை. மின்சார இலாகாவிலே உள்ள ஊழியர்களும் அதைச் செய்வதில்லை.

[பிற்பகல் 12-10]

குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற கல்லப்பாடி, வளத்தூர், சீழ்பட்டி ஆகிய கிராமங்களிலே விளக்குகள் எரியாத நிலையில் நானே ஊராட்சிமன்ற ஆணையர் அவர்களுக்கும் மின்சார இலாகாவின் அதிகாரிகளுக்கும் சொல்கிற நேரத்தில் மின்சார இலாகாவிலே இருப்பவர்கள் சொல்கிறார்கள் எங்களுக்குப் போதிய பொருள்கள் கிடைக்காத காரணத்தாலே தாமதம் ஏற்படுகிறது என்று. தமிழகம் பூராவையும் எடுத்துக் கொண்டால் இதுபோன்ற நிலைமைகள்தான் ஏற்படுகின்றன.

கிராமப்புறங்களிலே உள்ள ரோடுகளுக்கு இன்றைக்குத் தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக பல வேலைகள் செய்யப்பட்டன என்பது நமக்குத் தெரியும். சமீபத்திலே பெய்த பெருமழையின் காரணமாக, தமிழகத்திலே எல்லா கிராமப்புற சாலைகளும் இன்றைக்கு மோசம் அடைந்திருக்கின்றன. சென்ற ஆளுநர் உரையில் மழையின் காரணமாக பாதிக்கப்பட்ட ரோடுகள், போர்க்கால அடிப்படையிலே வேலைகள் துவங்கப்பட்டு சீர் செய்யப்பட்டுள்ளன என்று சொல்லப்பட்டிருக்கிறது. நான் அறிந்த வரையில் என்னுடைய தொகுதியிலே கூட பல்வேறு கிராமங்களில் ரோடுகள் இந்த மழையினால் பாதிக்கப்பட்ட நேரத்தில், அவைகளைச் சீர் செய்ய போதிய நிதி உதவி இல்லையென்று ஊராட்சி மன்றத்திலே சொல்லியிருக்கிறார்கள்.





இந்நிலை ஊராட்சி மன்றங்களில் மட்டுமல்ல, நகராட்சிகளிலும் இருக்கின்றது. குடியாத்தம் நகராட்சியிலே இந்த மழையின் காரணமாக பாதிக்கப்பட்ட ரோடுகளுக்கு நிதி ஒதுக்கம் செய்ய வேண்டுமென்று கேட்கப்பட்டு ஆரம்பத்திலே நிதி ஒதுக்கம் செய்யப்பட்டு, பிறகு இல்லையென்று சொல்லப்பட்ட நிலை ஏற்பட்டது என்று சொல்ல விரும்புகிறேன்...

அதுமட்டுமல்ல, கிராமப்புறங்களிலே, தஞ்சை, திருச்சி போன்ற பல இடங்களில் பெருமழை பெய்ததன் காரணமாக ரோடுகள் பாழ்பட்டிருக்கின்றன. அங்குள்ள குடிநீர் பைப்புகள் கூட சரிபார்க்கப்படாத நிலை இன்றைக்கு நீடித்துக் கொண்டிருக்கிறது என்பதை நாம் பார்க்கிறோம். குறிப்பாக சொல்ல வேண்டுமென்றால், தன்னிறைவுத் திட்டம் நிறைவேற்றப்பட்ட பிறகு கூட என்னுடைய தொகுதியிலே ஐயனேரி என்ற ஆதி திராவிட மக்கள் வசிக்கிற இடத்திலே, அரசுக்குச் சொந்தமான நிலத்திலே ரோடு போட முயற்சித்தபோது, அந்த நிலத்தைத் தனியார் ஒருவர் ஆக்கிரமிப்பு செய்துவிட்டார். அந்த ஆக்கிரமிப்பை அகற்ற வேண்டுமென்று ஏற்பட்ட சிக்கலில் சென்ற மாதம் 2 ஆதி திராவிடர்கள் கொலை செய்யப்பட்டு மரணம் அடையக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அதேபோல சேம்பள்ளி என்ற இடத்திற்கு, திட்டம்பள்ளி என்ற இடத்திற்கு, கொட்டாரமடுகு என்ற இடத்திற்கு ரோடு போட வேண்டுமென்று மக்கள் கேட்டு, அங்கு மக்களே ரோடு அமைத்தார்கள். அதற்கும் இன்றைக்குக் கோர்ட்டிலே தடை உத்தரவு பெற்று, அந்த ரோடை மக்கள் பயன்படுத்த முடியாத நிலை இருக்கிறது என்று சொல்ல விரும்புகிறேன்.

அதே போன்று சென்ற பட்ஜெட் கூட்டத்திலே வீரிச்செட்டிப் பள்ளி என்ற கிராமம் பற்றி நான் சொன்னேன். அந்தக் கிராமத்திற்கு இதுவரையிலே பாதையே இல்லாத நிலைமை இருக்கிறது. இப்படித் தமிழகத்திலே பூராவும் பல்வேறு பகுதிகளில் இன்றைக்கு ரோடு வசதியில்லாமல் மக்கள் கஷ்டப்படுகிறார்கள்.

தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக வறட்சியின் காரணமாக, குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசு எடுத்த நடவடிக்கையினால்— போடப்பட்டுள்ள பைப்புகளைப் பராமரிப்பதற்கான வசதிகளே இல்லாமல், ஆட்களே இல்லாமல், பிட்டர்களே இல்லாமல், மாதக் கணக்காக, பழுதுபட்டிருப்பதை அரசினுடைய கவனத்திற்குப் பல்வேறு முறைகளிலே கொண்டு வந்திருப்பதைக் கவனப்படுத்த விரும்புகிறேன்.

[திரு. சே. ஆர். சுந்தரம்] [1984 மார்ச் 5

எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் குறிப்பிட்டதைப்
போல கலசபாக்கம் கிராமத்தில் வாட்டர் டாக்ஸ், ரூ. 1 வசூ
லித்தது, தற்போது— தனி அதிகாரிகளிடம் அதிகாரம் கொடுக்கப்
பட்டதால், ரூ. 10 வசூலிக்கிற நிலையிருக்கிறது. அத
னால் அங்குள்ள கிராம மக்களும் வியாபாரிகளும் அந்தால்
நடத்தியிருக்கிறார்கள். ரூ. 1, ரூ. 2 ஏழை மக்களிடம்
வாட்டர் டாக்ஸ் விதிப்பதற்குப் பதிலாக, தனி அதிகாரிகளிடம்
அதனை வசூலிக்கும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருப்பதன்
காரணமாக, ரூ. 10 விதிக்கப்படுவதும், மீட்டர் வைக்கவேண்டு
மென்று வற்புறுத்தப்படுவதுமான நிலையிருப்பதால், அந்த கிராமத்
திலே இன்றைக்கு பதட்டமான நிலை இருக்கிறது என்பதை
அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.
அப்படிப்பட்ட நிலைகள் மாறுவதற்கு கிராம மக்களுடைய குறை
களைத் தீர்ப்பதற்குதேர்தலை விரைவிலே நடத்த வேண்டும்.

என்னுடைய தொகுதியிலே இருக்கிற பல கிராமங்களுக்கு
நான் சமீபத்திலே சென்றிருந்தேன். அங்குள்ள குடிநீர் கிணறு
களுக்கு இராட்டினம் கிடையாது. அந்த இராட்டினம் வாங்கிக்
கொடுக்கக்கூட கிராம நல அலுவலர்கள் முற்படவில்லை. அது
மட்டுமல்ல, அரசாங்கம் சொல்கிறது, கிராமப்புற நல வேலை
வாய்ப்புத் திட்டம், தேசிய கிராமப்புற வேலை வாய்ப்பு திட்டம்,
கிராம மக்கள் முன்னேற்ற சீர்திருத்த திட்டம். இவற்றின் கீழ்
எந்த, எந்தத் திட்டங்கள் மக்களுக்கு அவசியம் என்பதைக் கூட
மக்கள் குழுவிலே அல்லது அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற
உறுப்பினர்களைக் கூட கலந்து அதிகாரிகள் செய்வதில்லை.
அந்த கிராம நல ஊராட்சி ஒன்றிய ஆணையர் அல்லது கிராம
நல அலுவலர் அல்லது இன்ஜினீயர்கள் தங்களுக்கு எது சௌகரி
மாக இருக்கிறதோ அந்த வேலையைத்தான் செய்கிறார்க
ளே தவிர மக்களுக்குச் சேவை செய்ய வேண்டுமென்ற எண்ணம்
இன்றைக்கு ஊராட்சி மன்றங்களிலே இல்லை. தொகுதியி
னுடைய சட்டமன்ற உறுப்பினர்களைக்கூட கலந்தாலோசிப்பது
இல்லை. சென்ற மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் இதை
பிரச்சினையாக கிளப்பிய நேரத்தில் வளர்ச்சி மன்ற அதிகாரி
அவர்கள் சொன்னார்கள். எந்தெந்த வேலைகள் எடுக்கப்பட்
டிருக்கின்றன என்ற விவரங்களை கொடுப்பதற்கு ஒவ்வொரு
ஊராட்சி மன்ற ஆணையாளருக்குப் உத்தரவு பிறப்பிக்கிறோம்
என்று சொன்னார்கள். அதுமட்டும் போதாது. எந்தெந்த
வேலைகள் செய்ய வேண்டுமென்று கேட்காத முறை இருக்கிறது.
அது இருக்கக்கூடாது.

கடைசியாக சொல்லிக்கொள்வது நகராட்சிகளில் குடியாத்
தம் நிலைமை பற்றி உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்
நன்கு அறிவார்கள். அது பின்தங்கிய நகராட்சி. பஸ் ஸ்டாண்ட்
வசதி, குடிதண்ணீர் வசதி இல்லை ; ரோடு வசதி இல்லை ; பள்ளி
வசதி இல்லை ; 25 லட்சம், 30 லட்சம் கடன்பட்டு ஊரிபள்ளி
டத்தில் வசூலிக்கப்பட்ட பணத்தைக் கூட திருப்பி செலுத்த



1984 மார்ச் 5] [திரு. சே. ஆர். சுந்தரம்]

முடியாத நிலை இருக்கிறது. இவற்றை எல்லாம் அமைச்சர்
அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். அந்த
நகராட்சி தண்ணீரைத் திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும்.
அந்த நகராட்சியிலே உள்ள உயர்நிலைப் பள்ளியை அரசே எடுத்து
நடத்த வேண்டும். இப்படி செய்வதன் மூலமாகத்தான்
நகராட்சிகள், கிராமங்கள் செழிப்படைய முடியும் என்ற முறை
யில் மேலும் காலதாமதம் செய்யாமல் ஊராட்சி மன்ற தேர்தல்
அறிவித்திருக்கிற தேதியில் கட்டாயமாக நடத்த வேண்டுமென்று
கேட்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.
வணக்கம்.

*திரு. என். எ. பூங்காவனம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர்
அவர்களே, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் தனி அதிகாரி
கள் சம்பந்தமாக அரசு பிறப்பித்துள்ள அவசரச் சட்டம் மீதான
திருத்த சட்ட முன்வடிவின் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின்
சார்பிலே நான் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த சட்டத்திருத்தம் கொண்டு வருவதற்கு முன்னால் இந்த
அவையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகிறபோது விரை
வில் தேர்தல் நடக்கும் என்று சொன்னார்கள். அதற்குப்பின்
னால் இப்போது தேதியும் அறிவித்து இருக்கிறார்கள். தேதி
அறிவித்த பிறகு மேலும் 3 மாத கால அவகாசம் கோருவது
ஏன் என்று விளங்கவில்லை.

இரண்டாவதாக அமைச்சர் அவர்கள் தேர்தல் என்றைக்கு
என்று முன்பே அறிவித்து இருந்தாலும், நாம் நாமினேஷன் பதிய
வேண்டாமா இல்லையா ? அமைச்சர் அவர்கள் அந்த தேதியையும்
இன்றைக்கே சொல்ல வேண்டும். 21 நாட்கள் முன்னால் அறி
விக்க வேண்டிய அறிவிப்பை இன்றைக்கே அறிவிப்பார்கள் என்று
நம்புகிறேன். அவர்கள் அறிவிக்க வேண்டுமென்றும் கோருகி
கிறேன். இதை வலியுறுத்துவதற்குக் காரணம் மாநிலத்தில் ஒரு
சட்டப்பூர்வமான ஆட்சி, தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சி இருக்
கிறது ; இருப்பதாக நாமும் சொல்லிக்கொள்கிறோம். ஆனால்
நகராட்சிகளில், கிராமங்களில், ஊராட்சிகளில் இருக்கிற அதிகாரி
கள் தங்கள் சொந்த ஜமீனைப்போல நடத்திக்கொள்கிறார்கள்.
தேவையானவர்களுக்கு வேலை கொடுக்கிறார்கள். தேவையான
இடத்திலே வேலை எடுக்கிறார்கள். அவர்கள் அந்த வேலையை
எடுத்துக்கொள்வதும், நிச்சயித்துக்கொள்வதும் போன்ற நட
வடிக்கையைச் செய்கிறார்கள். உதாரணத்திற்கு சொல்ல
வேண்டுமென்றால் ஒரு கடுமையான குற்றத்தை இழைத்தவனே
நீதிபதியாக மாறுவானேயானால் யாரை குற்றவாளியாக நிறுத்து
வது ? எந்த பிரிவின் கீழ் விசாரிப்பது என்பதைப் போன்று
இருக்கிறது நான் இன்றைய பஞ்சாயத்து யூனியன், ஒன்றிய நிலை.
நான் சொல்வதற்கு அடிப்படைக் காரணம் வேலை எடுப்பவர்
களும் அவர்களே, கொடுப்பவர்களும் அவர்களே, அதற்கான

[திரு. என். ஏ. பூங்காவனம்] [1984 மார்ச் 5

மதிப்பீட்டுத் தொகையை போடுவதும் அவர்களே, ஆய்வு செய்
வதும் அவர்களே, அதை மேற்பார்வையிடுவதும் அவர்களே,
குற்றத்தை, தவறை எங்கே எப்படி, யார் பார்ப்பது ? ஆகவே,
தேர்தல் நடக்குமானால், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள்
இருப்பார்களானால் அந்த முறையில் ஊழலைத் தவிர்க்கலாம் ;
ஆகவே, தேர்தல் வேண்டும்.

அடுத்து மாநகராட்சி பற்றி ஒரு விஷயம். மின்சார ஊழியர்
கள் பல்வேறு மாநகராட்சிகளிலும் பணிபுரிகிறார்கள். குறிப்
பாக, மதுரை, கோவை, வேறு பல மாநகராட்சிகளில் பணிபுரி
கிறார்கள். அவர்களுக்கு இருக்கிற குறையை அங்கே இருக்கிற
நிர்வாகம் பேசி பிரச்சினையை தீர்த்து இருக்கிறார்கள். ஆனால்
சென்னை மாநகராட்சியில் எந்தவிதமான பேச்சுவார்த்தையும்
நடத்தாமல் ஊழியர்கள் தங்கள் கோரிக்கையை வற்புறுத்தி
உண்ணாவிரதம் இருக்கிறார்கள். போன வாரத்தில் ரிப்பன் பில்டிங்
முன்னால் அவர்கள் உண்ணாவிரதம் இருக்கிற போது நாங்கள்
பிரச்சினையை முடித்து வைக்கிறோம் என்று சொல்லி உண்ணா
விரதத்தை முடித்து வைத்திருக்கிறோம். ஆகவே, மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் அதையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். இதுபோன்ற பிரச்சினைகளை தீர்க்கவேண்டு
மென்றால் நகராட்சித் தேர்தல், ஊராட்சி தேர்தல் என்ற
நிலையை உடனடியாக அறிவிக்க வேண்டும். இன்றைக்கு அமைச்
சர் அவர்கள் இதுகுறித்து அறிவிப்பார்கள் என்று நம்புகிறேன்.
கடைசியாக ஒன்றைக் கூற விரும்புகிறேன். பெரிய குற்றம்
செய்த அதிகாரி ஒருவரை முறையீட்டின் பேரில், எடுத்துச்சொன்
னதின் பேரில் உடனடியாக மாறுதல் செய்திருக்கிற அமைச்சர்
அவர்களுக்கு நன்றி தெரிவித்து என் உரையை முடித்துக் கொள்
கிறேன்.

(பிற்பகல் 12–20)

திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, இந்த பில்லிலே
நான் அதிகமாகப் பேச விரும்பவில்லை. ஆனாலும் ஒரு கருத்
தைச் சொல்ல விரும்புகிறேன். இந்த இலாகா மாண்புமிகு
அமைச்சர் காளிமுத்து அவர்களிடத்தில் இருந்த நேரத்தில் இதே
மன்றத்திலே ஒரு குற்றச்சாட்டை கலைஞர் அவர்கள் எடுத்துச்
சொன்னார்கள். நானும் எடுத்துச்சொல்லியிருக்கிறேன். முன்பெல்
லாம் பஞ்சாயத்துக்களில் பஞ்சாயத்துத் தலைவர் இருப்பார்.
அந்தத் தலைவர் ஒரு வேலையைச் செய்தார் என்றால் அவர்
செய்தது சரியா என்பதை அங்கே இருக்கும் ஓவர்சியர் வந்து
செக் செய்து மெஷர்மென்ட் எடுப்பார். அவர் கொடுக்கும்
சர்ட்டிபிகேட்டை வைத்து பி.டி.ஓ. அதை சாங்ஷன் செய்வார்.
ஆனால், இப்போது பஞ்சாயத்து தலைவர் இல்லை. பி.டி.ஓ.
தான் அந்தப் பணிகளைச் செய்ய வேண்டும். ஓவர்சியர்
பி.டி.ஓ. க்குக் கீழே பணியாற்றுபவர். ஆகவே, அந்த ஓவர்



1984 மார்ச் 5] [திரு. துரைமுருகன்]

சியர் செக் செய்து ரிப்போர்ட் கொடுக்க வேண்டும் என்றால்
பி.டி.ஓ. செய்த வேலையை சரியல்ல என்று சொல்ல முடியாது.
இதை மாண்புமிகு அமைச்சர் காளிமுத்து இருந்த நேரத்தில்
எடுத்துச்சொல்லியபோது அவர் சொன்னார், இது நியாயமான
கேள்வி. பி.டி.ஓ. கீழே வேலை செய்பவர்தான் ஓவர்சியர்.
அவர் பி.டி.ஓ. செய்த வேலை தவறு என்று சொல்ல முடியாது.
இந்த முறை மாற்றப்பட வேண்டும் என்று சொன்னார். ஆனால்,
இன்றுவரையில் அந்த நிலைமை மாற்றப்படவில்லை.

எத்தனையோ சொன்னீர்கள். அதுவெல்லாம் போய்விட்டது
அதற்காக கவலைப்படவில்லை. ஆனால், இன்றைக்கு நகராட்
சிகளிலும், பஞ்சாயத்துக்களிலும் எப்படிப்பட்ட நிலைமை இருக்
கின்றன என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஒரு பஞ்சாயத்
திலே ஒரு விழா நடக்கிறது என்று சொன்னால் அந்தப் பஞ்சாயத்து
நிதியில் இருந்து அதை எடுத்துச் செலவு செய்வார்கள். மாண்பு
மிகு அமைச்சர் அவர்கள் என்னுடைய தொகுதிக்கு 4, 5 நாட்
களுக்கு முன்னால் வந்திருந்தார்கள். சிலபஞ்சாயத்துக்களை விசிட்
செய்தார்கள். அங்கெல்லாம் விழா நடந்தது. அவர் வந்தார்.
விழா சிறப்பாக நடந்தது போய் விட்டார். பூட்டுத்தாக்கு, பாக
வெளி போன்ற பஞ்சாயத்துக்களுக்கு வந்தார்கள். ஆனால்,
இதற்கெல்லாம் பணம் எப்படிச் செலவாயிற்று என்று அமைச்ச
ருக்கே தெரியாது. ஏதோ அமைச்சர் வருகிறார். அவருடன்
சேர்ந்து நாமும் போகிறோம். அங்கே ஏதோ முந்திரிப்பருப்பு
ஒரு ஸ்வீட் கொடுப்பார்கள். ஆக ஒட்டுமொத்தமாகப் பார்த்
தால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அரசாங்கக் காரில் வந்தார்.
விழாவைப் பார்த்தார். போய்விட்டார். ஆனால், அதற்கு
ஆயிரக் கணக்கில் பணம் செலவழிந்தது என்று கணக்குக் காட்டு
கிறார்கள் (குறுக்கீடு). பில்லில் சம்பந்தப்பட்டவற்றைத்தான்
பேசுகிறேன். ஏனென்றால் பணம் எவ்வாறு அங்கே வீணாக
செலவழிக்கப்படுகிறது என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காக நான்
இதைக் குறிப்பிட்டேன். இன்னும் சில பி.டி.ஓக்கள் இருக்கி
றார்கள். அந்தத் தொகுதி எம்.எல்.ஏ. அந்த நிகழ்ச்சிகளில்
கலந்து கொள்ள முடியுமா என்றுகூடக் கேட்பதில்லை. இன்வி
டேஷனை அடித்துக் கொடுத்துவிடுவார்கள். ஒரு பஞ்சாயத்தில்
நடந்த விழாவிற்கு என்னை ஒரு பி.டி.ஓ. அழைக்கவே இல்லை.
அதை நான் பெரிதாகச் சொல்லவில்லை. இதற்கெல்லாம் நீங்கள்
பரிகாரம் காணவேண்டும். இதற்கெல்லாம் பரிகாரம் காணவேண்
டும் என்பதற்காகத்தான தேர்தல் தேதியை அறிவிக்கத் தயாராக
எழுதி வைத்துக்கொண்டு இருக்கையில் துரைமுருகன் என்னைப்
பேசவிடாமல் பேசிக்கொண்டிருக்கிறரே என்று மாண்புமிகு அமைச்
சர் அவர்கள் துடித்துக்கொண்டிருப்பது எனக்கு நன்றாகத் தெரி
யும். நானும் சொல்கிறேன். நீங்கள் தேர்தல் தேதியை அறி
வித்து விட்டதால் கண்டிப்பாக தேர்தலை நடத்துவீர்கள் என்று
நான் நம்பத் தயாராக இல்லை ; இந்த நாட்டு மக்களும் நம்பத்
தயாராக இல்லை. பஞ்சாயத்துத் தேர்தலுக்கு பணத்தைக் கட்டி
விட்டு வந்த பிறகு, ஸ்க்ருட்டினி எல்லாம் முடிந்த பிறகு, கடைசி

நேரத்திலே போஸ்டர் பேடப் போகின்ற நேரத்திலே தேர்தல்
இல்லை என்று சொல்லிவிட்டீர்கள். கட்டிய பணத்தை உடனே
கொடுக்கவில்லை. தேர்தலுக்கு கட்டிய 200 ரூபாய் பணத்தை
எட்டு மாதம் கழித்து கொடுத்தீர்கள். பக்கத்து வீட்டுக்கார
னிடம் கொடுத்திருந்தால் 4 அணா வட்டியாவது கொடுத்திருப்
பான். அதுகூட கிடைக்கவில்லை. எட்டுமாதம் கழித்து கட்டிய
பணத்தைக் கொடுத்துவிட்டீர்கள்.

அதுகூட பரவாயில்லை. இன்னொன்றையும் உங்கள் கவனத்
திற்குக் கொண்டுவருகிறேன். மதுரை பல்கலைக் கழக சிண்டி
கேட்டுக்கு போலிங் ஆகி, பேலட் பேப்பர் கவுண்டிங் ஆககூடிய
அந்த நேரத்தில் நிறுத்திவிட்டீர்கள் ; எண்ணப்படவில்லை ;
தேர்தலை நடத்தவில்லை. அந்த பேலட் பேப்பர் ஓட்டுப்பெட்டி
யில் தூங்கிக்கொண்டிருக்கிறது. போலிங் ஆகி, கவுண்டிங் பண்
ணுகிற நேரத்தில் நிறுத்திவிட்ட நீங்கள், இப்போது தேர்தல்
தேதியை அறிந்தவுடன் தேர்தலை நடத்துவீர்கள் என்று எப்படி
நம்ப முடியும் ?

எனக்கு ஜோசியத்தில் நம்பிக்கை கிடையாது. இருந்தாலும்
என்னுடைய நண்பர் ஒருவர் அமைச்சர் குழந்தைவேலு பெயர்
ராசிக்கு ஜோசியம் பார்த்துவிட்டு வந்து சொன்னார். "இவர்
உள்ளாட்சி அமைச்சராக இருக்கிறவரையில் தேர்தல் வராது"
என்று. ஜோசியத்தைப் பொய்யாக்கியவர் இளங்கோவடிகள்.
அதைப்போன்று அவர்களும் ஜோசியத்தைப் பொய்யாக்கி, தேர்
தலை நடத்திக்காட்டுவார்கள் என்று கருதி, என்னுடைய கருத்துக்
களை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு மாற்றுத்
தலைவர் அவர்களே, உள்ளாட்சி மன்றங்கள் பற்றிய மூன்று
மசோதாக்கள் எடுக்கப்பட்டு, அவை பற்றி விவாதிக்கின்ற நேரத்
தில் மாண்புமிகு உறுப்பினர்கள் பல கருத்துக்களைச் சொல்லி
யிருக்கிறார்கள்.

நானும்கூட நேற்றைக்கு சேலத்தில் இருக்கும்போது எனக்கு
ஒரு ஜோசியர் சொன்னார். திராவிட முன்னேற்றக் கழகத்தைப்
பொறுத்தவரை நீங்கள் தேர்தலை வைத்தாலும் இப்படித்தான்
பேசிக்கொண்டிருப்பார்கள் ; தேர்தலை வைக்காவிட்டாலும்
இப்படித்தான் பேசிக் கொண்டிருப்பார்கள் என்று.
ஆகையால் ஜோசியத்தைப் பற்றி அவர்கள் பேசியது குறித்து
நான் ஆச்சரியப்படவுமில்லை ; அதிசயப்படவுமில்லை. ஏனென்
றால் நாங்கள தேர்தலை நடத்துவதற்கான நடவடிக்கைகளில்
ஈடுபட்டுக்கொண்டிருக்கிறோம். தேர்தல் தேதி கூட அறிவிக்கப்
பட்டு, முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது.



குறிப்பாக இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் திரு.
திருவேங்கடம் அவர்களும், திரு. தங்கவேல்ராஜ் அவர்களும்
ஏப்ரல் மாதம் இந்தத் தேர்தல் நடைபெறுமா என்று ஒரு சந்
தேகத்தை எழுப்பினார்கள். தேர்தல் ஏப்ரல் மாதம் கண்டிப்பாக
நடைபெறும் என்று இப்போது கூட தெரிவித்துக்கொள்கிறேன்.
எந்த எந்தத் தேதியில் தேர்தல் நடக்கும் என்று ஏற்கெனவே
குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறோமோ அந்த அந்த தேதியில்
தேர்தலை நடத்த இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதை
மீண்டும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போன்று வேறு பல நிலைமைகளை எடுத்துச் சொன்
னார்கள். ஏற்கெனவே பல்வேறு நேரங்களில் எடுத்துக் கூறிய
கருத்துக்களையே மீண்டும் மீண்டும் கூறிக்கொண்டிருக்கிறார்கள்.
புதிதாக ஏதாவது கருத்து இருக்குமா என்றால் கண்டிப்பாக
இருக்க முடியாது என்று திட்டவட்டமாக எண்ணுகிறேன்.

**திரு. துரைமுருகன் :** நீங்களும் ஒரேமாதிரியான பதில்தான
சொல்கிறீர்கள். கொண்டுவருகிற சட்டங்களும் ஒரே
மாதிரியானவையாகத்தான் இருக்கின்றன. ஆகையினாலே ஒரே
மாதிரியான கருத்தைத்தானே சொல்ல முடியும்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** விளக்கு எரியவில்லை,
சுகாதாரம் சரியில்லை என்று எல்லா உறுப்பினர்களும் சொல்லி
யிருக்கிறார்கள். ஒரு சில கிராமங்களில் விளக்கு எரியவில்லை
என்பது உண்மை, ஏற்றுக்கொள்கிறேன். அதற்குக் காரணம்
ஒரு சில பஞ்சாயத்துக்கள் மின்சாரக் கட்டணம் செலுத்தாதது
தான். அதனால் மின் துண்டிப்பு நடந்திருக்கிறது. பஞ்சாயத்
துக்களுக்கு பணம் இல்லாத காரணத்தால் அவர்களால் மின்
சாரக் கட்டணத்தை கட்ட முடியவில்லை. எவ்வளவு பாக்கி
இருந்தாலும் பின்னால் வாங்கிக்கொள்ளலாம், மின் துண்டிப்பு
செய்ய வேண்டாம் என்று மின்சார வாரியத்திற்குச் சொல்லி
யிருக்கிறோம். ஆக, எல்லாக் கிராமங்களிலும் விளக்கு எரியும்
சூழ்நிலையை கண்டிப்பாக ஏற்படுத்தித் தருகிறோம் என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போன்று இன்றைக்கு தன்னிறைவுத் திட்ட வேலை
எல்லாம் நடந்தேறி இருக்கின்றது. அந்த வேலை முடிந்து ஓர்
ஆண்டு முடிகிறது. அந்த வேலை நடைபெற்ற பின்னால் ஏற்
பட்ட வெள்ளத்தால் பல்வேறு சாலைகள் மோசமடைந்திருக்
கின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். அவற்றின் பராமரிப்புப்
பணிகளுக்கு, சீரமைப்புப் பணிகளுக்கு எவ்வளவு பணம் தேவை
என்று கேட்டிருக்கிறோம். அதையும் உடனடியாகக் கொடுத்து,
சாலைகளை சீர்திருத்தம் செய்து, தேவையான நடவடிக்கைகளை
இந்த அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. ப. குழந்தைவேலு] [1984 மார்ச் 5.

தேர்தல் தேதியை கண்டிப்பாகக் குறிப்பிட வேண்டுமென்று திரு. பூங்காவனம் அவர்கள் கேட்டார்கள். நான் ஏற்கெனவே இந்த பில்லிலே நீங்கள் பேசவேண்டிய அவசியம் இல்லை : தேர்தல் தேதியைக் குறிப்பிட்டுள்ளோம் ; அதைப்போன்று எலக்ஷன் நோட்டிபிகேஷன், மற்ற விவரங்களை எல்லாம் வரிசையாகக் கொடுக்கிறேன் என்று சொன்னேன். ஊராட்சிகள் தேர்தலைப் பொறுத்தவரையில் எலக்ஷன் நோட்டிபிகேஷன் நாள் 20—3—1984 என்று கொடுக்கப்பட்டிருக்கிறது.

(பிற்பகல் 12–30).

ஆகவே, '' ரெசிப்ட் ஆப் நாமினேஷன்ஸ் '', வேட்பு மனு தாக்கல் செய்வது என்பது 26—3—1984, 27—3—1984, 28—3—1984 இந்த மூன்று நாட்களில் வேட்பு மனுக்களை தாக்கல் செய்யலாம். அதற்கு '' ஸ்க்ரூட்டினி ஆப் நாமினேஷன்ஸ் '' பரிசீலனை செய்வது 29—3—1984. வித்ட்ராயல், அதாவது வேட்பு மனுக்களை வாபஸ் பெறுகின்ற நாள் 3—4—1984 அன்று சாயந்திரம் 3 மணி வரையிலும்

Publication of final list of contesting Candidates 3-4-84.

கடைசியில் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு, வேட்பாளர்கள் இறுதி அறிக்கை கொடுப்பது 3—4—1984 அன்றே. ஆகவே, டேட் ஆப் எலக்ஷன் பஸ்டு பேச் 19—4—84 செகண்டு பேச் 23—4—1984 ஆகும். கௌண்டிங் ஆப் வோட்ஸ் 29—4—1984. இதுதான் பட்டியல். ஆகவே தயவு செய்து மீண்டும் மீண்டும் தேர்தல் நடக்குமா என்ற கேள்விக்குறியையும், சந்தேகக் குறியையும் எழுப்பவேண்டாம் என்று கேட்டுக்கொண்டு தேர்தலுக்கு ஆயத்தமாக இருங்கள் என்று சொல்லி இந்த மசோதாவை நிறைவேற்றவேண்டுமென்று கேட்டுக் கொண்டு அமர்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வே. இரா. ஜெயராமன்) பேரவை முன்னுள்ள கேள்வி :

'' தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப்பேரவை சட்ட முன் வடிவு எண். 4/1984) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.



1984 மார்ச் 5]

பிரிவு 2.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் : (திரு. வே. இரா. ஜெயராமன்): பேரவை முன்னுள்ள கேள்வி—

'' பிரிவு 2 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெறவேண்டும். ''

திரு. ப. பொன்னுரங்கம் ; நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன் :

In clause 2 in sub-clause (i), *for* the words 'four years and nine months *substitute* the words four years and eight months. "

திரு. இரெ. இராசமாணிக்கம் : இந்தத் திருத்தைதை நான் வழிமொழிகிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம் : ஒவ்வொரு பில்லிலும் நீங்கள் கிளியராகச் சொல்லியிருக்கிறீர்கள்.

''. . . . The elected member and p.esidents of panchayats to assume office immediately after the elections are over."

பொறுப்பு ஏற்கவேண்டும் என்று சொல்லி
முடிந்தவுடனே ஏற்கனவே இருக்கிற ஸ்பெஷல் ஆபீசர்
யிருக்கிறீர்களே, காலம் மார்ச் மாதம் வரையில் இருக்கிறது. அப்படி
என்பவர் இருக்கும்பொழுது ஜூன் மாதம் வரையில் என்று ஏன் கேட்டுக்
கொண்டிருக்கிறீர்கள். இதிலேதான் எனக்கு சந்தேகம்
இருக்கிறது. நாமினேஷன் வாங்கிய பிறகு கூட போஸ்ட்
போன் ஆகியிருக்கிறது. இதற்கு முன்னால்தான் சொல்லி
யிருக்கிறீர்கள். பல கூட்டங்களில் சொல்லியிருக்கிறீர்கள்.
வேட்பு அறுதி, தேர்தலுக்கு இறுதி என்று சொல்லி யிருக்கி
றீர்கள். ஆனால் இதற்கு காரணம் சொல்கிறீர்கள். தஞ்சாவூர்,
புதுக்கோட்டை, திருச்சி ஆகிய இடங்களிலே பிளட் என்று.
இப்போது திருநெல்வேலியில் பிளட்--என்ன பண்ணப்போகிறீர்
களோ தெரியாது. எனக்கு சந்தேகம் தான். கவர்னர்
ஏப்ரல் மாதம் என்று நிர்ணயித்த பிறகு—கவர்னர்தான்
இந்த ஸ்டேட்டைப் பொறுத்தவரையில் டாப் மோஸ்ட்.
அவரே ஏப்ரல் இறுதி என்று வைத்தபிறகு, நீங்கள் ஏன்
ஜூன் வரையில் கேட்டுக்கொண்டிருக்கிறீர்கள் என்பதிலே
தான் எனக்கு சந்தேகம். அப்படி அறிவிக்கப்பட்டும்
கூட, ஏதாவது ஒரு காரணம் சொல்லி நீங்கள் தள்ளிப்
போடுகிறீர்கள் என்ற அச்சம் எனக்கு இருக்கிறது.

கூட்டுறவு பில்லில் மாண்புமிகு பொன்னையன் அவர்கள் என்னுடைய திருத்தத்தை ஏற்றார். திரும்ப அதே கூட்டுறவுச் சங்கத் தேர்தலை தள்ளிவைத்தார்கள். ஒரு வருஷம் எக்ஸ்டென்ஷன் வேண்டாம் என்று சொன்னேன். அதையே தன்னுடைய திருத்தமாக எடுத்து பாஸ் பண்ணினார்கள், இறுதியாக சட்டமன்றத்திலே சொல்லிவிட்டார்கள் ஏப்ரல் மாதம் என்று. அப்படி இருக்கும்பொழுது பின் ஜூன் என்ன? ஆகவே நான் திருத்தத்தை வலியுறுத்துகிறேன். மூன்று மாதம் என்பது பஞ்சாயத்து போர்டு--பஞ்சாயத்து பிரசிடென்டுக்கு இரண்டு மாதமாக இருக்கலாம்.

It is up to 11th March 1984. Extend it up to 31st March 1984.

வேண்டுமானால், பஞ்சாயத்து போர்டு பஞ்சாயத்து போர்டு பிரசிடெண்டு இதற்கு மட்டும் இரண்டு மாதமாகவும், மற்றவைகளுக்கு எல்லாம் ஒரு மாத காலம் என்று என்னுடைய திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்துகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, சந்தேகம் என்பது ஒரு பெரிய வியாதி, ஆகவே மாண்புமிகு உறுப்பினர் பொன்னுரங்கம் அவர்களை கேட்டுக்கொள்கிறேன். வேறு எந்த வியாதி வந்தாலும் அதற்கு எல்லாம் மருந்து உண்டு. ஆனால் சந்தேகம் என்ற வியாதி வந்தால் அதற்கு மருந்து இல்லை. எனவே தயவு செய்து அந்த வியாதி உங்களைப் பீடித்துக்கொள்ள வேண்டாம் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். ஏன் என்றால், நீங்கள் எப்போது பார்த்தாலும் சந்தேகக் குறிப்போடு, அந்த எண்ணத்தோடு கருத்துக்களைச் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். அதனால்தான் உங்களுக்கு இந்தத் தேர்தல் வந்தாலும் கூட, இது நடைபெறுமா, நடைபெறாதா வோட்டுப் போடுவார்களா அல்லது போடமாட்டார்களா என்ற சந்தேகக் குறிகள் கூட உடங்களுக்கு இருந்து கொண்டிருக்கின்றன. அதனால்தான் நீங்கள் அதைச் சொல்கிறீர்களோ என்று கூட நான் நினைக்கிறேன். ஆனாலும்கூட, இங்கே 3 மாதத்திற்குத்தான் கால நீட்டிப்பு கேட்டு இருக்கிறோம். இங்கே 3 மாதம், இந்த மாதத்திலே 11-ம் தேதி, தனி அதிகாரிகள் காலம் முடிவடைகிறது, இந்த மாதத்திலே, 30-ஆம் தேதி தனி அதிகாரிகளுடைய காலம் முடிவடைகிறது. ஆகவே 3 மாத காலம் நீட்டித்தாலும் கூட அதைக் குறைத்துக் கொள்ளக் கூடிய அளவிற்கு இதிலே புரவிசன் இருக்கிறது. ஆகவே இங்கே 3 மாதத்திற்கு நீட்டித்துக் கொண்டு போகவேண்டும் என்பதில்லை. எவ்வளவு நாட்களுக்குள் தேர்தல் நடைபெறுகிறதோ அதற்குள் குறைத்துக் கொள்ளுகின்ற



அந்தப் புரவிசனையும் நாம் வைத்துத் தான் இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறோம். ஆகவே காலத்தை நீட்டித்துக்கொண்டே போகவேண்டும் என்ற எண்ணம் இந்த அரசுக்குக் கண்டிப்பாக இல்லை. 2 மாதத்திற்குக் குறைப்பது என்பதும், அல்லது 1 மாதத்திற்குக் குறைப் பது என்பதும் வேண்டியதில்லை. அவசியமில்லை ஆகவே இந்தச் சட்ட முன்வடிவை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றும், திருத்தத்தை வாபஸ் பெற்றுக்கொாள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவர் அவர்களே, சந்தேகம் என்பது ஒரு வியாதி என்று சொல்கிறார்கள். காலையிலேயிருந்துதான் வந்துகொண்டிருக்கிறது. எதற்கு எடுத்தாலும் தனி அதிகாரியா? பஞ்சாயத்து போர்டா, தனி அதிகாரி, (குறுக்கீடு), கூட்டுறவுச் சொசைட்டியா, தனி அதிகாரி, பச்சையப்பா டிரஸ்டா, தனி அதிகாரி, கார்ப்பரேஷனா, தனி அதிகாரி, தனி அதிகாரி இல்லாத ஒரு இடம் நம்முடைய சட்டமன்றம் தான். அதற்கும் ஒரு தனி அதிகாரி போடலாம். கவர்னரை நியமித்துவிட்டு நாம் வெளியிலே போய் விடலாம். ஆகவே தனி அதிகாரிகள் காலத்தை நீட்டிக்கக் கூடாது என்பதற்காகத்தான், எலக்டட் பாடி வேண்டும் என்பதற்காகத்தான் இதை நான் வலியுறுத்துகிறேன். நீங்கள் 3 மாதம் என்று ஏன் போட்டீர்கள். 1 மாதம் என்று போட்டால் சட்டம் அனுமதிக்காதா. அப்டு ஏப்ரல் என்று போட்டால் சட்டம் அனுமதிக்காதா. ஆகவே இதெல்லாம் முறையல்ல. ஒரு மாதம் போதும். 2, 3 மாதம் என்று கேட்பதுதான் சந்தேகத்தை உருவாக்குகிறது. ஆகவே நான் திருத்தத்தை வலியுறுத்துகிறேன்.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் : (திரு. வே. இரா. ஜெயராமன்) : பேரவை முன்னுள்ள கேள்வி;

"பிரிவு 2 சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெறவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று பிரிவு 2, சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1984-ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 4/1984) நிறைவேற்றப் பெறவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு 1984).

மாண்புமிகு மாற்றுத் தலைவர்: (திரு. வே. இரா. ஜெயராமன்) பேரவை முன்னுள்ள கேள்வி:

"தமிழ்நாடு 1984-ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 5/1984) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள பெற்றது.

பிரிவு 2.

மாண்புமிகு மாற்றுத் தலைவர்; (திரு. வே. இரா. ஜெயராமன்): பேரவை முன்னுள்ள கேள்வி;

"பிரிவு 2 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்",

திரு. ப. பொன்னுரங்கம்: தலைவர் அவர்களே, நான் கீழ்க் கண்ட திருத்தத்தை மொழிகிறேன்.

In Clause 2, in sub-clause (i), *for* the words "seven years and five months", *substitute* the words, "seven years and three months."



திரு. இரெ. இராசமாணிக்கம்: தலைவர் அவர்கள், நான் திருத்தத்தை வழிமொழிகிறேன்.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1 முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/1984) நிறைவேற்றப்பெறவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(பிற்பகல் 12-40)

ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1984.

மாண்புமிகு மாற்றுத் தலைவர்: (திரு. வே. இரா. ஜெயராமன்) பேரவை முன்னுள்ள கேள்வி:

"தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 6/1984) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன் வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

[1984 மார்ச் 5

பிரிவு 2.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் : (திரு. வே. இரா. ஜெயராமன்) : பேரவை முன்னுள்ள கேள்வி :

"பிரிவு 2 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்."

Thiru P. PONNURANGAM: In clause 2, *for* the words, 'Six years and eleven months', *substitute*, the words 'six years and nine months".

என்று என் பெயரால் கொடுக்கப்பட்ட திருத்தத்தை நான் மொழிகிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : அந்தத் திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று தோல்வியுற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன். "தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 6/1984) நிறைவேற்றப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறை வேற்றப்பெற்றது.

(எ) நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன் வடிவு 1984.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, நான் கீழ்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு** (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 7/1984) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெறவேண்டும்."

---

**1984 ஆம் ஆண்டு பிப்ரவரி 18-ம் தேதி தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



1984 மார்ச் 5]

*திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்மொழிந்து சொல்கிறபோதே, அதிகம் சொல்லவேண்டிய அவசியம் இல்லை என்று குறிப்பிட்டார்கள். ஆகவே, நானும் இதிலே அதிகம் சொல்ல வேண்டியதில்லை. ஆனால் நகராட்சிகள் எப்படி நடக்கின்றன என்பது நம்முடைய அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். எத்தனை தடவைகள் அதைப்பற்றி பேசுவது என்று எனக்குத் தெரியவில்லை. இந்த நகராட்சிகளோடு சேர்த்து மாநகராட்சிகளுக்கும் தேர்தல் அறிவிப்பைக் கொண்டு வந்திருந்தால், உங்களுடைய பணி சற்று முடிவடைந்திருக்கும். அப்படி அதற்கும் ஒரு தேதியை நிர்ணயித்து இருப்பீர்களேயானால் சந்தேகம் என்பதே யாருக்கும் வந்திருக்காது, ஆளும் கட்சி பகுதியிலே இருக்கிற நண்பர்களுக்கோ அல்லது எதிர்க்கட்சிப் பகுதியிலே இருக்கிற நண்பர்களுக்கோ எந்தவித சந்தேகமும் வந்திருக்காது. ஆகவே அமைச்சர் அவர்கள் அதை நிச்சயமாகச் செய்வார்கள் என்று நம்புகிறேன்.

நான் அதிகமாக இதில் எதுவும் சொல்ல விரும்பவில்லையென்றாலும் நான் திரும்ப திரும்ப சொல்ல விரும்புவதெல்லாம், தேர்ந்தெடுக்கப்பட்ட கமிட்டிகள் இல்லாததினால் பல்வேறுதவறுகள் நடக்கின்றன என்பதுதான். அதைத் தாங்கள் சபையிலே நேரிடையாக ஒப்புக்கொள்ளவிட்டாலும், உங்கள் மனச்சாட்சிப்படி அதை ஒப்புக்கொள்வீர்கள், நினைப்பீர்கள் என்று நான் நம்புகிறேன். நிச்சயமாக தவறுகள் நடந்துகொண்டுதான் இருக்கின்றன. அப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட குழுக்கள் இருந்தால் தவறுகள் நடக்காதா என்று கேட்கலாம். நடக்கும். ஆனால் அதைக் கேட்பவர்கள் இருப்பார்கள். இப்போது கேட்பாரே இல்லை என்ற கேவலமான நிலைமைக்கு அது போய்க் கொண்டிருக்கிறது. இந்த ஆண்டிலேயே நடத்தப்பட்டு விடும் என்று நீங்கள் உறுதி கொடுத்தால்—உங்கள் உறுதியான வார்த்தையில் நான் நம்பிக்கை வைக்கிறேன். அந்த நம்பிக்கைக்கு ஏற்ப வருகிற ஏப்ரல் மாதம் 30 ஆம் தேதியோ அல்லது ஜூன் மாதத்தில் ஏதாவது ஒரு நாளையோ அறுதியிட்டு, இப்போது நீங்கள் ஊராட்சிகளுக்கும, நகராட்சிகளுக்கும் அறிவித்ததைப்போல மாநகராட்சிகளுக்கும் தேர்தல் வரும் என்று தேதியைக் குறிப்பிட்டு தெரிவித்து விட்டால் மிக நன்றாக இருக்கும்;

மேற்கொண்டு துப்புரவுத் தொழிலாளர்கள் விஷயமாக ஒன்று கூற விரும்புகிறேன். இவர்கள் மிகக் கஷ்டமான வேலையைச் செய்கிறார்கள். அந்தப் பணியிலே, அவர்கள் தலையிலே தூக்கித் கொண்டு போகிற அளவுக்கு கேவலமான நிலை இருக்கிறது. அதை மாற்ற வேண்டும். அவர்களுக்காக நாம் இரண்டு காரியங்களைச் செய்யத் தவறியிருக்கிறோம். அதைச் செய்ய வேண்டும்.

மைய அரசு 75 சதவீதம் பணம் கொடுத்து, 25 சதவீதம் நகராட்சிகள் அல்லது மாநகராட்சிகள் கொடுத்து, அவர்களுக்கு புனருத்தாரண குடியிருப்பு அமைப்புத் திட்டம் என்ற வகையிலே வீடுகள் கட்டப்பட்டன. ஆனால் இப்போது அந்த வீடுகளை நகராட்சிகள் தன்னுடைய வீடுகளாக வைத்துக் கொண்டு, அந்த துப்புரவுத் தொழிலாளர்கள், நகரசுத்தித் தொழிலாளர்கள் வேலை செய்கிற காலம் வரையிலும் அவர்கள் அதிலே குடியிருக்கலாம். ஆனால் அவர்கள் அந்த வேலையை விட்ட பிறகு வீட்டை விட்டு துரத்தப்படுகிறார்கள். இதற்காக மைய அரசு புரொபசர் மல்கானி கமிட்டி என்ற கமிட்டி ஒன்றைப் போட்டு, அந்தக் கமிட்டி ரிப்போர்ட் கொடுத்து, அந்த ரிப்போர்ட்டை அகில இந்திய அரசிலே இருக்கின்றவர்கள் ஒத்துக் கொண்டு, மாநில ஆட்சிகளுக்கும் சொல்லி, மாநில அரசும் அதற்காக ஒரு சர்க்குலரைக் கொடுத்திருக்கிறது.

ஆனால் இன்று வரையிலும் அந்த 75 சதவீத பணத்திற்காக வாடகை வசூலிக்கிற ஏஜெண்டுகளாகத்தான் நகராட்சிகளுடைய அதிகாரிகளோ அல்லது நகராட்சிகளோ செயல்பட்டுக்கொண்டிருக்கின்றனவே தவிர, தாம் செய்ய வேண்டிய கடமையைச் செய்யவில்லை. இது ஒரு முக்கியமான கடமை. இதன் உண்மையான நோக்கத்தை அரசு புரிந்து கொண்டு, அவர்களுக்கு அந்த வீடுகளை கொடுத்து அவர்கள் ரிடையர் ஆன பிறகும் கூட, அந்த வீடுகளில் குடியிருக்கச் செய்ய வேண்டும். இதைத் தனி அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் மிக அலட்சியப்படுத்துகிறார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட தனி மக்கள் பிரதிநிதிகள் குழு இருக்குமானால், அவர்கள் கடமைகளைச் செய்ய முடியும். அந்த முறையிலே கூடிய சீக்கிரத்திலே தேர்தலை வைப்பார்கள் என்ற நம்பிக்கையை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இரண்டாவதாக சுத்தம் செய்யும் அந்த தொழிலை செய்யக் கூடியவர்களுக்கு செருப்பு கொடுக்கப்படுவதில்லை துணிகள் கொடுப்பதில்லை. க்ளவுஸ் கொடுப்பதில்லை. இப்படிப்பட்ட நிலைமைகள் பல இடங்களிலே இருக்கின்றன. குறிப்பாக, சிதம்பரம் நகராட்சியிலும், திண்டிவனம் நகராட்சியிலும் ஆற்காடு நகராட்சியிலும் அவலமான நிலைமைகள் இருந்து கொண்டிருக்கின்றன. அவர்களுக்கு உதவித் தொகை கொடுக்கிறோம் என்று சொல்கிறார்கள். [illegible] நகராட்சிகள், [illegible]





பஞ்சாயத்துக்களுக்கு கொடுத்த பணம் என்ன ஆயிற்று? இதைப் பற்றி மக்களர்கள் கொடுத்தும் கூட நிலைமைகள் மாறவில்லை. மத்திய அரசு 75 சதவீதமும், மாநில அரசு 25 சதவீதமும் பணம் கொடுத்து புனருத்தாரண வாழ்வு என்ற முறையிலே வீடு கட்டும் திட்டத்தின்படி அவர்களுக்கு வீடுகள் கொடுக்கப்படுகிறபோது அவர்கள் ஓய்வு பெற்றவுடன் அந்த வீடுகளிலே இருக்க அனுமதிப்பது இல்லை என்ற நிலைமை இருக்கிறது.

மிகக் கேவலமான, மிகக் கஷ்டமான தொழிலைச் செய்கிறவர்களுக்கு—அவர்கள் வயிற்றுக் கொடுமையின் காரணமாகவும்; சோம்பேறித்தனத்தின் காரணமாகவும் அந்தத் தொழிலைச் செய்ய வேண்டிய நிலைமைக்கு வந்து விட்டவர்கள்— க்ளவுஸ் துணிகள், செருப்புகள், சோப்புகள் கொடுக்காத நிலைமை இருக்கிறது. அப்படி அவர்களுக்கு அவைகளையெல்லாம் கொடுக்காத அதிகாரிகள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். கொடுத்த பணம் இருக்கிறதா இல்லையா என்பதை அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும்.

இப்போது காலம் ஒத்திவைக்க கேட்பதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. ஆனால் அந்தக் காலத்திற்குள்ளாவது முடித்து அரசுக்கு நல்ல பெயர் வாங்கிக் கொடுக்கக்கூடிய முறையிலே துணிவான முடிவை எடுக்க வேண்டும். நகராட்சிகளுக்கு மட்டுமல்ல. மாநகராட்சிகளுக்கும் அப்படிப்பட்ட முடிவை எடுக்க வேண்டும். இதுவே கடைசி முறை என்ற நிலையிலே மக்கள் நம்ப வேண்டும். மாமன்றத்திலே உள்ளவர்களும் நம்ப வேண்டுமென்ற முறையிலே உறுதியாகச் சொல்வார்கள் என்று நம்பி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. [illegible]: மாண்புமிகு மாமன்றத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் முன்மொழியப்பெற்றுள்ள இந்த சட்டமுன்வடிவை வரவேற்று ஒரு சில கருத்துக்களைப் பேசுவதற்குச் சந்தர்ப்பம் அளித்தற்காக முதலிலே நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஊராட்சிகளுடைய தேர்தலுக்கான தேதிகளையும் நகராட்சித் தேர்தல்களுக்கான தேதிகளையும் அறிவித்து இருக்கிறார்கள். கடந்த 7 ஆண்டுக் காலமாக, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லாதபோது அந்த ஊராட்சிகளிலே எல்லாம் அரசால் நிறைவேற்றப்பெற்ற பணிகளையும் அமைச்சர் அவர்கள் செய்து முடித்து இருக்கிற காரியங்களையும் தேர்தல் வருவதற்கு முன்னால் இந்த நேரத்திலே எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஊராட்சிகளிலும், நகராட்சிகளிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லாத நேரத்திலே புரட்சித் தலைவர் அரசு கடந்த காலத்திலே எவ்வளவு நல்ல சிறப்பான பணிகளை அரசு நிதியோடு செய்து

முடித்திருக்கிறது என்பதை மாற்றுக் கட்சிக்காரர்கள் ஒருகணம் எண்ணிப் பார்க்கத் தவற மாட்டார்கள் என்று கருதுகிறேன். தேர்ந்தெடுக்கப்பட்ட நகராட்சி மன்றங்கள் இருந்திருந்தால் அதற்கு கூடுதலான வரிவிதிப்பைப் போட்டு நிதியைத் திரட்டி இன்னும் சொல்லப்போனால் கட்சிக் கொள்கையின் காரணமாக அவர்கள் வேறுபட்டு நின்று அந்தக் காரியங்கள்கூட தடைபட்டுப் போய் இருக்கலாம். ஆனால் அவைகளையெல்லாம் எண்ணிப்பார்க்கிற நேரத்திலே எவ்வளவு நல்ல சொத்துக்களை நகராட்சிகளுக்கு உருவாக்கிக் கொடுக்கிற முறையிலே அரசினுடைய தன்னிறைவுத் திட்டத்தால் சிறந்த காரியங்கள் நல்ல முறையிலே நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும்.

(பிற்பகல்12-50)

நகராட்சிகள் இந்தத் தேர்தலை சந்திக்கிறபோது அங்கு பிற்படுத்தப்பட்டவர்களுக்கு, நலிந்தவர்களுக்கு, பெண்களுக்கு என்று தனி இடம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் ஒதுக்கி இருப்பதையும், இந்த அரசியல் மறுமலர்ச்சியை உள்ளாட்சி மன்றங்களில் ஏற்படுத்தி இருப்பதையும், ஜனநாயகத்தில் தேர்ந்தெடுக்கப்பட முடியாத இடத்திற்கு, அந்த இடத்தை வந்து அடையமுடியாத பிரிவினர்களுக்கு அவர்களுக்கு உரிய இடத்தை வகுத்து கொடுத்து இருப்பதையும் ஏனோ இங்கே மன்றத்தில் இருக்கிற பல்வேறு உறுப்பினர்கள் வரவேற்க மறுக்கிறார்கள். அதிலும் ஒரு ஆதி திராவிடர் இது வரை நகராட்சிக்கு தலைவராக, பேரூராட்சிக்கு தலைவராக ஒன்றியத்திற்கு தலைவராக இருந்ததாக வரலாறு கிடையாது. ஆக இந்த ஆண்டிலிருந்து வருகிற தேர்தலில் அப்பேற்பட்ட ஒரு நல்ல சமுதாய மாற்றத்தினை இந்த ஜனநாயக தொட்டிலில் அதுவும் கீழ் மட்டத்திலிருந்து அடிப்படையான இடங்களில் நிறுத்தச் செய்யப்பெறுவது பாராட்டுக்குரியது. அந்த மக்களால் வரவேற்கக் கூடிய ஒரு நல்ல திட்டம் என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நகராட்சிகளில் பல நல்ல குடிநீர் திட்டங்கள் வறட்சிப் பணித் திட்டங்கள் செய்து குடிநீர்ப் பிரச்சினை எந்த நகராட்சிப் பகுதியிலும் இல்லை என்ற அளவுக்கு குழாய் கிணறுகளை அமைத்தும், நல்ல குடிநீர் திட்டங்களை அமைத்துக் கொடுத்தும் இந்த அரசு எவ்வளவு பணிகளை செய்து முடித்து இருக்கிறது என்பதையும், நகராட்சிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் இல்லாத நேரத்தில் இவ்வளவு சிறப்பான பணிகளை செய்து முடித்து இருக்கிறது என்பதையும், மாண்புமிகு உறுப்பினர்கள் எண்ணிப்பார்க்கவேண்டும். நகராட்சிகளுக்கும், பேரூராட்சிகளுக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் வராததற்கு



காரணம் ஏதோ அரசு தான் என்ற முறையில் இங்கே மாற்றுக் கட்சியினர் கருத்துக்களைத் தெரிவித்துக்கொண்டு இருக்கிறார்கள். நல்ல திட்டங்களை நிறைவேற்றுகிற அரசு அதே நேரத்தில்ஊராட்சி மன்றங்களுக்கும் ஊராட்சி ஒன்றியங்களுக்கும் தேர்தல் நேரத்தைகுறித்து அதற்கான வேட்பு மனுக்களையும் வாங்கியதற்கு பின்னாலே தடை வாங்கிக்கொண்டுஅந்த பிரதான கட்சிஇன்று அரசு ஏதோ இதைச் செய்ய தவறிவிட்டது. தேர்தல் நடத்த தவறிவிட்டது. தேர்தலை பார்த்து அச்சப்படுகிறது என்று பேசுவது மக்கள் மத்தியில் அவர்களுக்கு உரிய அந்த எதிர்க்கட்சி ஸ்தானத்தில் ஒரு ஐயக்குறியை ஏற்படுத்தி இருக்கிறது என்பதையும் இங்கே நான் சொல்ல விரும்புகிறேன்.

கோவை மாநகராட்சித் தேர்தல் இன்னும் சில காலம் கழித்து நடைபெறும் என்று உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஏற்கனவே அறிவித்து இருக்கிறார்கள். கோவை மாநகராட்சியைப் பொறுத்தவரையில் இன்று சிறுவாணி குடிநீர் பெரும்பாலான பகுதிகளுக்கு கொடுக்கப்பட்டு இருக்கிறது. மாநகராட்சியோடு இணைக்கப்பட்ட இன்னும் ஒருசில பகுதிகளுக்கு குடிநீர் வினியோகத்தை சரியான முறையில் நிறைவேற்றி முடிக்கவில்லை. வருகிற மே மாதம் வறட்சியான மாதம் வெயில் காலம். ஆகவே அந்தக் காலத்தில் அந்தப் பகுதியில் தண்ணீர் பிரச்சினை பெரும் குறைபாடாக இருக்கும். ஆகவே அதை கருத்தில் கொண்டு ஏற்கனவே நிறைவேற்றப்பட்டு இருக்கிற திட்டத்தில் 'ஆட்ட் ஏரியா' மாநகராட்சியோடு சேர்க்கப்பட்ட அந்த பகுதிகளுக்கு முழு அளவு குடிநீர் கிடைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாநகராட்சி அதிகாரிகளுக்கு தகுந்த உத்தரவினை வழங்கவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கோவை மாநகராட்சியைப் பொறுத்தவரையில் அண்மையில் அதனுடைய வரி விதிப்பில் மாற்றம் செய்யப்பட்டு இருக்கிறது. மாற்றுக் கட்சிக்காரர்கள் அரசியல் காரணத்திற்காக எவ்வளவு குறையைச் சொன்னாலும் கூட அதை நாம் பொருட்படுத்த வேண்டிய அவசியம் இல்லை என்பதை ஆணித்தரமாக தெரிவித்துக்கொள்கிறேன். குறைந்த அளவு தான் மாநகராட்சிக்குரிய கட்டணத்தைத்தான் அங்கு விதித்து இருக்கிறார்கள். என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அரசியல் நன்மைக்காகத்தான் அந்தக் கட்சிக்காரர்கள் அப்படிச் சொல்வார்கள். அந்த குறைந்த அளவு வரி விதிப்புகூட மாநகராட்சியோடு இணைக்கப்பட்ட அந்த பகுதியில் உள்ள அந்த மக்களுக்கு பெரும் சுமையாக தெரிகிறது. அதாவது ஏற்கனவே அவர்களுக்கு விதித்து இருந்த வரி சொத்து மதிப்பின் மீது ஒரு பர்செண்டேஜ் போட்டு இருந்தார்கள். இப்போது அதை வாடகை

மதிப்பாக மாற்றுகிறபோது ரூ. 20 செலுத்திக்கொண்டு இருந்த 'ஆடட் ஏரியாவில்' இருக்கிற ஒரு பஞ்சாயத்துக்கு உட்பட்ட அந்த வீட்டுக்கு குறைந்த அளவு வாடகை 100 ரூபாய் என்று மதிப்புப் போட்டாலும்கூட 200 ரூபாய் வருகிறது. ஆகவே 20 ரூபாய் 200 ரூபாய் என்று மாறுகிறபோது அது அவர்களுக்கு பெரும் சுமையாகத் தெரிகிறது. ஆகவே மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இந்த வரி விதிப்பை மாற்றம் செய்கிற போது அந்த பரிவோடு கவனிக்கவேண்டும் என்று அதிகாரிகளுக்குச் சொல்லி இருந்தாலும் அதை அவர்கள் நிறைவேற்றுகிற வித்தை ஆய்வதற்கும் இந்த வரி விதிப்பு மாற்றத்தை ஏற்படுத்துவதற்கும், ஏற்பட்ட மாற்றத்தை பரிசீலிப்பதற்கும்பொது மக்கள் பிரதிநிதிகள் கொண்ட குழுவை அமைக்க வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அப்படி ஒரு குழு அமைக்கப்பட்டால் பொதுமக்களிடையே ஏற்பட்டு இருக்கிற அதாவது மாற்றத்தினால் ஏற்பட்டு இருக்கிற அதிக வரி பளு இருந்தால் அதை திருத்தி அமைப்பதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதையும் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன். ஆகவே மாநகராட்சியினுடைய பல்வேறு திட்டங்கள் செயல்பட்டு சீராக நடைபெறுகின்ற இந்த நேரத்தில் அதற்கான கூடுதல் வருமானத்தை திரட்டுகின்ற முயற்சியை மக்கள் பொதுவாக வரவேற்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதுவும் சிறுவாணி குடிநீர் திட்டத்திற்கான செலவை ஏற்பதற்கும், சிறப்பான சாலைவசதி ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் சாக்கடை கழிவுநீரை அகற்றுவதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்குமாக இந்தத் திட்டங்கள் மாநகராட்சி சார்பில் விரைவாக நடைபெற்று வருவதை இன்று நான் மக்கள் சார்பில் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து கோவை—மேட்டுப்பாளையம்—பல்லடம் பகுதிகளுக்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு கொடுக்க இருக்கிற அத்திக்கடவு குடிநீர் திட்டத்தில் பக்கத்தில் இருக்கிற அனைத்து பேரூராட்சிகளையும், கிராமங்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். இடையில் இருக்கிற கிட்டத்தட்ட 300 கிராமங்கள் அந்தத் திட்டத்தால் பயன்பெறுகிற அளவுக்கு அந்த திட்ட ஆரம்ப காலத்திலேயே எல்லாப் பகுதிகளையும் சேர்ப்பதற்கு அரசு சம்பந்தப்பட்ட குடிநீர் வடிகால் வாரியத்திற்கு உத்திரவு வழங்கவேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன் அதற்குரிய கட்டணத்தை—ப்ரப்போர்ஷனேட் காஸ்டைக் கொடுப்பதற்கு அந்தப் பஞ்சாயத்துக்கு சக்தி இருக்கிறதோ இல்லையோ அந்தத் திட்டம் இடம் பெறச் செய்ய வேண்டும். ஏனென்றால் பல பஞ்சாயத்துக்களுக்கு அந்தக் கட்டணத்தைச் செலுத்துவதற்கான தகுதி இருக்காது. அவைகளை இணைப்பதற்கான ஆணையை இட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





கோவை மாநகராட்சியில் இருக்கின்ற நகரசுத்தித் தொழிலாளர்கள்—ஸ்காவஞ்சர்ஸ் போதாது என்ற குறை இருக்கிறது. அந்தப் பகுதிக்கு இன்னும் 1,500 பேர் வேண்டுமென்ற குறை நீண்ட காலமாக இருக்கிறது. 14 கிலோ மீட்டர் சுற்றளவு கொண்ட அந்த நகரம் தற்பொழுது 40 கிலோ மீட்டர் சுற்றளவுக்கு வளர்ந்திருக்கிறது. எனவே, அமைச்சரவர்கள் இதைக் கவனித்து, அந்த நகரத்தைப் பராமரிப்பதற்கான சுகாதாரப் பணியாளர்களையும், அதற்கு வேண்டிய அதிகாரிகளையும் நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாகவும், அரசாங்கத்தின் சிறப்புத் திட்டத்தின் மூலமாகவும் நகராட்சிகளில் நல்ல வளர்ச்சிப் பணிகள் செய்யப்படுகின்றன. இதற்குக் காரணமாக இருக்கின்ற மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களுக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவரவர்களுக்கும் நன்றி கூறி மசோதாவை வரவேற்று அமர்கிறேன்.

*திரு. மு. அரங்கநாதன் : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, இப்பொழுது அமைச்சரவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவை நான் எதிர்க்கிறேன். காரணம் என்னவென்றால், தனி அதிகாரிகளின் கைகளில் சிக்கி நகரங்கள் அழிந்துகொண்டிருக்கின்றன. குறிப்பாக இந்த நகராட்சி தனி அதிகாரிகள் ஓய்வுக்கு வந்தவர்களைப்போன்று செயல்படுகிறார்கள். நீலகிரி மாவட்டத்தில் உதகை நகராட்சி, குன்னூர் நகராட்சி ஆகிய இரண்டு நகராட்சிகள் பிரதான நகராட்சிகள் ஆகும். நூறு ஆண்டுகளுக்கு முன்பு ஏற்படுத்தப்பட்ட நகராட்சிகள் இவை, வெள்ளையர்களின் வசதிக்காக சீராக, நல்ல விதமாக நடந்தவை, கடந்த ஏழு ஆண்டுக்காலமாக தனி அதிகாரிகளின் கைகளில் சிக்கி படாதபாடு படுகின்றன. நகரங்களெல்லாம் நரகங்களாக மாறிவிட்டன. இந்த இரண்டு நகராட்சிகளுக்கும் வருகின்ற தனி அதிகாரிகள் ஏதோ மலை நாட்டு மன்னர்களைப்போல நினைத்துக்கொண்டு கொடிகட்டிப் பறந்துகொண்டிருக்கிறார்கள். ஏதோ ஓய்வுக்காகவும், உல்லாசத்திற்காகவும் வந்தவர்கள்போல நினைத்துக்கொண்டு செயல்படுகிறார்களே தவிர, மக்களின் குறைகளைத் தீர்க்க வந்தவர்களைப்போல நடந்து கொள்வதாக இதுவரையில் காணப்படவில்லை.

குன்னூரைப் பொறுத்தவரையில் குப்பை கூளங்கள் நிரம்பிக் கிடக்கின்றன; கழிப்பிட வசதி இல்லை. குடிதண்ணீருக்காக 3 டேங்கள் இருக்கின்றன. பெருமழை காரணமாக போதுமான தண்ணீர் அவற்றில் இருந்தும் எங்களுக்கு குடிப்பதற்கு போதுமான நீரைக் கொடுக்காத நிலையில் நகராட்சி நிர்வாகம் செயல்படுகிறது. ஏனென்று கேட்டால் போதிய அலுவலர்கள் இல்லை என்று சொல்கிறார்கள். இருந்தாலும் மக்களுக்கு தண்ணீர் தர வேண்டுமென்ற அக்கறை அவர்களுக்கு இல்லை. அதற்கு எத்தனையோ உதாரணங்களைச் சொல்ல முடியும்.

[திரு. மு. அரங்கநாதன்] [1984 மார்ச் 5

மாண்புமிகு அமைச்சரவர்கள் சென்ற வருடம் ஏப்ரல் மாதத்தில் குன்னூரிலே 28 கடைகளைத் திறந்து வைத்தார்கள். ஆனால் அந்தக் கடைகளெல்லாம் அதற்குப் பிறகும், 8, 10 மாதங்கள் மூடியே கிடந்தன. கடைசியாக, மாவட்ட ஆட்சித் தலைவர் தலையிட்டு கடந்த மாதம்தான் பாதிக்கப்பட்ட வியாபாரிகளுக்குக் கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இப்படி பத்து மாதங்களாக அந்த 28 கடைகளும் மூடப்பட்டிருந்ததால் நகராட்சிக்கு வர வேண்டிய பல ஆயிரக்கணக்கான ரூபாய் வராமல் நஷ்டம் ஏற்பட்டு விட்டது. அங்கே காய்கறிக் கடைகளும் இருக்கின்றன; கத்தரிக்காய் கடையும் இருக்கிறது; பழக் கடையும் இருக்கிறது. தினசரி அவைகளுக்கு 30 ரூபாய் வாடகை போட்டார்கள். மற்றவர்கள் போராடியதற்குப் பிறகு 15 ரூபாய் என்று போட்டிருக்கிறார்கள். ஆனால், ஆரம்பத்தில் அவைகளுக்கு 2 ரூபாய்தான் வாடகை இருந்தது. இன்றைக்கு அது 15 ரூபாயாக உயர்த்தப்பட்டு வியாபாரிகள் பாதிக்கப்படும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இத்தனையும் நகராட்சி அதிகாரிகள் செய்யும் வேலையினால்தான் என்று சொன்னால் அது மிகையாகாது.

இரண்டு மாதங்களுக்கு முன்பு அட்டடி, கோடமலைபோகும் சில ஊர்களின் பாதைகள் தகர்ந்துபோய் மக்கள் போக்குவரத்திற்குப் பயன்படுத்த முடியாத நிலைமை ஏற்பட்டது. அதுபற்றி அதிகாரிகளிடத்தில் சொன்னால் அவர்கள் காதுகொடுத்துக் கேட்காமல் இருக்கிறார்கள். வற்புறுத்திக் கேட்டால், பணம் இல்லை என்று சொல்கிறார்களே தவிர, பாதையைச் செப்பனிடவில்லை.

குன்னூரில் பத்தடி தூரம் நடந்தால் ஒரு தடவையாவது விழுந்து விடக்கூடிய அளவிற்கு மேடு பள்ளம் இருக்கிறது. ஒட்டுப் பட்டரை கரடிப்பள்ளம் போன்ற பகுதிகளில் மக்கள் போக முடியாத அளவிற்கும், நகரப் பேருந்துகள் செல்ல முடியாத அளவிற்கும் சாலைகள் மிகமிக மோசமாக இருக்கின்றன.

(பிற்பகல் 1-00)

அந்த ரோடுகளை எல்லாம் பழுது பார்ப்பதற்கும் குடிநீர் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் தனி அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க மாட்டார்கள். ஏனென்றால் அவர்கள் எல்லாம் வெளியூர்க்காரர்கள் அவர்கள் அங்கே வந்து அதிகமாகத் தங்குவதில்லை. எப்போது ஊருக்குப் போகலாம் என்றுதான் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அல்லது வேறுஎங்கே போகலாம் என்றுதான் இருக்கிறார்கள். மக்களின் தேவைகளை அறிந்து காரியங்களைச் செய்வதில்லை. எந்தெந்த வார்டுகளில்என்னென்ன பிரச்சினைகள், குறைபாடுகள் உள்ளன என்பதெல்லாம்



1984 மார்ச் 5] [திரு. மு. அரங்கநாதன்]

அவர்களுக்குத் தெரியாது. மாவட்டவளர்ச்சி மன்றக் கூட்டங்கள் மாதத்திற்கு ஒரு முறை கூடுகின்றபோது அங்கே நகராட்சி மன்றத்தைப் பற்றித்தான் பேசவேண்டி இருக்கிறதே தவிர வேறுபல காரியங்களைப் பற்றிப் பேசவே முடியாத அளவுக்கு நகராட்சி சீர்கேடு அடைந்திருக்கின்றது.

1972 ஆம் ஆண்டு குன்னூரில் குடிநீர் வடிகால் வாரியத்தால் அமைக்கப்பட்ட பணிகள் 12 ஆண்டுகள் ஆகியும் இதுவரையில் செய்து முடிக்கப்படவில்லை. உதகை ஏரியினை தூர் வாருகிறோம் என்று சொன்னார்கள். ஆனால் இன்னும் தூர்வாராத நிலைமைதான் இருக்கின்றது. ஆனால் வாரியதுபோல் பில் போட்டுவிட்டார்கள். இதுபற்றியெல்லாம் சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் வளர்ச்சிமன்றக் கூட்டத்திலே சொன்னோம் ஆக இந்த அளவுக்கு இப்போது குன்னூர், உதகை போன்ற இடங்களில் பெரும் பிரச்சினைகள் ஏற்பட்டிருக்கின்றன. பெரும் பூகம்பம் ஏற்பட்ட இடங்கள் எப்படிக் காட்சி அளிக்குமோ அந்த அளவுக்கு இப்போது அந்த நகரங்கள் காட்சியளிக்கின்றன. தனி அதிகாரிகளின் மூலம் மக்களுக்கு நன்மை செய்ய முடியாது. எனவே அவர்களின் பிடியிலிருந்து மக்களைக் காப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். கடந்த 7 ஆண்டுக் காலமாக தனி அதிகாரிகள் எந்த அளவுக்கு அநியாயங்கள் செய்தார்கள், அத்துமீறல்களைச் செய்தார்கள் என்பதப்பற்றி விசாரணை செய்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். நகராட்சிமன்ற இடங்களை பலருக்கும் கொடுக்கிறார்கள். நகராட்சியின் சந்தையில் யாருக்கும் இடங்கள் ஒதுக்கக்கூடாது, கடைகள்தான் கட்டிக்கொடுக்கவேண்டும் என்று சட்டம் இருக்கின்றது. அப்படி இருந்தும் நகராட்சிச் சந்தையில் அவர்களுக்கு வேண்டியவர்களுக்கெல்லாம் எவ்வளவு இடம் வேண்டும் என்றாலும் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட பல்வேறுவிதமான சீர்கேடுகள் நிறைந்திருப்பதன் காரணத்தால் நீங்கள் குறிப்பிட்ட மாதிரி ஏப்ரல் மாதத்திலேயே தேர்தலை நடத்தி, மக்களை வாழ வைக்க வேண்டும் என்றும் தனி அதிகாரிகளின் பிடியிலிருந்து நகர மக்களைக் காப்பற்றவேண்டும் என்றும் கேட்டு அமைகிறேன் வணக்கம்.

*திரு. டி. மணி : மாற்றுத் தலைவர் அவர்களே, நகராட்சி தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை நீட்டிப்பது சம்பந்தமான மசோதாவின் மீது மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே சில கருத்துக்கள் சொல்ல விழைகிறேன்,

[திரு. டி. மணி] [1984 மார்ச் 5

ஏப்ரல் மாதத்திலே தேர்தலை நடத்துவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே வாக்குறுதி தந்திருக்கிறார்கள். ஆனால் அதற்கிடையில் இன்னும் சில சந்தேகங்கள் வருகின்றன. அதாவது இன்னும் மழை வந்தால், அல்லது கடுமையான வறட்சி வந்தால் அது நீட்டித்துக் கொண்டே போகுமோ என்ற ஐயப்பாடு இருக்கின்றது. ஆகவே அந்த ஐயப்பாட்டிற்கு இடம் கொடுக்காமல் நகராட்சிகளின் பொறுப்பிலே இருக்கின்ற தனி அதிகாரிகள் பதவிக் காலத்தினை மேலும் மேலும் நீட்டிக்காமல் குறுகிய காலத்திலே நகராட்சித் தேர்தல்களை நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டு சில விவரங்களை மட்டும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

குறிப்பாக நகராட்சியின் பணி என்று சொல்கின்றபோது, அங்கே மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் தந்தாக வேண்டும். அது ஒரு முக்கியமான கடமையாகும். நகராட்சிகளுக்கெல்லாம் தேர்தல் நடத்தப்பட்டு பல ஆண்டுகாலம் ஆகிவிட்டது. மாநிலம் பூராவிலும் இருக்கின்ற பல்வேறு நகராட்சிகளுக்குத் தேர்தல் வந்து அதன்பிறகு அரசின் அனுமதி பெற்றோ அல்லது பணத்தை பெற்றோ மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் கிடைக்குமா என்று எண்ணி மக்கள் எல்லாம் எதிர்பார்த்துக் கொண்டிருப்பது என்பது ஒரு சாதாரணமான நிலைமையாகும்.

குழித்துறை நகராட்சியினைப் பொறுத்த வரையில் குடிநீர் தட்டுப்பாடு இல்லை என்று சொன்னாலும் கூட, அங்கே அதிகமான குடிதண்ணீர் இருந்தாலும் கூட இயந்திரக் கோளாறு காரணமாகவோ குழாய்களில் தண்ணீர் சரிவர செல்லாத காரணத்தாலோ அங்கே இரண்டு நாட்களுக்கு ஒருமுறைதான் தண்ணீர் வழங்கப்படுகின்றது. நீர்த் தேக்கத்தில் போதுமான தண்ணீர் இருந்தும் அந்தத் தண்ணீரை எடுத்து விநியோகம் செய்ய முடியவில்லை. அந்த நிலைமை பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குக் கூடத் தெரியும். கடந்த வருடம் அவர்கள் குழித்துறைக்கு வந்திருந்தபோது, அங்கேயுள்ள தண்ணீர் பற்றாக்குறையினை அமைச்சர் அவர்கள் நேரடியாகவே அனுபவித்தார்கள் என்பது உண்மை. நீர்த்தேக்கத்திலே தண்ணீர் இருக்கின்றது. ஆனால் அந்தத் தண்ணீரை எடுத்துத் தரவேண்டிய இயந்திரத்திலே கோளாறு ஏற்பட்டதன் காரணத்தால் அந்த பாதுகாக்கப்பட்ட குடிநீர் அந்த நகரத்திலே கிடைக்காத சூழ்நிலை இருக்கின்றது. அங்கே இரண்டு நாளைக்கு ஒருமுறைதான் தண்ணீர் கிடைக்கின்றது. அதற்குத் தேவையான பண ஒதுக்கீட்டிற்காக அங்குள்ள அதிகாரிகள் அரசாங்கத்தை அணுகினால் அவை காலாகாலத்தில் கிடைப்பதில்லை. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புக்கள் இருந்தாலாவது அந்தக் கடனைப் பெற்றுக் கொள்ள அல்லது மானியத்தைப் பெற்றுக் கொள்ள வாய்ப்பாக அமையும். எனவே நகராட்சித் தேர்தல்களை நீட்டித்துக் கொண்டுபோகக் கூடாது.



1984 மார்ச் 5] [திரு. டி. மணி]

அடுத்து, சுகாதார இன்மை என்பது இந்த மாநிலத்திலே யிருக்கிற பெரிய நகராட்சியானாலும் சரி, அல்லது சிறிய நகராட்சியானாலும் சரி, எங்கும் இருக்கிற குறைபாடு. காரணம், இன்று நகராட்சிகளுக்கு வருகின்ற பணம் பற்றாக்குறையாக இருக்கிறது. பணம் பற்றாக்குறை காரணமாக ஒரு நபர் இறந்துவிட்டாலோ அல்லது ஓய்வு பெற்றாலோ, அவருக்குப் பதிலாக புதிய ஆட்களை நியமனம் செய்வதில்லை. இது நகராட்சிகளுக்கும் பொருந்தும், நகரியங்களுக்கும் பொருந்தும். குறிப்பாக, நம்முடைய மாநிலத்தினுடைய பெரிய சுற்றுலா தலமாக இருக்கிற கன்னியாகுமரி நகரியமாக இருக்கிறது. அங்கே சென்றால், குடிக்க தண்ணீர் இல்லை. அங்கே சுகாதார இன்மை சுகாதாரப் பணியாளர்கள் பற்றாக்குறையால் ஏற்பட்டுள்ளது. எனக்கு முன்னாலே பேசிய ஆளும்கட்சி உறுப்பினர் அவர்கள் கோவை நகராட்சியிலே சுகாதாரப் பணியாளர்கள் பற்றாக்குறை இருக்கிறது. என்பதைப் பற்றிச் சொன்னார்கள். ஆயிரக்கணக்கான சுகாதாரப் பணியாளர்கள் பற்றாக்குறை இருந்து கொண்டே இருக்கிறது எனவே, சுகாதாரம் பாதுகாக்கப்பட வேண்டுமென்றால், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பு ஒன்று தேவை. அது இல்லாத காரணத்தால்தான் இந்த நிலை நீடித்துக் கொண்டு வருகிறது. ஆகவே, அதையும் கணக்கிலே எடுத்துக் கொள்ள வேண்டும்.

சாலைகளை எடுத்துக் கொண்டால், நம்முடைய மாநிலத்தில் மூன்று விதமான சாலைகள் இருக்கின்றன. தேசிய நெடுஞ்சாலைகள், ஹைவேசுக்குச் சொந்தமான சாலைகள், நகராட்சிக்குச் சொந்தமான சாலைகள். 8 ஆண்டுக் காலம் தனி அதிகாரிகள் பொறுப்பிலே நகராட்சிகள் இருக்கின்ற காரணத்தால், சாலைகள் பூராவும் பழுதடைந்து, உள்ளன. அது போன்று கிராமங்களுக்குச்செல்வதற்கான இணைப்புச்சாலைகளே இல்லை. அதற்குப் போதுமான பணம் இல்லை என்று சொல்லப்படுகின்ற ஒரு நிலை இருக்கிறது. எனவே, அந்த நிலையை மாற்றவும் நகராட்சிகளுக்குத் தேர்தலை நடத்த வேண்டும். இன்றைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களும் உறுப்பினர்களும் இல்லாத காரணத்தால் இந்தச் சங்கடமான நிலை நீடிக்கிறது. எனவே, தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும்.

அடுத்து, மின்சாரக் கோளாறு ஏற்பட்டால், உடனே சட்டமன்ற உறுப்பினர்களைத்தான் அணுகுகிறார்கள். குண்டு விளக்கு இல்லையென்றாலும் குழாய்விளக்கு இல்லையென்றாலும் உடனே நேராக சட்டமன்ற உறுப்பினரைப் பார்க்கிறார்கள். கன்னியாகுமரியிலே விளக்கு எரியவில்லையென்றால் அங்கே இருக்கின்ற அதிகாரிகளுக்கு போன் செய்ய வேண்டும். நாகர்கோவிலில் குடிதண்ணீர் பற்றாக்குறை என்றால், அங்கே இருக்கிற அதிகாரிகளுக்கு போன் செய்ய வேண்டும். குளச்சலிலே குடிதண்ணீர் பற்றாக்குறை என்றால் அதிகாரிகளுக்கு போன் செய்யவேண்டும்

[திரு. டி. மணி] [1984 மார்ச் 5

தக்கலை நகராட்சிப் பகுதியிலே குடிதண்ணீர் பிரச்சினை என்றால் அங்கே உள்ள அதிகாரிகளுக்கு போன் செய்ய வேண்டும். குடி தண்ணீர் பிரச்சினை, விளக்கு எரியாத பிரச்சனை போன்ற பிரச்சினைகள் உள்ளன. நான் முதலில் சொன்ன மாதிரி, நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் குழித்துறையிலிருக்கிற பயணிகள் விடுதியில் தங்கியிருக்கும்போது அதே நிலைதான் நீடித்தது. ஆகவே, தேவையான பண ஒதுக்கீடுகள் தந்தால்தான் இந்தப் பிரச்சினைகளுக்கு எல்லாம் தீர்வு காண முடியும். எனவேதான் இது போன்ற பிரச்சினைகள் வராது தடுப்பதற்குக் கூடதேர்தல் முக்கியமான தேவையாக இருக்கிறது.

நான் உள்ளாட்சிகளுடைய ஒரு பிரச்னையை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். குறிப்பாக, கடையான்மூடு பேரூராட்சியிலே ஒரு நீர்த்தேக்கம் இருக்கிறது. சிவலோகம் நீர்த்தேக்கம் என்பது அதன் பெயர். அந்த நீர்த்தேக்கத்திலே இருந்த படகு பழுதடைந்து பல மாதங்கள் ஆகின்றன. இதனால், அந்த நீர்த்தேக்கத்தின் ஒரு பகுதியிலே இருக்கிற மக்கள் மறு பகுதிக்குச் செல்ல வேண்டுமென்றால் 8 மைல் தூரம் சுற்றி நடந்து செல்ல வேண்டிய துர்பாக்கியமான நிலையிலே இருக்கிறார்கள். மேல்புறம் ஊராட்சி ஒன்றியத்தைக் கேட்டால் பணம் இல்லையென்று சொல்கிறார்கள். ஆகவே, பணப் பற்றக்குறை என்பது இன்றைய தினம் ஊராட்சி ஒன்றியமானாலும் சரி, நகராட்சியானாலும் சரி, சர்வ சாதாரணமாக நீடித்துக் கொண்டிருக்கிறது. ஆகவே, சிவலோகத்திலும் சங்கரன் கடலிலும் தேவையானப் படகுகளை போடுவதற்கான ஏற்பாட்டை உடனடியாக செய்வதோடு, இந்த நகராட்சிகளிலே நான் சொல்லியிருக்கிற குறைபாடுகளை விரைவாகத் தீர்த்துக்கொள்ள, இந்தத் தேர்தலைத் தள்ளிப் போடாமல், அதிவிரைவிலே ஏப்ரல் மாதத்திலே தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கக்கூடிய நகராட்சிகளுக்கான தனி அதிகாரிகள் பதவிக் காலத்தை இன்னும் 3 மாத காலத்திற்கு நீட்டிக்க வேண்டுமென்ற மசோதாவின் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இன்றைய தினம் இங்கே தேதியைக் கூட அறிவித்து விட்டார்கள். ஆனாலுங்கூட என்னைப் பொறுத்த வரையில் நான் சந்தேகப்படுகின்றேன், இந்தத் தேர்தல் நடைபெறுமா என்று. ஏனென்றால், இதுபோன்ற பல்வேறு முறைகள் அறிவித்தும் கூட தேர்தல் நடைபெறாத நிலை இருக்கிற காரணத்தால், எங்களுக்குச் சந்தேகங்கள் இருக்கின்றன.



1984 மார்ச் 5] [திரு. மு. அப்பாதுரை]

நகராட்சிகளைப் பொறுத்த மட்டில், எவ்வளவு சீர்கேடான நிலையில் இருக்கின்றன என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். இங்கே இருக்கக்கூடிய அமைச்சர் அவர்கள் என்னுடைய தூத்துக்குடி நகராட்சிக்கு 24 மணி நேரமும் நாங்கள் நீர் வழங்குவோம் என்று சொல்லி மிகப்பெரிய விழாவை நடத்தி அந்த விழாவிலே அறிவித்து விட்டு வந்தார்கள். ஆனால் அந்தத் திட்டம் இன்று வரையிலும் நிறைவேற்றப்படவில்லை. அதே போன்று பாதாளச் சாக்கடைத் திட்டம் பற்றி இதே மாமன்றத்திலே கேள்விக்குப் பதில் அளிக்கும்போது, தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் 1982 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாளுக்குள் நிறைவேற்றப்பட்டு, 1983 ஆம் ஆண்டு சனவரி திங்கள் 1ஆம் நாள் முதல் அமுலுக்கு வரும் என்று சொன்னார்கள். இன்று வரையிலும் அந்தத் திட்டம் எட்டாக் கனியாக இருக்கிறது. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்

(பிற்பகல் 1-10)

னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு இதுபோன்ற நகராட்சிகளில் நியான் விளக்குகளை அதிகமாகப் போட்டார்கள். இன்றைக்கு பல இடங்களில் அந்த விளக்குகள் பழுதடைந்து விட்டன. அவற்றை ரிப்பேர் செய்வதற்கு நாங்கள் சொல்கிற போது மின் இலாக்காவிலே அவற்றிற்கு உபகரணங்கள் இல்லை. அவைகளை காயலான் கடைக்கு போடவேண்டுமென்று சொல்லக் கூடிய துர்பாக்கியமான நிலையில் இருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் தெரு விளக்குகள் எரியவில்லை என்று சொல்லுகிற போது, தேவையான பொருள்கள் எங்களிடத்தில் இல்லையென்று பதிலை அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆக, நகராட்சியிலே பணத்தை எல்லாம் அலங்கார விளக்குகளாகப் போட்டதன் மூலம் நீங்கள் வெளிச்சம் போட்டுக் காட்டிவிட்டீர்களே தவிர உள்ளபடியே நகராட்சி மக்களுக்காக குடிதண்ணீர் வசதி மற்றும் சுகாதார வசதிகளைச் செய்யவில்லை. இங்கே உறுப்பினர்கள் எல்லாம் சொன்னார்கள். 1956, 1958-லிருந்த மக்கள் தொகை அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட நகரசுத்தி ஊழியர்கள் தான் இன்றைக்கும் அங்கே இருக்கிறார்கள். இன்றைக்கு இரண்டு, மூன்று மடங்கு ஜனத்தொகை பெருகி இருக்கிறது. ஆனால் அதற்கு போதுமான அளவிற்கு நகரசுத்தி ஊழியர்களைப் போட்டிருக்கிறோமா என்றால், இல்லை. ஊழியர்கள் இல்லை என்பது மட்டுமல்லாமல், அவர்களுக்குத் தேவையான வாளி, கரண்டி போன்ற அத்தியாவசியப் பொருள்களையும் நம்முடைய சர்க்கார் வழங்கவில்லை. ஆகவே அவர்கள் கழிவுப்பொருள்களை சாக்கடையில் தள்ளிவிட்டுச் சென்று விடுகிறார்கள். இதனால் நகரமெல்லாம் நரகமாக மாறியிருக்கிறது என்று சொன்னால், அது மிகையாகாது.

அடுத்து நம்முடைய சாலைகளைப் பொறுத்த வரையில்
சொல்வது என்றால், தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் நாங்கள்
அதிகமான சாலைகளைப் போட்டோம் என்று நீங்கள் சொல்லிக்
கொள்ளலாம். தமிழகத்தில் இரண்டு, மூன்று மாவட்டங்களைத்
தவிர, எல்லா மாவட்டங்களிலும் இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற
வெள்ளம் காரணமாக, நம்முடைய மாநிலத்தில் தன்னிறைவுத்
திட்டம் நிறைவேறி இருக்கிறதா என்று சந்தேகத்திற்கு இடம்
அளிக்கக்கூடிய வகையில் சாலைகள் எல்லாம் அரித்துச் செல்லப்
பட்டிருக்கின்றன. நாம் நட்டு வைத்த போர்டுகள் தான் தன்
னிறைவுத் திட்டம் என்று சொல்லிக் கொண்டிருக்கின்றன. குறிப்
பாக தஞ்சை மாவட்டத்தில் அனைத்து சாலைகளும் பழுதடைந்து
இருக்கின்றன. அவைகளை எல்லாம் பழுது பார்க்க வேண்டும்.
நெல்லை மாவட்டத்தில் நெல்லை நகராட்சி, மேலப்பாளையம்
நகராட்சி, பாளையங்கோட்டை நகராட்சிகளில் தேசிய சாலை
கள் தான் உயிரோடு இருக்கின்றனவே தவிர மற்ற சாலைகள்
எல்லாம் யாருமே செலல முடியாத நிலையில் இருக்கின்றன.
அப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டிருக்கிறது. 1970-க்கு பிறகு
இப்போது தான் தேர்தல் தேதி சொல்லி இருக்கிறோம். 14
ஆண்டுகள் நம்முடைய மகாபாரதத்தில் வனவாசம் என்று சொல்
வார்கள். அதைப் போல தமிழகத்தில் 14 ஆண்டுகள் உள்ளாட்சி,
நகராட்சி தேர்தல் இல்லாத காரணத்தால் தான் பல்வேறு நக
ராட்சிகளில் பணப் பற்றாக்குறை என்று சொல்வது. குறிப்பாக
வரியை விதித்து இருக்கிறார்கள் என்ற குறைபாடு இருந்தாலும்
கூட எந்த இடத்துலே எப்படி வருவாயைப் பெருக்க வேண்டு
மென்ற சிந்தனை நகராட்சியிலே இருக்கிற அதிகாரிகளுக்கு இருக்
கிறதா என்றால், அறவே இல்லை. குறிப்பாக தூத்துக்குடி
நகராட்சி பிற நகராட்சிகளுக்கு கடன் வழங்கிக் கொண்டிருந்த
நகராட்சி இன்றைக்கு வட்டிக்கு கடன் வாங்கிக் கொண்டிருக்கிற
நிலைமை இருக்கிறது. இதை உதாரணத்திற்குத் தான் சொன்
னேன். அந்த அளவிற்கு துர்பாக்கியமான நிலைக்கு அது ஆளாகி
இருக்கிறது. ஏன் இதை வலியுறுத்திச் சொன்னேன் என்றால்,
தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இருப்பார்களானால் எந்த
வழி மூலமாக நாம் நகராட்சியின் வருமானத்தை பெருக்க முடி
யும் என்று அவர்கள் ஆராய்ந்து சொல்லி இருப்பார்கள். இன்
றைக்கு அதிகாரிகளுக்கு தெரிந்ததெல்லாம் வீட்டு வரியை உயர்த்
துவதைத் தவிர மற்ற பிற வழிகளிலே இருக்கக்கூடிய
வருமானத்தை உயர்த்துவதற்கு எந்தவிதமான யோசனையும்
அவர்களுக்குக் கிடையாது. அப்படிப்பட்ட நிலை இருப்பதால்
நகராட்சி, ஒன்றியங்கள் எல்லாம் நிதிப் பற்றாக்குறையிலே
சிக்கித் தவித்துக் கொண்டிருக்கின்றன.

அதுமட்டுமல்லாமல் இன்றைக்கு உங்களைப் பொறுத்தவரை
யில், ஆளும்கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு தனி அதிகாரிகள் அங்கே
பதவியில் இருப்பதால் உங்களுடைய ஆட்சி நடப்பது, போன்ற
தனமையில் நடந்துகொண்டு இருக்கிறார்கள். ஆகவே அங்கே
முழுமையான மக்களாட்சி நடைபெறவேண்டுமானால், அவற்றிற்கு



நீங்கள் ஒதுக்கக்கூடிய நிதி எந்த திட்டத்திற்காக இருந்தாலும்
சரியாக செலவழிக்கப்பட வேண்டுமானால், பல்வேறு சமூகநலப்
பணிகளுக்காக நீங்கள் ஒதுக்குகிற நிதி சரியான முறையில் செம்மை
யான வழியில் மக்களுக்குச் சென்று பயன் அளிக்க வேண்டுமானால்
அங்கே தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பு இருந்தால்தான் செய்ய
முடியும். ஆகவே, அப்படிப்பட்ட நிலைமையை உருவாக்குவதற்கு
நீங்கள் அறிவித்திருக்கின்ற தேதியில் தேர்தலை நடத்து
வீர்கள் என்று நம்புகிறேன். அந்த நம்பிக்கை வீண் போகாது
என்று கருதி அமைகிறேன்.

மாண்புமிகு திரு. ம. குழந்தைவேலு: மாண்புமிகு தலைவர்
அவர்களே, நகராட்சிகளின் தனி அதிகாரிகள் பதவிக்காலத்தை
நீட்டிக்கின்ற சட்டமுன்வடிவைப் பொறுத்த வரையில் இந்த மா
மன்றத்தின் உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை எடுத்துச்
சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக, ஊராட்சி மன்றங்கள்,
ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றுக்கு எப்படி தேர்தல் தேதி
களை நாம் நிர்ணயித்து வருகின்ற ஏப்ரல் மர்தத்திலே அந்தத்
தேர்தலை நடத்த இருக்கின்றோமோ அதேபோல் நகராட்சிகளுக்
கும், தேர்தலை நடத்துவதற்கு தேதி ஏற்கனவே குறிப்பிடப்பட்
டிருக்கின்றது. ஆகவே, ஏற்கனவே அறிவித்தது போல் ஏப்ரல்
28 ஆம் தேதி கண்டிப்பாக அந்தத் தேர்தல் நடைபெறும் என்
பதை இங்கே நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்கு வகை
செய்யும் வகையில் இந்தச் சட்ட முன்வடிவு ஏறத்தாழ மூன்று
மாத காலத்திற்கு அந்தத் தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை
நீட்டிப்பதற்கு வகை செய்கிறது. ஆயினும், அதற்கு முன்பாக
தேர்தல் நடைபெற்று விட்டால், எந்தத் தேதியில் அந்தத் தேர்
தல் நடைபெற்றுப் பொறுப்பேற்றுக்கொள்கிறார்களோ அந்தத்
தேதியிலிருந்து தனி அதிகாரிகள் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்
படுவார்கள் என்பதற்கும் இந்தச் சட்டம் வழிவகை செய்கிறது.

தமிழகத்தின் இன்றைக்கு 106 நகராட்சிகள் இருக்கின்றன.
அதிலே 8 நகரியங்கள் இருக்கின்றன. அவற்றிற்கு நாமினேஷன்
முறையில் அமைப்புகள் ஏற்படுத்தப்படுகின்றன. அதுபோக,
எஞ்சி இருக்கும் 98 நகராட்சிகளில் 7 நகராட்சிகள் வருகின்ற
செப்டம்பர் மாதத்தில் இருந்து மாநகராட்சிகளாக உயர்த்தப்பட
இருக்கின்றன. ஆகவே, அந்த 7 நகராட்சிகளுக்கும் தேர்தல்
இல்லை. மீதமுள்ள 91 நகராட்சிகளுக்குத்தான் தேர்தல் நடத்த
இருக்கிறோம். அந்த 91 நகராட்சிகளுக்கும் ஏப்ரல் 28 ஆம்
தேதி நிச்சயம் தேர்தல் நடைபெறும் என்பதை இங்கே குறிப்
பிட்டாகவேண்டும்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களைச் சொல்
லியிருக்கிறார்கள். பல்வேறு நிலைமைகளையெல்லாம் எடுத்
துச்சொல்லியிருக்கிறார்கள். ஏற்கெனவே, கடந்த 1972-க்கு முன்
பும் அதற்குப் பின்பும் எப்படி நகராட்சிகள் இருந்தனவோ,
அதைக்காட்டிலும் பன்மடங்கு நல்ல முறையில் இன்றைக்கு நக

ராட்சிகள் இருக்கின்றன என்பதை நான் குறிப்பிட்டாக வேண்டும். ஏனென்றால், ஒருங்கிணைந்த நகராட்சி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மத்திய மாநில அரசுகள் தரும் கடன் தொகை அடிப்படையில் கடந்த ஆண்டில் மட்டும் நாம் நகராட்சிகளுக்கு ஒதுக்கியிருக்கக்கூடிய தொகை 25 கோடி ரூபாய். இதுவரையிலும் எந்த ஆட்சிக் காலத்திலும் இந்த 25 கோடி ரூபாய் ஒதுக்கியது கிடையாது. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசின் சார்பில் தான் இப்படிப்பட்ட சீரிய முறையில் சிறந்த திட்டங்களை நடைமுறைப்படுத்தியிருக்கிறோம். அது மட்டுமல்லாமல், கிராமப்புறங்களுக்கு தன்னிறைவுத் திட்டம், கொண்டு வந்ததைப் போல் நகராட்சிகளுக்கும் கொண்டுவந்ததன் காரணமாக கடந்த ஆண்டுகளில் 20 நகராட்சிக்கு முதற் கட்டமாக அது தொடங்கப்பட்டு அதற்குப்பிறகு 31 நகராட்சிகளில் அது விஸ்தரிக்கப்பட்டு அதற்காக 5 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது ஆக மொத்தம் 51 நகராட்சிகளுக்கு அது விரிவாக்கப்பட்டு இருக்கிறது. மேலும், எந்தெந்த நகராட்சிகளுக்கு இத்தகைய திட்டம் தேவையோ அவற்றிற்கும் இன்னும் பணபலமில்லாமல் பலவீனமடைந்த நகராட்சிகளுக்கும் இந்தத் திட்டத்தை விஸ்தரிக்க, நாங்கள் திட்டமிட்டிருக்கிறோம். இதை மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலோ, அல்லது காங்கிரஸ் ஆட்சிக்காலத்திலோ இப்படிப்பட்ட தன்னிறைவுத் திட்டம் நகராட்சிகளுக்கு வரவில்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட மாமன்றம் இல்லாத காரணத்தால் பல்வேறு வேலைகள் மிகச் சிறப்பாக இன்றைக்கு நடைபெற்றிருக்கின்றன. அதற்குக் காரணம் நாம் கொண்டு வந்திருக்கும் திட்டம் ஒரு காலவரையறைக்குள் செய்து முடிக்கப்பட வேண்டும என்பதுதான் என்று நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அரங்கநாதன் அவர்கள் குன்னூர், உதகை நகராட்சிகளில் உள்ள நிலைமையைப்பற்றி பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள்.

** ** ** **

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு துரை முருகன்: பாயின்ட் ஆப் ஆர்டர். குற்றச்சாட்டாக அவர் சொன்னதாக நான் கருதவில்லை. என்றாலும் அதை அவைக்குறிப்பில் இருந்து நீக்கிவிடுவது நல்லது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அந்தப் பகுதி அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படவேண்டுமென்று உத்தரவிடுகிறேன்.

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: அதைப்போன்று, குன்னூர் நகராட்சியில் பல்வேறு பணிகள் நடந்து இருக்கின்றன. அங்கே இருக்கிற பேருந்து நிலையம் விரிவு படுத்தப்பட்டிருக்கிறது. பல கடைகள் கட்டப்பட்டிருக்கின்றன. சாலைப் பணிகள் பல நடந்திருக்கின்றன. அங்கே இருக்கிற மார்க்கெட் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. அதைப்போன்று உதகையிலும் பல பணிகள் நடந்திருக்கின்றன. அங்கே இருக்கக்கூடிய மார்க்கெட் விரிவு படுத்தப்பட்டிருக்கிறது. பேருந்து நிலையம் நல்ல முறையில், அமைக்கப்பட்டு கடைகள் எல்லாம் கட்டப்பட்டிருக்கின்றன. ஆனாலும்கூட நான் ஒரு உறுதியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நாளைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட மாமன்றம் வந்தாலும் என்னென்ன வசதிகளை ஒவ்வொரு நகராட்சிக்கும் செய்து கொடுக்க வேண்டுமோ அதைச் செய்து கொடுக்க இந்த அரசு கண்டிப்பான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறது என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1–20)

திரு. அப்பாதுரை அவர்கள் ஒரு கருத்தை இங்கே சொன்னார்கள். அவர்களுக்குக்கூட சந்தேகம் வந்திருக்கிறது. அவர் இளைஞர், வாழ்க்கையில் பல முன்னேற்றங்களை காண வேண்டியவர். அப்படிப்பட்ட அவருக்குச் சந்தேகம் வரக்கூடாது. அந்த நண்பர் சந்தேகத்தைத் தவிர்த்து, நல்ல முறையில் நகராட்சி தேர்தல் நடக்கும் என்ற எண்ணத்தோடு பாடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. மணி அவர்கள் குழித்துறை பற்றிச் சொன்னார்கள். அங்குள்ள நிலைமை எனக்கும் தெரியும். அங்குள்ள பிரச்சினைகளைத் தீர்க்க ஒரு மாஸ்டர் பிளான் வந்திருக்கிறது. பல்வேறு திட்டங்களை குழித்துறைக்கு கொண்டுவர வேண்டுமென்று இந்த அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது.

இறுதியாக, ஊராட்சி மன்றங்களுக்கு தேர்தல் பற்றிய விவரங்களை அறிவித்ததைப்போன்று இப்போது நகராட்சி மன்றங்களுக்கும் அறிவிக்க விரும்புகிறேன். நகராட்சிகளுக்கு எலெக்ஷன் நோட்டிபிகேஷன் நாள்: 20—3—1984. வேட்பு மனு தாக்கல்: 29—3—1984, 30—3—1984, 30—3—1984. வேட்பு மனு பரிசீலனை செய்தல்: 3—4—1984. வேட்பு மனு வாபஸ் பெறுதல்: 6—4—1984 அன்று பிற்பகல் 3–00 மணி வரையில். வேட்பாளர் இறுதிப்பட்டியல் அறிவிப்பு: 6—4—1984 அன்று மாலை 5–00 மணி எலெக்ஷன் தேதி: 28—4—1984. ஓட்டு எண்ணுதல்: 29—4—1984.

[திரு. ப. குழந்தைவேலு] [1984 மார்ச் 5

எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் திருத்தங்கள் கொடுத்திருந்தால் அவற்றை வாபஸ் பெற்று, இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 7/1984) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

"தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 7/1984) நிறைவேற்றப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ஏ) வேளாண் விளைபொருள் அங்காடிகள், தமிழ்நாடு வேளாண் விளை பொருள் அங்காடிகள் (திருத்தம்-சிறப்பு விதித்துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு 1984.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன். :

"தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் அங்காடிகள், (திருத்தம்-சிறப்பு விதித்துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு **(சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 15/1984) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்."

**1984 ஆம் பிப்ரவரி 22 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



1984 மார்ச் 5]

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்தம்-சிறப்பு விதித்துறைகள்), 1978 ஆம் ஆண்டு திருத்திய சிறப்பு விதிச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கான இந்த சட்டமுன்வடிவின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நான் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சரவர்கள் இந்த மாமன்றத்திலே பலமுறை இதுவே கடைசிமுறை. இனி தனி அதிகாரிகளுடைய பதவிக்காலத்தை நீட்டிப்பதற்காக உங்களை நான் கேட்க மாட்டேன். அடுத்து தேர்தல் நடத்துவேன் என்ற வாக்குறுதியை இந்தப் பேரவையிலே சொன்னார்கள். ஆனால் அதையெல்லாம் உறுதிமொழிக் குழு கவனித்ததா இல்லையா என்று கூட எனக்குச் சந்தேகம். ஆனால் இதிலே அரசாங்கத்திற்கு ஒரு சிக்கல் கூட இல்லை. சட்டம் எல்லாம் வரப்போகிறது என்று சொன்னார்கள். சட்டம் இதுவரையில் வந்ததாக எனக்குத் தெரியவில்லை. ஏற்கனவே நாம் பேசியதைப் போல, கூட்டுறவுத் துறையானாலும் சரி, நகராட்சிகளானாலும் சரி, ஊராட்சி மன்றங்கள், ஒன்றியங்களானாலும் எப்படி தனி அதிகாரியின் கீழ் அவைகள் எல்லாம் பாழாகின்றனவோ அதே போலத்தான் இந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் எல்லாம் பாழாகின்றன. வெளியில் இருக்கிற பல கூட்டுறவுச் சங்கங்களில் பலவிதமான சங்கடங்களை பொதுமக்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது என்னைப் போல் சட்டமன்ற உறுப்பினர்கள் கவனத்திற்கு வரும்போது நாங்கள் எல்லாம் வருத்தப்படுகிறோமே தவிர. வேறு ஒன்றும் செய்ய முடியவில்லை. பல மாவட்டங்களில் நாமினேஷனாக நியமிக்கப்பட்ட ஒன்றிரண்டு கடைகள் இருப்பதாக நான் கேள்விப்படுகிறேன். அதிலே அவர்களுக்கு முழு அதிகாரம் கொடுக்கப்பட்டதா இல்லையா என்று எனக்குத் தெரியாது. எப்படி பஞ்சாயத்து போர்டில், மக்கள் குழு இருக்கின்றதோ, அது போல இருக்கிறது. இன்றைய தினம் முறைகேடுகள் அதிகமான அளவு இருக்கின்றன விவசாயிகள் விளைவிக்கின்ற விளை பொருள்களை ஒழுங்காக விற்பனை செய்வதற்காக, ஒழுங்கு முறை விற்பனைக்கூடம் என்று அந்தகாலத்திலே அதற்குப்பெயர் சூட்டியவர்கள் சூட்டினார்கள். ஆனால் இன்றைய தினம், ஒழுங்குமுறை விற்பனைக் கூடமாக இல்லை. ஒழுங்கற்ற விற்பனைக் கூடமாக தமிழகத்திலே விளங்குகின்றது என்பதை நான் கண்கூடாகப் பார்க்கிறேன். ஒரு நாள் என்னுடைய நகரீயப் பேருந்தில் செல்கிறபோது, அந்தப் பேருந்திலே வருகிற பல்வேறு விவசாயிகள், நான் ஒரு சட்டமன்ற உறுப்பினர் வருகிறேன் என்று தெரிந்தும் கூட, அவர்கள் அங்கே என்ன நடைபெறுகிறதோ அதை விமர்சனம் செய்து வருகிறபோது, என்க்கே கூட நான் வேளாண்மைத் துறை அமைச்சராக இருந்து வந்தால், எந்த அளவிற்கு வருத்தம் ஏற்படுமோ, அந்த அளவிற்கு வருத்தம் ஏற்பட்டது. காரணம், மக்களுடைய விளைபொருள் அங்காடிகளில் முறைகேடுகள் தில்லுமுல்லுகள் போன்றவை எந்த அளவிற்கு

நடைபெறுகிறதோ, அதை அந்த நகரப் பேருந்தில் பிரயாணம் செய்த விவசாயிகள் சொன்னார்கள். குறிப்பாக திருவண்ணாமலை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தைப்பற்றிச் சொன்னார்கள். அதைப்பற்றி நான் இந்தப் பேரவையிலே பேசியதற்குப் பிறகு, பத்திரிகையிலே பார்த்து நண்பர்கள் பலபேர் பாராட்டி எனக்குக் கடிதம் எழுதுகிறார்கள்.

(பிற்பகல் 1-30)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அவையின் முன் அனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. (குறுக்கீடு).

திரு. திருவேங்கடம் பேசியபின், திரு. நல்லப்பன் அவர்கள் மட்டும்தான் பேசவேண்டியிருக்கிறது. (குறுக்கீடு). அடுத்து அமைச்சர் அவர்கள்தான் பதில் அளிக்க வேண்டும். (குறுக்கீடு).

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு உறுப்பினர் திருவேங்கடம் அவர்கள் மட்டும் பேசி முடிக்கட்டும். வேறு யாரும் பேசுவதாக இல்லை என்றால், அமைச்சர் அவர்கள் பதில் சொல்லட்டும்; வேறு யாராவது பேச இருக்கிறார் என்றால் நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம்.

**திரு. பெ. சு. திருவேங்கடம் :** ஒவ்வொரு முறையும் நான் வாதிட்டேன். அப்படிப்பட்ட ஒரு நிலைமை இன்றையதினம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில், தமிழகத்திலே பரவலாக நடந்துகொண்டிருக்கிறது. இன்றையதினம் இதிலே இருக்கிற அதிகாரிகள் மெத்த அதிகாரத்தை தங்களுடைய கையிலே வைத்திருக்கிறார்கள். சாதாரணமாக இரவு நேரங்களிலே எப்படி வருவாய்த்துறையைச் சேர்ந்த அதிகாரிகள் நெல்லோ, அல்லது மற்றப் பொருட்கள் கடத்தப்படுகின்றனவா என்று கண்காணிக்கிறார்களோ, அதைப் போன்று கண்காணிப்பதற்காக இருக்கிறார்கள். அதை நான் வேண்டாம் என்று கூட சொல்லவில்லை. சம்பந்தப்படாதவர்களாக இருந்தாலும் கூட, இதிலே ஏராளமான பணங்கள் வசூலிக்கப்படுகின்றன. பல்வேறு வியாபாரிகள் எங்களிடம் சொல்லுகிறார்கள். இதனால் வியாபாரிகளுக்கும் நன்மையில்லை, இதிலே விவசாயிகளுக்கும் நன்மையில்லை. இதிலே அதிகாரிகளை தனியாக வைத்துவிட்டு, அவர்கள் ஏதோ, சாம்ராஜ்யம் பொன்று இந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் நடந்துகொள்வது, அரசாங்கத்திற்கும் நல்லதல்ல, மக்களுக்கும் நல்லதல்ல என்பதை நான் இந்த நேரத்திலே நினைவுபடுத்த கடமைப்பட்டிருக்கிறேன். இங்கேகூட ஒவ்வொரு முறையும், இந்த பில் வருகிறபோது, இப்படித்தான் பேசுகிறேன். சொன்னதைத் தான் திரும்பவும் சொல்கிறோம், ஆனால் நடைமுறைப்படுத்துகிறார்களா என்றால் இல்லை. திரும்பவும், இப்படிப்பட்டமசோதா பேரவையில்லை என்றாலும், ஆளுநர் மூலமாக இங்கே அறிவிக்கப்படுகிறது. பிறகு அது நம்முடைய பேரவையினுடைய ஒப்புதலுக்



காக வைக்கப்படுகிறது. இவைகள் எல்லாம் தவிர்க்கப்பட வேண்டும். நீங்கள் தேர்தலை நடத்தவில்லை என்றாலும் கூட, அதிலே அதிகாரம் பெற்ற சட்டமன்ற உறுப்பினர்கள், அல்லது சட்டமன்ற உறுப்பினர்களாக அல்லாதவர்கள் மாதம் ஒரு முறை அல்லது 2 மாதத்திற்கு ஒரு முறை—அவர்களுடைய கையிலே அந்த அதிகாரங்களைக் கொடுத்து, தனி அதிகாரிகள், இவர்களைக் கலந்து, ஏதாவது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஒரு முறையை நீங்கள் கையாள வேண்டும். அல்லது மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்கள் நடைபெறுகின்றன. அதற்கும் இந்த அதிகாரிகள் வருவதில்லை. அப்படிப்பட்ட கூட்டங்களிலாவது, இந்த தனி அதிகாரிகள் வந்தால்கூட நாங்கள் இந்தப் பிரச்சினைகளை வளர்ச்சி மன்றக் கூட்டங்களிலே விவாதிக்க முடியும். வேளாண்மைத் துறை அதிகாரிகள் வருகிறார்களே தவிர, இந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தினுடைய தனி அதிகாரிகள் வருவதில்லை. இப்படியே இது எத்தனை ஆண்டுக் காலம் நீடிப்பது என்பதுதான் இங்கே இருக்கிற ஒரு பிரச்சினை. இதை ஒரு முடிவிற்குக் கொண்டு வர வேண்டாமா ? இதிலே வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் மிகவும் துடிப்பானவர். விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். கிராமத்திலேயிருந்து வந்தவர்கள். இவைகள் எல்லாம் அவருக்குத் தெரியாது நாங்கள் தான் சொல்ல வேண்டும் என்று கூட நான் நினைக்கவில்லை. இப்படிப்பட்ட ஒருவர் வேளாண்மைத்துறை அமைச்சராக வந்தாலும், இந்த ஆட்சியிலே இவைகள் எல்லாம் நடைபெறாது என்று சொன்னால், வேறு எங்கேயிருந்து இந்தப் பொறுப்புக்கு நாம் ஆள் கொண்டு வருவது, அண்ணா தி.மு.க-விலே என்பதுதான் எனக்கு எல்லாம் ஏற்படுகின்ற சந்தேகம் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கிராமங்களிலே இருக்கிற விவசாயிகள் வாழ, நியாயமான ஒரு விலை கிடைக்க, அவர்கள் உற்பத்தி செய்கிற பொருள்கள்—ஏற்கெனவே நம்முடைய உணவு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்—இப்போது கிடைக்கின்ற விலை போதவில்லை, இதிலே பல ஊழல்கள். நியாயமான மார்க்கெட்டு ரேட்டுக்குக்கூட ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களிலே விற்கப்படாத ஒரு சூழ்நிலை. இவைகளை எல்லாம் திருத்தி அமைக்க சட்டங்களை நீங்கள் விரைவாகக் கொண்டு வாருங்கள், தேர்தலை நடத்துங்கள், இல்லை, மாறுதல் வேண்டும் என்று சொன்னால், நீங்கள் மாறுதலை நிறைவேற்றுவதற்கு முன்னதாக, இந்த அட்வைசரி பாடியையாவது அமையுங்கள், அல்லது வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே அந்த அதிகாரிகளைக் கலந்து கொள்ளச் சொல்லுங்கள். எனவே உடனடியாக ஒரு நடவடிக்கையை எடுங்கள். ஏற்கனவே கூட ஆலோசனை சொல்லியிருக்கிறோம். அமைச்சர் அவர்கள் வரவேற்றார். ஆனால் நடைமுறையிலே இவைகள்

[திரு. பெ. சு. திருவேங்கடம்] [1984 மார்ச் 5

எல்லாம் வரவில்லை. அவைகளைக் கொண்டு வாருங்கள் என்று கேட்டு, இப்படிப்பட்ட திருத்தங்கள் அடிக்கடி வருவதை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே நான் கண்டித்து, இந்தசந்தர்ப்பத்தை அளித்த தலைவருக்கு நன்றி கூறி முடிக்கிறேன். நன்றி. வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 6—3—1984 காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-35 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

107. மன்னார்குடியில் அறிவிக்கப் பெற்ற அங்காடிப் பகுதியிலிருந்து சில கிராமங்களுக்கு விலக்களிப்பது குறித்து வேளாண்மைத் துறையின் 19-11-1983 ஆம் நாளிட்ட 1976 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.

### (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

19. 1984-85 ஆம் ஆண்டிற்கான 1, 2, 7, 8, 9, 11, 41 மற்றும் 47 ஆகிய கோரிக்கைகளின் விரிவான மானியக் கோரிக்கைகள்.

20. 1984-85 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 3, மற்றும் 13 முதல் 16 வரையிலான விரிவான மானியக் கோரிக்கைகள்.

21. 1984-85 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 4, 5, 6, மற்றும் 12 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள்.

22. 1984-85 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 10 மற்றும் 22 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள்.

23. 1984-85 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 20 மற்றும் 49 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள்.



1984 மார்ச் 5]

24. 1984-85 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண் 17 இன் விரிவான மானியக் கோரிக்கைகள்.

25. 1984-85 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 18 மற்றும் 19 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள்.

26. 1984-85 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 21, 25, 45 மற்றும் 55 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள்.

27. 1984-85 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 23, 28, மற்றும் 35 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள்.

28. 1984-85 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 24, 26,27,48, 50 மற்றும் 56 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள்.

29. 1984-85 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 30 முதல் 32 வரையிலான கோரிக்கைகளின் விரிவான மானியக் கோரிக்கைகள்.

30. 1984-85 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 29,30 மற்றும் 34 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள்.

31. 1984-85 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 36 மற்றும் 51 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள்.

32. 1984-85 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண் 37,38, மற்றும் 52 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள்.

33. 1984-85 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 37—பொதுப் பணிகள்—கட்டிடங்கள் மற்றும் 52—பொதுப் பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு ஆகியவற்றின் பணி குறித்த விவரங்கள்.

34. 1984-85 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 39 மற்றும் 53 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள்.

35. 1984-85 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 39—சாலைகளும், பாலங்களும், 53—சாலைகள் பாலங்கள் குறித்த மூலதனச் செலவு ஆகியவற்றின் பணி குறித்த விவரங்கள்.

36. 1984-85 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 40, 44, மற்றும் 54 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள்.

37. 1984–85 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 42, 46, மற்றும் 58 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள்.

38. 1984–85 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 43 மற்றும் 57 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள்.

39. பதவிகள், சம்பள வீதங்கள் பற்றிய விவர அறிக்கை 1984-85) (ஆங்கிலம்.)

40. 1984–85 ஆம் ஆண்டின் வருவாய் குறித்த விரிவான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள்.

41. 1984–85 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசின் ஆண்டு நிதிநிலை அறிக்கை. (வரவு-செலவுத் திட்டம்).

42. 1984–85 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை குறிப்பு (தமிழ், ஆங்கிலம்).

43. 1984–85 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை குறிப்பின் இணைப்புகள் (தமிழ், ஆங்கிலம்).

44. 1984–85 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்களின் பட்டியல் (பகுதி 2 திட்டங்கள்) (தமிழ், ஆங்கிலம்).

45. 1984–85 ஆம் ஆண்டு திட்டம் நிதிநிலைக் குறிப்பு—திட்ட இணைப்பு (தமிழ், ஆங்கிலம்).

46. 1984–85 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட உரையின் இணைப்புகள் (தமிழ், ஆங்கிலம்).

47. வரவு-செலவுத் திட்ட விளக்க நூல், 1984–85 (தமிழ், ஆங்கிலம்).

48. 1984–85 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை குறித்து நிதி அமைச்சர் மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் ஆற்றிய உரை (தமிழ், ஆங்கிலம்).



இணைப்பு.

(159 ஆம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா 164—எண் 9805-க்கான விடையைக் காண்க.)

தமிழ்நாட்டிலுள்ள தென்னகக் கட்டிடத் தொழிலாளர் சங்கம், தமிழகக் கட்டிடத் தொழிலாளர் மத்திய சங்கம் மற்றும் இவற்றின் பலதரப்பட்ட கிளைச் சங்கங்கள் தங்களின் பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்றச் கோரி அரசுக்கு மார்ச் 1981 முதல் மனுக்களை அனுப்பின. அவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள சில முக்கியமான கோரிக்கைகள் பின்வருமாறு :—

1. கட்டிடத் தொழிலாளர்களுக்கு பாதுகாப்புச் சட்டம் கொண்டு வருதல்.

2. விபத்தில் இறந்தால் நிவாரண நிதியாக ரூ. 10,000 கொடுத்தல்.

3. ஈ.எஸ்.ஐ. மருத்துவ வசதி செய்து கொடுத்தல்.

4. கூலி நிர்ணயக் குழு அமைத்தல்.

5. சிமெண்ட் பர்மிட் முறையை மாற்றி அமைத்தல்.

6. வீட்டு மனைப்பட்டா வழங்குதல்.

7. இரும்பு, மரம், செங்கல் இவைகளின் விலைகளைக் கட்டுப்படுத்துதல்.

8. அரசு வழங்கும் கடன் தொகைகளை கட்டிடக் கட்டுமானத் தொழிலாளர்களுக்குக் கொடுத்தல்.

9. இலவசத் தொழிற் கருவிகள் வழங்குதல்.

10. பாராளுமன்றம் மற்றும் சட்டமன்றம் இவற்றில் பிரதிநிதித்துவம் கொடுத்தல்.

11. குடிசை மாற்று வாரியத்தின் மூலம் குடியிருப்பு வழங்கல்.

12. கூட்டுறவுச் சங்கத்துக்கு முன்னுரிமை கொடுத்தல்.

13. அரசு கட்டும் கட்டிடக் கட்டுமான வேலைகளை முன் பணமின்றி கட்டிடத் தொழிலாளர்களுக்குக் கொடுத்தல்.

[1984 மார்ச் 5

14. கட்டிடத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு இலவச கல்வி வசதியை வழங்குதல்.

மேற்கண்ட கோரிக்கைகளில் முதல் நான்கு கோரிக்கைகள் இத்துறையைச் சார்ந்தவையாகும். இவை குறித்து எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் பற்றிய விவரம் பின்வருமாறு :—

1. கட்டிடத் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்புச் சட்டம் கொண்டு வருதல்.

கட்டிடக் கட்டுமானத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர் நலன் கருதி மாநில அளவில் ஒரு சட்டம் இயற்ற இவ்வரசு உத்தேசித்து, அதற்கான ஒரு சட்ட முன் வடிவும் தயாரித்து அதற்கு மத்திய அரசின் ஒப்புதலையும் பெற்றுள்ளது. இச்சட்டம் கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

2. விபத்தில் இறந்தால் நிவாரண நிதியாக ரூ. 10,000 கொடுத்தல்.

1923 ஆம் ஆண்டின் தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டத்தில் கட்டிடக் கட்டுமானத் தொழிலாளர் வேலை செய்து கொண்டிருக்கும்போது காயமுற்றால்/இறந்தால், அவருக்கு / அவர்தம் குடும்பத்தினருக்குத் தகுந்த இழப்பீடு வழங்க ஏற்கெனவே விதிமுறைகள் உள்ளன. கட்டிட கட்டுமானத் தொழிலாளர்கள் நலன் கருதி இயற்ற உத்தேசித்திருக்கும் தனிச் சட்டத்திலும் இவ் விதிமுறைகள் பொருந்துமாறு வழிவகை செய்யப்பட்டுள்ளன. மேலும் கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரின் போது மேதகு ஆளுநர் ஆற்றிய உரையில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.—

"1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டிடக் கட்டுமானப் பணியாளர்கள் (பணி நிலைமைகள்—பல்வகை விதிகள்) சட்ட முன்வடிவிற்கு அரசு கொண்டு வரவிருக்கும் அதிகாரப் பூர்வமான திருத்தத்தின் படி கட்டிடக் கட்டுமானப் பணியாட்களை வேலையில் வைத்திருப்பவர்கள் வேலையின் போது அவர்களின் ஆயுளுக்கும் மற்ற அங்க இழப்புக்களுக்கும் போதுமான காப்புறுதி வசதி ஏற்படுத்த வேண்டும் என்பது கட்டாயமாக்கப்படும். இத் திருத்தத்தினால் பயன் பெறாதவர்களுக்கு முதலமைச்சரின் நிவாரண நிதியிலிருந்து இறந்தவரின் குடும்பத்திற்கு ரூ. 10,000 அளிக்க முடிவு செய்துள்ளது. இத் திட்டத்தின் கீழ் பயன் பெறக் கட்டிடப் பணியாளர்கள் ரூ. 5 கொடுத்து தங்களைத் தொழிலாளர் நலத் துறையில் பதிவு செய்துக் கொள்ள வேண்டும்".



1984 மார்ச் 5]

3. ஈ. எஸ். ஐ. மருத்துவ வசதி செய்து கொடுத்தல்.

1948 ஆம் ஆண்டின் தொழிலாளர் மாநில ஈட்டுறுதிச் சட்டத்தின் விதிமுறைகளைக் கட்டிடக் கட்டுமானத் தொழிலாளர்களுக்கும் பொருந்துமாறு அரசு இயற்ற உத்தேசித்திருக்கும் கட்டிடக் கட்டுமானத் தொழிலாளர்களுக்கான சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

4. கூலி நிர்ணயக் குழு அமைத்தல்.

1948 ஆம் ஆண்டு குறைந்த பட்ச ஊதியச் சட்டத்தின் கீழ் கட்டிடத் தொழிலாளர்களுக்கு ஏற்கனவே குறைந்த பட்சக் கூலி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இந்த குறைந்த பட்ச ஊதியத்தை மாற்றி அமைப்பதற்கென அரசு ஓர் ஆலோசனைக் குழுவை 1981 ஆம் ஆண்டு அமைத்தது. அக்குழுவின் அறிக்கையில் கண்ட பரிந்துரைகளை அரசு பரிசீலித்து, கட்டுமானத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களின் குறைந்த பட்ச ஊதிய வீதங்களை திருத்தியமைத்து கடந்த ஆண்டு ஜூலைத் திங்களில் ஆணை வெளியிட்டு உள்ளது.

கட்டிடக் கட்டுமானத் தொழிலாளர்களின் மற்ற கோரிக்கைகள்மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரி அவற்றின் நகல்கள் சம்பந்தப்பட்ட அரசுத் துறைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

136222